
சமஷ்டி
தினகரன்
டில்லி

பாரதக் கோடி நூல்—1.

# சமஷ்டி

அல்லது

# அகில இந்திய ஐக்கிய அரசியல்.

[1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டத்தைப்பற்றிய ஓர் அரிய ஆராய்ச்சி]

❋

ஆசிரியர்:

**தினகரன்**

எழுதியது.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

**ஸ்ரீமான் ஸி. என். முத்துரங்க முதலியார், எம். எல். ஏ.**

(மத்திய சபை) அவர்கள் முகவுரையுடன் கூடியது.



❋

பதிப்பாசிரியர்:

பசும்பொன், கு. ஆறுமுகம்,

சென்னை.

1938



[விலை ரூபா 1.

கிடைக்கும் இடம் :

**மானேஜர்,**

பாரதக்கொடி நூல் பதிப்பகம்,

61, அரமனைக்காரன் தெரு, ஜி. டி., மதராஸ்.

ஜூபிடர் அச்சுக்கூடம், சென்னை.

# முகவுரை

ஸ்ரீ தினகரன் அவர்கள் ஆக்கிய 'சமஷ்டி' என்னும் புத்தகம் கிடைக்கப் பெற்றேன். ராஜீய விஷயங்களை அறிந்துகொள்ளும் அவா, ஜனங்களிடையில் அதிகரித்துள்ள நல்ல தருணத்திலே தான் இந்நூல் வந்திருக்கிறது. சமஷ்டியைப் பற்றி, காங்கிரஸ் மகாசபையும், தேசீயப் பத்திரிகைகளும் அடிக்கடி பிரஸ்தாபித்து வருகின்றன. அதைத் தெளிவாய்த் தெரிந்துகொள்ள தினகரனவர்கள் தமிழ்மொழியில் எளிய நடையில் இந்நூலை வரைந்திருக்கிறார். இது நம் எல்லோராலும் வரவேற்கத் தக்கது.

இந்தியாச் சட்டத்தில் வகுக்கப்பட்டிருக்கும் சமஷ்டித் திட்டம், எத்தன்மைத் தென்றும், எந்நோக்குடைத் தென்றும், காங்கிரஸ் மகாசபையினர் ஏன் அதை எதிர்க்கின்றன ரென்றும், தமிழ் மக்களுக்கு இந்நூல் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் காட்டுகிறது. இம்மாதிரி ராஜீய புத்தகங்கள் நிரம்பவும் பரப்பத் தக்கவை.

சமஷ்டித் திட்டத்தில் ராணுவ அதிகாரம் நமக்கில்லை; ரெயில்வே நிர்வாகம் நமக்கில்லை; பொக்கிஷ நிர்வாகம் நமக்கில்லை; அந்நியச் சாமான்களுக்கு வரி விதித்துச் சொந்தச் சாமான்களைப் பாதுகாக்கும் அதிகாரமும் நமக்கில்லை.

சமஷ்டி சட்டசபைகள், சமஸ்தான மன்னர்களால் நியமனஞ் செய்யப்பட்ட அங்கத்தினர்களையும், மாகாண சட்டசபைகளிலிருந்து ஜாதி மத வகுப்புவாரியாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களையுங் கொண்டதாயிருக்கும். அதனால் தேசத்துக்குச் சிறிது நன்மையுமில்லை.

இவ் விஷயங்களை யெல்லாம் விரிவாய் விளக்கிப் பொது ஜனங்கள் எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய வகையில், ஆசிரியர் இந்நூலை வரைந்திருக்கிறார். இதை நான் வரவேற்கிறேன்; ஒவ்வொரு தமிழரும் வரவேற்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

காங்கிரஸ் மாளிகை
சென்னை.
5—9—38.

ஸி. என். முத்துரங்க முதலியார்.

# பதிப்புரை

பாரதக் கொடிநூற் பதிப்பாசிரியனுக, நான், தமிழ்த்தாயின் சந்நிதானத்துக்கு வருகிறேன். அவள் சரணாரவிந்தங்களில், என் அன்பின் அறிகுறியாக நான் சமர்ப்பிக்கும் முதன் மலர் 'சமஷ்டி.'

1935-ஆம் வருஷத்து இந்தியாச் சட்டத்தின் சமஷ்டிப் பகுதியைப் பற்றி, இந்நூலில் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கப்பட்டிருக்கிறது. அது முழுதும் ஆசிரியத் திறமையைச் சார்ந்தது.

சமஷ்டி, இந்தியாவில் இப்பொழுது ஒரு சாதாரணச் சொல்லாகிவிட்டது; வீட்டுச் சொல்லென்றுகூடச் சொல்லிவிடலாம். அவ்வளவு பிரஸ்தாபத்துக்கு அச்சொல் வந்த காரணம், சமஷ்டி அரசியலை, இந்தியாவின் விருப்புக்கு விரோதமாய், பிரிட்டிஷ் அரசாங்கம் புகுத்த விரும்புவதும், ஏகோபித்து இந்தியா அதை எதிர்ப்பதுந்தான்.

ஆங்கிலத்தில் சமஷ்டியைப்பற்றி அநேக நூல்கள் வந்திருக்கின்றன. தமிழில் இதுவரையில்லை; இதுதான் முதல் நூல்.

மேடைகளில் தலைவர்கள் சமஷ்டியை ஆட்சேபித்தோ ஆதரித்தோ பேசும்போதும், பத்திரிகைகளில் அதைப் பற்றிப் படிக்கும்போதும் நமக்கு ஏதோ ஒரு புத்தம்புதுச் செய்தியைக் கேட்பது போலவும் படிப்பது போலவு மிருக்கிறது; அது

என்னவென்றே தெரிந்து கொள்வதற்கு இந்நூல் ஒரு சாதனம்.

சந்தர்ப்பத்தை ஒட்டி இது வெளிவருகிறது. சமஷ்டியை நாம் நன்குய்த் தெரிந்துகொண்டால், அதை எதிர்க்கும் பலம் நம்மில் அதிகரிக்குமென்று நம்புகிறேன். அதிகரிப்பது அவசியம்.

பாரதக் கொடியின் பலத்த கம்பத்தினடியில் அதன் கௌரவத்தைப் போற்றும் பல நூல்களைப் பரப்பலா மென்பது என் அவா. தமிழர்கள் அதைப் பூர்த்தி செய்துவைக்க வேண்டும் - தலை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

அரசியற் கலப்பற்ற எந்த நூலும், பாரதக் கொடியின் ஆராதனைக்குரிய ஆர மாகாது. பொறுக்கி யெடுத்த புது மலர்களைக் கொண்டு, தாயின் மணிக்கொடியை அலங்கரிக்கத் தமிழ்த் தாய் சக்தியளிக்க வேண்டும். ஒருமையையும் யௌவனத் தன்மையையும் தேச மாதா திருவருள் செய்ய வேண்டும்.

சொன்ன மாத்திரத்தில் ஒரு நூலை எனக்கு எழுதித்தர இசைந்த என் நண்பரும், இந்நூல் ஆசிரியருமான திரு. தினகரன் அவர்களுக்கும், பல வேலைகளினூடு கிடைத்த சில நிமிஷங்களை, இந் நூலுக்காகச்செலவழித்து முகவுரை வழங்கிய தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் அவர்களுக்கும் எனது நன்றி உரியது.


பதிப்பாசிரியன்.

# பொருளடக்கம்.

## முதற் பாகம்: கட்டுக் கோப்பு:

## இரண்டாம் பாகம்: நிர்வாகம்:

---


முதற் பாகம்
சமஷ்டி
கட்டுக் கோப்பு

தேசத் தொண்டர்களாகிற
என் தோழர்களுக்கு
இந்நூலைச்
சமர்ப்பிக்கிறேன்.

—தினகரன்

# சமஷ்டி

## 1. முகப்பு

மனிதரென்ன ஆட்டு மந்தையா எந்தப் பட்டியில் வேண்டுமானாலும் அடைக்கலா மென்பதற்கு? அல்லது பொன்னா தங்கமா எந்தப் பெட்டியிலும் பூட்டலா மென் பதற்கு?

### ஜன சம்மதம் சட்டங்களுக்கு ராஜா:

சட்டத்தினால் ஜனங்கள் ஆளப்படுகிறார்க ளென்பது வாஸ்தவம். ஆனால் அச் சட்டம், ஜன சம்மத மற்றதா யிருந்தால் அப்பொழுதும் அதுதான் அவர்களை யாள வேண்டுமா?

ஆளுவோர் ஆளப்படுவோ ரென்று சமுதாயம் அக் கக்காய் அல்லது ஜாதி ஜாதியாய்ப் பிரிக்கப்பட் டிருந்தாலுஞ் சரி, அல்லது ஜன நாயகம் பங்கு போடப்படாமல் வாக்குகள் எண்ணப்பட்டோ நிறுக்கப்பட்டோ பெரும்பான்மையால் ஆளப்பட்டாலுஞ்சரி, ஏதேச்சாதிகாரமாய் ராஜாவோ சர்வாதிகாரியோ எவரோ இருப்பாட்சி செய்தாலுஞ்சரி, ஜன சம்மதமில்லாத சட்டத்தை வைத்துக் கொண்டு செய் யப்படும் எந்த அரசாங்கமும் இன்றைக்கோ நாளைக்கோ இடிந்து விழுந்துவிடும்.

ஆகையால் இந்த ஜன சம்மத மென்பதையே சட்ட மாய் வைத்துக்கொண்டால், இதுதான் சட்டங்களுக்.

கெல்லாம் ராஜாவா யிருக்கிறது. ஒரு நாட்டுக்குமட்டு மல்ல, ஒரு காலத்துக்குமட்டு மல்ல, எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலங்களுக்கும் இதுதான் விதி. பொதுவாய் உலகச் சரித்திரமானது ஒரே யுத்த புராணமா யிருந்தாலும், அந்த யுத்தங்களுக் கெல்லாம் ஆதி காரணங்கள் வெவ்வேறு யிருந்தாலும், ஒவ்வொரு நாட்டின் வாழ்வுக்கும் வீழ்வுக்கும், மேலே கூறியுள்ள ஜன சம்மதம் அசம்மதம் என்னும் சட்டங்கள்தான் மூலகாரணங்கள்.

## உறைகல்லுந் தராசும் :

அப்பேர்ப்பட்ட அநங்யமான சம்மதத்தை உறைகல்லாய் வைத்துக்கொண்டு அதன்மீது உறைக்கப்பட்டு மாற்றுக் குறையாமலும், தேர்தலுக்கு விடப்பட்டுத் தராசு முனையில் நிறுக்கப்பட்டு எடை குறையாமலு மிருக்கிற எந்தச் சட்டத்தையும், ஜனங்கள் ஒப்புக் கொள்ளுவார்கள். ஜனங்கள் விரும்பாத சட்டத்தைப் பலவந்தமாய்ப் புகுத்தி, ஈட்டி முனையிலும் பீரங்கி வாயிலும் வைத்துப் பரிபாலித்தாலும் அது ஒருநாள் அழிவடைந்தே தீரும்.

ஆனால் சர்க்கார்மீது ஜனங்கள் சுமத்தும் இந்தச் 'சம்மத' மென்னும் சட்டமோ, என்றைக்கும் அழிவற்றதா யிருக்கிறது. இதர சட்டம் ஒவ்வொன்றும் அததன் விலக்குவிதியுடையதாயிருந்தாலும், இந்தச் சட்டம் எந்த விதமான விலக்குவிதியும் அற்றதா யிருக்கிறது. அதனாலேதான் இது நிரந்தரமானதா யிருப்பதுபோல், நிச்சயமானதாகவு மிருக்கிறது. எத்தனை அரசுகள் அழிந்தாலும் இருந்தாலும், அதுவோ அதன் கவலை? ஒரு தேசம், தன்மீது சுமத்தப்படும் ஜன சம்மதமற்ற சட்டத்தைக் கண்டு சிரிக்கக்கூடிய சந்ததியற்றதா யிருந்ததென்று இதுவரை எந்தச் சரித்திரமாவது சொல்லியிருக்கிறதா? அல்லது அப்படிப்பட்ட

சட்டத்தைத் தைரியத்தோடு எதிர்க்கக்கூடிய இதிகாச நாயகர்கள் எப்பொழுதாவது இந்த உலகத்தில் அருகி யிருக்கிருர்களா ?

## முகந் துடைக்கும் முறைகள் :

இற்றைக்கு இருநூறு வருஷங்களாய், இந்தியா இந்தியர்களால் ஆளப்படவில்லை ; இன்னொரு ஜாதியார், ஏழாயிர மைல்களுக் கப்பா லிருந்துவந்து இதை ஆளுகிருர்கள். இதற்குக் காரணம், இந்தியர்கள் ராஜீய சூனியர்க ளென்பதல்ல; எதற்கும் இன்னொருவர் கைபார்த்துப் பிழைப்பவர்களென்பதல்ல. சூழ்ச்சியில் வீழ்ந்துவிடுபவர்க ளென்பதுதான்.

சூழ்ச்சியில் பிரிட்டிஷ்காரர்கள் மகா சூரர்கள். இந்தியாவை அவர்கள் வேறு எதற்காகவும் ஆளவில்லை. வயிற்றுப் பிழைப்பை நிரந்தரமாய் இந்தியாவைக் கொண்டு நடத்துவதற்காகவே ஆளுகின்றனர். இதைத் தவிர இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதற்கும், இருப்பதற்கும், இனிமேலும் இருக்கும்படி செய்வதற்கும் வேறு காரணங்கள் கூறுவதில் அர்த்தமில்லை ; பொருத்தமுமில்லை.

நாடு பிடிப்பதற்கு பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவில் என்னென்ன முறைகளைக் கையாண்டார்க ளென்பது இங்கு முக்கியமல்ல. நாட்டை யாள்வதற்கு என்னென்ன முறைகளைக் கையாளுகிருர்க ளென்பதுதான் முக்கியம்.

அவைகள் பலவாயிருக்கலாம் ; பலவாருகவு மிருக்கலாம். ஆனல் எல்லாம் இரண்டு முக்கியத் தலைப்புக்குள் அடங்குகின்றன:

1. கமிஷன் அனுப்புவது. (கமிஷன் முறை)
2. சீர்திருத்தம் வழங்குவது. (சீர்திருத்த முறை)

1. **கமிஷன் முறை** என்பதற்கு பிரிட்டிஷ்(அரசியல்) அகராதியில், கால தாமதப்படுத்துவது என்று அர்த்தம். இது அவர்கள் கையிருப்பிலுள்ள ஆயுதங்களிலெல்லாம் முதல் தரமானது. அதனாலேதான் அவர்கள் இந்தியாவை இவ்வளவு காலம் ஆள முடிகிறது. இந்தியாவின் தேவையும் திருப்தியும் என்ன, இரண்டுஞ் சந்திக்கக்கூடிய இடம் எது என்பனவற்றை, இந்தியர்களைவிட இங்கிலீஷ்காரர்கள் அதிகம் தெரிந்துகொண்டிருக்கிறார்கள் என்பது இந்தியாவுக்கு இழுக்கல்ல. ஆனால் பூர்த்தி செய்யும் நோக்கமில்லையென்பதும், பாவனை மாத்திரம் நிறைய இருக்கிறதென்பதும், அதன் பிள்ளையார் சுழிதான் கமிஷன் அனுப்புவதென்பதும், பிரிட்டிஷ்காரர்களுக்குத்தான் இழுக்கைத் தரும்.

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியிலேற்றப்பட்டிருக்கிற குற்றங் குறைகளென்ன? இந்தியர்களின் ஆசையும் அளவும் யாது? இவைகள் இன்னதென்றே தெரியாதது போல், இந்தியாவிற் கிளர்ச்சி யேற்படும் போதெல்லாம், சில பிரிட்டிஷ்காரர்களைத்தானே பிடித்து, அதற்கு ராயல் கமிஷன் என்று பேர் கொடுத்து, இங்கு அனுப்பி வைக்கிறார்கள். சில நாட்கள் அல்லது மாதங்களில் அவர்கள், இந்தியாவை ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை சாரியடித்துச் சகல சுக போகங்களையும் அனுபவித்துவிட்டு, இங்கிலாந்து திரும்பி அறிக்கை வெளியிடுகிறார்கள். அந்த அறிக்கையின்மீது பின்னர்ச் சில சீர்திருத்தங்கள் வழங்கப்படுகின்றன. இவையிரண்டையுஞ் சேர்த்துத் தேசீயப் பாஷையில் சொல்லப் போனால், அவைகள், தேசீய முன்னணியைத் தகர்ப்பதும், தேசீய முன்னேற்றத்தைத் தடுப்பதும், தேசீய லட்சியத்திற் கட்சியை உண்டு பண்ணுவதுந் தவிற வேறில்லை.

2. **சீர்திருத்த முறை** யென்று சொல்லப்படுவதும் இப்படித்தான். இதற்கு நேரான—அகராதி அர்த்தம் ஒன்று இருந்

தாலும், பிரிட்டிஷ்காரர்கள் ‘முகந் துடைத்தல்’ என்று வியாக்கியானம் செய்திருக்கிறார்கள். எப்பொழுது இந்திய எண்ணத்திற் சுதந்திர உணர்ச்சி தோன்றி, அதை வெளிப்படுத்தும் உறுதியும், அடையுந் திறமையும் அதிகரிக்கிறதோ, அப்போதெல்லாம் தயவு வைத்து அவர்கள், பொறுப்பாட்சியென்னும் வார்த்தையைச் சொல்லிக் கொண்டு, இந்தியாவின் தேவைக்குந் திருப்திக்குங் கீழான-மிக மிகக் கீழான—சீர்திருத்தங்கள் வழங்க வருகிறார்கள். அவற்றால் சுதந்திரத்தின் சிந்திச் சிதறிப் போன தூள்கள் சிறிது கிடைத்தாலும் தேசீய வாதிகளின் எல்லையை வெகு தூரம் தள்ளிப் போகச் செய்கின்றன. சுதந்திரச் சைனிகர்கள், சீர்திருத்தங்களாகிற இடை விடுதி (Intermediary Station) களில் இளைப்பாறத் தொடங்கி விடுகிறார்கள். அப்போது தேசீய முன்னணி தளர்த்தப் படுகிறது; தேசீய முற்போக்குந் தடைப்படுகிறது.

## சட்டமும் அமைதியும் :

சொல்லப் போகும் சீர்திருத்தங்கள், ‘சட்டத்தையும் அமைதியையும்’ தேசத்தில் ஸ்திரமாய் ஸ்தாபிப்பதற்காகச் செய்யப்படுகின்றன என்பர் சிலர். ஆனால் அவை, தேச மக்களின் கோரிக்கையைக் கிட்ட இழுத்துக் கொடுக்கிறதா என்று தேசீய வாதி கேட்கிறான்.

சீர்திருத்தங்களைப் பற்றி இந்தியாவுக்கு ரொம்பத் தெரியும். அவைகளுக்கும் இந்தியாவுக்கும் இன்று நேற்று ஏற்பட்ட உறவல்ல; நீண்ட நாளத்து உறவு. இந்த உறவை ஒரு முறையாய்க் கால தேச வர்த்தமானங்களோடு சேர்த்துப் படித்தால், அதுவே அவற்றின் லட்சியத்தை உணர்த்தக் கூடியதாயிருக்கு மென்று யூகிக்கிறேன்.

நஞ்சு பிறந்தபோது அமுதும் பிறந்ததுபோல், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்டபோதே, அதற்கெதிரான சுதந்திர இயக்கமுந் தோன்றியிருக்கிறது. கிழக்கிந்தியாக் கம்பெனிக்காரர்கள், ஒன்றுக்கொன்று துணையாய் வர்த்தகத்தையும் அரசியலையுந் தொடங்கி, சூழ்ச்சியான சில பேரங்களால் பிரிட்டிஷ் ஆட்சியை ஆரம்பித்தபோது ஏற்பட்ட சந்யாசிக் கலகமும், அதைத் தொடர்ந்து **1857**-ல் ஏற்பட்ட சுதந்திரப் போரும், மேலே கூறியுள்ள சுதந்திர இயக்கத்தின் சைன்ய வகுப்புகளாகும். அவற்றைத் தாண்டிச் சற்று இப்பால் வந்தால், அகில பாரத அரசியல் சமாஜமாகிற காங்கிரஸ் மகா சபையும் அது செய்த போர் வரிசைகளும் ஒவ்வொன்றுய்க் காட்சி கொடுக்கின்றன. அவற்ருல் இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வந்துவிடாவிட்டாலும், தேசத்தில் கிளர்ச்சியும், சமுதாயத்தில் உணர்ச்சியும், ஜனநாயகத்தில் வளர்ச்சியும், சர்க்காரில் அதிர்ச்சியும் ஏற்படவில்லையென்று எவராற் சொல்ல முடியும்?

அடிமைப்பட்ட எந்த நாட்டிலும் ஆளுங் கட்சி ஆளப்படுங் கட்சி யென்று இரண்டு கட்சிகளைத் தவிர மூன்ருவது கட்சி ஒன்று இருக்க முடியாது. அவ்விரு கட்சிகளும் எப்பொழுதுமே இணங்கி யிருக்கவும் முடியாது. இந்தியாவில் எதிர்க்கட்சி செய்த சுதேசிக் கிளர்ச்சி, வந்தேமாதரக் கலகம், பிரிட்டிஷ்காரர்களை முகந் துடைக்கும் முறையில் இறக்கி விட்டன. மின்டோ மார்லி சீர்திருத்தம் வந்தது.

## பழைய பாடங்கள் :

1909-ல் ஏற்பட்ட, மின்டோ மார்லி சீர்திருத்தமென்று சொல்லப்படும் இந்திய அரசியல் சட்டத்தால், இந்தியாவுக்கு ஸ்தல சுயாட்சியின் தலைவாசல் திறந்து வைக்கப்பட்டதென்று சிலர் சொல்லுகின்றனர். அது எவ்வளவு தூரம் நிஜ

மென்பதைப்பற்றி இந்த நிமிஷம் அவர்களோடு நாம், தாவாச் செய்யப் போவதில்லை. ஆனால், மத்திய சபையில் பத்தா யிருந்த அங்கத்தினர் பட்டியலை அறுபதாகவும், மாகாண சபைகளில் இருபதாயிருந்ததை ஐம்பதாகவும் விஸ்தரித்த தைத்தவிர, வேறு உருப்படியான உரிமை யொன்றும் அந்தச் சீர்திருத்தங்களால் ஏற்படவில்லை யென்று அந்த ஐயன்மீர் களுக்குச் சொல்லுகிறேன். மேலும் மத்திய சபையிலும் மாகாண சபைகளிலும் அங்கத்தினர்கள் தீர்மானங் கொண்டுவந்து சிபாரிஷ் செய்யவும், அரசாங்க வரவு செலவு களைப்பற்றி அபிப்பிராயம் வெளியிடவும், வோட்டளிக்கவும், உரிமை பெற்றனரென்பது உண்மை. ஆனால் அரசியலதிகாரம் கூடுதலாகவோ குறைவாகவோ தேசமக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டதா? அல்லது தேசத்துப் பிரதிநிதிகளைப் பொறுப்பாட்சியிற் பழக்குவதான புருஷார்த்தமாவ திருக் கிறதா? வரி உயர்த்தும் பழி பாவத்தைத் தாங்கும் சுமை தாங்கிக் கல்லுகளைப் போலவும், அதிகார மிடுக்குக்கும் சுதந்திரத் துடுக்குக்கு மிடையில் அடுக்கிவைக்கப்படும் மணல் மூட்டைகளைப் போலவும், அந்த அங்கத் தினர்களும் அவர்களுக் களிக்கப்பட்ட உரிமைகளும் இருந்தன.

அவ்வளவோடு அந்தச் சீர்திருத்தம் நின்றிருந்தால், அதை வனைந்த அரசியல் தச்சர்களை, இந்தியா இன்றைக்கும் எவ்வளவோ விஸ்வாசத்தோடு கைகூப்பிக் கும்பிடும். முன்னர்க் கூறியுள்ள 'கமிஷன்' 'சீர்திருத்தம்' என்னும் கைவாணங்களோடு, பிரித்தாளுங் கொள்கையும் பிள்ளையார் வேஷம்போல் வந்தது. அதாவது சட்டசபைகளில் முஸ்லீம் களுக்குத் தனித்தொகுதியின் மூலம் வகுப்புவாரிப் பிரதி நிதித்துவம் வழங்கப்பட்டது. இதைப் பின்னர் விரிவாய்ச் சொல்லுகிறேன்.

அடுத்தது 'மாண்ட்போர்டு சீர்திருத்தம்.' அதை மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம் என்றும் சொல்லுவார்கள். 1919-ல் ஏற்பட்டது. அது ஏற்படுவதற்கு, அகில இந்தியாவிலும் ஆயுதந் தரித்த புரட்சிக்காரர்கள் செய்த அட்டகாசமும், ஐரோப்பிய மகாயுத்தமுந்தான் காரணமென்பது வேறுகதை.

மாண்ட்போர்டு சீர்திருத்தத்தால் இந்திய அரசியலில் ஒரு புதுமாதிரியான மாறுத லேற்பட்டதென்பது வாஸ்தவம். மாற்றப்பட்ட இலாகாக்க ளென்றும் ஒதுக்கப்பட்ட இலாகாக்க ளென்றும், அரசியல் நிர்வாகம் இரண்டாய்ப் பிரிக்கப்பட்டு, முன்னது மந்திரிகள் வசமும், பின்னது கவர்னர்-ஜெனரல் அல்லது கவர்னர்கள் வசமும், விடப்பட்டதென்பதும் பொய்யல்ல. சட்டசபைகளிற் சட்டம் இயற்றவும், சாதாரணமாய் அரசியற் காரியங்களனைத்திலும் அபிப்பிராயம் வெளியிடவும், இந்திய மந்திரிகளுக்கு ஓரளவு, ஒரு விதமான அதிகார மளிக்கப்பட்ட தென்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் அவ் வதிகாரம் உண்மை யதிகாரமா? அல்லது பொம்மையதிகாரமா? பிரிட்டனுக்கு அல்லது பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரிகளான நிர்வாகஸ்தர்களின் வேலையைச் சுலபமாக்குவதற்காகமட்டுமே, சட்டசபைகளும் மந்திரிசபைகளும் பயன்படுத்தப்பட்டன. பொக்கிஷம், போலீஸ், நீதி பரிபாலனம், நீர்ப்பாசனம், நிலவரி, நிலவுரிமை, பஞ்சநிவாரணம், மராமத்து, சட்டம், பாதுகாப்புக்கள்போன்ற நிர்வாகங்கள், ஜனப்பிரதிநிதி சபையான சட்டசபைக்கு ஜவாப்தாரிகளான மந்திரிகள்வசம் ஒப்படைக்கப்படாமல் ஒதுக்கப்பட்டவரை, அத்தகைய இரட்டையாட்சியில் பொறுப்பாட்சியில்லை யென்று பூரணமாய்ச் சொல்லுகிறேன்.

இரட்டையாட்சியால் இந்தியாவுக் கேற்பட்ட நன்மை தீமைகளிருக்கட்டும். பிரிட்டனுக்காவது பிரயோஜன மேற்பட்டதா? தேசமக்களின் அவநம்பிக்கையையும் மதிப்பின்மையையுமே சர்க்கார் சம்பாதித்துக்கொண்டது. இது காங்கிரஸ் செய்த வேலை. வெள்ளைக்காரர்களின் வேஷத்தைக் கலைத்து, இந்திய ஜனங்களின் சம்மதத்தைப் பெற்றுதான் இந்தியாவை யாளுவதாய் பிரிட்டிஷ் சர்க்கார் பூசிக்கொண்டிருந்த சாயத்தை யது வெளுக்கச் செய்துவிட்டது.

## இரண்டு புகலிடங்கள் :

பிரிட்டிஷ் ஆட்சி, இந்தியாவில் என்றுஞ் சிரஞ்சீவியாய் இருப்பதற்கு, இரண்டு முக்கியமான புகலிடங்கள் அல்லது அரண்களை, அவர்கள் தங்களுக்குத் தாங்களாகவே தயாரித்துக்கொண் டிருக்கிறார்கள். அவைகளில்லையானால் இதற்குள்ளாக அவர்களின் ஆட்சி யிருந்தவிடம் புல் முளைத்துப் போயிருக்கும். ஒன்று வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்; மற்றொன்று பிரித்தாளுங் கொள்கை.

## 1. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் :

இது இந்தியாவைத் தவிர இதர எந்த நாட்டிலும் இவ்வாறு விஸ்வரூபத்தோடும், இவ்வளவு நிர்வாணத்தோடும் வெளிப்பட்டதில்லை. பிளாட்டோ காலத்திலிருந்து இதுவரை உலகத்தில் எவ்வளவோ உற்சாகத்தோடு விரும்பப்பட்டு வரும் ஜனநாயக உணர்ச்சி, இந்தியாவுக்குள் வந்து புகுந்துவிடாதிருப்பதற்குத் தனித் தொகுதியைவிடச் சரியான கதவடைப்பு வேறே கிடையாது. தனித் தொகுதியுள்ள எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் ஜனநாயகம் தலைதூக்கியதுமில்லை. அவ்வளவு தீமை நிறைந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை, அவ்வளவு தயவு வைத்து இந்தி

யாவுக்களித்த மகானுபாவர்களே, அதைப்பற்றிப் பின்வருமாறு கூறியிருக்கிறார்கள்:—

"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம், ஒரு சிலரின் அபிப்பிராயப்படி, அரசியல் விஷயங்களில் அக்கரையில்லாத ஜனங்கள் முன்னேறுவதற்கு முக்கியமான வழியென்பது வாஸ்தவம். ஆனால் அப்பேர்ப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்கள், இதற்குமுன் எப்பொழுதுங் கண்டிராத பலப்பல புது வழிகளில், ஜாதிமத சம்பந்தமான தனித் தொகுதிகளைச் சிருஷ்டித்து, எல்லா வகுப்பினர்களையும் அதற்குள் திணித்து விடமாட்டார்களென்பது என்ன நிச்சயம்? ஜனநாயக தத்துவத்தையும் உணர்ச்சியையும் அறிந்த நாம், எப்படி அவர்கள் அபிப்பிராயத்தை அங்கீகரிக்க முடியும்? ஜனாதிபத்தியத்தின் ஆரம்பமே, ஜாதிமத பாஷைகளால் வேறுபட்ட பலரின் பொது நன்மையையே நோக்கமாகவும் முடிவாகவுங் கொண்டிருக்கிறதென்று அறிகிறோம். ஐரோப்பாவிற் குடும்பப் பாகுபாடும் மத வேறுபாடுந் தேய்ந்து, நிலவேறுபாடு தோன்றிய பிறகுதான் ஜனநாயகம் உதயமாயிற்று. அப்போது ஒரு தேசத்தின் பிரஜை, தன் மதத்துக்கும் ஜாதிக்கும் செய்யவேண்டிய கடமையைவிட, தேசத்துக்குச் செய்யவேண்டிய கடமையே பெரிது என்று எண்ணத் தொடங்கினான். அந்த எண்ணந்தான், மேனாடுகளில் ஜனநாயகத்தை மேன்மையடையச் செய்திருக்கிறது. ஆகையால் ஜனநாயக தத்துவப்படி மனிதர் ஒவ்வொருவரும், மற்றெல்லாவற்றையும்விட அவரவர் தேசத்துக்கே அதிகம் கடமைப்பட்டிருக்கிறார்களென்றும், அந்தத் தேசத்திற்குட்பட்ட வேறே எந்த ஒரு சிறு பிரிவுக்குங் கடமைப்பட்டவர்களல்லவென்றும் உலகம் அறுதியிட்டு உறுதி கட்டிவிட்டது.

"இவ்வாறே தங்கள் தேசத்தின்மீது அன்பு செலுத்தும் ஒவ்வொரு இந்தியருங் கருதுகின்றனர். ஆனால் அவர்கள் பொதுவாய், இந்தியர்களுக்கு இன்னும் ஜனநாயக உணர்வு அல்லது மனப்பான்மை யேற்படவில்லை யென்பதையாவது ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டும். ஜனாதிபத்தியத்தின் கீழ், இந்தியர் சுயராஜ்

யம் அடைய வேண்டுமென்று விரும்புகிற நாம், இந்திய ஜனங்கள் ஜனநாயக உணர்வு உடையவர்களாகும்படி செய்ய வேண்டும். வகுப்புவாரியாகவும் மதவாரியாகவும் இன்னும் பலவாருகவும் ஜனங்களைப் பிரிப்பது, ஒரு தொகுதியோடு ஒரு தொகுதி சண்டை போடவும், ஒரு கட்சிக் கொருகட்சி கச்சைகட்டவுஞ் செய்வதாகும். அதனுல் தேசீய எண்ணம் தேய்ந்தும் எல்லாரும் ஒரு தேசத்து மக்கள் என்னும் பாந்தவ்யம் அற்றும் விடுகிறது. மேலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையிலிருந்து, தேசீயப் பிரதிநிதித்துவ முறைக்குப், பின்னர் அவர்கள் மாறுவதும் மாற்றப்படுவதும் மகாகஷ்டம். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவைப் பிரித்தாளுகிறதென்று பிரமாதமாய்க் குறைகூறப்படும் இப்போது, இந்தியர்களைச் சுயாட்சிக்குத் தயாரிக்கிருேமென்று சொல்லிக் கொள்ளும் நாம், ஆரம்பத்திலேயே அவர்களை இப்படிப் பிரித்தால் உலகம் என்ன சொல்லாது? பிரிட்டிஷ் அரசாங்கம், நேர்மையற்றதென்ருே அல்லது யோசனையற்றதென்ருே கருதப்படமாட்டாதா?

"வன்மையின்மையையும், தாழ்வுற்றிருப்பதையுங் காரணங் காட்டிச் சிறுபான்மையோருக்குத் தனித் தொகுதி கொடுத்தால், அவர்கள் ஊக்கமற்றவர்களாகித் தங்களைத் தாங்களே முன்னுக்குக் கொண்டுவருதற்கோ அல்லது பெரும்பான்மையோருடன் தங்களைத் தாங்களே ஒப்பிட்டுப்பார்த்து உயர்வதற்கோ, உற்சாகமற்றவர்களாகவும் ஆசையற்றவர்களாகவும் ஆகிவிடுவார்கள். பெரும்பான்மையோர், சிறுபான்மையோருக்குச் செய்யவேண்டிய கடமைகளை யெல்லாஞ் செய்துவிட்டதாய்க் கருதித் தங்களிட மிருக்கிற அதிகாரம் அத்தனையையும், தங்கள் சொந்த நன்மைக்காகவே பயன்படுத்திக் கொள்ளப் பார்ப்பார்கள். அதனுல் அரசியல் வாழ்வுக் கவசியமான சமத்தன்மை அற்றுப்போய்விடும். ஒரு கட்சிக்கொரு கட்சியே கால்விலங்காய்க் கடைசியில் எந்தக் கட்சியுமே முன்னேற முடியாமல், இரண்டுங் கெட்ட நிலைமையைத்தான் தனித் தொகுதி உண்டு பண்ணும்.

"ஆகையால் ஜனநாயக சுயாட்சிக் கொள்கை இந்தியாவிற் பரவுதற்கு, இந்த வகுப்புவாதப் பிரதிநிதித்வம் மிக மிக இடைஞ்சலானதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இதை இன்னும் இப்படியே வளர்த்துக் கொண்டுபோனால் தீமைதான் அதிகரிக்கும்."

இவ்வாறு வகுப்புத் தீர்ப்பைப்பற்றி அபிப்பிராயப்பட்டு அறிக்கை வெளியிட்டவர்கள் அவ்வளவோடு அதை முடித்திருந்தால், அவர்களை ஆசீர்வதிக்க இந்தியா எவ்வளவோ கடமைப்பட்டிருக்கும். ஆனால் "இருந்திருந்து கேள், இடிவிழுவான் கூற்றை" என்பதைப் போலும், "மரமேறுங் கரட்டான், அதுபோடுங் குட்டி அததன் வர்க்கம்" என்பதைப் போலும், கடைசியில் அந்தப் பாவிகள் கையை விரித்து விட்டார்கள். அவர்கள் மேலுங் கூறியதாவது:—

"இப்பேர்ப்பட்ட அவசியம் ஏற்படுவதுபற்றி நாங்கள் வருந்துகிறோம். முஸ்லீம்களைப் பொறுத்தமட்டில், அவர்களும் இந்தியப் பிரஜைகள்தான் என்னுங் கொள்கை பரவுவதற்கு இடையூறாயிருந்தாலும், அவர்களுக்குத் தற்சமயந் தனித்தொகுதி கொடுக்கத்தான் வேண்டுமென்று கருதுகிறோம். ஆனால் முஸ்லீம்கள், பெரும்பான்மையாய் இருக்கிற மாகாணங்களில் தனித்தொகுதிக்கு அவசியமிருப்பதாய் எங்களுக்குத் தோன்றவில்லை.

"முஸ்லீம்களுக்குக் காண்பிக்கப்படும் இதே சலுகையை, இதர சமூகத்தினருக்குங் காண்பிக்கும்படி நாங்கள் வற்புறுத்தப்படுகிறோம். அவர்களிற் சிலர் முன்னேறியிருக்குங் காரணத்தைக் கொண்டும், சிலர் தாழ்த்தப்பட்டிருக்குங் காரணத்தைக் கொண்டும், இச் சலுகையைக் கோருகிறார்கள். அவர்கள் விஷயத்திற் பாரபட்சமாய் நடக்க எங்களால் எப்படி முடியும்?

"தனித் தொகுதி தானே நீளுகிறது. அநேகர் இன்னும் பிரதிநிதித்துவங் கேட்க ஆரம்பித்து விடுவார்களோ என்று அஞ்சுகிறோம். அதனால் ஜனநாயக உணர்வு வளர்வது தடைப்படுமென்றும் நாங்கள் நிச்சயமாய் நம்புகிறோம்."

இவ்வறிக்கையில் இரண்டு முக்கியமான அம்ஸங்கள் இருக்கின்றன. ஒன்று அபிப்பிராயம், மற்றொன்று முடிவு. எப்பொழுதும் எந்த விஷயத்திலும் அவை யிரண்டும் ஒன்றை யொன்று தழுவிப் போவதுதான் வழக்கம். ஆனால் இங்கு அவை யிரண்டும் ஒன்றோடொன்று மோதி, முன்னுக்குப் பின் முரணாய், முழுதுங் குட்டிச்சுவராகி விட்டன. தனித் தொகுதியால் தேசத்தின் ஒற்றுமையும் ஜனநாயக உணர்வும் மெலிந்து, கொள்ளை யடிப்புக்கும் குடிலத்துக்கும் கோட்டை விட்டு, நாட்டைப் பாழ்படுத்தும் என்று தெரிந்துதான் இந்தச் சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

1919-ல் செய்யப்பட்ட அதே சூழ்ச்சி, மறுபடியும் 1935-லுஞ் செய்யப்பட் டிருப்பதைப் பார்த்தால், வேண்டுமென்றே பிரிட்டிஷ்காரர்கள் இதைச் செய்கிறார்களென்று இந்தியா எண்ணுவதில் என்ன தவறு இருக்கிறது? வட்ட மேஜை மகா நாட்டில் பெரும்பான்மைச் சமூகங்களும் சிறுபான்மைச் சமூகங்களும், சமரசத்துக்கு வரவில்லை யென்னுங் காரணங் காட்டிப் பார்லிமெண்ட் செய்த தீர்ப்புச் சரிதானா என்று இந்தியா கேட்பதில் என்ன பிழை யிருக்கிறது?

"அவர்களுக்குள் (மெஜாரிட்டி—மைனாரிட்டி வகுப்பாருக்குள்) சமரசமான ஒப்பந்தம் ஒன்று மேற்படவில்லை யென்றே வைத்துக்கொண்டாலும், அதற்காக நாம் அவர்களுக்குள் சச்சரவை யுண்டாக்கவேணு மென்பது அவசியந்தானா? உங்கள் வகுப்பு வியவகாரத்தில் நீங்களே ஒப்பந்தஞ் செய்து கொண்டு வாருங்களென்று நாமேன் சொல்லிவிட்டிருக்கக் கூடாது? ஸ்தானங்களை ஒதுக்கினாலும், கூட்டுத் தொகுதியாகவே எல்லா வோட்டர்களும் ஒரே ஜாபிதாவில் பதிவு செய்யப்பட வேண்டுமென்று அவர்களை நாம் வற்புறுத்தி யிருக்கக்கூடாதா?"

என்று பிரபுக்கள் சபையில் லார்டு ஸ்ட்ராபோல்கி கேட்ட கேள்விகளும்,

"இவ்வாறு வோட்டர் ஜாபிதாவை வகுப்பு வாரியாகப் பிரித்துத் தனித் தொகுதியை யேற்படுத்தியது பெரிய அக்கிரமம்; வகுப்புப் பித்தர்களைச் சிருஷ்டிப்பதாகும்"
என்று காமன்ஸ் சபையில் மேஜர் அட்லி சொன்ன சொல் லும் எவ்வளவு ஆணித்தரமானவை!

உலகத்து நாடுகளினூடு இந்தியா, தனக்குத் தகுதி யான ஸ்தானத்தை அடையவேண்டுமென்றுவது அல்லது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இந்தியா ஒரு பிரியாத-பிரிய நண் பனுயிருக்கவேண்டுமென்றுவது பிரிட்டன் எண்ணியிருந்தால், சட்ட சபைகளில் மைனுரிட்டிகளுக்குச் சில ஸ்தானங்களை ஒதுக்கி வைத்துவிட்டுத், தொகுதியைக் கூட்டுத் தொகுதி யாகவே செய்திருக்கலாம். ஆனால் பிரிட்டன் தனது ஆட்சியை என்றென்றைக்கும் இந்தியாவில் இருக்கும்படி செய்ய விரும்புகிறது. பிரிட்டன் செய்த இப்பெருந் தவறைப் பிரிட்டனே திருத்தட்டுமென்று இந்தியர் இனிக் காத்துக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் நாம் விரும்பும் சுய ராஜ்யம் நமக்குக் கிடைத்துவிட்டாலும், அதன் வாசல் அங்கே தனித்தொகுதி யென்னும் தாழ்ப்பாளாற் பூட்டப்பட் டிருக்கக் காண்போம்.

## 2. பிரித்தாளுங் கொள்கை

இதுதான் பிரிட்டானியாவின் விஜய காண்டீபம். இது தான் பிரிட்டிஷ்காரர்களின் பாசுபதாஸ்திரம். இதுதான் பிரிட்டிஷ் சர்க்காரின் வஜ்ராயுதம். இதை அவர்கள் ஜாதிமத சம்பந்தங்களிலே மாத்திரந்தான் பிரயோகிக்கிறுர்க ளென்பதில்லை. நிலப்பிரிவிலும் நீண்ட காலமாய்ப் பிர யோகித்து வருகிறுர்கள். இதற்கு ருஜூ அசல் இந்தியா தேசந்தான். இந்தியா, பிரிட்டிஷ் இந்தியா வென்றும் சமஸ் தான இந்தியா வென்றும் இரண்டாய்த் துண்டு போடப்பட் டிருப்பதுதான்.

மனிதன் குடியிருக்கிற அல்லது மனிதன் கால் பட்ட எல்லா இடங்களிலும் பூமியைச் சம்பாதித்துச், சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொண்ட பிரிட்டிஷ்காரர்கள், ஜெயிக்க முடியாமலா சமஸ்தானங்களை இந்தியாவில் விட்டு வைத்திருக்கிறார்கள்? அல்லது கருணை வைத்துக் காப்பாற்றி வருகிறார்களா? இரண்டுமில்லை. வேண்டுமென்றே—இந்தியாவில் தங்கள் ஆட்சி சிரஞ்சீவியா யிருக்கவேண்டுமென்றே—சமஸ்தானங்களைத் தங்கள் பாதுகாப்புக் கோட்டையாய் வைத்துக்கொண் டிருக்கிறார்கள். இல்லையானால் இதற்குள்ளாகச்—சொடக்கிடு நேரத்தில்—சமஸ்தானங்களை யெல்லாஞ் ஜெயித்து, ஒரே ஏகாதிபத்திய இந்தியாவை ஏற்படுத்தி யிருப்பார்கள்.

இந்தியாவிலிருக்கும் அரசர்கள் அல்லது சமஸ்தானாதிபதிகள், பூர்வகாலத்துச் சூரிய சந்திர வமிசங்களைச் சேர்ந்தவர்களா யிருக்கலாம். அல்லது இடைக்காலத்து பாதுஷா பரம்பரையைச் சேர்ந்தவர்களாகவு மிருக்கலாம். அந்த பாத்தியதையை அவர்கள் கொண்டாடியபோதிலும், அதற்காக வெல்லாம் பிரிட்டிஷ்காரர்கள் அவர்களை வைத்துக்கொண்டிருக்கவில்லை. பண்டைக் காலத்துப் போர்ச் சேவக மான்யானுபவத் தலைவர்களாகவும், இந்தியாவைப் பிடிப்பதற்காகச் செய்யப்பட்ட யுத்தங்களில், சைன்ய சகாயஞ் செய்தவர்களாகவும் வைத்துக்கொண் டிருக்கவில்லை. 1935-ம் வருஷத்து அரசியல் சட்டத்தை ஆக்கியவர்கள் சொன்னபடி "இந்திய அரசியல் நிலைமையிற் கோளாறு ஏற்படாதபடி தடுப்பதற்காகவும், ஜனநாயகம் சாத்தியமாகாதபடி (தேசீய முற்போக்கை) தடுப்பதற்காகவுமே" சுதேச மன்னர்களை பிரிட்டிஷ் சர்க்கார் பாதுகாத்து வருகிறது.

மேலும், பிரிட்டிஷ் சர்க்கார் தனது அரசனைச் சக்கிரவர்த்தியாக்க வேண்டுமென்பதற்காகவும், இத்தனை சமஸ்

தாஞதிபதிகளை இந்தியாவில் வைத்திருக்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியா தங்களைவிட்டுப் போய்விடாமல் இருப்பதற்காக 'பப்பர் ஸ்டேட்ஸ்' என்று சொல்லப்படும் இடைநாடுகளாய், வைத்துக் கொண்டிருக்கிறது. இதற்குச் சாட்சி, வேலிக்கு ஒணானைப் போற், சமஸ்தானங்களிருக்கும் பூகோள அமைப்புத்தான்.

இந்தியாவிற் சிறிதும் பெரிதுமாய் 562 சமஸ்தானங்களிருக்கின்றன. அவற்றின் மொத்த விஸ்தீரணம் 7 லட்சம் சதுர மைல். ஜனத்தொகை சுமார் 8 கோடி. இப் புள்ளி விவரப்படி பார்த்தால், அகில இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்திற் சரிபாதி யிடத்தைச் சமஸ்தானங்கள் அடைத்துக் கொண்டிருக்கின்றன வென்றும், அகில இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் கால்வாசி ஜனங்களை நிரைத்துக் கொண்டிருக்கின்றன வென்றுந் தெரிகிறது.

இத்தனை சமஸ்தானங்களும் இந்தியாவின் ஒரு பாகத்தில் ஒதுங்கி அல்லது ஒதுக்கப்பட் டிருக்கின்றனவா? அவசரக் கோலம் அள்ளித் தெளித்தது போல், அகில இந்தியாவிலும் அவை சிந்திச் சிதறிக் கிடக்கின்றன. ஜனநாயக சர்க்கார் அமைப்புக்கு இதுவே ஒரு பெரிய இடைஞ்சலல்லவா? சமஸ்தானங்களை யெல்லாங் கூட்டிச் சேர்த்துக் கொண்டும், சமஸ்தாஞதிபதிகளை யெல்லாங் கட்டியிழுத்துக் கொண்டும், இந்தியா தனக்குத் தாஞகவே ஒரு ஸ்தானத்தை அடைவதென்பது சாமான்யமான காரியமா?

இவ்வளவு இடைஞ்சலும், இந்தியாவுக்கு அது சுயராஜ்யம் அடைய வேண்டு மென்று எண்ணித் துணிகிற காலத்தில் ஏற்படவேண்டு மென்று, தீர்க்க தரிசனமாய்த் தீர்மானித்துத் தான் சுதேச மன்னர்களுக்குப் பிரிட்டிஷ்காரர்கள், சமஸ்தான தானம் செய்தார்கள். 'பெற்று விட்ட

பிள்ளையும், நட்டு வைத்த பயிரும்.' போல்,அது இப்பொழுது அவர்களுக்குப் பயன்படுகிறது.

சமஸ்தானங்களால் சமஸ்த இந்திய வாழ்வில் எவ்வளவு பெரிய பள்ளம் படுகுழிகள் விழுகிறதென்பதும், சமஷ்டிக்கு எத்தனை சாத்தியமின்மைகள் ஏற்படுகிறதென்பதும், ஜனநாயக வளர்ச்சிக்கு எத்தகைய இடைஞ்சல்களிருக்கிறதென்பதும் இன்னொரு சந்தர்ப்பத்துக்கு இருக்கட்டும்; மேலே செல்லுகிறேன்.

## தேக் கோப்பைக்குள் தேசீயப் புயல்!

1919-க்குப் பின்னால், இந்திய அரசியல், முன்னே பின்னே-எங்கோ அடியெடுத்து வைத்ததுண்டானால், அது 1935-லேதான். 1935-ம் வருஷத்திய இந்திய அரசியற் சட்டத்தைப் புதிய சீர்திருத்தமென்று சொல்லுகிறார்கள். சில சில்லறை மாற்றங்களைக் கொண்டிருப்பதால் மாத்திரம், பழைய சீர்திருத்தம் புதிய சீர்திருத்தமாகிவிடாது. 'கழுதை அழகா, கோவேறு கழுதை அழகா' என்று ஒருவன் ஒரு வித்துவானைப் பார்த்துக் கேட்டான். அதற்கந்த அறிவுள்ள வித்துவான், 'கழுதைக்குக் குரலழகு, கோவேறு கழுதைக்குக் கழுத்தழகு' என்று சொன்னார். அதே வித்தியாசந்தான் 1919-ம் வருஷத்து அரசியற் சட்டத்துக்கும், 1935-ம் வருஷத்து அரசியற் சட்டத்துக்கும் உள்ளது.

சட்டத்தில் திட்டமான அல்லது மட்டமான மாறுதலேற்பட்டாலும், சர்க்காரின் கொள்கையிலோ மனப்பான்மையிலோ எதுவும் மாறுதலேற்படாத வரை, அதைச் சீர்திருத்தமென்று சொல்லவோ அல்லது 'பழசு புதுசு' என்று பாகுபடுத்தவோ முடியாது. மகாத்மா காந்தி, 1930-ல் கூறியதுபோல் "சட்டங்கள் கத்தை கத்தையாய்ப் புத்தகங்களிலிருந்

தாலும், விதிகள் குப்பை குப்பையாய் ஏடுகளிலிருந்தாலும், அனுஷ்டானத்திலுள்ள சட்டம் ஒன்றே ஒன்றுதான். அதாவது, பிரிட்டிஷ் அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும், தத்தம் எண்ணத்தில் என்ன சங்கற்பஞ் செய்கின்றனரோ அதுதான் இந்தியப் பிரஜைகள் பிரத்தியட்சமாய்க் காணுஞ் சட்டம்." அந்தச் சட்டம் மாருதவரை, எந்தச் சட்டம் மாறினலென்ன? மண்ணுய்ப்போனலென்ன?

1935-ம் வருஷத்திய அரசியற் சட்டம் மெய்யோ பொய்யோ, நல்லதோ கெட்டதோ, அது பிறந்து வளர்வதே ஒரு பிரத்தியேகமான கதை! அதைச் சொல்லப்போனல் கர்ப்போற்பத்தி முதல் கட்டையேற்றும் வரை கதை நீளும்! சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்:

"ஒரு வருஷத்திற் குடியேற்ற நாட்டந்தஸ்து, இல்லையானுற் பூரண சுயராஜ்யம்" என்ற நேரு திட்டமும், அதையனுசரித்து 1929-ல் ஏற்பட்ட பூரண சுயராஜ்யத்-தீர்மானமும், அப்புறம் 1930-ல் லார்டு இர்வினுக்கு, மகாத்மா காந்தியெழுதிய இறுதிக் கடிதமும், அதைத் தொடர்ந்து நடந்த உப்புச் சத்தியாக்கிரக மென்னும் தேசீயப் புயலும், அதன் இறுதியிலேற்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தமுந்தான் புதிய சீர்திருத்தம் சூல் கொள்ள எதுவாயிருந்த இடங்கள்.

கர்ப்பம் வளர்ந்தது; வேதனையு மேற்பட்டது. வட்டமேஜை கூட்டி வைத்தியம் பார்த்தார்கள்; பிள்ளை பிரசவிக்கவில்லை. காங்கிரஸ் வைத்தியர் காந்தியை அழைத்துக் காண்பிப்பதென்று முடிவு சொல்லப்பட்டது. அப்போதே மகாத்மா, பிறக்கப்போகிற பிள்ளைக்குப் பின் வருமாறு ஜாதகம் * கவனித்து விட்டார்:

---

* காந்தி இர்வின் ஒப்பந்தத்தைப் பற்றி 1931-ல் மகாத்மா காந்தி கூறிய அபிப்பிராயம்.

"புதிய அரசியல் திட்டத்தில் சமஷ்டி என்பது ஒரு முக்கியமான கட்டம். அதுபோலவே பொறுப்பாட்சியும்.

"காங்கிரசின் லட்சியம் பூரண சுயராஜ்யம். பூரண சுயராஜ்யமென்னும் அந்த இனிமையான வார்த்தை யிந்த ஒப்பந்தத்தில் எந்த இடத்திலுமில்லை. ஆனால் அவ் வார்த்தையை மறைத்துக்கொண்டு இதில் ஒரு ஷரத்து இருக்கிறது. அதற்கு இரண்டு விதமான அர்த்தங் கொடுக்கலாம். வேண்டுமென்றுதான் அது அவ்வாறு தயாரிக்கப் பட்டிருக்கிறது.

"1. சமஷ்டி: இது வெறும் மாயை (கானல்நீரைப் போல்) யாயிருக்கலாம்; அல்லது ஜீவசக்தி திமிர்ந்த உண்மை அமைப்பாகவு மிருக்கலாம்.

"2. பொறுப்பாட்சி: இது இப்போது உத்தேசிக்கப் பட்டிருக்கும் அரசியற் கட்டிடத்தின் மற்றொரு உத்திரம். சொல்லப்போனால் இது செல்லரித்த சொள்ளைத்தடியா யிருக்கலாம்; அல்லது ஓங்கிவளர்ந்து உறுதியும் உத்தர வாதமுமுள்ள தேக்கமரமாகவு மிருக்கலாம்.

"இவ் விரண்டுக்கும் ஒரு கட்சியார் ஒரு அர்த்தஞ் சொல்லுவார்கள்; இன்னொரு கட்சியார் இன்னொரு அர்த்தஞ் சொல்லுவர்."

இவ்வாறு கணிக்கப்பட்ட இரட்டைக் குட்டிகளை இரண்டாவது வட்டமேஜை யீன்றது. ஒன்று சமஷ்டி; மற்றொன்று மாகாண சுயாட்சி.

## வந்ததும் வராததும்:

1937—ஏப்ரல் முதல்நாள் மாகாண சுயாட்சி வந்தது. அது இப்பொழுது நடைப் பருவத்தில் அல்லது வித்வான்கள் கூறும் வாரானைப் பருவத்திலிருக்கிறது.

ஏழு மாகாணங்களில் எங்கள் காங்கிரஸ் மந்திரிகள் ராஜீய ரத மூர்ந்து, வலசாரி இடசாரி வருகிறுர்கள்: கவர்னர்களின் எதேச்சாதிகாரத்தைக்கூட எத்தனையோ தரம் 'எட்டி நில்'லென்று சொல்லிவிட்டார்கள்.

சந்தேகச் சட்டத்தின்கீழ், கவர்னர்களின் எதேச்சாதிகாரத்தின் எதிரே, வகுப்புப் பிரதிநிதிகள் மத்தியில், ஐ. ஸி. எஸ். வர்க்கத்தின் முன்பு, கொடுத்த வாக்குறுதிக்கும், எடுத்த கொள்கைக்கும், அடுத்த முயற்சிக்கும் பழுது வராமல், ஜன சக்தியினுலும், காங்கிரஸ் பக்தியினுலும் பிரிட்டிஷாரிடமிருந்து சில அதிகாரங்களைப் பிடுங்கித்தான் நமது மந்திரிகள் நாடாளுகிறுர்கள். என்றுலும் அதுவல்ல நாம் விரும்புவது; அதுவல்ல நமது லட்சியம். பழஞ் சுவைக்க விரும்புவோர் மரத்தைக் கண்டு மாத்திரந் திருப்தியடைய முடியுமா? சர்தார் வல்லபாய் படேல் சொல்லுவதுபோல் "இதனுலெல்லாம் சுயராஜ்யக் கதவு திறந்து விடாது. இது வெறும் ஜன்னல். ஜன்னல் வழியாக வேண்டுமானுல், கதவை எப்படி உடைப்பதென்று காணலாம்."

சமஷ்டி இன்னும் வரவில்லை. வருமோ வராதோ அதுவும் தெரியவில்லை. வரவேண்டுமென்று விரும்புகிறவர்கள் எவரும் இந்தியாவி லிருப்பதாகவுமில்லை. சமஷ்டிப் பங்காளிகளான சமஸ்தானங்களும் வெறுக்கின்றன; மாகாணங்களும் வெறுக்கின்றன.

---

# 2. சில அபிப்பிராயங்கள்

'ஊர் வாயை மூட உலை மூடி யில்லை'. கட்டின வீட்டுக்கு எட்டு வக்கணை கூறுவது வழக்கம். சமஷ்டியைப்பற்றிச் சில அபிப்பிராயங்களுக்கு இது ஏற்ற இடமாயிருக்குமென் றெண்ணுகிறேன்.

## ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் :—

"எங்கள் விருப்பத்துக்கு விரோதமாய், எங்கள் மீது சுமத்தப்படும் எந்த பந்தத்தையும் நாங்கள் ஏற்கமாட்டோம். ஆனால் தானாகவே செய்து கொள்ளும் ஒப்பந்தத்தின் பேரில், பிரிட்டனுடன் நேசப்பான்மையான சம்பந்தம் வைத்துக் கொள்ள இந்தியா சம்மதிக்கும். பெடரேஷன் அமைப்பைப் பற்றி பிரிட்டனோடு பேரம் பேச, எந்த இந்தியத் தலைவரும் தயாராயில்லை.

"இந்திய அரசியற் சட்டமே அடியோடு மாற்றப்பட வேண்டும். வெறுந் திருத்தங்கள் மட்டும் இந்தியாவைத் திருப்தி செய்யாது. பிரிட்டிஷ் பிரதிநிதிகளால் தயாரிக்கப்பட்ட அரசிய லமைப்புக்குப் பதிலாக, இந்தியப் பிரதிநிதிகளா லாக்கப்பட்ட அரசிய லமைப்பைத்தான் இந்தியா விரும்புகிறது.

"சமஷ்டித் தத்துவத்தை நாங்கள் வெறுக்க வில்லை. சுதந்திர இந்தியாவிலும் ஒரு சமஷ்டி அமைப்புத்தானிருக்கும். ஆனால் அந்தச் சமஷ்டி இந்தச் சமஷ்டியின் மீது வளராது. பெடரேஷனை ஒப்புக் கொள்வது, அரசியல் தற்கொலைக்குச் சம மானது".

**மகாத்மா காந்தி :—**

"பூரண சுயராஜ்யத்தை அடிப் படையாய்க் கொள்ளாத எந்த அரசியலமைப்பையும் இந்தியா இனி யேற்காது".

* * *

**பண்டித ஜவஹர்லால் :—**

"வேறு எல்லாவற்றையும் மதிப்பிட இந்தியா வைத்திருக்கும் அளவுகோல் பூரண சுதந்திரம். உருப்படியாகவும் உடனடியாகவும் நாங்கள் கோருவதும் அதுதான். சமஷ்டி எங்கள் கோரிக்கையின் கிட்டக்கூட நிற்காது.

"சமஷ்டியை அதன் கொள்கை அல்லது தத்துவப் படி பார்த்தாற் கெடுதியில்லை. ஆனால் இந்தியாவைத் துண்டு துண்டாய்ப் பிரிக்கக் கூடாது. சமஸ்தான இந்தியா வென்றும் இதர இந்தியா வென்றுஞ் சொல்லுவதே தவறு".

* * *

**சர்தார் படேல் :—**

"பெடரேஷனைத்தான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால் அது முழுதும் சுதேசியா யிருக்கவேண்டும். எதிலும் சுதேசியைத்தான் இந்தியா விரும்புகிறது. அழகாய்ச் செய்து கொடுத்தாலும், அந்நியர் தரும் சமஷ்டி எங்களுக்கு வேண்டாம்."

* * *

**ஸ்ரீ. புலாபாய் தேசாய் :—**

"சமஷ்டி சட்டசபையில் மூன்றிலிரண்டு பங்கு மெம்பர்கள் மாகாண ஜனங்களாலும், மற்றவர்கள் சமஸ்தான ஜனங்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா யிருந்தாலும், பெடரேஷனில் இன்னும் எத்தனையோ ஆட்சேபனைக ளிருக்கின்றன."

**ஸ்ரீ. சத்தியமூர்த்தி :—**

"வரப்போகுஞ் சமஷ்டி, உலகத்திலேயே ஒரு புது சிருஷ்டி. இந்திய தேசியக் காங்கிரஸ், இதை எவ்வளவு தூரம் வெறுக்கிறதோ, அவ்வளவு தூரம் முஸ்லீம் லீகும் வெறுக்கிறது; இந்து மாகாசபையும் வெறுக்கிறது; இதர சபைகளும் வெறுக்கின்றன. சுதேச மன்னர்கள் வெறுக்கிறார்கள்; மிதவாதிகளும் வெறுக்கிறார்கள். எல்லாரும் வெறுக்கும் சமஷ்டியை இந்தியா மீது எப்படிச் சுமத்த முடியும்?"

* * *

**டாக்டர் அம்பேத்கார் :—**

"மகா கொடிய விஷமான பெடரேஷனை, என் கட்சி ஒருபோதும் ஆதரிக்காது. வளர்ச்சிக்கு இடமேயில்லாத அரசியலமைப்பை யார்தா னாதரிப்பர்?

* * *

**ஸ்ரீ. கோஸ்வாமி :—**

"உணவு கேட்டோம்; மண்ணாங்கட்டி கிடைத்திருக்கிறது."

* * *

**ஜனுப் பஸ்லுல் ஹக்:—**

"மலை கல்லி எலி பிடித்ததுபோல் ஏதோ வெளியாகியிருக்கிறது. சுயமரியாதையுள்ள இந்தியரை இது அவமதிப்பதாகும்."

* * *

**ஷேக் அப்துல் மஜீத் :—**

"சீர்திருத்தங்கள் பிற்போக்கானவை. பாதுகாப்புகள் அளவு கடந்துவிட்டன. ஜவாப்தாரித்துவம் இல்லை. மத்திய

சர்க்காரில் இரட்டையாட்சி யேற்படுத்தி, மறைமுகமாகத் தேர்தல் நடத்துவது மகாமோசம்.”

*  *  *

**ஸர் ஸாப்ரூ :—**

“புதிய சீர்திருத்தங்களை நடத்தி வைக்க நான் வரமாட்டேன்; காங்கிரஸ்காரர்களுக்கு வழிவிட்டு விலகிக் கொள்ளுவேன். காங்கிரசுண்டு சர்க்காருண்டு பார்த்துக் கொள்ளட்டும்.”

*  *  *

**ஸர் முகமது இக்பால் :—**

“வெள்ளை ராஜாக்கள் ஒரு பக்கத்திலும், கருப்பு ராஜாக்கள் மற்றொரு பக்கத்திலும் இந்தியாவை யாளுங் காட்சி, வேடிக்கையாயிருக்கும்.”

*  *  *

**பாரிஸ்டர் மியான்ஷா நவாஸ் :—**

“காங்கிரசாருள்பட எல்லாக் கட்சியாருமடங்கிய ஒரு சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டி, அவசியமான மாறுதல்களைப் பற்றி யோசிக்க வேண்டும்.”

*  *  *

**ஸர் ஹரிசிங் கௌர் :—**

“பிரிட்டன், குடியேற்ற நாட்டந்தஸ்து விஷயமாய்த் தன் வார்த்தையைக் காப்பாற்றவில்லை.”

*  *  *

**ஸர் அப்துர் ரஹிம் :—**

“முப்பத்து முக்கோடி ஜனங்களின் தலையில், இயற்கைக்கு விரோதமான அரசியலைச் சுமத்துவதா? இந்தப் புதிய

அரசியல், இந்தியாவுக்கு ஒரு நன்மையுஞ் செய்யாது. இந்தியாவின் கோரிக்கையைப் பூர்த்தியும் செய்யாது.”

* * *

**ஜனப் ஜின்னு :—**

“இந்திய சமஸ்தானுதிபதிகள் நியமனஞ் செய்யும் ஆட்களின் தயவில், பிரிட்டிஷ் இந்தியா இருக்கப்போகிறது. சமஸ்தானுதிபதிகள், பிரிட்டிஷ் முதலாளிகளின் சவுக்கடிக்குக் கீழ்ப்படுகிறவர்கள். சமஷ்டியின் நோக்கம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை யிங்கு ஸ்திரமாய் நிலைநாட்டுவதுதான். பொறுப்பாட்சி யென்பது பொய்.”

* * *

**ஸ்ரீ கே. ஆர். சாஸ்திரி :—**

(அலாகாபாத் சர்வகலாசாலை சட்டவாசகர்)

“சமஷ்டியில் வரும் வெளிநாட்டு வியவகாரங்களில், துளிகூட நமக் கதிகாரமில்லை. ராணுவத்தையும் பொக்கிஷத்தையும் நாம் தொடக்கூடாது. பாதுகாப்புகள் சகிக்கக் கூடியவைகளல்ல.”

* * *

**ஸ்ரீ மால்கோம் மாக்டோனல்டு :—**

“பிரிட்டனும் இந்தியாவும் பிரிந்து போவதற்கான நாச கால வேலைகள் இந்தியாவில் நடைபெறுகிறது. இது புதிய அரசியற் பரிட்சையில் ஆரம்பித்திருக்கிறது.

* * *

**ஸ்ரீ ஸி. ஸி. மில்லர் :—**

“கட்டிட அமைப்பே பூர்த்தி பெறும விருக்கிறது. நியமன சர்க்காருக்குப் பதிலாய்த் தேர்தல் சர்க்கார் முறை

வந்து, கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டா லொழியக் கட்டிடத் திற் கலகலப்பு ஏற்பட்டு விடும்."

* * *

"லீடர்" பத்திரிகை :—

"இந்த அரசியல் திட்டம், இங்கிலாந்திலிருந்து வரக் கூடியதல்ல. இந்தியாவும் இதை யேற்றுக்கொள்ளாது. இதனுல் அதிருப்தி குறையாமல், இப்போதுள்ள துக்ககர மான நிலைமையே நீடிக்கும். இதை விட இப்போதுள்ள அரசியலே தேவலையென்று தோன்றுகிறது. சரியான சீர் திருத்தம் வரும்வரைக் காத்திருந்தாலும் தேவலே."

* * *

"மான்செஸ்டர் கார்டியன்" :—

"சமஷ்டி சம்பந்தமாய் லார்டு ஜெட்லண்டு வெளியிட் டுள்ள அறிக்கைக்கு "இஷ்டமானுல் எடுத்துக்கொள்! இல்லே யானுல் எட்டிப்போ!" என்று அர்த்தமானுல், இந்தியா நிச்சய மாய் இதை எடுத்துக் கொள்ளாது. லார்டு ஜெட்லண்டும் வைஸிராயும் சமஷ்டிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு புது வழி கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்தியாச் சட்டஞ் சுக்குநூருய் உடைந்துவிடும். அப்புறம் இந்தியாவில் என்ன நடக்குமென்று இப்போது யாராலும் ஒன்றுஞ் சொல்லமுடியாது. இந்தியாவின் எதிர்காலத்தைத் திட்டமாய்த் தீர்மானித்து, அதற்கு மேற்பட்ட விஷயங்களைத் தாராளமாக வும் சௌஜன்யமாகவும் விவாதிப்பது அவசியம்."

* * *

லண்டன் "டைம்ஸ் :—"

"மேலே யிருந்து திணிப்பதைவிட, ஒப்பந்தத்தின் மூலம் சம்மதத்தைப் பெறுவதென்னுங் கொள்கை அபி

விருத்தி செய்யப்படுமானால், எதிர்காலத்தில் இந்தியாவையும் பிரிட்டனையும் பிணைக்கும் பந்தங்கள் பலமடைய முடியும். பிரிட்டிஷ் இந்தியாவும், இந்திய சமஸ்தானங்களும் அடங்கிய பெடரேஷனை அங்குரார்ப்பணஞ் செய்து வைக்குமுன், மகா பெரிய கஷ்டங்களைச் சமாளிக்க வேண்டியதிருக்கும்."

* * *

## இப்படியாவது இருந்திருக்கலாம்:—

இந்திய அரசியற் சட்டம், குறைந்த பட்சம் இப்படி யாவது இருந்திருந்தால் தேவலை யென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். அதாவது :—

1. சமஷ்டி சபைக்கு மறைமுகமான தேர்தலில்லாமல் நேர்முகமான (மாகாணக் கீழ் சபையிலிருப்பது போல்) தேர்தல் நடைபெற வேண்டும்.

2. பொக்கிஷம், மேல் சபையிலிருந் தெடுக்கப்பட்டுக் கீழ் சபைக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

3. சட்டத்தைத் திருத்துவதில், சமஸ்தானப் பிரதிநிதிகள் எதிராக வோட்டளிக்க உரிமை கொடுக்கப்பட்டிருக்கலாகாது.

4. பாதுகாப்பு (ராணுவம், கடற்படை யுள்பட) அந்நிய நாட்டுச் சம்பந்தம் முதலியவைகளில் இதர குடியேற்ற நாடுகளுக்கிருக்கும் அதிகாரம் இந்தியாவுக்கும் இருக்க வேண்டும்.

5. கவர்னர்களுக்கும் கவர்னர்-ஜெனரலுக்கும் சர்வ மான்யமாய்த் தரப்பட்டிருக்கிற எதேச்சாதிகாரங்கள், சொந்தத் தீர்ப்புகள், விசேஷாதிகாரங்கள் இருக்கக்கூடாது.

---

# 3. சமஷ்டி யென்றாலென்ன ?

ஆங்கிலத்தில் பெடரேஷன் (Federation) என்று சொல்லப்படும் வார்த்தை, தமிழில் சமஷ்டி யென்று வந்திருக்கிறது. உண்மையில் இது ஒரு தமிழ்ப்பதமே யல்ல. யதார்த்தமாய்ப் பார்த்தால் சமஷ்டி யென்பதற்கு 'ஐக்கியம்' என்று அர்த்தஞ் செய்யலாம். அதுவும் தமிழ்—அல்லது தனித் தமிழாகாது. கட்டுப்பாடு அல்லது கூட்டுறவு என்று சுத்தத் தமிழிற் சொல்லலாம். ஆனால் அவைகள், விஷயத்தை நேரே விளக்கவில்லை. எந்த விஷயத்திலும் வார்த்தையைவிடக் கருத்தே பிரதானமாகையாலும், சமஷ்டி யென்றால் பெடரேஷனென்று தமிழர்கள் நன்றாய்த் தெரிந்துகொண் டிருப்பதினாலும், வேறு வார்த்தைக்கு அவசியம்—அல்லது அலைய வேண்டிய அவசிய மிருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை.

மேலும், சமஷ்டி யென்னும் சமஸ்கிருதச் சொல் தமிழகத்தின் நாட்டுப்புறங்களிற் 'சமட்டி' யென்று வழங்கப்படும் சாதாரணச் சொல்லாய் இருந்து வருகிறது. கிராமப் பஞ்சாயத்துகளில் இதை அடிக்கடி கேட்கலாம். அங்கே அதற்குச் சமத்தன்மையோடு கூடிய தீர்ப்பு அல்லது ஒப்பந்தம் என்று அர்த்தம். சமம் என்னும் வேரிலிருந்து முளைத்த இவ் வார்த்தையின் அர்த்தம், இங்கும் பொருத்தமாய்த்தா னிருக்கிறது. பேதம் பாராட்டக் கூடாது. பேதத்துக் கிடமில்லை.

### அரசியல் அர்த்தம் :

அரசியலில் 'சமஷ்டி' யென்னும் வார்த்தைக்கு ஒரேவிதமான அந்தஸ்தும் உரிமையுமுடைய ஒன்றுக்குமேற்பட்ட பல தேசங்கள் ஒன்று சேர்ந்து, ஒருபொதுக்காரியத்தை அல்லது லட்சியத்தை முன்னிட்டுத் தங்களுக்குத் தாங்களாகவே

அமைத்துக்கொள்ளும் ஐக்கிய அல்லது கூட்டுறவு அரசாங்கம் அல்லது ஸ்தாபனம் என்று அர்த்தம். அதற்குள் கூட்டுறவு கொள்ளுகிற தேசங்கள், தனித்தனியாய்ச் சுதந்திரமுடையதாகவே யிருக்கும். அடிமையாயிருக்கும் ஒரு தேசம், இன்னொரு சுதந்திர தேசத்துடன் சமஷ்டியாய்ச் சம்பந்தமாய் வைத்துக்கொள்ள முடியாது. அதேமாதிரி சுதந்திரமாயிருக்கும் ஒரு நாடு, இன்னொரு அடிமை நாட்டுடன் சமஷ்டியாய்ச் சம்பந்தம் வைத்துக்கொள்ள முடியாது; விரும்பவும் விரும்பாது. கையுங் கையுஞ் சந்திக்குமே யொழியக் காலுந் தலையும் எங்காவது சந்திக்க முடியுமா ?

இவ்வாறு கூட்டுறவு கொள்ளுந்தேசங்கள், ஒத்த உரிமையும் ஒத்த அந்தஸ்தும் உள்ளவைகளா யிருக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமும் நியதியுமில்லை—இடக்கையும் வலக்கையும் போன்றிருக்கலாம். ஆனால் அவசியம் ஒன்றுக்கொன்று கட்டுப்பட்டதாகவும் அடிமைப்பட்டதாகவும் இருக்கக் கூடாது. அப்படி யிருந்தால் அவைகளுக்குள் ஐக்கியபாவமும் பொதுநோக்கமும் ஒருக்காலு மேற்படாது.

எந்த ஒரு பொது நோக்கத்தைக் கொண்டு—எந்த ஒரு லட்சியத்தை யெதிரில் வைத்துக்கொண்டு அவைகள் ஒன்று சேர்ந்து, ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கிக் கொள்ளுகின்றனவோ, அந்த ஸ்தாபனத்தினிடம்-அது சம்பந்தமான சகல அதிகாரத்தையும், சர்வ நிர்வாகத்தையும் விட்டுவிட வேண்டும். இல்லையானால் அந்தப் பொது ஸ்தாபனம், எப்படிப் பலம் பொருந்தியதா யிருக்க முடியும் ?

கூட்டு நிர்வாகம், எதிலும் எப்பொழுதும் வன்மை வாய்ந்ததாகவே யிருக்கிறது. ஆனால் அதற்குள் தனி நிர்வாகமொன்று தனியாயிருந்து, அதன்மீது அதிகாரஞ் செலுத்தச் சமஷ்டி சக்தியற்றதாயிருந்தால், அதுவும் பயன்

படாது. உதாரணத்துக்கு, பிரிட்டிஷ் அரசியல் நிர்வாகத்தை யெடுத்துக்கொள்ளுவோம். இங்கிலாந்தும் ஸ்காட்லாந்தும் வேல்ஸூம் ஒரே கூட்டுக் குடித்தனம் நடத்துகின்றன. அவை கள் ராணுவத்தைத் தனித்தனியாய் வைத்துக்கொண்டால், மேற்படி நிர்வாகம் நேரே-நீடித்து நடக்குமா? எதோ ஒரு தேசம், பிரிட்டிஷ் தீவுகள்மீது படையெடுத்தால், அதை எந்த ராணுவம் நில்லென்று தடுப்பது? இங்கிலாந்துப் படை யெதிர்க்கட்டுமே என்று வேல்ஸ் படையும், ஸ்காட்ஸ் படை யும், சும்மா விருந்தா லென்னுகும்? எதிரி எல்லாவற்றையுமே இலகுவில் வென்றுவிடமாட்டானு? மூன்று தேசங்களுமே முடிவில் தோற்கடிக்கப்படமாட்டாதா? ஆகையால் கூட்டு நிர் வாகத்தில் தனி நிர்வாகமென்பது உண்மையாகவே ஒரு குழப்பத்தை யுண்டாக்கும்.

பல தேசங்கள், தனித்தனியாய் ஒன்றுக்கொன்று சம் பந்தமில்லாமற் செய்யும் நிர்வாகத்தையும், அதே தேசங்கள் ஏககாலத்தில் தனித்தனியாகவும் மொத்தமாகவுஞ் செய்யும் நிர்வாகத்தையும், அவைகள் ஒரே மொத்தமாய்ச் செய்யும் ஒரே பொது நிர்வாகத்தையும், ஒருகணங் கண்ணை மூடிக் கொண்டு ஒப்பிட்டுப் பார்த்தால், இம்மூன்றில் எது மிகுதி யான பலமுடையதென்பது தானே தோன்றும்.

## சமஷ்டிப் பிரபுத்துவம் :

எந்தச் சமஷ்டியுந் தனக்குத் தானுகவே வன்மை யடைந்துவிட முடியாது. சமஷ்டியிற் சேரும் ஒவ்வொரு தேசமும், தத்தம் சுயநன்மையை முன்னிட்டும், சமஷ்டியின் பொது நன்மையை முன்னிட்டும், முழுதுமாவது அல்லது கொஞ்சமாவது அதிகார தியாகஞ்செய்து, சமஷ்டிக்கு வழங்க வேண்டும். அவ்வாறு கிடைக்கும் மொத்த அதிகாரத்தைக் கொண்டுதான், சமஷ்டிகள் பிரபுத்துவம் பெறலாம்.

## இரு எஜமானர்கள் :

அதிகாரம் இவ்வாறு பகிர்ந்து கொடுக்கப்படுகிறபோது, நிர்வாகம் இரண்டாய்ப் பிரிகிறது. ஒன்று, சமஷ்டி தேசங்கள் ஒவ்வொன்றும் தனக்குத் தானாகவே வைத்துக்கொள்ளும் தனி நிர்வாகம்; மற்றொன்று, சமஷ்டி தேசங்கள் ஒன்று சேர்ந்து தங்களுக்குத் தாங்களாகவே யேற்படுத்திக்கொள்ளும் பொது நிர்வாகம்-இப்பொழுது பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண சர்க்காரும் மத்திய சர்க்காரும் இருப்பதுபோல்.

உத்தேசிக்கப்பட்டுள்ள சமஷ்டியிற் கூட்டுப் பொறுப் பேற்கிற சர்க்கார், தனக்குள் ஐக்கியப்பட்டிருக்கிற தேசங்களின் பொதுவான இலாகாக்களை நிர்வகிக்கும். ஆனால் உள் நாட்டு வியவகாரங்களிலோ ஒவ்வொரு தேசமும் தனக்குத் தானே அதிகாரமுடையதாயிருக்கும். சமஷ்டிக்கு மாற்றப் பட்டிருக்கும் இலாகாக்களின்மீது தனி நபரோ, அல்லது தனி நபருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் இலாகாக்களின்மீது சமஷ்டி யோ, ஒப்பந்தப்படி அதிகாரஞ் செலுத்த உரிமையிராது. இதனாற் பிரஜைகள் இரு எஜமானர்களுக்குக் கட்டுப்பட்டவர் களாகிறார்கள். ஒன்று, தாங்கள் பிறந்து வளர்ந்த அல்லது குடியேறியிருக்கிற மாகாண அல்லது சமஸ்தான சர்க்கார். மற்றொன்று; தாங்கள் ஸ்வீகரித்திருக்கிற சமஷ்டி சர்க்கார். ஆனால் இந்த வியவகாரம், ஜனநாயக தத்துவப்படி பார்க்கப் பட்டால் தாவா இல்லை. சர்க்காருக்கு ஜனங்கள் எஜமானர் களா அல்லது ஜனங்களுக்குச் சர்க்கார் எஜமானர்களா என்று கேட்டுவிட்டாலோ ?

## ஜனநாயக தத்துவம் :

சமஷ்டியின் அடிப்படையான தத்துவம், சவிஸ்தார மான ஜனநாயகமாகவே யிருக்கமுடியும். ஜனநாயக தத்து

வத்தின் சத்து இல்லாமல் வெறும் பேரை மாத்திரம் சொல்லிக்கொண்டு, எதேச்சாதிகாரக் கோட்டைகளையும் பாதுகாப்பு வேலிகளையும் போட்டுக்கொண்டு வரும் சமஷ்டி, ஜனநாயகத்தின் வேஷ மாத்திரமாகவேயிருக்கும். வேஷத்தைக் கலைத்து விட்டுப் பார்த்தால், உள்ளே ஓட்டைகளும் உட்பிளவுகளும் ஓர வஞ்சனைகளும் மோச நாசங்களும் நிர்வாணமாய் நிற்கக் காண்போம்.

## சில உதாரணங்கள் :

சமஷ்டி சர்க்காரைப்பற்றிய சிந்தனை, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. சில நூற்றாண்டுகளாக அகில உலகத்திலும் இப் பிரச்னை பரம்பரை பரவி வந்திருக்கிறது. சமஷ்டி முறையில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள அனேக நாடுகளும் இருக்கின்றன. கானடாக் குடியரசும், ஐக்கிய தேச அமெரிக்காவும், (யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆப் அமெரிக்கா) ஆஸ்திரேலியப் பொது அரசும், ஜேர்மன் சாம்ராஜ்யமும் இந்த பந்ததியிலே பிரபலமானவைகள். ஐக்கிய நெதர்லாந்தும், ஸ்விஸ் சமஷ்டியும் சுத்தமான ஐக்கிய அரசாங்கங்கள். பண்டைக்காலத்து கிரேக்க ஸீஸியன், அச்சியன் சங்கங்களும் சமஷ்டியின் புராதனத் தன்மையை நினைப்பூட்டுகின்றன.

இவைகளெல்லாம் இக் காலத்து ராஜீயக் கண்களுக்கு நிறைவற்றனவா யிருக்கலாம். அப்படித் தோன்றுவதற்கு அவைகளிடம் அநேக குறைகளுமிருக்கலாம். என்றாலும், முன்னே செல்லுகிறவனுடைய வீழ்ச்சி, பின்னே போகிறவனுக்குத் தீவட்டியாயிருப்பதுபோல் எடுத்துக் கொள்ளப்படலாம். “என்னிடம் வராதே” என்று மாத்திரம் சொல்லிக் கொண்டு இன்னவழியாகச் செல்லென்று சொல்லாமற் பிர்மதண்டுகளைப்போல் நிற்கும் தீபஸ்தம்பங்களைப்

போலில்லாமல், "எங்களிடம் வா! இந்த வழியாய்ப் போ! இது உன்னை வாழ்விக்கும்" என்று பழைய சமஷ்டிகள் பாடங் கற்பித்துக் கொண்டிருக்கின்றன.

## சமஷ்டிச் சாதனங்கள் :

சமஷ்டிக்கு வேண்டிய சாதனங்கள் பல இருக்கலாம். ஆனால் முன்னே சொன்னபடி ஜனநாயக ஆர்வந்தான் முக்கியமானது. சமஷ்டி சர்க்காரை நிர்வகிக்கும் சபைகள், எவ்வித நிபந்தனைகளுமில்லாமல்; வயதுவந்த ஒவ்வொரு பிரஜையினாலுந் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களை யுடையதா யிருக்கவேண்டும். நியமன மென்கிற நீதமற்ற அமங்கலச்சொல் அங்கே வரப்படாது; சலுகைகளும் தலை நீட்டக் கூடாது; வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் வரக் கூடாது. தேச சுதந்திரத்தையும், நபர் சுதந்திரத்தையுங் காப்பாற்றக்கூடிய வல்லபம் சமஷ்டிக்கு இருக்க வேண்டும். மனதின் கௌரவக் குற்றங்களான பொறாமையும் பயமும், வஞ்சமும் லஞ்சமும் உச்சரிக்கப்படாது. அரசியல் முன்னேற்றத்துக் கேதுவான ஒற்றுமையி னுபயோகமும், அதைக் காக்குந் திறமையும் அவசியம் வேண்டும். உரிமைக்கு உத்தரவாதமில்லாத ஒரு ஸ்தாபனம் அல்லது இலாகாக்கூட அதில் இருக்கக் கூடாது.

ஏகாதிபத்திய நோக்கத்தோடு அல்லது ஏகாதிபத்தியக் கொள்கையை உள்ளடக்கிக் கொண்டு ஏற்படுத்தப்படும் எந்தக் கூட்டுறவும் சமஷ்டியாகாது; சொல்லப் போனால் அதுவொரு எதேச்சாதிகாரத் திரளேயாகும். சுயநலமானது எங்குக் குறைவாகவோ கூடுதலாகவோ பலியிடப் படவில்லையோ, அங்குப் பொதுநலம் பூரிக்காது; சமஷ்டியும் சாத்தியமாகாது.

## இவைகளெல்லாம் இல்லை :

ஒரு குறிட்பிட்ட காரியத்தை முன்னிட்டு ஒரு குறிப்பிட்ட காலத்துக்காக மட்டும் ஏற்படுத்தப்படுங் கூட்டுறவும் சமஷ்டியாகாது. உதாரணத்துக்கு, இப்பொழுது இந்திய மன்னர்க ளாரம்பித்திருக்கும் நரேந்திர மண்டலத்தை எடுத்துக் கொண்டால் அதைச் சமஷ்டி ஸ்தாபன மென்று யாரே னுஞ் சொல்ல முடியுமா? அல்லது ஐரோப்பிய மகா யுத்தத்தில் நேச தேசங்களென்று சொல்லப்பட்ட பிரிட்டன், பிரான்ஸ், ருஷியா, அமெரிக்கா முதலிய நாடுகளின் கூட்டுறவையாவது சமஷ்டியென்று சொல்ல வாயெடுக்கலாமா? அன்றி ஐரோப்பாக் கண்டத்திலிருக்கும் சர்வதேச சங்கத்தையாவது சமஷ்டி சபையென்று சொல்லத் துணியலாமா? சர்வதேச சங்கத்தில், உலகத்தில் உண்டான பல தேசங்களின் பிரதிநிதிக ளிருந்தாலும் அவர்களெல்லாம் அநேகமாய் அவ் வந்நாட்டு அயல்நாட்டு மந்திரிகளாகவே யிருப்பார்கள். ஆகையால் அதைச் சர்வதேச வெளிநாட்டு மந்திரிகள் சபை யென்றுகூடச் சொல்லிவிடலாம் போலிருக்கிறது. மேலும் அதன் நடவடிக்கைகளைக் கவனித்தால், வல்லரசுகள் தங்கள் தங்கள் சொந்த நன்மைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக வைத்திருக்குஞ் சதுரங்க மண்டபம் போலுமிருக்கிறது. சங்க தேசங்கள் ஏதேனும் இரண்டு, ஒன்றுக்கொன்று மனஸ்தாபப்பட்டு யுத்தவெறி கொள்ளுமானல் அன்றி அவைகளுக்குள் எல்லைத் தகராறு போன்ற வில்லங்கங்க ளேதாவதேற்படுமானல், அப்போதெல்லாம் சர்வதேச சங்கம் தலையிட்டுச் சமரஸம் அல்லது பகிஷ்காரம் போன்ற காரியங்களைச் செய்து, சமாதானத்தை யுண்டாக்குவ தென்னும் குறிப்பிட்ட நோக்கத்தோடு குறிப்பிட்ட காரியத்துக்காகவே அமைக்கப்பட் டிருக்கிறது. ஆகையால்

அது சமஷ்டியாகாது. சில காரியங்களுக்காகச் சில காலத்துக்காக மட்டும் ஏற்படுத்தப்படும் அற்பாயுள் ஸ்தாபனமல்ல சமஷ்டி; அங்கத்தினர்களுக்குள் அபிப்பிராயபேதமிருந்தால் அதைச் சமட்டியாய்த் தீர்த்துவைக்கும் வல்லமையும், பிரிந்துபோகும் நோக்கமிருந்தால் கூட்டிப்பிடிக்குந் திறமையுமுடைய சாச்வதமான ஸ்தாபனம் சமஷ்டி. ஆரம்பத்தில் அதனங்கத்தினர்களுக்கு அவரவர் சொந்த மாகாணம், அன்றிச் சமஸ்தானத்தின்மீது பிரத்தியேகமான பிரிய மிருப்பதாய்த் தோன்றலாம். அது நாளடைவில் தேய்ந்து, மொத்தமான ஜனநாயகப் பெருக்கத்தில் அல்லது சமுத்திரத்திற் சங்கமமாகி விடும்.

## மூன்று வேண்டும்:

சமஷ்டிக்கு வேண்டிய சாமக்கிரியைகள் பல இருக்கலாம். சமஷ்டிவாதிகளைக் கேட்டால் நீளமான ஜாபிதாக் கொடுப்பார்கள். ஆனால் ஆரம்பத்துக்கு ரொம்ப அவசியமாகவும் அவசரமாகவும் மூன்று வேண்டும்:

1. பூகோள அமைப்பு—சமஷ்டியிற் சேரும் அல்லது சேரவிருக்கும் தேசங்களின் நிலச் சேர்க்கை.

2. சமூகத் தொடர்பு—அந்த தேச ஜனங்களின் நடையுடைபாவனை நாகரிகம் கலை முதலிய சமூக பாந்தவ்யம்.

3. ஜனநாயக ஆர்வம்—பூகோள அமைப்பினாலும், சமூகத் தொடர்பினாலும் பிணைக்கப்பட்டிருக்கிற ஜனங்கள், ஜனநாயக தத்துவத்தோடுகூடிய புதிய சமுதாய அமைப்பை உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்கிற ஆசை.

மேலே கூறியுள்ள மூன்று முக்கிய சாதனங்களு மில்லாமல், சமஷ்டி யமைப்பு சாத்தியமானதல்ல.

## 1. பூகோள அமைப்பு :

சமஷ்டியிற் சேர விரும்புந் தேசங்கள், ஒரே நிலப் பரப்புக் குட்பட்டதாய், நீண்ட கடலாலும் உயர்ந்த மலையாலும் பிரிக்கப்படாமல் ஒன்றையொன்று நெருங்கிச் சேர்ந்தாப் போ லிருக்க வேண்டும். நிலச் சேர்க்கையில்லா நாடுகள், சமஷ்டியிற் சேர்ந்து அல்லது சேர்க்கப்பட் டிருந்தாலும் அது அதிக நாளைக்கு நிலைத்திராது. உதாரணத்துக்குப் பிரிட்டிஷ் தீவுகளை (இங்கிலாந்து ஸ்காட்லாந்து வேல்ஸ் மூன்று மட்டுஞ் சேர்ந்தது)யும், அயர்லாந்தையும் எடுத்துக் கொள்வோம். பிரிட்டிஷ் தீவுகளிலிருந்து, அயர்லாந்து, நீராற் பிரிக்கப்பட்டு நிலசம்பந்தம் அற்றிருப்பதினாலேதான் அது நீண்டகாலம் பிரிட்டிஷ் சர்க்காரோடு கூட்டுறவு கொண்டு இருக்க முடியவில்லை. விஸ்தீரணம் எவ்வளவிருந்தாலும் நிலப் பிரிவு மாத்திரம் இல்லா திருந்தால், பூகோள அமைப்புச் சம்பந்தப் பட்டமட்டில் ஒன்றையொன்று நெருங்கியிருக்கும் பல தேசங்கள் சமஷ்டியிற் சேரலாம்.

## 2. சமூகத் தொடர்பு :

மனிதன் சமூகப் பிராணியாயிருப்பதினாலும், சரித்திர காலத்துக்கு முன்னிருந்தே மனிதர் சமூகஞ் சமூகமாய்க் கூடி வாழும் வழக்கத்துக்கு வந்துவிட்டிருப்பதினாலும், சமுதாயம் ஜாதி மதமென்னும் துண்டுச் சுவர்களால் துணுக்குத் துணுக்காய்த் துண்டிக்கப்பட் டிருப்பதினாலும், ஜனநாயகத்துக்கும் சமூகத் தொடர்புக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்து வருகிறது. அதிலும் பல நூற்றாண்டுகளாய் அநீதமான பொருட் பங்கீட்டினாற் பாதிக்கப்பட்டுப் பரம ஏழைகளாயிருந்து வரும் பத்தில் ஒன்பது பங்கு ஜனங்களுக்கு இந்தச் சமூகத் தொடர்பு ரொம்ப அவசியமாகவும் அவசரமாகவுமிருக்கிறது. ஆரம்பத்தில் இது அசாத்தியமாய்த் தோன்ற

லாம். ஏனெனில், சமுதாயத்தில் ஜாதிமத சம்பிரதாயங் களும் சடங்குகளும் நிறைந்திருக்கின்றன. அவைகள் மனி தரை ஒன்று சேரவிடாமல் தடுக்கலாம். அல்லது செல்வா தார உலகத்தைச் செல்லரிப்பதுபோற் சுரண்டிவரும் ஜன நாயக விரோதிகளான முதலாளிகள் முட்டுக்கட்டை போட லாம். ஆனாற் சாதாரணமான புதிய சமுதாய அமைப்புக்கு அகில உலகமும் அடி கோலிக்கொண்டிருக்கும் இந்நூற்றாண் டில், சமூகத் தொடர்பு எங்குஞ் சாத்தியமற்றதாகி விட்டது.

## 3. ஜனநாயக ஆர்வம் :

ஏகாதிபத்தியங்களிடம் உலகமே நம்பிக்கை யிழந்துவிட் டிருக்கிறது. பாஸிஸமும் ஜனங்களை பலியிடப் பார்க்கிறது. யுத்த தேவதை, சமுதாயத்தையே சூறையாடிவிடும்போ லிருக்கிறது. ஜனங்கள் ஒன்று சேர்ந்து ஏகாதிபத்தியங்களை யும் யுத்த தேவதையையும் எதிர்க்கவேண்டும். இதற்கு ஜன நாயக ஆர்வம் தேவை. ஏகாதிபத்தியங்க ளிருக்கும்வரை, ஜனநாயகம் தலையெடுக்காது. ஜனநாயக தத்துவமே சமஷ்டி களின் அடிப்படையான தத்துவமா யிருப்பதால், ஆரம்பத் துக்கு ஜனநாயக ஆர்வமாவது சமஷ்டியிற் சேர விரும்புந் தேசங்களிட மிருக்கவேண்டும். அமெரிக்காவில், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினிடமிருந்து விடுபட்டதற்கும் இந்த ஜனநாயக ஆர்வந்தான் ஆதிபீஜம். அப்புறம் அவைகள் சுதந்திரமடைந்த பின்னர் ஒன்றைவிட் டொன்று பிரியாமற் சமஷ்டியாய்ச் சந்தோஷமாய் வாழ்வதற் கும் இந்த ஜனநாயக ஆர்வந்தான் அஸ்திவாரம்.

## 4. இந்தியா தயாரா?

மேலே கூறியுள்ள அளவைகளின்படி இப்பொழுதைய இந்தியாவில், சமஷ்டிக்கு ஹேதுகரமான எல்லாச் சாதனங்களும் சமைந்திருக்கின்றனவா? பூகோள அமைப்புப்படி பார்த்தால் இயற்கையாகவே இந்தியா இதற்குத் தயாராகத் தானிருக்கிறது. இதர ஹேதுகரங்கள் இனிமேலேதான் ஏற்பட வேண்டும்.

### 1. மாகாணங்கள் :

முதலாவது, பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் மாகாணங்களை யெடுத்துக்கொள்வோம். இவைகள் 1935-ம் வருஷத்திய இந்தியாச் சட்டத்தின் 46-வது பிரிவுப்படி, கவர்னர் மாகாணங்கள்* என்றும், 94-வது பிரிவுப்படி சீப் கமிஷனர் மாகாணங்கள் † என்றும், இரண்டாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 288-வது ஷரத்துப்படி பர்மா, (பர்மியர்களின் விருப்பத்துக்கு விரோதமாய்) இந்தியாவிலிருந்தே பிரிக்கப்பட்டுத் தனி மாகாணமாய் வைக்கப்பட்டிருக்கிறது. ஏடனும் ‡ அப்படியே.

---

* கவர்னர் மாகாணங்கள்:—சென்னை, பம்பாய், வங்காளம், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார், மத்திய மாகாணமும் பீராரும், அஸ்ஸாம், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், ஒரிஸா, சிந்து.

† சீப்-கமிஷனர் மாகாணங்கள் :—பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானம், தில்லி, அஜ்மீர்—மெர்வாரா, குடகு, அந்தமான்—நிக்கோபார் தீவுகள்.

‡ ஏடன் இதுவரை (1937-ஏப்ரல் 1உ வரை) பம்பாய் மாகாணத்தோடு சேர்க்கப்பட்டிருந்தது.

## சாதகமோ ? பாதகமோ ?

மாகாணங்கள் இவ்வாறு இரண்டு ரகங்களாய்ப் பிரிக்கப் பட்டிருப்பது, சமஷ்டிக்குச் சாதகமா அல்லது பாதகமா என்று பார்ப்போம். கவர்னர் மாகாணங்களுக் களிக்கப்பட் டிருக்குஞ் சுயாட்சி மெய்யாயிருந்தாலும் சரி, பொய்யா யிருந் தாலும் சரி, வரையறுக்கப்பட்ட ஒருவித அதிகாரங்களோடு கூடிய ஒருவிதமான தனியாட்சி யுடையவைகளாய் அவைக ளிருக்கின்றன. ஆனால் சீப்-கமிஷனர் மாகாணங்களோ, சொல்லப் போனால் பொறுப்பாட்சியின் நிழல் அல்லது சாயலைக்கூடக் காணாதவைகளா யிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றையும், ஒவ்வொரு சீப்-கமிஷனர் மூலம், கவர்னர்-ஜெனரலே தமது யுக்தம் போல், மந்திரிகளேயோ மற்றும் யோசனை சொல்லுகிறவர்களையோ கலந்தாலோசிக்காமல் தாமாகவே—தமதிஷ்டம்போல் ஆளுகிறார். அவைகளுக்கு ஜனப்பிரதிநிதித்துவச் சட்டசபைகளே கிடையாது. தலைமை யதிகாரிகளான சீப்-கமிஷனர் என்பவர்களோ, கவர்னர்-ஜெனரலின் சொந்தச் சிருஷ்டியால்—நியமனத்தா லேற்படுகிறவர்கள்.

அந்தமான்—நிக்கோபார்த் தீவுகள் நீங்கலாக இதர சீப்-கமிஷனர் மாகாணங்க ளெல்லாம், சமஷ்டி சபைகளிற் பிரதி நிதித்துவம் அளிக்கப்படுகின்றன. ஆகையால் அவைகளுஞ் சட்டப்படி பார்த்தால் சமஷ்டி சர்க்காரின் அங்கத்தினர்க ளாகின்றன. ஆனால் (சமஷ்டி) தத்துவப்படி பார்த்தாலோ அவைகள் சமஷ்டியிற் சேர அல்லது சேர்க்கப்பட நியாயமே யில்லை. ஏனெனில் சம அதிகாரமும் சம அந்தஸ்துமுள்ள தேசங்கள்தான் சமஷ்டியிற் சேரலாம் என்று தத்துவம் சொல்லுகிறது.

# மாகாணங்களின் புள்ளி விவர ஜாபிதா

| எண். | மாகாணப் பெயர்கள் | சதுர மைல் விஸ்தீரணம் | ஜனத் தொகை | வருமானம் ஆயிர ரூபா கணக்கில் | செலவு ஆயிர ரூபா கணக்கில் | செல்வ நிலை கோடிக் கணக்கில் |
|---|---|---|---|---|---|---|
| | கவர்னர் மாகாணங்கள் : | | | | | |
| 1 | சென்னை | 1,42,277 | 46,740,107 | 1,64,025 | 1,56,304 | 151·98 |
| 2 | பம்பாய் | 77,221 | 17,992,053 | 1,52,517 | 1,49,895 | 176·54 |
| 3 | வங்காளம் | 77,521 | 50,114,002 | 93,804 | 1,06,783 | 189·63 |
| 4 | ஐக்கிய மாகாணம் | 1,06,248 | 48,408,763 | 1,14,521 | 1,12,993 | 215·64 |
| 5 | பஞ்சாப் | 99,200 | 23,580,852 | 1,02,392 | 1,00,641 | 185·87 |
| 6 | பீஹார் | 42,335 | 25,727,500 | 50,583 | 50,048 | 137·00 |
| 7 | ஒரிஸா | 13,706 | 5,306,142 | — | — | — |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | மத்திய மாகாணம்—பீரார் | 99,200 | 15,507,723 | 44,979 | 44,944 | 80·85 |
| 9 | அஸாம் | 55,014 | 8,622,251 | 21,067 | 23,647 | 44·91 |
| 10 | வ. மே. எ. மாகாணம் | 13,580 | 2,425,076 | 16,011 | 15,816 | 10·68 |
| 11 | சிந்து | 46,378 | 3,887,070 | — | — | 99·37 |
| | சீப்-கமிஷனர் மாகாணங்கள்: | | | | | |
| 1 | பலுச்சிஸ்தானம் | 54,228 | 4,63,508 | | | |
| 2 | அஜ்மீர்—மெர்வாரா | 2,711 | 5,60,292 | | | |
| 3 | கூர்ஜரம் | 1,593 | 1,63,327 | | | |
| 4 | தில்லி | 573 | 6,36,246 | | | |
| 5 | அந்தமான்—நிக்கோபார் | 3,143 | 29,463 | | | |

கவர்னர் மாகாணங்களாவது இவ்விதிக்குள் வருகின்றனவா? அவைகளும் ஒன்றுக்கொன்று எல்லா வழிகளிலும் வித்தியாசப் பட்டவைகளாகவே யிருக்கின்றன. சில மாகாணங்களில் *இரண்டு சட்ட சபைகளும், சில மாகாணங்களில் $ ஒரே யொரு சட்ட சபையும் இருப்பது ஆட்சி வித்தியாசமல்லவா?

மேலும் இம் மாகாணங்கள் ஜன சௌகரியத்தை முன்னிட்டுப் பிரிக்கப்பட்டவைகளல்ல. இந்தியாவின் பிரதம அதிகாரியாகவும், மத்திய அரசாங்கத்தின் தலைமை நிர்வாகியாகவும் இருக்கிற கவர்னர்-ஜெனரலோ அல்லது இந்தியாவின் முடிவான அதிகாரியாகவும் இந்திய சர்க்காரின் ஏகச் சக்கிராதிபதியாகவும் இருக்கிற பிரிட்டிஷ் பார்லிமெண்டாலோ நிர்வாக சௌகரியத்துக்காகப் பிரிக்கப்பட்டவைகள்.

இவைகளுக்கு 'ஒட்டுப்படை' கொடுத்ததுபோல் 'சுயாட்சி' யென்னும் பேரால் ஏதோ சிறிது உரிமை யளிக்கப்பட் டிருந்தாலும் அதிகார நிரவலும் அந்தஸ்து நிரவலும் செய்யப்படவில்லை. ஜனசங்கியையாலும், வரி வருமானத்தாலும், செல்வ நிலையாலும், நில விஸ்தாரத்தாலும் அவைகள் ஒன்றுக்கொன்று ரொம்ப வித்தியாசப்படுகின்றன.

மேலே கூறியுள்ள புள்ளி விபரப்படி பார்த்தால், பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கிற மாகாணங்களிலேயே இத்தனை வித்யாசங்களிருப்பது தெரியவரும். அப்படியானுற் சம அதிகாரம் சம அந்தஸ்து என்னும் வார்த்தைகளுக்கு அர்த்தமில்லையா?

---

* இரண்டு சட்டசபை மாகாணங்கள் ;—1. சென்னை, 2. பம்பாய், 3. வங்காளம், 4. ஐக்கிய மாகாணம், 5. பீகார் 6. அஸாம்.

$ ஒரு சபை மாகாணங்கள்:— 1. மத்திய மாகாணம், 2. ஒரிஸா, 3. சிந்து, 4. வடமேற்கு எல்லை மாகாணம், 5. பஞ்சாப்.

அல்லது பிரிட்டிஷ் அரசாங்கம் முன்னுக்குப் பின் முரணாய்ச் சமஷ்டித் தத்துவத்தையே திருத்த விரும்புகிறதா?

என்னமோ தெரியவில்லை? சமஷ்டி என்பது இறுதியில் ஒரு தப்புப் பெயர் (Misnomer) ஆகிவிடும்போ லிருக்கிறது. சம சுயேச்சையுள்ள பிரதேசங்கள் புறத்தூண்டுதலோ வற்புறுத்தலோ இல்லாமற் சுயமாகவே சேர்ந்து செய்யுங் கூட்டுறவுதான் சமஷ்டி யென்றால், 1935-ம் வருஷத்துச் சட்டப் படி, இந்தியாவிற் புகுத்தப்படப் போகிற சமஷ்டியும் அது தானாவென்கிற சந்தேகம் சகஜமாகவே யேற்படுகிறது. பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கிற எல்லா மாகாணங்களும், ஏற்கனவே ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டு, ஒரு கவர்னர்-ஜெனரலின் ஆளுகைக்குட்பட்டே யிருக்கின்றன. என்றாலும் அவைகளுக்குச் சுயமாகவே ஒரு சமஷ்டியிற் சேரவோ பிரியவோ சுதந்திரமில்லை. அப்படியானாற் சுயம் என்பதற்குத் தான் அர்த்தமென்ன?

## பறிமுதல் நம்பர் ஒன்:

பிரிட்டிஷ் பார்லிமெண்டு, தனக்கிருக்கிற முடிவான அதிகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு, இஷ்டம்போல் ஒரு சட்டத்தைச் சிருஷ்டித்து, அதன் மூலம் மாகாணப் பிரஜைகளின் உரிமையைப் பறித்து, ஏகாதிபத்தியத் தேவைக்காகவும் நன்மைக்காகவும் உபயோகிக்க முயலுகிறது. இல்லையானால், இச்சட்டத்தை உண்டாக்குவதற்கு முன்னால் மாகாண சர்க்கார்களையாவது ஜனங்களையாவது கலந்து ஆலோசித்திருக்கலாம். ஆளுஞ் சௌகரியமென்பது அரசாங்கத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும், அது மறைமுகமாகவோ பகிர்முகமாகவோ ஜனங்களைத் தாக்காம லிருக்காது. ஆகையால் சர்க்கார் சௌகரியத்துக்குக் கூட ஜன சம்மதந் தேவை. ஜனநாயக தத்துவப்படி சமைக்கப்படுவதாய்ச் சொல்லப்படும்

சமஷ்டியில், ஜனசம்மதங் கோரப்படாததால் இங்கே 'ஒண்ணு நம்பர்ப்' பறிமுதலொன்று நடந்திருக்கிறது.

## குண்டு மாற்றும் குழிமாற்றும்:

இந்தியாவில் பிரிட்டிஷ் அரசாங்கம், சர்வ வல்லமை வாய்ந்ததாயிருக்கிறது. 'ஆணைப் பெண்ணாகவோ பெண்ணை ஆணாகவோ' மாற்றுவதைத் தவிர அது இந்தியாவிலென்ன வேண்டுமானாலுஞ் செய்யலாம். இப்போதிருக்கிற மாகாணங்களையெல்லாம் அழித்துவிட்டு, வேறு மாகாணங்கள் புதுசாய்ச் சிருஷ்டிக்கலாம். அல்லது ஒரு மாகாணத்தைத் தூக்கி யின்னொரு மாகாணத்திலும், மற்றொரு மாகாணத்தை எடுத்து வேறொரு மாகாணத்திலும் போட்டுக், குண்டு மாற்றுங் குழிமாற்றுஞ் செய்யலாம். ஆகையால், பொதுநன்மைக்காகச் சுயேச்சையும் சம அந்தஸ்துமுள்ள பல பிரதேசங்கள், சுய இச்சையின் மூலம், ஒன்று சேர்ந்து ஒரு சமஷ்டியை உண்டுபண்ணுவதென்பது பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவிலிருக்கும் வரை, அல்லது அந்நிய நாட்டு அரசாங்கத்துக்குப் பதிலாக உள்நாட்டு அரசாங்கமொன்று உண்டாகும் வரை, சாத்திய மாகுமென்று நம்ப முடியவில்லை.

இவ்வாறு நான் கூறும்போது, இப்போதைய இந்தியாவுக்குப் பொறுப்பு வாய்ந்த பொதுநன்மை யெதுவுமே யில்லையென்றும், அனுபவிக்கக்கூடிய பொதுக்கொள்கை யெதுவுமே யில்லையென்றும், உணரக்கூடிய பொது நோக்கம் ஒன்றுமே யில்லையென்றும் எண்ணிவிடக்கூடாது. இவைகளெல்லாம் எங்களுக்கு ஏராளமா யிருக்கின்றன. மாகாணங்கள் இன்னும் நெருக்கமான பாந்தவ்யத்திற் பிணைக்கப்படுவதை நாங்கள் விரும்புகிறோம். மாகாணங்கள் இன்னும், அதிகமான சுயேச்சையுஞ் சுதந்திரமுங் கொடுக்கப்படுவதை நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. மாகாண சுயாட்சியை

மகா ப்ரீதியோடு நாங்கள் வரவேற்கிறோம். அதைவிடப் பிரீதியோடு அகில இந்திய சமஷ்டியையும் வரவேற்கிறோம். அதற்குள் சமஸ்தானங்கள், திறந்த சிந்தையோடும் பரந்த நோக்கோடும் வருவதை வேண்டாமென்று நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் யார் வந்தாலும் யார் போனாலும், எங்களுக்கு வேண்டியது சுயராஜ்யத்தின் சத்து. அதில்லாத சக்கைச் சுயாட்சியோ, அசட்டுச் சமஷ்டியோ எங்களுக்கு வேண்டவே வேண்டாம்.

## பழைய கணக்கு :

'பசித்தவன் பழங்கணக்கைப் பார்த்ததுபோல்' இந்தியாவுக்கும் பிரிட்டனுக்குமுள்ள கணக்கு வழக்குகளைக் கொஞ்சம் பார்க்கவேண்டும். அரசாங்க வரவு செலவை, இனவாரியாகவும் மொத்தமாகவும் பரிசீலனைபண்ணிப் பார்க்கிறபோது, பிரிட்டிஷ்காரர்கள் இந்நாட்டை இலாபத்துக்காக ஆளவில்லையென்று தோன்றும். அப்படியானால் அவ்வளவு தூரந் தொலையிலிருந்து இங்கேன் வந்திருக்கிறார்கள்? ஏன் நம்மையாளுகிறார்கள்? கௌரவத்துக்காகவா? க்ஷத்திரிய தர்மத்துக்காகவா? அல்லது பேர் பெருமைக்காகவா? சரித்திரத்தின் பழைய எடுகளில் இதற்குச் சரியான பதிலிருக்கிறது. ஓநாய் ஆட்டுக்குட்டிக்குச் சொன்னதுபோல், நாம் அவர்களுக்குக் கடன்கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். "எங்களை ஜெயித்ததற்காக நாங்களே பணங் கொடுக்கிறோம். 'பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே! எங்கள் கடன்காரர்களை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் கடன்களை நீர் மன்னியும்' என்று பிரார்த்திக்கும் பிரிட்டிஷாரின் கடனை நாங்கள் மன்னிக்கும்படி கேட்கவில்லை; தரமுடியாதென்று சொல்லவுமில்லை. அமெரிக்காவுக்குக் கொடுக்கவேண்டிய கடனை பிரிட்டன் இல்லையென்று மோசஞ் செய்துவிட்டது.

நாங்கள் மட்டுந் திருப்பித் தருகிறோம். பென்ஷன், நாணய மாற்று, பண்டவிற்பனை, அதிகச் சம்பளம் இவைகளை யெல்லாங் கடன் கணக்கில் வரத்து வைத்தாற் செல்லாதோ? பகிரங்கமாகவும் அந்தரங்கமாகவும் நூறுகோடி பவுன் வருஷா வருஷம் இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்களிடமிருந்து, பிரிட்டிஷ் சர்க்கார் எங்கள் தேசத்தை விலைக்கு வாங்கியதற்காகவும், பர்மா, சீனு, ஆப்கானிஸ்தான், பாரசீகம், ஆப்பிரிக்கா, அரேபியா முதலிய நாடுகளுடன் அவர்கள் சண்டை போட்டதற்காகவும் இவ்வளவு பணத்தை யெடுத்துக்கொள்ளுகிறார்கள்" என்று சமீபத்தில், ஜவஹர்லால்ஜீ, சொல்லியிருக்கிறார்.

இற்றைக்குச் சுமார் இருநூறு வருஷத்துக்கு முன்—பதினேழாவது நூற்றாண்டின் பிற்பகுதியில் சில பிரிட்டிஷ்காரர்கள் வியாபாரிகளாக இந்தியாவுக்கு வந்தார்கள். அதிர்ஷ்டமும் அவர்களோடு வந்தது; ராணுவமும் வந்தது; பாதிரிகளும் வந்தார்கள். எல்லாருக்கும் நல்ல வேட்டை; வியாபாரம் விர்த்தியாயிற்று; நாடுங் கிடைத்தது; இந்தியர் கிறிஸ்தவருமாயினர். இத்தியாதி இத்தியாதி இலாபங்களெல்லா மேற்பட்டன.

ஆரம்ப நோக்கம் அவர்களில் இன்னும் அருகவில்லை. அன்றைக் கெண்ணியதுபோலவே இன்றைக்கும் இந்தியாவைச் சந்தையா யெண்ணுகிறார்கள். ஆட்சி பெரிதல்ல; ஆதிக்கமும் பெரிதல்ல. நாடு பெரிதல்ல; நாட்டாண்மையும் பெரிதல்ல. வர்த்தகம் பெரிது; வருவாய் பெரிது என்பதே இந்தியா விஷயத்தில் பிரிட்டனின் பெரிய வேதாந்தமாயிருக்கிறது.

இவைகளுக்கெல்லாம் ஒரு முடி வேற்படுத்தித் தேசீயத்தை உருவாக்கத் தக்க வழியில் ஒரு சமஷ்டியை இந்தியா

இருகரமேந்தி யேற்கத் தயாரா யிருக்கிறது. ஆனால், அது இங்கிலாந்தின் ஏற்றுமதிச் சரக்காயிருக்கமுடியுமா? இந்தியாவின் எண்ணத்துக்கும் ஏதுவுக்கும், இந்தியாவின் தேவைக்குந் திருப்திக்கும், இந்தியாவின் நிலைமைக்கும் நீடிப்புக்கும் சரியான திட்டத்தை இந்தியாவினாலேதான் தயாரிக்க முடியும்.

## மூன்று முக்கிய முட்டுக்கட்டைகள்:

ஆனால் அதற்கு முக்கியமான மூன்று முட்டுக்கட்டைகளிருக்கின்றன.

1. மாகாண சுயாட்சியிற் பொறுப்பாட்சி யின்மை.
2. வகுப்புத் தீர்ப்பு.
3. சமஸ்தானங்களின் ஏகாதிபத்திய மனப்பான்மை.

வழங்கப்பட் டிருக்கும் மாகாண சுயாட்சியில் பொறுப்பாட்சி யில்லை யென்பதைப் பூரணமாய்த் தெரிந்தும் அனுபவித்தும் வருகிறோம். வகுப்புத் தீர்ப்பைப் பற்றியும் கூறிவிட்டேன். சமஸ்தானங்களைப் பற்றிச் சற்றே பார்ப்போம்.

## 2. சமஸ்தானங்கள் :

அகில இந்திய சமஷ்டியில், இந்திய சமஸ்தானங்கள், ஒரு முக்கிய பாகம். அகில இந்தியப் பிரச்னையிலும் அப்படியே. முற்காலத்திலும் சரி, தற்காலத்திலும் சரி, பிற்காலத்திலும் சரி சமஸ்தானங்களைவிடச் சிக்கலான விவஸ்தை இந்தியாவி லேற்படவில்லை. ஆனால் எக்காலத்திலும் இந்திய அரசியல் வாதிகள் இதைக் கண்டு மலைக்கவில்லை. திட்டம் போட்டு வேலை செய்தால் எந்தச் சிக்கலும் சீக்கிரத்தில் சிக்கறுக்கப்படுமென்று நம்புகிறார்கள். இன்றைக்கு இந்திய தேசிய உணர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இடையூறாயிருக்கிற இந்திய மன்னர்கள், என்றைக்கு ஜனநாயகத்துக்கும் ஏகாதி

பத்தியத்துக்கும் இடையிலிருக்கிற பிரிவினைத் தரகர்கள் இந்தியாவைவிட்டுப் போய் விடுகிறார்களோ, அன்றைக்கே தாங்கள், தங்கள் பிரஜைகளின் காவலர்களென்று தெரிந்து கொள்வார்கள். அதுவரை அவர்கள் தங்களைத் தாங்களே நரேந்திரர்களென்றும், பிரிட்டிஷ் பலத்தால் பூமியைக்கட்டி யாளலா மென்றும் எண்ணிக்கொண் டிருப்பார்கள்.

சமஸ்தானங்களுக் குள்ளிருந்தே—சமஸ்தானாதிபதிக ளின் காலடியிலிருந்தே பூமியைப் பொத்துக்கொண்டு ஜன நாயகவீரர்கள் முளைத்துக்கொண் டிருக்கிறார்கள். சமீபத்தில் ஸ்ரீ சத்தியமூர்த்தி சொன்னதுபோல் "கன்யூட் அரசனால் கடலலைகளை யெவ்வாறு தடுக்கமுடியவில்லையோ அவ்வாறே சுதேசமன்னர்களால் ஜனநாயக வீரர்களை 'நில்'லெனச் சொல்ல முடியாது."

## சமஸ்தானங்கள் சமஷ்டிக்குத் தயாரா?

இந்தக் கேள்விக்கு, இப்பொழுது சமஸ்தானங்களிருக் கிற நிலைமையைக்கொண்டு ஒரு வார்த்தையில் ஒரு பதிற் சொல்லி விடலாம். அதாவது சமஸ்தானங்களில் இப் பொழுது—ஏன் எப்பொழுதுமே இருந்துவரும் அரசியல் நிர்வாகமும், பிரஜா உரிமையும் ஜனநாயக சமஷ்டிக்கு ஏற்றதா யில்லை. புதிய சமுதாய அமைப்புக்கும் பொருளாதாரப் புனருத்தாரணத்துக்கும் அவைகள் ஒத்துவரமாட்டா. ஏகாதி பத்திய மனப்பான்மையும் ஏதேச்சாதிகார நாட்டாண்மையும் என்றைக்குச் சமஸ்தானாதிபதிகளைவிட்டுப் போய்த் தொலை கின்றனவோ, அன்றைக்குத்தான் அவர்கள் மனிதக் கண் களைக்கொண்டு உலகத்தையும் சுற்றுப் பொருள்களையும் பார்க்கத் தொடங்குவார்கள். அதுவரை அவர்கள் தங்களைத் தாங்களே இந்திரரென்றும் சந்திரரென்றும், குபேரரென்

றும் கோடீஸ்வரரென்றுங் கோட்டைகட்டிக்கொண் டிருப்பார்கள்.

மேலும் பிரிட்டிஷ் சர்க்கார், சர்வவல்லமை யுள்ளதென்றும் எப்பொழுதும் தங்கள் உதவிக்குவருவார்களென்றும் இந்திய மன்னர்கள் எண்ணிக்கொண் டிருக்கிறார்கள். இதுவும் ஒரு எண்ணக் கோட்டைதான். ஜனநாயக வெள்ளம், ஊழிப்பிரளயத்தைப் போற் பெருக்கெடுத்து, ஒருகோடியிலிருந்து மறுகோடிவரை அடித்துக்கொண்டு வரும்போது, சர்வவல்லமை யுள்ளதென்று சமஸ்தானாதிபதிக ளெண்ணிக் கொண் டிருக்குஞ் சர்க்காருங்கூட, அதனா லடித்துக்கொண்டு போகப்படுவதை அவர்கள் காண்பார்கள். அப்போது வீழ்வார்க்கு வீழ்வார் துணைசெய்ய முடியுமா?

அப்படியானால் அவர்களுக்கு மீட்சிமார்க்கம் ஒன்றுமே யில்லையா? இப்பொழுதே அவர்கள் வீழ்ந்தவர்களோடு கணக்கிடப்பட வேண்டியவர்கள்தானா? நில்லு! ஒரு வழியிருக்கிறது; அதுவும் அதிகச் சமீபத்திலிருக்கிறது. இந்திய தேசீய உணர்ச்சிக்கு, இந்திய ஏகாதிபத்திய உணர்ச்சி, இணங்கிப் போகவேண்டும். இந்திய தேசீயக் காங்கிரஸோடு, சமஸ்தானங்கள் சமரஸஞ் செய்துகொள்ள வேண்டும். அதுவும் ஏன் சமீபத்திலிருக்கிறதென்றால், மகாத்மாகாந்தி உயிருடனிருக்கும்வரைதான் 'சந்தி சமாதான' மென்கிற வார்த்தைகளே அரசியலில் ஊடாடும். அப்புறந் தேசீய வாதிகள், அத்தகைய இடைவிடுதிகளில் இளைப்பாறமாட்டார்கள். ஒப்பந்தமும், அவரால் செய்யப்படும்போதுதான் இருகட்சிகளுக்கும் ஏற்றதாகவும் கௌரவமுள்ளதாகவு மிருக்கும். ஆனால் அந்தச் சாந்தி சமாதான மென்கிற வார்த்தைகளைச் சமஸ்தானாதிபதிகள் உச்சரிப்பதற்கு முன்னால், மூன்று காரியங்களைச் செய்ய அவர்கள் தயாராயிருக்க வேண்டும்.

1. பிரஜா உரிமையை ஒப்புக்கோள்வது.

2. சமஷ்டி சட்டசபைக்குப் போதுத் தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத் தனுப்புவது.

3. ஜனங்கள், தங்களுக்குள்ள குறைகளைச் சமஷ்டிக் கோர்ட்டின் மூலந் தீர்த்துக்கோள்ள அனுமதிப்பது.

[இம்மூன்றும் வரப்போகுஞ் சமஷ்டிக்கும், இந்தியாவில் இந்தியர்களால் தயாரிக்கப்படப்போகுஞ் சமஷ்டிக்கும் ஒத்து வரும்.]

*இந்தக் குறைந்தபட்சக் கோரிக்கைகளுக்குஞ் சுதேச மன்னர்கள் சம்மதிக்கவில்லையானல், அவர்கள், தங்கள் தலை விதியை நாட்கணக்கில் எண்ணிக்கொண் டிருக்கிறார்க ளென்று தான் எண்ணவேண்டும்.*

## உலுத்ததும் வலுத்ததும் :

*அதா அன்றிச் சமஸ்தானங்களை, அவைகள் வைத்துக் கொண்டிருக்கும் அந்தப் பழமையான உலுத்துப்போன ராஜரீகத்தோடு சமஷ்டியிற் சேர்த்துக் கொண்டால், அத் தகைய சமஷ்டியுஞ் செல்லரித்ததாய்ச் சீக்கிரத்தில் விழுந்து படும். ஒணையுந் தவளையையும் ஒரு கயிற்றிற் கட்டினல் எப்படியோ, அப்படித்தான் அந்தச் சமஷ்டியின் கதியு மாகும். ஒணன் மேட்டுக்குந் தவளை தண்ணீருக்கும் இழுப்பதுபோல்,சமஸ்தானங்கள் ஏகாதிபத்தியத்தை நோக்கி யும், மாகாணங்கள் ஜனநாயகத்தை நோக்கியுஞ் சென்றால், சமஷ்டி நேரே நடக்குமா ?*

*நடக்கக் கூடாதென்பதுதான் சமஷ்டியைச் சிருஷ்டித் தவர்களின் நோக்கம். ஆனல், சமஷ்டி நடக்கக் கூடாதென்ப தல்ல, அது நேரே நடக்கக் கூடாதென்பது. இதை நினை*

வில் வைத்துக்கொண்டு பார்த்தால், சமஸ்தானங்களிலிருக்கிற ஏகாதிபத்திய மனப்பான்மையைக் கொண்டு, தங்கள் ஏகாதிபத்திய ஆட்சியையும் ஆக்கிரமிப்பையும் பிரிட்டிஷ்காரர்கள் நீடிக்கப் பார்க்கிறார்கள் என்பது புலனாகும். சுருக்கமாய்ச் சொல்லப் போனால் இந்தச் சமஷ்டித் திட்டம் ஏகாதிபத்தியத்தின் மறு பயிர்.

ஆனால், சமஸ்தானங்களில்லாமல் அகில இந்திய சமஷ்டி அமைக்கப்பட முடியுமா? நான் முன்னே சொன்னபடி அவைகளுக்கும் இதர இந்தியாவுக்கும், அவ்வளவு நெருங்கிய நிலத் தொடர்பும் ஜனத்தொடர்பும் இருக்கும் போது இது சாத்தியமல்ல. பிரிட்டிஷ் இந்தியா அல்லது சமஸ்தான இந்தியாவை மட்டும் பிரித்துப் படம் வரைந்து பார்த்தால், அது ஒரு விரும்பத்தக்க சித்திரமாயிராது. விகார ரூபமாய், அநேக இடங்களில் தேசமே துண்டிக்கப் பட்டுவிடும். பூகோள அமைப்பில் வலைப்பின்னலைப்போல் சமஸ்தான இந்தியாவும் இதர இந்தியாவும் இருக்கின்றது.

ராஜீயத்திலும் பொருளாதாரத்திலுங்கூட, இந்த இரண்டு இந்தியாவும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு தானிருக்கின்றன. சமுதாய வாழ்க்கையிலும் அப்படியே. சர்க்கார் விரும்பினாலும் அல்லது சமஸ்தானாதிபதிகள் விரும்பினாலும், ஜனங்கள் தங்கள் சம்பந்தத்தைச் சமஸ்தானங்களிலிருந்தாவது மாகாணங்களி லிருந்தாவது வெட்டிக்கொள்ள விரும்பமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்குள் அவ்வளவு நெருங்கிய குடும்ப சம்பந்தமும் நிலச்சம்பந்தமும் பொருட் சம்பந்தமும் இருந்து வருகிறது.

**பழைய பாழடைந்த பவிசு :**

இவைகளைப் பற்றி யெல்லாஞ் சமஸ்தானாதிபதிகள் சஞ்சலப் படுகிறார்களா? யார் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலும்,

அவர்களுக்கு வேண்டியது அதிகாரம். அதை யிழக்க அல்லது பகிர்ந்து கொடுக்க, அவர்கள் சம்மதிக்கமாட்டார்கள். அநேக வருஷங்களாய் இருட்டாய்க் கிடந்த ஓர் அறையில், ஒரு தீக்குச்சியைக் கிழித்தவுடன் இருட்டெல்லாம் ஓடிப் போவதுபோல், அநேக நூற்றாண்டுகளாய் ஏகாதிபத்தியத் தில் திளைத்துக் கிடந்த உலகத்தில், ஜனநாயகத் தீவர்த்திகள் கொளுத்தப்பட்டு வருகின்றன. என்றாலுஞ் சமஸ்தானாதிபதி கள் அவற்றிலிருந்து ஒளி பெறவில்லை; பழம் பசலியிலேயே இன்னு மிருக்கிறார்கள்; பழைய பாழடைந்த பவிசு இன்னும் அவர்களை விட்டுப் போகவில்லை. "எங்கள் எதேச்சாதிகாரங் கள் எதிலும் கைவைக்காமல் அப்படியே ஒப்புக்கொண்டா லன்றி, நாங்கள் சமஷ்டியிற் சேரமாட்டோம் மாட்டோம்" என்று சமஸ்தானாதிபதிகள் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார் கள். அவர்கள் அதிகாரங்களெல்லாம் அப்படியே யிருக்க வேண்டும்; அகில இந்தியாவும் அதை அப்படியே ஒப்புக் கொள்ளவேண்டும். அவர்கள் நரேந்திரர்கள்; நரேந்திரர் களின் உடன் படிக்கைகளை எந்த நரனும் மீறக்கூடாது. இதற் கெல்லாம் மாகாண இந்தியா சம்மதித்தால்தான், தயவு வைத்துச் சமஸ்தானாதிபதிகள் அகில இந்தியாவிலும் அதி காரஞ் செலுத்த வருவார்களாம். அடடாவோ அடடா! எவ்வளவு தயவு! "என் வீட்டுக்கு நானே எஜமான்; இதில் நீ பங்குக்கு வராதே! உன் வீட்டுக்கும் நான் எஜ மானாய் வரச் சம்மதிக்கிறேன்." என்பதுபோ லிருக்கிற தல்லவா?

இத்தகைய கீழான எண்ணக்கோட்டை கட்டிக் கொண் டிருக்கும் மன்னர்களை, அவர்கள் கோரிக்கைகளுக்கெல்லாம் சம்மதித்துச் சமஷ்டியில் சேர்த்துக் கொண்டால், இந்தியா வின் கதி என்னாகும்? ரயில்வே இஞ்சின் தான் போக வேண்டிய இடத்துக்குத் தானே போய்ச் சேர்வதல்லாமல்

பாரமேற்றிய வண்டிகள் பலவற்றையுந் தன்னோடு இழுத்துப் போவதுபோ லிருக்குமல்லவா? ஜனநாயகம் இதற்காகச் சலிக்கவில்லை. பாரமார்த்தீகமான எண்ணத்தோடு சமஸ்தானங்களையுஞ் சேர்த்து இழுத்துச்செல்ல ஜனநாயகம் சம்மதிக்கிறது. ஆனால் அவர்களுடைய பாவ மூட்டைகள் எல்லாம், அவைகள் எந்த இடத்துக்குச் சீட்டு வாங்கி யிருந்தாலும் இந்த இடத்திலேயே யிறக்கப்பட்டாக வேண்டும். ஏகாதிபத்திய மூட்டைகள் ஏற்றப்பெற்ற வண்டித் தொடர்களை, ஜனநாயக இஞ்சின் இழுக்காது.

மேலும், ஒருபா லிருக்கிற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் போதாதென்று, இன்னொருபால் இருக்கிற சுதேச ஏகாதிபத்தியத்தை மாகாணப் பிரஜைகளும், மற்றொருபா லிருக்கிற சுதேச ஏகாதிபத்தியம் போதாதென்று, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைச் சமஸ்தானப் பிரஜைகளும் சங்கடத்திற் கழைக்கத் தயாராயில்லை. 'வறுவல் சட்டியிலிருந்து நெருப்பில் விழுவ' தான விவஸ்தையைத் தங்களுக்குத் தாங்களாகவே உண்டுபண்ணிக் கொள்ள இந்தியர்கள் இராஜீயத்தில் இன்னுங் குழந்தைகளல்ல.

## சாசனங்களா சப்பைக் கட்டுகளா?

சுதேச மன்னர்கள், ஏகாதிபத்தியப் புலிகளென்பது இருக்கட்டும். அவர்கள் கேட்கிற அதிகாரங்களு மிருக்கட்டும். உரிமைகளு மொருபக்க மிருக்கட்டும். வற்புறுத்துகிற உடன்படிக்கைகளைப்பற்றி ஒருகண் பார்ப்போம்.

உடன்படிக்கைகள் ஒரு காலத்தில் உறுதியான சாசனங்களாய் இருந்திருக்கலாம். கட்சிக்காரர்கள் அவற்றைக் கௌரவித்து மிருக்கலாம். ஆனால் இப்பொழுதோ அவைகள் கிழிந்த காகிதங்களில் எழுதப்பட்ட இழிந்த கதைகளாகி விட்டிருக்கின்றன. ஒரு உடன்படிக்கையை அதன் ஷரத்து

களின்படியும் சாத்தியத்தின்படியும் மதிக்கக்கூடிய அரசன் அல்லது அரசாங்கம் எங்குமேயில்லை. ஆகையால் அது இந்த நூற்றாண்டைச் சேர்ந்த பதார்த்தமல்ல வென்றுகூடக் கருதப்படுகிறது. பஞ்சாங்கத்தில், வருஷம் முழுதும் இவ் வளவு மழை பெய்யுமெனக் குறிப்பிட்டிருக்கிறது. ஆனல் அப் பஞ்சாங்கத்தைப் பிழிந்தால் ஒரு சொட்டுத் தண்ணீரும் வராது என்பதுபோல், உடன்படிக்கைகளின் ஒவ்வொரு ஷரத்திலும் 'சமாதானம் சமாதானம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனல், அதிற் கையொப்பமிடுகிறவர்களின் நெஞ்சைப் பிளந்து பார்த்தால் ஒரு மூலையிலும் அது ஒட்டிக் கொண்டிராது. அப்படியானுற் சுதேச மன்னர்களுக்கும் பிரிட்டிஷ் ர்க்காருக்கும் ஏற்பட்டிருப்பதாய்ச் சொல்லப்படுகிற உடன்படிக்கைகளும் இந்த ஜாதியைச் சேர்ந்தவைதானு?

கிழக்கிந்தியக் கம்பெனியார், நம் நாட்டை வேட்டையாடிய காலத்தில் க்ஷத்திரிய தர்மத்தோடு அதைச் செய்ய வில்லை; பேரம் போலவே நடத்தினர். ஒரு ராஜாவுடன் சேர்ந்துகொண்டு இன்னொரு ராஜாவோடு சண்டை போட்டு, முடிவில் இரண்டு ராஜாக்களையும் வென்று, ஒருவன் ராஜ்யத்தை எடுத்துக் கொள்வதும், இன்னொருவனேடு உடன்படிக்கை செய்து கொள்ளுவதுமாய் இருந்தனர். இப்படிப் பலமுறை பலரிடம் செய்தனர். அதில் மிஞ்சியவர்கள்தான் இப்பொழுதிருக்கிற மன்னர்கள். இவர்கள் பிரிட்டிஷ் வியாபாரிகளோடு நூற்றைம்பது வருஷங்களுக்கு முன் செய்து கொண்ட உடன்படிக்கைகளைத்தான் இப்பொழுது மீறக்கூடாதென்றும், மாற்றக் கூடாதென்றுஞ் சொல்லுகிறார் கள். "அவைகளுக்கு யோக்கியப் பொறுப்போ ஒழுக்க முறையோ அஸ்திவாரமாய் இல்லை" என்று சமீபத்தில் ஸ்ரீ ஜவஹர்லால் சொன்னுர்.

அவைகளில் அநேகங் காலாவதியாகவில்லை யென்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். சமய சந்தர்ப்பத்துக்கேற்ற படி பிரிட்டிஷ் வல்லரசு, அவற்றைப் புதுப்பித்துக் கொண்டு வருகிறதென்பதையும் நான் மறுக்கவில்லை. ஆனால் அவை களில் எதுவாவது இதுவரை எந்தவொரு ராஜாவுக்காவது சாதகமான முறையில் நிறைவேற்றப்பட் டிருக்கிறதா? இவ்வளவு காலமில்லாத உத்தரவாதம் இப்பொழுதென்ன வந்தது? பீரார் விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார், ஐதரா பாத்துக்குச் சாதகமாய் நடந்து கொண்டதாய்ச் சொல்லப்பட லாம். அதுவும் அந்தரங்கத்தில் நல்லெண்ணத்தோடு செய் யப்படவில்லை. தலைவலிக்குத் தலையணையை மாற்றியது போல், உடன்படிக்கை ஏதோ ஒரு விதத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. நிஜமாகவே நிஜாம் மன்னரிடம், பீரார் ஒப்படைக்கப் பட்டிருக்கிறதா? வருஷா வருஷம் 29 லட்ச ரூபாய்கள் குத்தகைத் தொகையாய்க் கொடுக்கப்படுவதையும் நைஜாம் இளவரசர், பீரார் இளவரசர் என்று அழைக்கப் படுவதையுந் தவிர வேறு உருப்படியான முறையில் உடன் படிக்கை நிறைவேற்றப்படவேயில்லை.

1858-ல் விக்டோரியா விடுத்த சாசனத்தில் பின்வரும் வாசகமிருக்கிறது:—

"நமக்கு ராஜ்ய விஸ்தாரஞ் செய்யும் நோக்க மில்லை. ஆனால் நமது நாடுகளை அல்லது உரிமைகளைப் பிறர் தாக்கப் பார்த்துக்கொண் டிருக்க மாட்டோம். எங்க ளுரிமைகள் மரியாதை, தன்மதிப்பு முதலியவற்றைக் காப்பாற்றிக் கொள்ளுவதுபோலவே, சுதேச மன்னர்களின் உரிமைகள் மரியாதை மதிப்புகள் இவற்றையுங் காப்பாற்றுவோம். சுதேச மன்னர்களும் நமது பிரஜைகளுஞ் சௌக்கியமாய்ச்

சகல முன்னேற்றங்களையும் அனுபவிக்கவேண்டுமென்று நாம் விரும்புகிறோம்.''

இவ்வுடன்பாடு நல்லெண்ணத்தோடு செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் அதே நல்லெண்ணத்தோடு நிறைவேற்றப்படுகிறதா என்பது கேள்வி.

இந்தியாவிற் பெருகிக் கொண்டுவருந் தேசீயப் பிரவாகத்தால், தங்களாட்சிக்கும் ஆதிக்கத்துக்கும் ஆபத்து வந்திருப்பதாய் பிரிட்டிஷ்காரர்கள் சிலகாலமாய் உணருகிறார்கள். அதற்குக் களப்பலியாய்ச் சுதேசமன்னர்களை முன்னே தள்ள வேண்டுமென்று அவர்கள் ஒரு உபாயங் கண்டுபிடித்திருக்கின்றனர். அதன் பிரதிபலிப்புத்தான் உடன்படிக்கைப் பிரஸ்தாபம்.

உடன்படிக்கைப்படி-அதன் ஷரத்துகள் எப்படி யிருந்தாலும் சத்தியப்படி-சமஸ்தானாதிபதிகள் தனக்கு உதவிக்கு வரவேண்டுமென்று பிரிட்டிஷ் சர்க்கார் நினைக்கிறது. அதே சமயம், தங்களுதவிக்கு பிரிட்டிஷ் சர்க்கார் வருமா என்று சமஸ்தானாதிபதிகள் சந்தேகப்படுகிறார்கள். என்றாலும், அவர்களிருவருமே ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ள வேண்டியவர்களா யிருக்கின்றனர். பிரிட்டிஷ் சர்க்கார் வற்புறுத்தினால், எந்த ஒரு சுதேசமன்னனுஞ் சமஷ்டியிற் சேராமலிருக்க முடியாது. ஏனெனில் பிரிட்டிஷ் சர்க்காரின் விருப்பிலும் வெறுப்பிலுந்தான் சமஸ்தானங்களின் வாழ்வுந் தாழ்வு மிருக்கிறது.

---

# 5. கட்டுக் கோப்பு

1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டம் உண்மையிலேயே ஒரு புதிய அரசியல்தானு? அல்லது 1919-ம் வருஷத்துப் பழைய அரசியலின் புதிய தோற்றமா?

சட்டத்தைக் கையிலெடுத்ததுஞ் சந்தேகந் தானுகவே தோன்றுகிறது. இதற்குக் காரணம், இப்பொழுது பெரிய நகரங்களிற் பழைய கட்டிடங்கள் புதிப்பிக்கப்படும் சிற்பத் திறமையைக் கொண்டு ஏற்பட்டதல்ல. அல்லது பிரிட்டிஷ் சர்க்காரை நாம் சந்தேகிக்கிறேம் என்பதுமல்ல. அல்லது பிரிட்டிஷ் சர்க்காருக்கு நாம் சந்தேகப் பேர்வழிகளா யிருக் கிறேமென்பது மல்ல. 1919-ம் ஆண்டு அரசியற் சட்டத்தின் முகவுரையையே 1935-ம் ஆண்டு அரசியற் சட்டத்துக்கும் முகவுரையாய் வைத்திருப்பதுதான்.

காரணமென்ன? முகவுரை முக்கியமல்ல வென்று முடிவு செய்யப்பட்டதா? அல்லது 1919-ம் ஆண்டிலிருந்த அதே நிலைமைதான் 1935-ம் ஆண்டிலும் இந்தியாவிலிருப்பதாய்க் கருதப்பட்டதா? அல்லது அவ்வளவு ஸ்பஷ்டமாய் மனசைத் திறந்து இந்தியாவுக்கு இதைத்தான் கொடுக்கப்போகிறே மென்று சொல்ல இஷ்டமில்லையா?

ஆசிரியர் ஏ. பி. கீத் என்பவர், இந்தியாவின் அரசியற் சரிதை என்னும் நூலில் இதைப்பற்றிப் பின்வருமாறு எழுதி யிருக்கிறர்:—

"இந்திய சர்க்காரின் இறுதி லட்சியம், குடியேற்ற நாட்டந்தஸ்து என்பதையாவது இம் மசோதா*விற் கண்டிப்

* 1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டம் மசோதாப் பருவத்திலிருந்த போது இது எழுதப்பட்டது.

பாய்ச் சொல்லியாக வேண்டுமென்று பார்லிமெண்டில் பெரிய தாவா நடந்தது. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவில் ஒரு விபரீதமான முறையைக் கைக்கொண்டது. அதாவது 1919-ம் வருஷத்து இந்தியாச் சட்டத்தின் முகவுரையி லுள்ள உறுதிமொழி*யையும், 1929-ல் அதைப் பற்றி கவர்னர்-ஜெனரலும், இந்தியா மந்திரியும் சேர்ந்து செய்த வியாக்கியான†த்தையும் உறுதியாய் ஒப்புக்கொண்டது. ஆனால் அதையாவது தனியாய் ஒரு முகவுரையில் சொல்லி யிருக்கக் கூடாதா?

1919-ம் ஆண்டு அரசியற் சட்டத்தின் முகவுரையையே 1935-ம் ஆண்டு அரசியற் சட்டதுக்கும் முகவுரையாய் வைக்கவேண்டுமென்று ஸ்திரஞ் செய்துவிட்டது."

## அந்தப் பழைய புதிய முகவுரை:

"இந்தியர்கள், இந்திய அரசியல் நிர்வாகத்தின் ஒவ்வொரு பிரிவிலும் அதிகப்படியான சம்பந்தம் அடையவும், சாம்ராஜ்யத்தின் பிரிக்கப்படாத கூட்டாளியாய் பிரிட்டிஷ் இந்தியா, ஸ்தலஸ்தாபன வளர்ச்சியின் வாயிலாய்ப் படிப்படி யாய் பொறுப்பாட்சி உணர்ச்சி யடையவும் வேண்டுமென் பதே பார்லிமெண்டால் தீர்மானிக்கப்பட்ட கொள்கையா யிருப்பதினாலும்,

---

*சாம்ராஜ்யத்தின் பிரிக்கப்படாத கூட்டாளியா யிருக்கும் பிரிட்டிஷ் இந்தியா ஸ்தல ஸ்தாபன வளர்ச்சியின் மூலம் படிப்படியாய்ப் பொறுப் பாட்சி பெறும்.

† உத்தேசிக்கப் பட்டுள்ளபடி இந்தியாவின் அரசியல் வளர்ச்சி தானகவே குடியேற்ற நாட்டந்தஸ்தில் தான் கொண்டு போய்விடும்.

"அனுஷ்டானத்தில் இவ் வளர்ச்சி, படிப்படியான சில நிலைமைகளின் மூலமாகவே கிடைக்கக் கூடுமாகையினு லும், இத்துறையில் இப்பொழுது சில உருப்படியான முறை கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன;

"அதற்கேற்ற காலமும் வழியும், ஜனங்களின் நன்மைக் கும் மேன்மைக்கும் பொறுப்பாளியா யிருக்கிற பார்லி மெண்டினாலேதான் நிர்ணயிக்கப்பட முடியுமாகையினாலும்,

"அத்தகைய விஷயங்களிற் பார்லிமெண்டு சபை புதிய நிர்வாகப் பொறுப்பேற்றிருக்கிறவர்களின் ஒத்துழைப் பைக் கொண்டு, அதில் அவர்கள் கொண்டிருக்கும் பொறுப் புணர்ச்சியில் எவ்வளவு நம்பிக்கை வைக்கலாமென்பதை அனு சரித்து நடக்கவேண்டு மாகையினாலும்,

"மாகாணங்களில் படிப்பாய் வளர்ந்து வரும் சுயாட்சி ஸ்தாபனங்களின் பரஸ்பர அனுசரணையைக் கொண்டு, மாகாண விஷயங்களில் இந்திய சர்க்கார் தனக்கிருக்கிற பொறுப்புக்கு அனுகுணமான முறையில் அதிகப்படியான சுதந்திரமளிப்பது ஆவஸ்யமென்று தீர்மானிக்கிறது."

1935-ம் வருஷச் சட்டத்தின் 32-வது ஷரத்துப்படி, 1919-ம் வருஷச் சட்டம் முழுதும் ரத்துச் செய்யப்பட்டா லும், அதே ஷரத்தின் 1-வது பிரிவுப்படி அதன் (1919-ம் வருஷச் சட்டத்தின்) முகவுரை ரத்துச் செய்யப்படவில்லை. ஆகையால் சட்டப்படி அது இன்னும் அமுலில் இருந்து வருகிறது.

## இரண்டு சந்தேகங்கள்:

ஆனால், உண்மையிற் சொல்லப்போனால் ஐதீகப்படி (சட்டப்படியல்ல) புதிய சட்டத்துக்குப் பிரத்தியேக முக வுரையில்லை. இது இரண்டு சந்தேகங்களை யுண்டுபண்ணு கிறது.

1. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவுக்கு அஃதிருக்கும் இப்போதைய நிலைமையில், திட்டமாய் இன்ன அரசியலைத் தான் கொடுப்பது என்று இன்னும் நிச்சயஞ் செய்யவில்லை; அல்லது மனதைத் திறந்துசொல்ல இஷ்டப்படவில்லை.

2. 1919-ம் வருஷத்தில் இந்தியாவிருந்த நிலைமைக் கும், 1935-ம் வருஷத்துக்குப்பின் இந்தியாவிருக்கும் நிலை மைக்கும் உள்ள வித்யாசத்தை, பிரிட்டிஷ் அரசாங்கம் தெரிந்து கொள்ளவில்லை; அல்லது தெரிந்து சொல்லவில்லை.

இவ்விரண்டு சந்தேகங்களும், முன்னே சொன்னபடி பிரிட்டிஷ் சர்க்காரின் மனப்பான்மையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன; இந்த அரசாங்கத்தின் சட்டம் வேறு, சாம்பிர தாயம் வேறு; இவ்விரண்டுக்கும் பாலமிடுவது எளிதல்ல என் பதையும் புலப்படுத்துகின்றன.

## ஆராய்ச்சி ஆரம்பம்:

சந்தேகங்களைச் சற்றே மறந்துவிட்டு, மனதையுங் கொஞ்சம் நேரே வைத்துக் கொண்டு, சட்டத்துக்குட் செல்லு வோம்.

ஆராய்ச்சி ஆரம்பம்: அதற்கனுகுணமான அளவுகோல் இரண்டு:

1. பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து பாரத சமுதாயம் விடுபடுவதற் கேதுவான அம்ஸம் அல்லது அறிகுறி யேதா வது இச்சட்டத்தி லிருக்கிறதா?

2. இந்திய சுயராஜ்யத்துக் காதாரமான எந்த அதிகார மாவது, இச்சட்டத்தின் மூலம் இந்திய மந்திரிகளுக்கு மாற் றப்பட்டிருக்கிறதா?

இவ்விரண்டு கேள்விகளைக் கேட்டுக் கொண்டே, சட்டத் தின் ஷரத்துகளை யெல்லாஞ் சர்ச்சை செய்தால், ஏகப்பட்ட

நிபந்தனைகளையும், நிர்ப்பந்தங்களையும், பந்தோபஸ்துகளையும் பாதுகாப்புகளையும் பார்க்கிறபோது, மனம் ஒடிகிறது. ஆகையால் இந்தச் சட்டத்தைக் கொண்டு இந்தியா சுயராஜ்யமடைய இடமே யில்லையென்று தோன்றுகிறது.

## முக்கூட்டு அதிகாரி :

சமஷ்டியென்று சொல்லப்படும் மத்திய சர்க்காரில், அநேக முக்கிய இலாகாக்கள், சட்டசபைக்கு ஜவாப்தாரிகளான மந்திரிகளின் நிர்வாகத்தில் விடப்படாமல், ஒதுக்கப்பட் டிருக்கின்றன. இந்த ஒதுக்கப்பட்ட இலாகாக்களுக்கு கவர்னர்-ஜெனரல் ஓர் சர்வாதிகாரியா யிருக்கிறார்.

மந்திரிகளுக்கு மாற்றப்பட் டிருக்கும் இலாகாக்களில், கவர்னர்-ஜெனரல் தலையிடும்போது, அவர் ஓர் விசேஷாதிகாரியா யிருக்கிறார்.

இதர விஷயங்களில் மந்திரிகளைக் கலந்து ஆலோசித்தாலும், கடைசியில் தமது சொந்தத் தீர்ப்பை உபயோகிக்கும் போது, கவர்னர் - ஜெனரல் ஓர் எதேச்சாதிகாரியா யிருக்கிறார்.

மேலே கூறியுள்ள மூன்று விதமான அதிகாரங்களையுடைய முக்கூட்டதிகாரியான கவர்னர்-ஜெனரலைப் பற்றிப் பின்னர் விரிவாய்க் கூறுகிறேன். அதிகார ஜாபிதாவையும் அதனோடு தருகிறேன். தற்காலிகமாய், பிரிட்டிஷ் மன்னரின் நியமனப் பத்திரப் (Instrument of Instructions) படி, பிரிட்டிஷ் பார்லிமெண்டால் அல்லது பிரதம மந்திரியால் நியமிக்கப்படும் பிரிட்டிஷ்காரர் ஒருவர், சமஷ்டி சர்க்காரின் பிரதம அதிகாரியா யிருக்கும்வரை, இந்தியா, தன் லட்சியத்திற் சட்டபூர்வமாய் ஒரு அங்குலங்கூட முன்னேற முடியாது. சுதந்திரமும் தூரத்தூரப் போய்க்கொண் டிருக்கும்.

ஆகையால் அந்த ஆசையைக் கொஞ்சம் அப்பால் வைத்துவிட்டு, பின்வரும் அத்தியாயங்களிற் படிக்கப் போகிற விஷயங்களைச் சுலபமாய்த் தெரிந்துகொள்வதற்காக, சமஷ்டி சர்க்காரின் கட்டுக் கோப்பைச் சங்கிரஹமா யிங்குத் தரு கிறேன் :

**கட்டுக் கோப்பு :**

1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டத்தினுல் ஏற்படுத் தப்படும் அகில இந்திய சமஷ்டியில் இரண்டுவிதமான பிர தேசங்கள் சேர்க்கப்படும்.

1. வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்களோடுகூடிய சுயாட்சி பெற்ற மாகாணங்கள்.

2. மத்திய இந்திய சர்க்காரிற் சேர விரும்புகிற-ஆனுல் பிரிட்டிஷ் சர்க்கார் போதுமென்று சொல்லுகிற அளவு உரிமைகளை அந்தச் சர்க்காருக்கு விட்டுக் கொடுக்க உடன்படு கிற சமஸ்தானங்கள்.

இப்பொழுது இந்தியாவிலிருக்கிற மாகாணங்கள் (கவர் னர் மாகாணங்களுஞ் சீப்-கமிஷனர் மாகாணங்களுஞ் சேர்ந்து) பதினென்று. இவைகளெல்லாம் பிரிட்டிஷ் இந்தியாவிலிருப் பதினுலும், பிரிட்டிஷ் சர்க்காரால் அவ்வப்போது இயற்றப் படுஞ் சட்டங்களை யெல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று விதியிருப்பதினுலும், பிரிட்டிஷ் சர்க்காரின் ஏஜெண்டான கவர்னர்-ஜெனரலின் ஆளுகைக்குட்பட்ட எல்லா மாகாணங் களும்—அவைகள் இஷ்டப்பட்டாலும் இஷ்டப்படாவிட்டா லும்—சமஷ்டியில் சேர்க்கப்படும்.

இப்பொழுது இந்தியாவிலிருக்கிற சமஸ்தானங்கள் (சிறிதும் பெரிதுமாக) 562. இவைகளிற் சமஷ்டியிற் சேரத் தகுதியுள்ள அல்லது சேர்த்துக் கொள்ளத் தக்கதென்று கருதப்படுகிற சமஸ்தானங்கள் சுமார் 150.

இந்த நூற்றைம்பது சமஸ்தானங்களுஞ் சேர்ந்துதான் சமஷ்டியை ஆரம்பிக்க வேண்டுமென்கிற அவசியமோ, அல்லது இந்த நூற்றைம்பது சமஸ்தானங்களும் அவசியம் சமஷ்டியிற் சேரவேண்டுமென்கிற அவசரமோ இல்லை. பிரிட்டிஷ் சர்க்கார் போதுமென்று நினைக்கிற அளவு—ஆனால் சமஷ்டி சபையில் சமஸ்தானங்களுக்காக ஒதுக்கப்படும் ஸ்தானங்களிற் சரிபாதிக்கு உரிமையுள்ள அத்தனை—சமஸ் தானங்கள் சேர்ந்து, அவைகளும் பிரிட்டிஷ் சர்க்கார் போது மென்று கருதுகிற அளவு குறைந்தபட்ச அதிகாரங்களைச் சமஷ்டி சர்க்காருக்கு விட்டுக்கொடுக்கத் தயாரானால்தான் அவைகள் சமஷ்டியிற் சேர்க்கப்படும்.

போதிய அளவு சமஸ்தானங்கள் சேராமலிருந்து, போதியஅளவு அதிகாரங்களை விட்டுக்கொடுக்க அந்தச் சமஸ் தானங்கள் தயாரில்லாமலிருந்தால், சமஷ்டி ஆரம்பிக்கப்பட மாட்டாது. மத்திய சர்க்கார் இப்போது இருப்பது போலவே யிருக்கும். சட்டசபைக்குப் பொறுப்பான மந்திரி சபை யிராது; ஏற்படுத்தப்படவு மாட்டாது.

## இரண்டு சட்டசபைகள் :

உத்தேசிக்கப்பட்டுள்ள சமஷ்டி சர்க்காரில் இரண்டு சட்டசபைகளிருக்கும்.

1. 'பெடரல் அசம்பிளி' அல்லது 'ஹவுஸ் ஆப் அசம்பிளி' என்று சொல்லப்படும் கீழ் சபை.

2. கவுன்ஸில் ஆப் ஸ்டேட் என்று சொல்லப்படும் மேல் சபை.

கீழ்சபையில் மொத்தம் 375 மெம்பர்கள் இருப்பார்கள்: 250 பேர் பிரிட்டிஷ் இந்தியப் பிரதி நிதிகள் ; 125 பேர் சமஸ்தான நியமன அங்கத்தினர்கள்.

மேல் சபையில் மொத்தம் 260 மெம்பர்கள் இருப்பார்கள் : 156 பேர் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் ; 104 பேர் சமஸ்தான நியமன அங்கத்தினர்கள்.

## இரண்டு இலாகாக்கள் :

சமஷ்டி சர்க்காரில் இரண்டு இலாகாக்களிருக்கும் :

1. ஒதுக்கப்பட்ட இலாகாக்கள்.
2. மாற்றப்பட்ட இலாகாக்கள்.

## இரண்டு நிர்வாகிகள் :

மேலேகூறியுள்ள இரண்டு இலாகாக்களும் இரண்டு நிர்வாகஸ்தர்கள் வசம் விடப்படும்.

1. கவர்னர் - ஜேனரல்
2. மந்திரிகள்

## இரட்டை ஆட்சி :

'இரட்டை யாட்சி' யென்னும் இவ்வார்த்தை 'டையார்க்கி' என்னும் ஆங்கில வார்த்தைக்குச் சரியான தர்ஜுமா (மொழி பெயர்ப்பு) வாயிருந்தாலும், விளங்கும்படி சரியான அர்த்தஞ் சொல்லுவது சுலபமல்ல. சர்க்காரின் நிர்வாக இலாகாக்கள் இரண்டாய்ப் பிரிக்கப்பட்டு, இரண்டு எஜமானர்கள் வசம் விடப்படுவதால் இது இரட்டையாட்சியா? அல்லது கவர்னர் - ஜெனரல், ஒதுக்கப்பட்ட இலாகாக்களில் சர்வாதிகாரியாகவும், மாற்றப்பட்ட இலாகாக்களிற் சொந்தத் தீர்ப்பதிகாரியாகவும் எதேச்சாதிகாரியாகவும் இருப்பதால் இது இரட்டையாட்சியா ? அல்லது மாற்றப்பட்ட இலாகாக்களிற் பொறுப்பாட்சியும், ஒதுக்கப்பட்ட இலாக்காக்களில் தனியாட்சியும் நடப்பதால் இது இரட்டையாட்சியா ?

இவைகளைப் பிரித்துப் பிரித்துச் சொல்லுவது அரிதாயிருந்தாலும், இவைகளெல்லாவற்றையும் உள்ளடக்கிக்

கொண்டுதான் இரட்டையாட்சி யிருக்கிறதென்று சொல்லு வது எளிது.

இரட்டையாட்சி நல்லதா கெட்டதா என்பதைப் பற்றி நான் இங்கொன்றும் சொல்லப்போவதில்லை. ஒருவிதமாய்ப் பார்த்தால், பிரிட்டனில் நடப்பதும் இரட்டையாட்சிதான்; இங்கு நடப்பதும் நடக்கப்போவதும் இரட்டையாட்சிதான். அங்கே முடியாட்சியோடு கூடிய குடியாட்சி நடக்கிறது. இங்கே தனியாட்சியோடு கூடிய பொறுப்பாட்சி நடக்கிறது. அங்கு மன்னருக் கதிகாரமில்லை; ஆனால் மன்னர்பேரால் எல்லாம் நடத்தப்படுகின்றன. இங்கு மந்திரிகளுக்கதிகார மில்லை; ஆனால் மந்திரிகள்பேரால் எல்லாம் நடத்தப்படு கின்றன. ஆகையால் இரட்டையாட்சி யென்பதற்குச் சம யோசித ஆட்சி என்பது சரியான அர்த்தமா யிருக்குமென்று நம்புகிறேன்.

# 6. உள் அமைப்பு

1935-ம் வருஷச் சட்டப்படி யேற்படுத்தப்படும் அகில இந்திய சமஷ்டியின் உள் அமைப்பைப் பற்றிச் சொல்லப் போகிற இந்த அத்தியாயத்தில், சுயாட்சி பெற்ற மாகாணங் களைப் பற்றியும் சமஷ்டியிற் சேரப்போகிற சமஸ்தானங் களைப் பற்றியும் சில விபரங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

மாகாண சுயாட்சியைப் பற்றி விரிவாய் எழுத இந்நூல் இடந்தராது. மாகாண சுயாட்சி—அது வந்த பதினைந்து பதினறு மாதங்களுக்குள்ளாக அனுபவார்த்தமாய்த்தன்னைத் தானே நன்ருய் அறிமுகப்படுத்திக்கொண் டிருக்கிறது. காரணம், ஆரம்பத்தி லேற்பட்ட காங்கிரஸ் நெருக்கடியல்ல; இடைக்காலத்திலிருந்த 'பினமி' மந்திரி சபையுமல்ல; காங்கிரஸ் அரசாங்கமுமல்ல; இவற்றிற்கெல்லாம் ஆதி பீஜமாயிருந்த தேர்தல்கள்.

## காங்கிரஸ் கைப்பற்றிய முதற் கோட்டை:

இது வரை, காங்கிரசும் கவர்ன்மெண்டுஞ் சந்தித்துக் கொண் டிருந்த ஒரே இடம், அஹிம்சையோடு கூடிய போர்க்களமாகவே யிருந்தது. காந்தி—இர்வின் ஒப்பந்த மேற்பட்ட பிறகுகூட ஒரு போர் நடந்தது. அது முடிந்தும் முடியாமலும் இருக்கும்போது மாகாண சுயாட்சிக்குப் பூர் வாங்கமான தேர்தல் வந்தது. காங்கிரஸ் தனது போர் முறையை மாற்றிக்கொண்டது. சாத்தியமான ஸ்தானங் களுக்கெல்லாம் அது தன் அபேட்சகர்களை நிறுத்திற்று. காங்கிரஸ்காரர்கள் தேர்தல் காலத்தில், மாகாண சுயாட்சியைப் பற்றி—எழுதிப் பார்த்தால் பதினுயிரம் பக்கங்களிலும்

அடங்காத—பல சங்கதிகளைச் சொன்னார்கள். தேர்தல்களால் இரண்டு நல்ல பலன்கள் ஏற்பட்டன.

1. காங்கிரசுக்குத் தேசத்தில் எவ்வளவு பலமிருக்கிறதென்பது—கவர்ன்மெண்ட் தேசமக்களிடம் எவ்வளவு நம்பிக்கை யிழந்திருக்கிற தென்பது.

2. மாகாண சுயாட்சி எவ்வளவு பிற்போக்கானதென்று ஜனங்கள் தெரிந்துகொண்டது—சுயாட்சியின் பேரால், பிரிட்டிஷ் சர்க்கார், தனது ஆட்சியை யின்னுங் கொஞ்சக் காலத்துக்கு நீடிக்கப் பார்க்கிறதென்பது.

பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கிற பதினொரு கோட்டைகளாகிற பதினொரு மாகாணங்களில் ஏழைத் தேர்தல் மூலம் காங்கிரஸ் கைப்பற்றிக் கொண்டது. இவைகள் சுயராஜ்யப் பாதையிற் கைப்பற்றப்பட்ட முதற் கோட்டைகளென்று சிலர் சொல்லுகிறார்கள். கோட்டை நமதாயிருந்து அதிகாரம் எதிரியுடையதா யிருந்தால் என்ன பயன்? கோட்டையும் நமதாகவேண்டும்; அதிகாரமும் நமதாயிருக்க வேண்டும். காங்கிரஸ் மந்திரிகள், ஓரளவு அதிகாரத்தைத் தாங்களாகவே கவர்னர்களிடமிருந்து பிடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். விசேஷாதிகாரங்களும், ஏதேச்சாதிகாரங்களுமாகிற வாலைச் சுருட்டிப் போட்டுக் கொண்டு கவர்னர்கள், காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாகத் திறமையைக் கண்டு, பிடாரனுடைய மகுடியைக்கேட்ட கிருஷ்ண சர்ப்பத்தைப்போற் கிடக்கிறார்கள். "மனித மூளைக்கு எட்டக்கூடியது" என்று ஸ்ரீ நேவில் சேம்பர்லேன் சொன்ன பாதுகாப்புகளையும், முள்வேலிகளையும், பிரிட்டிஷ்காரர்கள் விளக்குப் பிடித்துக்கொண்டு தேடவேண்டிய நிலைமைக்கு விஷயம் வந்துவிட்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்களின் நிர்வாகத் திறமையை யிது எடுத்துக்காட்டி

னாலும், பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் ஆட்டங் கொடுத்து விட்டது என்பதையும் புலப்படுத்தாமலில்லை.

## இந்தியாவைப் பிரிப்பதே தவறு:

இந்தியாவிலிருக்கிற இத்தனை சமஸ்தானங்களும் இந்தியாவைச் சேர்ந்தவைகள்தான். அவற்றின் அரசர்களும் பிரஜைகளும் இந்தியர்கள்தான்.

இந்திய மன்னர்கள் முன்னே சொன்னபடி பூர்வகாலத்துச் சூரிய சந்திர வமிசங்களில் வந்தவர்களாயிருக்கலாம்; அல்லது இடைக்கால மொகலாய மராத்திய ராஜ பரம்பரைகளைச் சேர்ந்தவர்களாகவு மிருக்கலாம்; அல்லது ஜவஹர்லால்ஜி சொல்லுகிறபடி "பிற்காலப் போர்களில் அநேக வீரதீரச் செயல்களைச் செய்த சேனாதிபதிகளின் சந்ததியார்"களாகவு மிருக்கலாம். இதைப்பற்றி யெல்லாம் இந்தியா பெருமை யடைகிறது. பகவான் ராமச்சந்திரமூர்த்தியின் பேரப் பிள்ளைகளையும், மகா அக்பர்ச் சக்கிரவர்த்தியின் கொடி வழிகளையும், க்ஷத்திரபதி சிவாஜியின் சந்ததியையும் இந்தியா இன்னும் இழந்துவிடவில்லை யென்பதிலுங் கௌரவங் கொள்ளுகிறது. ஆனால் இவ்வளவு பெருமையுங் கௌரவமும் இந்தியாவின் உத்தாரணத்துக்கு உபயோகப்படவில்லையே யென்று தான் கவலைப்படுகிறது.

இமய முதற் குமரி வரை, சிந்து முதற் கங்கை வரை ஒரு குடைக்கீழ் ஒருவனாண்ட பரதகண்டம், மறுபடியும் ஓரரசாகாதோ? ஆவதற்குப் பரதன்வழிப் பார்த்திபரோ பகைவர்? இந்தியா இனியும் பிரிந்திருக்கலாகாது. சிதைந்த இந்தியா புதைந்த இந்தியா. ஐக்கிய இந்தியா பாக்கிய இந்தியா. சுதந்திர இந்தியா இதந்தரு இந்தியா. இந்த வார்த்தைகளை வழி காட்டியாய் வைத்துக்கொண்டு சமஷ்டியைச் சாருவோம்.

**முதலாவது அத்யாயம் :**

1935-ம் வருஷச் சட்டத்தின் இரண்டாவது பாகம், இந்திய சமஷ்டியென்று பெயரிடப்பட் டிருக்கிறது. அதன் முதலாவது அத்தியாயம், சமஷ்டி அமைப்பும் சமஸ்தானப் பிரவேசமும்.

இந்த அத்தியாயத்தில் இரண்டே யிரண்டு ஷரத்துகள் தான் இருக்கின்றன. அவைகள் "வெல்வெட் டுரைக்குள் இருப்புக் கரம் இருப்பதை" உணர்த்துகின்றன. சமஷ்டியி னாரம்பமே பட்சபாதமானது என்று இந்த அத்தியாயம், அதைப் படிப்பவர்களின் எண்ணத்தில் ஏற்படச் செய்வ தானது, கிரகப்பிரவேசமாகும்போது நிலைப்படி தட்டுவ தான அபசகுனத்தை யுண்டாக்குகிறது. கொஞ்சம் அவசர புத்தியும் பொறுமை யின்மையும் உடைய அரசியல் வாதி கள், இச் சட்டத்தின் மோசநாசம் கம்பளி வேஷங்களை வெளிப்படுத்த இவ்வளவே போதாதா வென்று ஆத்திரப்படு கிறார்கள். 'ஒரு கூடை செங்கல் அத்தனையும் பிடாரி' என்று எண்ணுவது தவறு. கடைசியிற் கூடையாவது மிஞ்சாதா என்று பார்க்கவேண்டும்.

1937 ஏப்ரல் முதல் தேதியில், பிரிட்டிஷ் இந்தியா பொறுப்பாட்சி பெற்ற தென்பது வாஸ்தவம். ஆனால் பொறுப்பாட்சி யென்பது, சுயராஜ்யத்தின் ஒரு பகுதியா கவோ, சுதந்திரத்தின் ஒரு சாயலாகவோ இருந்தால், எந்த விஷயத்துக்காக இப் பொறுப்பாட்சி கொடுக்கப்பட்டதோ, அந்த விஷயத்தில் அதற் கேதாவது பொறுப்பு அல்லது சுதந்திரம் அளிக்கப்பட் டிருக்கிறதா என்று பார்க்கவேண் டும். காரண காரிய மென்பன எப்பொழுதுமே தனித்தனிச் சரக்குகளா யிராமல், ஒன்றுக்கொன்று தொந்தம் வைத்துக் கொண்டு இருக்கும் ஒரு கூட்டுச் சரக்கா யிருக்கும்போது,

அரசியலில் மாத்திரம் அதற்கு அர்த்தம் வேறு இருக்க முடியாது. அப்படியானுற் சமஷ்டிக்காக, மாகாணங்களுக்குச் சுயாட்சி வழங்கவந்த பிரிட்டிஷ் அரசாங்கம், சமஷ்டி அமைப்பால் அதை எப்படிப் பறிக்க முடியும்? அதே சமயம் அதே சமஷ்டியின் அடுத்த பங்காளியான சமஸ்தானங்களுக்கு அளித்திருக்கும் அதே உரிமையை, மாகாணங்களுக்கு மாத்திரம் எப்படி மறுக்கவு முடியும்? சம சுயேச்சையுள்ள பிரதேசங்களையே சமஷ்டியிற் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்தேசித்த சமஷ்டி சிருஷ்டி கர்த்தர்கள், அதே சம சுயேச்சையை, சமஷ்டிப் பங்காளிகளுக்குச் சமமாய்ப் பகிர்ந்து கொடுக்க வேண்டாமா? ஒருவருக்குக் கொடுத்தும், மற்றொருவருக்கு மறுத்தும் விடுவதால், 'சமம்' என்பதற்கும் 'சுயேச்சை' என்பதற்கும் ஏதாவது அர்த்தமிருக்கிறதா? பாரபட்சமுள்ள சமஷ்டியின்மீது, பாரபட்சமில்லாத இப் பிரச்னையைச் சுமத்தினுல் அதுவே சமஷ்டியைத் தகர்க்கத் தக்கதாயிராதா?

இப்பிரச்னை மாகாணப் பிரவேச சம்பந்தமானது. சமஷ்டி நல்லதோ கெட்டதோ, மாகாணங்களெல்லாம் அதிற் சேர்ந்துதான் தீரவேண்டும். சாதகமிருந்தாற் சேரவும் பாதகமிருந்தாற் சேராதிருக்கவும், சட்டப்படி மாகாணங்கள் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. ஆகையால் பிரிட்டிஷ் பார்லிமெண்டு, மாகாணங்கள் மீது சமஷ்டியைத் திணிக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அப்படித் திணிக்கப் படுஞ் சமஷ்டியிலிருந்து விலகவும் மாகாணங்களுக்குச் சுயமான உரிமையில்லை.

அதே சமயம் இதே உரிமைகள் சமஸ்தானங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. சமஸ்தானங்களிஷ்டப்பட்டாற் சமஷ்டியிற் சேரலாம். இஷ்டப்படாவிட்டால் சேரா

மலே யிருந்துவிடலாம்; கண்டிப்பாய்ச் சேரத்தான் வேண்டு மென்கிற கட்டாயமோ பலவந்தமோ இல்லை. ஆனால் ஒரு தரம் ஒரு சமஸ்தானம் சமஷ்டியிற் சேர்ந்துவிட்டால், அப்புறம் அது தன்னிஷ்டம் போல் விலக முடியாது. வேண்டுமானால், சட்டப்படி செய்து கொடுத்திருக்கிற பிரவேசப் பத்திரத்தின் சில நிபந்தனை அல்லது ஒப்பந்தங்களை, வரையறுக்கப்பட்ட அளவோடு மாற்றவோ திருத்தவோ உரிமையுண்டு. இச்சிறு சுதந்திரங்கூட மாகாணங்களுக் கில்லையென்பதை மறந்துவிடக் கூடாது.

இத்தோடு இன்னொரு உரிமையுஞ் சமஸ்தானங்களுக்கு அளிக்கப்பட் டிருக்கிறது. அதாவது, சமஸ்தானாதிபதிகள், தங்களுக்கிருக்கிற அதிகாரம் அனைத்தையுஞ் சமஷ்டி சர்க்காரிடம் ஒப்படைக்க வேண்டியதில்லை—ஏதோ கொஞ்சங் கொடுத்தாற் போதும். சமஸ்தானாதிபதிகள் தயவு வைத்துத் தானஞ் செய்கிற அளவிலேதான் சமஷ்டி சர்க்கார், சமஸ்தான நிர்வாகத்தில் தலையிடலாம். மற்றவைகளில் சமஸ்தானாதிபதிகள், எப்பொழுதும் போல் ஏதேச்சாதிகாரிகளாகவே யிருப்பார்கள். ஆனால் மாகாண சம்பந்தம் அப்படியல்ல. மாகாணப் பிரதம நிர்வாகிகளான கவர்னர்களுக்கெல்லாம் கங்காணியாயிருக்கிற கவர்னர் - ஜெனரல் மாகாண நிர்வாக முழுதிலும் தமதிஷ்டம் போல் தலையிடலாம்.

## ஐந்தாவது ஷரத்து :

1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டத்தின் ஐந்தாவது ஷரத்து* ப்படி, அகில இந்திய சமஷ்டி அமைக்கப்படும்.

---

* 5-வது ஷரத்து;—

(1.) இந்த ஷரத்தின் இரண்டாவது பிரிவில் கூறப்படும் நிபந்தனை திருப்திகரமாய்ப் பூர்த்தி செய்யப்பட்டு, பார்லிமெண்டின் இரு

இந்த ஷரத்து சம்பந்தமான குற்றங் குறைகள் ஏற்கனவே கூறப்பட்டிருக்கின்றன. என்றாலும், சந்தர்ப்பானுசாரமாய்த் திரும்பவும் அவைகளையே சங்கிரகமா யிங்குக் குறிப்பிடுவது குற்றமாகாது.

## முதற்கோணல்:

சமஷ்டியின் முதலாவது கோணல், அதனாரம்பத்திலுள்ள பங்காளித்துரோகம். அதாவது, சமஷ்டிப் பிரவேசத்திற் சமஸ்தானங்களுக்கும் மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிற உரிமை வித்தியாசம்.

---

சபைகளும் அதைப்பற்றி அறிக்கைகள் வெளியிட்டதும், ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து தமது குடைக்கீழ் இந்திய சமஷ்டி என்னும் பேரோடு (அ) கவர்னர் மாகாணங்களென்று அழைக்கப்படும் மாகாணங்களும் (ஆ) சமஷ்டியில் பிரவேசித்துள்ளனவும் பிரவேசிக்கப் போவதுமான சமஸ்தானங்களும், அவ்வாறு ஆக்கப்பட்ட சமஷ்டியில் சீப்-கமிஷனர் மாகாணங்களென் றழைக்கப்படும் மாகாணங்களும் ஒன்று சேர்க்கப்பட்டு, மன்னர்பிரானால் கிரமமாய் வெளியிடப்படும் பிரகடனத்தால் அன்று முதல் அமுலுக்குவரும்.

(2.) சமஸ்தானங்கள் சம்பந்தப்பட்ட நிபந்தனை:—(அ) அவ்வாறு சேர்ந்துள்ள சமஸ்தானங்கள், I-வது ஷெட்யூல் 2-வது பாகத்திலுள்ள விதிகளின்படி, மேல் சபையில் 52 ஸ்தானங்களுக்குக் குறையாமற் பூர்த்தி செய்யக் கூடியவைகளாகவும், (ஆ) மொத்த சமஸ்தானங்களின் மொத்த ஜனத்தொகையில் சரிபாதியை யுடையவைகளாகவும் இருக்க வேண்டும்.

சமஸ்தானங்கள் சமஷ்டியிற் சேர்வதாய்த் தீர்மானித்தால் மாத்திரம் போதாது. 6-வது ஷரத்துப்படி, பிரவேசப் பத்திரத்திற் கையொப்பமிட்டுக் கொடுக்கும் வரை, அவைகள் சமஷ்டி அங்கத்தினர்களல்ல. பிரவேசப் பத்திரத்தில் சமஸ்தானாதிபதிகள் தங்கள் உடன்படிக்கை, உரிமையாகியவற்றைப் பாதுகாப்பதற்காக அவர்களுக்கு உசிதமென்று தோன்றுகிற சில நிபந்தனைகள், அல்லது தங்களுக்குத் தாங்களாகவே வைத்துக் கொள்ளும் சில அதிகாரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இப்பேர்ப்பட்ட உரிமை யெதுவும் மாகாணங்களுக்கில்லை. ஆனால், மன்னரின் பிரகடனம் வெளியாகும் வரை, சமஷ்டி அனுஷ்டானத்துக்கு வராது. அவரும் 5-வது ஷரத்திலுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாதவரை, அத்தகைய பிரகடனம் வெளியிடமாட்டார். இப்பேர்ப்பட்ட நிபந்தனை யெதுவும் மாகாணங்களுக் கில்லை.

1. மாகாணங்கள் சட்டப்படி சமஷ்டியிற் சேர்க்கப் படுவது.

2. சமஸ்தானங்கள் இஷ்டப்படி சமஷ்டியிற் சேர்க்கப் படுவது.

## சட்டமும் இட்டமும் :

இந்தச் சட்டமும் இஷ்டமுந்தான் சமஷ்டியின் முதற் கோணலென்று நான் குறிப்பிடும்போது, முற்றிலும் அதனு லேற்படும் முடிவையும் உள்ளடக்கித்தான் கூறுகிறேன். மாகாணங்கள் சட்டப்படியும், சமஸ்தானங்கள் இஷ்டப் படியுஞ் சமஷ்டியிற் சேர்க்கப்படும்பொழுது, அந்தப் பங்காளி கள் எப்படிச் சம அந்தஸ்தும் சம உரிமையுமுடையவர்களா யிருக்கமுடியும்? அதனுற் சமஷ்டியின் தாத்பர்யமே மாறி விடவில்லையா? மாறுபட்ட தாத்பர்யத்தைக்கொண்ட ஒரு சமஷ்டியை அல்லது மாறுபட்ட கூட்டாளிகளைக்கொண்ட ஒரு சமஷ்டியைப் பிரிட்டன் ஸ்தாபிக்க விரும்புகிறதா? எது வாயினுஞ்சரி இந்த வித்யாசம், மாகாண கௌரவத்தை பாதிக்கிறதா இல்லையாவென்பதை பிரிட்டனே பார்க்கட்டும்.

சமஷ்டிக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கிற மாகாணங்கள், சமஷ்டியை எதிர்நோக்கி வரவுபார்த்துக் காத்துக்கொண்டிருக் கின்றன. சமஸ்தானங்களோ சமஷ்டியைப்பற்றி இன்னும் சிந் திக்கவே இல்லை. இந்நிலைமையில், மாகாணங்கள், எப்படித் தங்களைத் தாங்களே, சமஸ்தானங்களோடு சம பங்காளிக ளென்று சொல்லிக்கொள்ளலாம்?

## மாறுபட்ட இரண்டாட்சி

இப்பொழுதிருக்கும் நிலைமையில், மாகாணங்களில் ஒரு விதமான ஆட்சியும், சமஸ்தானங்களில் இன்னொருவிதமான ஆட்சியும் நடக்கின்றன—சட்டப்படி மாகாணங்களில்

பொறுப்பாட்சியும், இஷ்டப்படி சமஸ்தானங்களில் ஏகாதிபத்திய ஆட்சியும். இவ்வாட்சி வித்யாசம் இனியும் இப்படியே தானிருக்கும். சமஷ்டிப் பிரவேசத்தினால், சமஸ்தானங்களின் ஆட்சிமுறையும் ஆட்சித் தத்துவமும் பாதிக்கப்படமாட்டாதென்று 9, 18-வது ஷரத்துகள், உத்தரவாதமளிக்கின்றன. சமஷ்டி சபைகளில், சமஸ்தானங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற ஸ்தானங்களை, அவற்றினரசர்களே தங்களிஷ்டம்போற் பூர்த்திசெய்யலாம்; மாகாணங்களைப்போல் தேர்தல்மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத் தனுப்பவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. மேலும், சமஸ்தானங்கள் தங்கள் உள்நாட்டு விஷயங்களில் என்ன மாறுதல் வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். மாகாணங்கள் அப்படிச் செய்யமுடியாது.

## மறுபடியும் சட்டமும் இட்டமும் :

இது சமஷ்டி சர்க்கார் நிர்வாக சம்பந்தமானது. இதுவும் மாகாண விஷயத்தில் சட்டத்தால் வரையறுக்கப்பட்டிருக்கிறது; சமஸ்தான விஷயத்திலோ சட்டமுமில்லை, வரையறையுமில்லை. பிரவேசப் பத்திரத்திற் சமஸ்தானாதிபதிகள், தங்களுக்கெனத் தனியாய் ஒதுக்கிக் கொள்ளும் உரிமைகளையும், விட்டுக் கொடுக்கும் அதிகாரங்களையும் பொறுத்து அவைகள் அவர்கள் இஷ்டத்தால் வரையறுக்கப்படும்.

## பரிகாசமா பரிபாலனமா ?

என்னமோ தெரியவில்லை, இவ்வித்யாசங்களையெல்லாம் பார்க்கிறபோது, சமஷ்டி யென்பது வெறும் பரிகாசமா அல்லது வரும் பரிபாலனமா என்னுஞ் சந்தேகமேற்படுகிறது. மாகாண சம்பந்தப்பட்டமட்டில், எல்லாஞ் சட்டங்களால் திட்டஞ் செய்யப்பட்டிருப்பதாற் சந்தேகத்துக்கிட

மில்லை. சமஸ்தான சம்பந்தமோ எல்லாம் "இஷ்டம்' என்னும் பெயரால் விடப்பட் டிருப்பதால், அந்த இஷ்டம் யாருடையதென்று சந்தேகிக்க வேண்டியதா யிருக்கிறது. ஏனெனில், அரசர்களில் அநேகர், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பரிகாசத்துக்கும் பரிபாலனத்துக்கும் பாத்திரர்களா யிருக்கிறார்கள். பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளின் சூழ்ச்சி அநேகருக்குப்புரியாது. அநேகர், அடித்தாலும் உதைத்தாலும் அவனே சக்கிரவர்த்தி, அவனே தங்களைக் 'காக்குங் கடவுள்' என்றெண்ணிக்கொண் டிருக்கிறார்கள். இந்த அசட்டு விஸ்வாசம் அவர்களுக்கு எதுவரைப் பயன்படப் போகிறது?

பிரிட்டிஷ் அரசாங்கம் பிரிட்டனை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது; சுயராஜ்யம் இந்தியாவைத் தேடி வந்து கொண் டிருக்கிறது. இவைகளின் போக்கு வரத்தை இனி எவராலுங் தடுக்க முடியாது. ஆனால் இறுதி முயற்சியாகச் சமஷ்டியையாவது கைப்பிடித்துக் கரையேறலாமா என்று பிரிட்டன் நினைக்கிறது. ஏகாதிபத்தியம், ஏகாதிபத்தியக் குட்டியைத்தான் ஈனும் என்பதுபோல, ஏகாதிபத்தியம், ஏகாதிபத்தியங்களை மிதித்துக்கொண்டுதான் மேலேற முடியும். இந்தியாவிற் பரவிக்கொண்டு வரும் ஜன நாயகக் கிளர்ச்சியையும் வளர்ச்சியையும், சமஸ்தானங்களைக் கொண்டு ஜமாளிக்க பிரிட்டன் விரும்புவது போலவே, பிரிட்டனைக் கொண்டு ஜமாளிக்கச் சமஸ்தானங்கள் விரும்புகின்றன. ஆகையால், சமஷ்டியினாலேதான் சமஸ்தானங்களின் உரிமைகளையுங் உடன்படிக்கைகளையுங் காக்க முடியுமென்று பிரிட்டனே பார்த்துச் சொல்லும்போது, சமஸ்தானங்களின் இஷ்டமென்பது பிரிட்டனின் இஷ்டமாகவே யிருக்குமென்பதிற் சந்தேகமில்லை.

## குண்டலீ கரணங்கள்* சமஷ்டி வராவிட்டால்?

1. மேலே கூறியுள்ள இஷ்டமென்பது, யாருடைய தாய் இருந்தாலுஞ் சரி, அடிகோலப்பட்டிருக்கும் அரசியல் அமலுக்கு வராவிட்டால், எதிர்கால இந்திய மத்திய அரசியல் எப்படியிருக்குமென்று இப்பொழுதே சிலர் எண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லுகிறேன்: "சுவாமின்! அந்தக் கவலை உங்களுக்கு வேண்டாம். குண்டலீகரணங்கள் போடுவதில் பிரிட்டிஷ்காரர்களைப் போல் அவ்வளவு சாமர்த்தியசாலிகள் இன்னும் இவ்வுலகத்தில் உதிக்கவில்லை. இறந்த காலத்துக்கும் நிகழ் காலத்துக்கும் மத்தியில், எதிர்காலத்தை அவர்கள் எப்பொழுதுமே ஏற்படுத்தி விடுகிறார்கள்." ஆகையால், சமஷ்டி உடைந்து விடுமானால் அதற்குப் பதிலாக இன்னொரு சமஷ்டியை அவர்கள் ஏற்கெனவே சிருஷ்டித்து விட்டிருக்கிறார்கள். அதாவது, மாகாணங்களை யெல்லாம் ஒன்றுசேர்த்து ஒரு சமஷ்டியை அமைப்பது. அதுவரை யிப்பொழுதிருக்கும் மத்திய சர்க்காரே நடைபெறும். மாகாணங்களை மாத்திரம் உள்ளடக்கிக்கொண்டுவருஞ் சமஷ்டி, உத்தேசிக்கப்பட்டுள்ள சமஷ்டியில் சமஸ்தானங்களைக் கழித்து, மிஞ்சிய மறு சிருஷ்டி அல்லது மறு தோற்றமாகவே யிருக்கும்.†

## கிரமமென்றால் என்ன?

2. இதைக் கடந்து இன்னுங் கொஞ்சம் அப்பாற் சென்றால் இன்னொரு சந்தேகமும் உண்டாகிறது; அதுவும் ஒரே

---

* இதற்கு ஆங்கிலத்தில் 'பிராக்கெட்ஸ்' (Brackets) என்று பெயர். ஷரா என்னும் வழக்கச் சொல், சில சமயங்களில் இதன் கருத்துக்கு ஒத்து வரும்.

† சட்டத்தின் 8-வது பாகம் 312 முதல் 319-வது ஷரத்து வரை. (இரண்டும் சேர்ந்து)

வொரு வார்த்தையைப் பொறுத்து உண்டாகிறது. அதாவது, ஒரு இந்திய சமஷ்டி, 'மன்னர் பிரானுற் கிரமமாய் * வெளியிடப்படும் பிரகடனத்தாற் அன்று முதல் அமலுக்கு வரும்' என்னும் வாக்கியத்தில் வருகிற கிரமம் என்னும் வார்த்தைக்கு அர்த்தமென்ன? கட்டாய மென்னுங் கருத்து அதிலிருக்கிறதா?

சமஷ்டிப் பிரதிஷ்டைக் காகவேண்டிய சாமக்கிரியைகளெல்லாந் தயாராகி, சமஸ்தானுதிபதிகளும் சமஷ்டிப் பிரவேசமாகி, பார்லிமெண்டு பல்லாண்டு பாடிவிட்டாலுங்கூட, மன்னர் சமஷ்டிப் பிரதிஷ்டை செய்யாதிருந்து விடலாம். ஏனெனில், எந்த விஷயத்திலும் மன்னரைக்கட்டுப் படுத்துவதும் கட்டாயப் படுத்துவதும் பிரிட்டிஷ் ஐதீகமல்ல. இது மன்னர் பேரால் அக்கிரமம் செய்வதற்குப் பார்லிமெண்டு தனக்குத் தானுகவே ஏற்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு முதல் தரமான குண்டலீகரணம்.

## எப்போழுது ஏற்படும்?

3. இப் பிரச்னே, சமஷ்டி வருங் காலத்தைப் பொறுத்ததாயிருந்தாலும், சமஸ்தானங்களின் சமஷ்டிப் பிரவேசத்தைப் பொறுத்தே நிர்ணயிக்கப்பட வேண்டியதா யிருக்கிறது. சமஸ்தானங்களெல்லாம் உடனே அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் சமஷ்டியிற் சேர்ந்துவிட வேண்டுமென்று சட்டத்தின் ஐந்தாவது ஷரத்தில்—ஏன் எந்த ஷரத்திலாவது கூறப்பட்டிருக்கிறதா? அல்லது இன்ன கால வரையறைக்குள் சமஸ்தானங்கள் சேராவிட்டால் சமஷ்டி அமுலுக்கு வராதென்று ஏதாவது ஒரு விகல்ப்பம் செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது சமஸ்தானங்கள் சேராவிட்டால், இன்ன காலத்தில்

---

* 5-வது ஷரத்து 1-வது பிரிவு. (இந்நூலின் 71-வது பக்கம் பார்க்க).

பிரிட்டிஷ் இந்திய மாகாணங்களைக் கொண்ட சமஷ்டி ஆரம்பிக்கப்படுமென்றுவது குறிப்பிடப்பட் டிருக்கிறதா?

இவைகளை யெல்லாம் பார்க்கும்போது சமஷ்டி எப்பொழுது ஏற்படுமென்கிற கேள்வி, எல்லாரெண்ணத்திலும் இயல்பாகவே யேற்படுகிறது. இதற்குப் பதிற்சொல்லுவது எவர்க்கு மெளிதல்ல. ஜான்புல்லே சொல்லுவாரா?

## துண்டுவிழும் இடைக்காலம்:

ஒரு அரசு அல்லது அரசியல் மாறி, அதற்குப் பதிலாய் இன்னொரு அரசு அல்லது அரசியல் வரும்போது, இரண்டுக்கு மிடையில் விழுகிற காலத்துண்டுக்கு, அரசியல் பாஷையில் இடைக்காலம் அல்லது மாற்றகாலமென்று பெயர். இது இந்திய அரசியலில் எப்பொழுது விழுந்தது? 1919-ம் வருஷத்துப் பழைய அரசியல் முடிந்து, 1935-ம் வருஷத்துப் புதிய அரசியல் ஆரம்பமான போதோ, காலத்துண்டு கண்டிப்பாய் விழவில்லை—இரண்டும் ஏககாலத்தி லேற்பட்டன. அப்படியானல் இங்கு இடைக்கால மென்பது எது? புதிய அரசியலின் ஒரு பாகமான மாகாண சுயாட்சி ஆரம்பமானதற்கும், மற்றொரு பாகமான இந்திய சமஷ்டி ஆரம்பமாகப் போவதற்கும் இடையிலிருக்கிற காலம்.

இப்படியொரு இடைக்கால மேற்படுமென்றும், அதுவும் அதிக நீண்டகாலமா யிருக்குமென்றும் புதிய அரசியற் சட்டகர்த்தர்களுக்கு, அதை ஆக்கு முன்னதாகவே தெரியும். அதனலேதான் அவ்வளவு திட்டமாய் அவர்கள் அந்தச் சட்டத்தில், அதற்கென எட்டு ஷரத்துக்களைச் சேர்த்திருக்கிருர்கள். * அவை அநேகமாய் 1919-ம் வருஷத்து

* சட்டத்தின் 8-வது பாகம் 312 முதல் 319 வரையுள்ள ஷரத்துகள் (இரண்டுஞ் சேர்ந்து).

அரசியற் சட்டத்தின் மறு பதிப்பாகவே யிருக்கின்றன. கவர்னர்-ஜெனரல், கவுன்ஸிலோடு கூடிய கவர்னர்-ஜெனரல், இந்தியா மந்திரி, கவுன்ஸிலோடு கூடிய இந்தியா மந்திரி, இவர்களின் அதிகாரங்களெல்லாம் முன்னைப் போலவே யிருக்கின்றன.

அந்த ஷரத்துகளின் புதிய வாசகத்தை யெடுத்துவிட்டு, 1919-ம் வருஷச் சட்டத்தில், அவை சம்பந்தப்பட்ட ஷரத்துகளின் பழைய வாசகத்தை அமைத்தால், அப்போது அவைகள் பழைய சட்டத்தின் பழைய ஷரத்துகளாகிவிடுகின்றன. அவற்றை நிர்வகிப்பவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் புதிய அதிகாரங்களாகிற வேஷத்தையுங் கலைந்துவிட்டால், அவர்களும் பழையவர்களாகவே ஆகிவிடுகிறார்கள். ஆகையால் 'மறுபடியுங் கட்டவிழ்த்துக் கொண்டு முருக்கமரமேறிக்கொண்ட விக்கிரமார்க்கனுடைய வேதாளத்தைப் போல், 1935-ம் வருஷத்துச் சட்டம், மறுபடியும் 1919-ஞ் சட்டத்துக்குள் போய்ப் புகுந்து கொள்ளுகிறது. இச் சட்டபேதம், அரசியல் முறையில் குழப்பத்தை யுண்டுபண்ணுகிருக்குமா ?

மேலுந் தற்காலிகமாய்—துண்டுவிழுந்த சில காலத்துக்காக மாத்திரம்—சட்டத்தைக் கொண்டு, ஏற்படுத்தப்படும் இடைக்கால அரசியலால் ஒருக்கால் சமஷ்டி யேற்படாமலே போய்விட்டால், சாச்வதமாய் மத்திய சர்க்காரை நடத்த முடியாது. அப்போது அரசாங்க மென்னசெய்யும் ?

1. சட்டத்தைத் திருத்த வேண்டும்.

2. இடைக்கால ஆட்சியையே நீடித்து நடத்த வேண்டும்.

3. மாகாண சுயாட்சியை மாற்றவேண்டும்.

4. இவைகளெல்லாவற்றையுஞ் சேர்த்துப் புதிய அரசியலே ஸ்தம்பித்து அல்லது நடத்தமுடியாமல் நின்றுவிட்டதென்று 1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டத்தை ரத்துச் செய்யவேண்டும்.

## பிரவேசப் பத்திரம் :

பிரவேசப் பத்திரமென்பது, அகில இந்திய சமஷ்டியில் அதி முக்கியமான அம்ஸம். 1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டத்தில் அது பெற்றிருப்பதும் ஒரு பிரத்தியேகமான இடம். அந்த இடம் அசாத்தியமாகிவிட்டால் அப்புறஞ் சமஷ்டியுமில்லை; சட்டமுமில்லை.

சட்டத்தின் ஆறுவது ஷரத்தில் அது சேர்க்கப்பட்டிருந்தாலும், சமஷ்டியை ஆக்கவோ அழிக்கவோ அதனுல் முடிந்தாலும் "அது ஒரு சட்டமா? உடன்படிக்கையா? வர்த்தமானமா? அல்லது விண்ணப்பமா?" என்று சந்தேகிக்கக் கூடியதாயிருக்கிறது.

## சட்டமல்ல :

பிரவேசப் பத்திரம்-தனியாய் எடுத்துக்கொள்ளப்பட்டால்-சட்டமல்ல; சம்பந்தப் பட்டவரின் இஷ்டமேயாகும். சட்டத்துக்கும் இஷ்டத்துக்குஞ் சம்பந்தமேயில்லை. ஏனெனில் இஷ்டத்துக்கு விடப்படு மெதுவுஞ் சட்டமாகாது. மேலுஞ் சட்டமென்பது, ஒருவருக்கொரு விதமாகவும் இன்னொருவருக் கின்னொரு விதமாகவும் இராது; இருந்தாற் சட்டமாகாது. இம்முறைப்படி பார்த்தால் ஒரு சுதேச மன்னர், இந்திய சர்க்கார் தயாரித்திருக்கும் இப்பிரவேசப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து கொடுத்தாலுங் கொடுக்கலாம்; இல்லாவிட்டாலுமில்லை — அது அவரிஷ்டத்

தைப் பொறுத்தது. அத்தோடு சில நிபந்தனைகளைப் புகுத்தவும், சில பிடிதரங்களை வைத்துக்கொள்ளவும் அவருக்கு அப்பிரவேசப் பத்திரத்தின் மூலம் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அப்புறம் அதை பிரிட்டிஷ் பார்லிமெண்டு ஒப்புக்கொள்ளவேண்டும்; மன்னர் அங்கீகரிக்கவேண்டும். படிப்படியாய் இப்படிப் பல நிலைமைகளைக் கடந்துவரும் ஒன்று, என்றைக்காவது சட்டமா யிருக்கமுடியுமா? மேலுஞ் சமஸ்தானுதிபதிகள் ஒவ்வொருவரும் அவரவ ரிஷ்டம்போல், அவரவ ரெண்ணத்துக்கும் ராஜரீகத்துக்கும் ஏற்றதான நிபந்தனைகளையும் பிடிதரங்களையுங் குறிக்கும்போது, அவைகள் பலவாகவும் பலவாருகவும் இருக்கும். சட்டமாஞல், இன்ன நிபந்தனைகளைத் தான் புகுத்தலாம், இன்ன பிடிதரங்களைத் தான் வைத்துக்கொள்ளலாமென்று வரையறுக்கப்பட்டிருக்கும். அத்தகைய வரையறை யெதுவுமில்லாததாற் பிரவேசப்பத்திரம் ஒரு சட்டமேயல்ல.

## உடன்படிக்கையு மல்ல :

பிரவேசப் பத்திரம் சட்டமல்ல வென்பது சரி, உடன்படிக்கையாயிருக்கலாமா? அதுவுமல்ல. ஏனெனில், உடன்படிக்கை யென்பது சம அந்தஸ்துள்ள இரு சுயேச்சை நாடுகளுக்குள் ஏற்படும் ஒரு ஒப்பந்தம். அப்படியாஞல் ஐதீகப்படி, புதுக்கோட்டை சமஸ்தானம், பிரிட்டிஷ் சர்க்காருக்கு எழுதிக்கொடுக்கும் பிரவேசப் பத்திரம், உலக வழக்கப்படி உடன்படிக்கையாகுமா? புதுக்கோட்டை ஒரு சுயேச்சை நாடல்ல; பிரிட்டனேடு சம அந்தஸ்துடையது மல்ல. சமஸ்தானங்களிற் பெரியதான ஹைதராபாத்தும் அப்படியே.

மேலுஞ் சுயேச்சையுள்ள இரண்டு தேசங்கள் செய்துகொள்ளும் உடன்படிக்கை, அவை சம்பந்தப்பட்ட நீதிஸ்தலமெதிலுந் தாவாச் செய்யக் கூடியதா யிராது. உதாரணத்

துக்கு பிரிட்டனும் பிரான்சும் ஏதோ ஒரு உடன்படிக்கை செய்து கொள்வதாய் வைத்துக் கொள்ளுவோம். அதை பிரிட்டன் சரியாகவோ தப்பாகவோ மீறுகிறதென்றும் வைத்துக்கொள்ளுவோம். அப்போது பிரான்ஸ், தன்னுடைய அல்லது பிரிட்டிஷ் கோர்ட்டில் தாவாத் தொடுக்குமா? தொடுத்தால் அதை எந்தச் சட்டம் அல்லது அதிகாரத்தின்மீது அந்தக் கோர்ட்டு விசாரிக்க முடியும்?

ஆகையால் உடன்படிக்கை யென்பது, அது சம்பந்தப் பட்ட தேசங்களின் சட்டத்துக்குங் கோர்ட்டுக்கும் உட்பட்ட தல்ல. பிரஸ்தாபப் பிரவேசப் பத்திரம் ஒரு உடன்படிக்கையாய்க் கருதப்பட்டால்,அதன் நிபந்தனைகளைப்பற்றித் தீர்ப்புக் கூறச் சமஸ்தானங்கள் பாரபட்ச மற்றதும் அதிகாரம் வாய்ந்ததுமான ஒரு நியாயஸ்தலத்தைத் தேடிப் போக வேண்டியது மில்லை. சமஸ்தானங்களின் விதி, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நல்லெண்ணத்தையே நாடி எப்பொழுதுஞ் சரணடைய வேண்டியதா யிருக்கிறது. ஆனால் பிரிட்டிஷ் அரசியற் காரியாலயத்தில் அந்த நல்லெண்ணமென்னும் வஸ்து விளக்கு வைத்துக் கொண்டு தேடினாலும் அகப்படாது.

## வர்த்தமானமு மல்ல :

அப்படியானாற் பிரவேசப் பத்திரம் ஒரு வர்த்தமானமா யிருக்கலாமா? அதுவுமல்ல. ஏனெனில், அது இரு பிரஜைகளுக்குட் செய்து கொள்ளப்படும் ஒரு ஒப்பந்தமே தவிர, ராஜாக்கள் செய்து கொள்ளுவதல்ல. வர்த்தக சம்பந்தமாகவோ குத்தகை சம்பந்தமாகவோ அல்லது விஸ்தி சம்பந்தமாகவோ இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், தங்களுக்குத் தாங்களாகவே சில நிபந்தனை அல்லது கட்டுப்பாடுகளைப் பரஸ்பரமாய் ஏற்படுத்திக் கொண்டு, ஒருவருக்கொருவர் எழுதிக் கொடுக்கும் அல்லது ஒரு மொத்தமாய்

எழுதிக் கொள்ளுங் கடிதம். இது சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பட்டாலுங் கடிதமாகவே பாவிக்கப்படும்; கோர்ட்டுக்குஞ் செல்லும்.

ஆகையாற் பிரவேசப் பத்திரம், இந்த வர்த்தமான பந்தியி லடங்காது. சமஸ்தாநாதிபதிகள் தனித்தனியாய் பிரிட்டிஷ் சர்க்காருக்குச் செய்து கொடுக்கும் இத்தஸ்தாவேஜி, பரஸ்பரமா யில்லாமல் ஒரு தரப்பைச் சேர்ந்ததாய் இருப்பதினாலும், கோர்ட்டுக்குச் செல்லா தாகையினாலும், பிரவேசப்பத்திரம், வர்த்தமான மல்ல.

## விண்ணப்பமு மல்ல :

இப்படிச் சும்மா இதுவுமல்ல அதுவுமல்ல வென்று சொல்லிக்கொண்டே போனால், முடிவுதான் என்னவென்று கேட்க வாயெடுக்கிறீர்களல்லவா? சொல்லுகிறேன்; அது ஒரு விண்ணப்பமு மல்ல.

இந்தியா போய்க்கொண் டிருக்கும் போக்கையும், சுயராஜ்யம் வந்துகொண்டிருக்கும் வேகத்தையும், சமஷ்டியின் மூலமாய் பிரிட்டிஷ் சர்க்கார் சாதித்துக்கொள்ள விரும்பும் ஏகாதிபத்திய மோகத்தையும் பார்க்கப்போனால், சமஸ்தானங்கள் இந்தியாவில் நிலைப்பற்றுவதற்காகவும், அரசையும் அதிகாரத்தையும் வாழையடி வாழையாய்க் காப்பாற்றுவதற்காகவும் சமஸ்தாநாதிபதிகள், தங்கள் எஜமானனான பிரிட்டிஷ் சர்க்காருக்கு, பிரவேசப் பத்திரமென்னும் பெரிய பேரால் விண்ணப்பஞ் செய்து கொள்வதுபோ லிருக்கிறது. ஆனால் விண்ணப்பமென்னும் இந்த வார்த்தை, சுதேச மன்னர்களின் காதுக்கும் கௌரவத்துக்கும் இனிமை தராது. பிரிட்டிஷ் மன்னர் எவ்வளவுதான் பெரிய ராஜாவாயிருந்தாலும், சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யத்துக்கு அதிபதியாயிருந்தாலும், இந்திய மன்னர்கள் எவ்வளவுதான் சின்ன ராஜாக்

களாயிருந்தாலும்; சின்னஞ் சிறிய சமஸ்தானங்களுக்கு அதிபதிகளாயிருந்தாலும் அற்ப ஜனங்களைப்போல் விண்ணப்பஞ் செய்து கொள்ளலாமா? அது எவ்வளவு கேவலம்? அவச்சொல் லன்ருே?

## தஸ்தாவேஜி:

ஆகையால், பிரஸ்தாபப் பிரவேசப் பத்திரம், உடன் படிக்கைக்குக் கொஞ்சங் கீழ்ப்பட்டதும் விண்ணப்பத்துக்குக் கொஞ்சம் மேற்பட்டதுமான ஒரு சட்டபூர்வமான தஸ்தாவேஜி. சட்டமல்லாவிட்டாலுஞ் சட்டத்தைப் போலவே இத் தஸ்தாவேஜும் கோர்ட்டின் மூலமாகவே நிறைவேற்றப் படல் வேண்டும்.

## பிரஜைகளென்ன ஆட்டு மந்தையா?

பிரஜா உரிமை, பிரஜாதிபத்தியம் இவைகளென்ன வென்றே சமஸ்தானுதிபதிகளுக்குத் தெரியாது. பிரஜைகள் ஆட்டு மந்தை போன்ற ஒரு ஜனக்கூட்டமென்றும், அவர்களை யெப்படி வேண்டுமானுலும் விநியோகிக்கலா மென்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் மனிதன் வேண்டுமானுல், ஆட்டுமந்தையின் மேய்ப்பானுயிருக்கலாம்; ஓநாய் இருக்க முடியுமா? பிரஜைகளுக்காகவே அரசன், அரசனுக்காகப் பிரஜைகளில்லை என்னுஞ் சித்தாந்தம் மேலோங்கிக் கொண்டிருக்கும் இந் நூற்ருண்டில், இந்திய மன்னர்களும் பிரிட்டிஷ் மன்னரும், சமஸ்தானப் பிரஜைகளை ஆட்டு மந்தையினுங் கீழாய் அவமதிக்கிருர்கள். சட்டத்தின் 6-வது ஷரத்திலும், பத்திரத்தின் 14-வது பாராவிலும் வருகிற "தனக்காகவும், தன் பின் வாரீஸ்களுக்காகவும், சந்ததியாருக்காகவும்" பிரவேசப் பத்திரம் செய்து கொடுக்கப்படுவதாய்க் குறிப்பிடப்படும் வாசகத்தில், பிரஜைகள்

பூரணமாய்ப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியானால் 7 லட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள சமஸ்தான முழுதையும், இந்த 600 சமஸ்தானாதிபதிகளும் அவர்களின் சந்ததியார்களும் வாரீஸ்தார்களுந்தான் அடைத்துக் கொண்டிருக்கிறார்களா? அவர்களைத் தவிர அங்குச் சட்டத்தை அனுஷ்டிக்கவும், சமஷ்டியை அனுபவிக்கவுங் கூடிய இதர ஜீவன்கள் யாருமே யில்லையா?

## ஆறாவது ஷரத்து :

இந்த ஷரத்திற் சமஸ்தானப் பிரஜைகளைப்பற்றிய பிரஸ்தாபம் எதுவுமேயில்லை. இதனாரம்பத்தில் 'பிரஜைகளுக்காகவும்' என்னும் வார்த்தை பிரஸ்தாபிக்கப்பட்டது. உடனே சமஸ்தானாதிபதிகள், அதைப் பலமாய் ஆட்சேபித்தார்கள். சட்டத்திலிருந்தும், பத்திரத்திலிருந்தும் அந்தப் பதம் எடுக்கப்பட்டுவிட்டது. இதனால் சமஸ்தானாதிபதிகளின் ஜனநாயக விரோதப் பான்மை இவ்வளவென்று புலப்படுகிறதல்லவா? என்றாலும், ஜனாதிபத்தியமும் ஏகாதிபத்தியமும் ஒன்றையொன்று தெரிந்து கொள்ளுவதற்குரிய சந்தர்ப்பத்தை, இந்த ஷரத்தும் பத்திரமும் உண்டாக்கியிருக்கின்றன. சரித்திரம், தன் சுய சரித்திரத்தை எழுதும்போது, ஜனாதிபத்திய-ஏகாதிபத்திய யுத்தத்துக்காக அது அநேக ஏடுகளை விடவேண்டியது ஏற்படும். அதற்கு இந்த ஷரத்திலும் பத்திரத்திலும் வரும் வாசகம் வித்து.

ஆறாவது ஷரத்தின் ஆறாவது பிரிவில், 'ஒரு சமஸ்தானத்தின் நியாயமான வாரீஸ்தார் மைனராயிருந்து, அந்த மைனருக்காக யாராவதொரு ரீஜெண்டோ ஏஜெண்டோ கார்டியனாயிருந்து அரசியலை நிர்வகித்தால், அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில், அந்த மைனராவது அவருடைய ரீஜெண்டு ஏஜண்டாவது, பிரவேசப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து சமஷ்டியிற் சேர

முடியாது' என்னும் கருத்தை உள்ளடக்கிக்கொண்டு ஒரு வாசகம் வருகிறது. அதன்படி பார்த்தால், அந்தச் சமஸ்தானமும், பிரஜைகளும் சமஸ்தானாதிபதியின் சொந்தச் சொத்து அல்லது தனியுடைமையென்று ஆகிறது. உண்மையிற் சட்டப்படி அப்படிச் செய்யப்பட்டாலும், சமஸ்தானப் பிரஜைகள்தான் சமஸ்தானத்துக்கு உடையவர்களென்றும், அதன் அரசர் வெறுங் காவலர் மாத்திரமென்றும், ஜனநாயக தத்துவம் நிரூபிக்காமல் விடப்போகிறதா ?

## முடிவுரை :

முதற்பாகம் முடிகிறது ; சமஷ்டிக் கட்டுக்கோப்பு சம்பூர்ணமாகிறது. இந்திய அரசியற் கட்டிடத்தை அதி சிரமத்தோடு கட்டி முடித்த சிற்பிகள் இந்த இடத்தில் ஒரு பெருமூச்சுவிட்டு இளைப்பாறட்டும். நிர்வாகத்தை நிர்மாணிப்பதற்கு 'இந்த இடைவிடுதிச் சின்ன ஓய்வு' சிறிதேனும் பயன்படாமற் போகாது. சட்டத்தைச் சற்றே தெரிந்து கொள்வதற்கும் இம் முடிவு இங்கு ஏற்றதாயிருக்கும்.

சமஷ்டி சர்க்கார் அமைப்பை அறிந்துகொள்ளச் சட்டத்தைமட்டுஞ் சர்ச்சை செய்தாற் போதாது. சட்டத்துக்கும் அனுஷ்டானத்துக்குமுள்ள சம்பந்தம், சர்க்காருக்கும் ஜனங்களுக்குமிருக்கிற உறவு, தேசத்தின் நிலைமை, தேச மக்களின் லட்சியம் - இவைகளுந் தெரிந்திருக்கவேண்டும். இதற்கு இப்பாகம் எவ்வளவோ உதவியாயிருக்கும்.

இதனால் சமஷ்டிக்கும் இப்பாகத்துக்கும் சம்பந்தமில்லையென்றர்த்தமில்லை. தனியாய்ப் படித்தாலும் சமஷ்டியைப் பற்றி மேற்போக்காய்த் தெரிந்து கொள்ளவும், சமஷ்டியைப் பற்றிய ஒரு முடிவான அபிப்பிராயத்துக்கு வரவும் இதில் இடமிருக்கிறது.

இரண்டாம்

# நிர்வாகம்

பாகம்

# பீடிகை.

கட்டுக்கோப்பின் கலகலத்த பகுதிகளைக் கண்டுவிட்டோம். நிர்வாகத்தின் நியாயாநியாயங்களை இந்தப் பரிச்சேதத்திற் பார்க்கப் போகிறோம். வீடு எப்படியிருந்தாலும் நிர்வாகமே குடும்பத்தின் மேன்மைக்கும் கீழ்மைக்கும் பொறுப்பா யிருப்பதுபோல், கட்டுப்கோப்பைவிட நிர்வாகமே சமஷ்டியின் பிரதானமான பாகமாயிருக்குமென்று நம்புகிறேன்.

நிர்வாகத்தை நின்று பார்க்கிறபோது, பாதுகாப்புகளும் பிடிதாரங்களுமாகிற முள் வேலியினாலும், அரண் வலியினாலும் அது நன்றாய்ப் பந்தோபஸ்து செய்யப்பட்டிருப்பதாய்த் தோன்றுகிறது. ஏகாதிபத்தியத்தைத் தவிர எந்தக் காற்றும் அந்தக் கட்டுக்சாவலைக் கடந்து விடமுடியாது. மாண்டேஸ்கி சொன்னதுபோல் “எங்குச் சட்டசபைகள், அவற்றிற்கு ஜவாப்தாரியல்லாத ஒருவரிடம் அல்லது ஒரு சபையினிடம் விடப்படுகிறதோ, அங்குச் சுதந்திரமிராது.” அந்தத் தேசம் சுபீட்சத்தில் இருந்துகொண்டிருக்கின்றதென்றாவது அல்லது சுயாதீனத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றதென்றாவது சொல்ல முடியாது.

இந்தியாவின் புதிய அரசியற் சட்டம், சர்ச்சில் சொன்னதுபோல், “கவர்னர்—ஜெனரலுக்கு, ஹிட்லர் முஸோலினிக்குள்ள அதிகாரமளிக்கிறது. அவர் தமது பேனாவீச்சு ஒன்றினால், சமஷ்டி அரசியலையே தூள்தூளாக்கி விடலாம். எந்தச் சட்டத்தையும் அவர் சுயமாய்—எவர் ஆலோசனையும் ஆதரவுமின்றி—அரை நொடியி லியற்றி அமலுக்குக் கொண்டு வரலாம். சட்டமல்லாச் சட்டமென்று சொல்லப்படும்

ராணுவச் சட்டமாகிற (இராவண) சட்டத்தையும் அவர் உண்டாக்கலாம். புரட்சிக்குமுன் ருஷியாவிலிருந்த ஜார் சக்கிரவர்த்தியைப் போல், ஏதேச்சாதிகாரியாகவும் பொறுப் பற்ற நிர்வாகஸ்தராகவும் கவர்னர்-ஜெனரல், இந்தியா முழுதிலும் தலைவிரித்தாடலாம்."

இதுதான் 1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டத்தின் சமஷ்டி சம்பந்தமான எல்லா ஷரத்துகளின் சாராம்ஸமும். அவற்றைச் சுற்றிச் சுற்றி வந்தாலும், கடைசியில் அவைகள் அந்த ஒரு புள்ளியிலேதான் போய் முடியும். ஆகையால் அம் மத்தியப்புள்ளியை மனதில் வைத்துக்கொண்டு சட்டத் துக்குட் செல்லவேண்டும்.

சட்டப்படி, சமஷ்டி சர்க்கார் நிர்வாகம், ஐதீகமாய் பார்த் தால் கவர்னர்—ஜெனரல்களிடமும், சட்டசபை மந்திரிகளிட மும், இலாகாத் தலைவர்களிடமுங் கொடுக்கப்படுகிறது. இவைகளை இப்பரிச்சேதத்தில் முறையே பரிக்ஷிப்போம்.

கவர்னர்-ஜெனரலின் விசேஷாதிகாரங்கள் கட்டுக்கடங்க வில்லையேயென்றும், சட்டசபைகள் வெறும் 'நவராத்திரிக் கொலு'வாயிருக்கிறதே யென்றும், மந்திரிகள் 'புதுச்சேரிப் பொம்மை'களா யிருக்கிறார்களே யென்றுங் கவலைப்படுவதிற் பயனில்லை. சட்டம் முழுதும் நமக்குப் பாதகமாயிருந்தாலும் சர்ச்சை செய்துதானாகவேண்டும். பல்லைக் கடித்துக்கொண்டு கொஞ்சம் பொறுமையோடு இப்பாகத்தில் இறங்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

# 7. கவர்னர்-ஜெனரல்

இந்தியாவில் இப்பொழுதிருக்கிற கவர்னர் மாகாணம் பதினொன்றுக்கும், சீப்-கமிஷனர் மாகாணம் ஐந்துக்கும், ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கும், பிரிட்டிஷ் சர்க்காரின் ஏஜெண்டாகவும், இந்திய சர்க்காரின் பிரதம நிர்வாகியாகவும் இருப்பவர் 'கவர்னர்-ஜெனரல். இவருக்கு 'இராஜப்பிரதிநிதி' என்னும் இன்னொரு அதிகாரமுமுண்டு. பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதியாய் அவர், சமஸ்தான இந்தியாவின் பிரதம நிர்வாகியாயிருக்கிறார். இவ்விரண்டு உத்தியோகங்களும் ஒருவருக்கு எப்படிக் கிடைத்தது அல்லது எப்படிக் கொடுக்கப்பட்டது என்பதற்கு ஒரு கதையுண்டு:

## அதிகாரம் வளர்ந்த கதை :

கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்கள், பிரிட்டிஷ் மன்னரிடம் பட்டயம் பெற்றுவந்து இந்தியாவில் வியாபார பேரமும், நாட்டு வேட்டையு மாடினார்க ளல்லவா? அப்பொழுது அவர்களுக்கு முதலில் வங்காளம், பம்பாய், சென்னை யாகிய மூன்று மாகாணங்கள் கிடைத்தன. ஆரம்பத்தில் அவற்றை அவர்கள் எப்படியோ ஆண்டார்கள். பின்னர்ப் பார்லிமெண்டில், 'ரேகுலேடிங் ஆக்ட்' அதாவது ஒழுங்குமுறைச் சட்டம் என்று ஒன்று உண்டாக்கப்பட்டது. அதன்படி, பம்பாய்க்கும் சென்னைக்கும் ஒவ்வொரு கவர்னரும், வங்காளத்துக்கு ஒரு கவர்னர்-ஜெனரலும் வந்தனர். ஆனால் அப்பொழுது அவர்கள் இந்தியாவின் கவர்னர்-ஜெனரல்களாயிருக்கவில்லை; வங்காள கவர்னர்-ஜெனரல்களாகவேயிருந்தனர்.

அதனால் சென்னை பம்பாய் கவர்னர்கள், (வங்காள) கவர்னர்-ஜெனரலைத் தங்கள் மேலதிகாரியென்று மதிக்க வில்லை. கவர்னர்-ஜெனரலுக்கு ஆலோசனை சொல்லுவதற் காக நியமிக்கப்பட்ட கவுன்ஸில் அங்கத்தினர்களுங்கூட அவரை அவ்வளவாய் மதிக்கவில்லை. இதுபற்றி யிடை யிடையே தகராறுக ளேற்பட்டுப் பார்லிமெண்டுவரை யெட்டிக்கொண்டு மிருந்தது. அதை நிவிர்த்திப்பதற்காக அப்பொழுது பிரதம மந்திரியாயிருந்த 'பிட்' என்பவர் ஒரு சட்டத்தை உண்டாக்கினார். அதற்குப் 'பிட்ஸ் இந்தியா ஆக்ட்' என்று பெயர்.

இச் சட்டம் வந்தபின்னுங்கூட கவர்னர்-ஜெனரலுக்கு, கவர்னர்கள்மீதுங் கவுன்ஸிலர்கள்மீதும் பூரணமான அதி காரஞ்செலுத்த முடியவில்லை. என்றாலும் எப்படியோ ஒரு ஐம்பது வருஷத்தை யோட்டினார்கள். மண்ணுங் கொஞ்சங் கொஞ்சமாய் இந்தியா முழுதிலுஞ் சுரண்டிச் சேர்க்கப்பட்டது. 1834-ல் வங்காள கவர்னர்-ஜெனரல், இந்தியா கவர்னர்-ஜெனரலானார். என்றாலும் வங்காளத்துக் கும் அவரே கவர்னராயிருந்தார். அது 1853-லேதான் அவரைவிட்டுப் பிரிக்கப்பட்டு, ஒரு லெப்டினெண்ட் - கவர்னர் வசம் விடப்பட்டது.

இப்படிப் படிப்படியாய் கவர்னர்-ஜெனரல் ஆதிக்கம் வளர்ந்தபோது, இந்தியாவிற் சுதந்திர உணர்ச்சியுஞ் சன்னஞ் சன்னமாய் வளர்ந்தது. அதன் காரணமாய் 1857-ல் ஓர் சுதந்திரப் போர் ஏற்பட்டது. அதை யடக்கக் கம்பெனிக் காரர்கள் ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனார்கள். இனிமேல் இந்தியாவைக் கம்பெனி ஆட்சியில் வைத்துப்பார்ப்பது, பிரிட்டிஷ் கௌரவத்துக்கே ஹானியை உண்டாக்குமென்று கருதப்பட்டது. உடனே 1858-ல் இந்திய அரசியல் நிர்

வாகம், பிரிட்டிஷ் முடியாட்சியோடு பிணைக்கப்பட்டது. அது முதல் இந்தியா கவர்னர்-ஜெனரல், பிரிட்டிஷ் ராஜப்பிரதிநிதியுமானார்.

## பிரிட்டிஷ் ராஜரீகம் :

இச்சந்தர்ப்பத்தில் பிரிட்டிஷ் ராஜரீகத்தைப்பற்றிச் சிறிது சொல்ல வேண்டுமென்று மனது துருதுருக்கிறது. ஏனெனில் அது ஒரு அற்புதமான கதை. இந்தியா இந்தியாவில் ஆளப்படவில்லை, பிரிட்டனில் ஆளப்படுகிறது, அந்த ஆட்சியும் ஒரு வேடிக்கை யாட்சியா யிருக்கிறதென்பது விபரீதமான விஷயமாயிருக்குமல்லவா ? சொல்லுகிறேன், சுருக்கமாய் :

இராஜரீக சாஸ்திரப்படி பிரிட்டனில் இன்ன அரசியல் நடக்கிறதென்று நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. சிலர் முடியாட்சியென்று சொல்லுவர் ; வேறு சிலர் முடியாட்சியோடு கூடிய குடியாட்சி யென்பர் ; அப்புறஞ் சிலர் அசல் குடியாட்சியே என்பர். இதில் எது நிஜம் எது பொய் ? எல்லாம் நிஜம், எல்லாம் பொய்யென்றால் யார் நம்புவர் ? விடுகதை போலிருக்கிறதல்லவா ?

## முடியாட்சி :

பிரிட்டனி லோர் ராஜா இருக்கிறார். அவர்தான் பிரிட்டிஷ் பிரஜைகளுக்கெல்லாம் ராஜா. அவர் பெயரால்தான் சட்டங்களெல்லாஞ் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு சட்டத்திலும் அவர் முத்திரையுங் கையொப்பமும் இருக்கிறது. பார்லிமெண்டும் அவருடையதே. பார்லிமெண்டைக் கூட்டுவதுங் கலைப்பதும் அவர்தான். பார்லிமெண்டு இயற்றுகிற சட்டங்களை அங்கீகரிக்கவும் நிராகரிக்கவும், அவருக்குத்தான் அதி

காரமுண்டு. மந்திரிகளெல்லாம் அவருடைய மந்திரிகள். இராணுவமும் அவருடையதே. வரிகளெல்லாம் அவருக்காகத்தான் வசூலிக்கப்படுகின்றன. நீதிபதிகளையும் நிர்வாகஸ்தர்களையும் அவர்தான் நியமிக்கிறார். இத்தியாதி இத்தியாதி காரணங்களாலும் சின்னங்களாலும் பிரிட்டனில் முடியாட்சி நடப்பது பொய்யல்ல.

## முடியாட்சியுங் குடியாட்சியும் :

ஆனால் உண்மையில் மேலே கூறியுள்ள அத்தனை காரியங்களும் மன்னரால், அவர் சொந்தப் பொறுப்பிலுஞ் சுயேச்சையிலுஞ் செய்யப்படவில்லை. எல்லாவற்றையும் பிரிட்டிஷ் ஜனப்பிரதிநிதி சபையான பார்லிமெண்டும், அதன் ஜவாப்தாரித்துவ சபையான காபினெட் (மந்திரி சபை) டும் செய்கின்றன.

என்றாலும் பிரிட்டிஷ் மன்னர் வெறும் பொம்மையல்ல—மானுஷீகமான மரியாதை விக்ரகம். அதை பிரிட்டிஷாரெல்லாம் எழுந்தருள் தேவதையாய் வைத்துக்கொண்டு எல்லாக் காரியங்களையுந் தாங்களே பார்த்துக்கொள்ளுகிறார்கள். மன்னர், தமது பெயரையும் முத்திரையையும் கையொப்பத்தையும், மந்திரிகள் வேண்டும்போதெல்லாந் தாராளமாய் இரவல்-அல்ல தானம் கொடுத்து வருகிறார். அதைத் தவிர அவருக்கு அரசாங்கத்தில் வேலையில்லை. எல்லா வேலைகளையும் மந்திரிகளே, பார்லிமெண்டில் தங்களுக்கிருக்கிற பலத்தை அனுசரித்துத் தங்களிஷ்டம்போற் செய்கிறார்கள். ஆகையால் பிரிட்டனில் முடியாட்சியோடு கூடிய குடியாட்சி நடப்பது நிஜம்.

## குடியாட்சி :

மேலே கூறியுள்ள அதிகாரங்களோடு, அரசரை நீக்கவும் நியமிக்கவுமாகிற முடிவான அதிகாரங்கூடப் பார்லிமெண்

டுக்கு இருக்கிறது. ராஜாவுக்கு 'மனிதன் விதிக்கக்கூடிய மகா பெரிய தண்டனை'யைக்கூட, பார்லிமெண்டு பார்த்துச் செய்யலாம். இவைகளுக்கெல்லாம் உதாரணங்கள் இங்கிலாந்து தேசச் சரித்திரத்தில் ஏராளமாய் இருக்கின்றன. முதலாவது சார்லஸ் மன்னன் சிரமிழந்ததுமுதல் எட்டாவது எட்வர்ட் மன்னர் முடியிழந்ததுவரை இந்த அதிகாரந் தாராளமாய்த் துக்ககரத்தோடு உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகையால் பிரிட்டனில் நடப்பது சுத்தமான ஜனநாயக ஆட்சி யென்பதுங் கட்டுக்கதை யல்ல.

## வெள்ளை மண்டபத்தில் இந்தியா :

இவ்வளவு பெரிய அதிகாரம் பெற்றிருக்கும் பிரிட்டிஷ் பார்லிமெண்டுதான், நிஜமாய்ச் சொல்லப்போனால் பிரிட்டனை ஆளுகிறது. இந்தியாவை ஆளுவதும் உண்மையாகவே அது தான். இந்தியாவுக்காகச் சட்டங்களியற்றுவதும்,இந்தியாவின் அரசியல் தலைவிதியை அவ்வப்போது நிர்ணயிப்பதும் அது தான். 1772-ம் ஆண்டில் ஏற்பட்ட இந்தியா சம்பந்தமான முதலாவது ரெகுலேஷன் (ஒழுங்குமுறை) சட்டம் முதல், இந்த 1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டம் வரை எல்லாச் சட்டங்களும் பிரிட்டிஷ் பார்லிமெண்டின் ஏற்றுமதிச் சரக்குகள் தான். இந்தியாவுக்கு-அது விரும்புவதோ விரும்பாததோ-ஏதாவதொரு சீர்திருத்தம் அல்லது அரசியல் வேண்டுமானால், அதுவும் அங்கிருந்துதான் ஏற்றுமதியாகவேண்டும்.

இந்தியாவில் நடக்கும் எல்லாக் காரியங்களுக்கும் பொறுப்பாளியாய்ப் பார்லிமெண்டில் ஒருவரிருக்கிறார். அவருக்கு ஸெக்ரட்டரி-ஆப்-ஸ்டேட் பார் இந்தியா (இந்தியா மந்திரி) என்று பெயர். அவர்தான் வெள்ளை மண்டபத்தில் இந்தியாவை வைத்துக்கொண்டு வாஸ்தவத்தில் இந்தியாவை ஆளுகிறார்.

இந்தியா விஷயத்தில் இந்தியா மந்திரி ஒரு சர்வாதிகாரியா யிருக்கிறார். ஜனநாயகத்துக்கும் அவருக்குமிடையில் ஒரு பெரிய சாகரங் கிடக்கிறது. ஜனநாயகத்தின் நிழல்கூட வெள்ளை மண்டபத்துக்குள் புகக்கூடாதென்று அதன் தலைவாசலில் 'நோ அட்மிஷன்' போர்டு மாட்டியிருக்கிறது. பார்லிமெண்டில் இந்தியாவைப் பற்றிக் கேட்கப்படுங் கேள்விகளுக்குச் சமாதானமாகவோ சாதுர்யமாகவோ பதிற் சொல்லுவதைத் தவிர, மற்றப்படி அவர் தம் இஷ்டம் போலவே இந்தியாவை ஆளுகிறார். அதைப் பற்றிக் கூறுகிறபோது 'அவர் வாய்திறந்தால் எந்த நாயுங் குலைக்காது' என்று ஒருவர் சொன்னார். இந்தியா கவர்னர்-ஜெனரலோ, இந்தியா மந்திரியின் கட்டளைகளை இந்தியாவில் நிறைவேற்ற வேண்டிய கட்டியக்காரரா யிருக்கிறார். இது பற்றி அர்ஜில் கோமகனார் இந்தியா மந்திரியா யிருந்தபோது, அப்போது கவர்னர்-ஜெனரலாயிருந்த ஸர் ஜான் லாரன்ஸைப் பார்த்து, "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் முக்கியமான பிரச்னை இந்தியா சம்பந்தப்பட்டதாயிருப்பதால், அதைப் பற்றிய முடிவான தீர்மானமும் பிரிட்டிஷ் பார்லிமெண்டைப் பொறுத்ததாகவே யிருக்கவேண்டும்" என்று கூறினார்.

## கவர்னர்-ஜெனரல் நியமனம்:

1935-ம் வருஷச் சட்டம் 3-வது ஷரத்துப்படி, ஒரு கமிஷனால், * ராஜமுத்திரை (ராயல் ஸைன் மான்யுவல்) யுடன், கவர்னர்-ஜெனரல் நியமனஞ் செய்யப்படுவதாய்ச் சொல்லப்படுகிறது.

* கமிஷன் என்பது 1935-ம் வருஷச் சட்டத்தில் ஒரு கூட்டுச் சரக்கு. 1919-ம் வருஷச் சட்டத்தில் கவர்னர் - ஜெனரல், வெறும் ராஜ முத்திரையோடு மாத்திரம் நியமிக்கப்பட்டார்.

ஆனால் உண்மையில் பிரிட்டனுக்கு அந்த எண்ணமே யில்லை. அதனாலேதான் இராணுவத்தை ஒதுக்கப்பட்ட இலாகாவாக கவர்னர்-ஜெனரலின் சொந்த நிர்வாகத்தில் விட்டு வைத் திருக்கிறது. சமஷ்டி மந்திரிகள், சைன்யப் பிரச்னையில் தலையிட இடமே யில்லை.

## (2) கிறிஸ்தவக் கோயில்

ஒதுக்கப்பட்ட இலாகாவிற் சேர்க்கப்பட்டுள்ள இப் பகுதி, முழுதும் மத சம்பந்தமானது. மதம் வேறு, அர சியல்வேறு, அவை யிரண்டுக்குஞ் சம்மந்தமேயில்லை யென்று ஏற்கனவே இந்த உலகத்தில் நிர்த்தாரணமாகி யிருக்கிறது. மதம் மனிதனின் சொந்த விஷயம்; அரசியல் ஒரு தேசத் தின் பொது விஷயம்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தில் மதத்தையும் அரசியலையும் ஒன்றாய்ப் பிணைத்திருக்கிறார்கள். இந்திய அரசியலில் பிரிட் டிஷ்காரர்கள் மத விஷயத்தில் நடு நிலைமை வகிப்பதாகவே சொல்லிக்கொள்ளுகிறார்கள். இந்தியாவை பிரிட்டிஷ் முடி யாட்சியோடு இணைத்தபோது, விக்டோரியா மஹாராணி கொடுத்த சாஸனத்திலும் மத மத்தியஸ்தம் உத்தரவாத மளிக்கப்பட்டிருக்கிறது. ஐதீகம் அப்படி யிருந்தாலும், சட்டமும் அனுஷ்டானமும் வேறு விதமா யிருக்கின்றன. சட்டத்திலும் அனுஷ்டானத்திலும் மதச் சலுகை கையாளப் படுகிறது. இதற்கு ருஜூ இந்தியாச் சட்டம்; அதை அப் புறம் ஆராய்வோம்.

பிரிட்டிஷ்காரர்கள் கிழக்கிந்தியக் கம்பெனிக்காரர்களாய் இந்தியாவில் வந்திறங்கியபோது பாதிரி (மத போதகன் அல்லது தலைவன்) களையுங் கூடவே கூட்டி வந்தார்கள் என்று ஏற்கனவே கூறியிருக்கிறேன். அப்போது அவர்கள் வெறும்

வியாபாரிகளாய்த் தானிருந்தார்கள் ; இப்பொழுதோ இந்தியாவை யாளுகிறவர்களா யிருக்கிறார்கள். என்றாலும் பாதிரிகளுக்கும் வியாபாரத்துக்கும் அப்பொழுது என்ன வியாஜம் அல்லது பாந்தவ்யம் இருந்ததோ அதுதான் இப்பொழுதும் பாதிரிகளுக்கும் அரசியலுக்கு மிருந்து வருகிறது. அதைச் சட்டத்தின் ஷரத்துகளாகிற ஜன்னல் வழியாய்ப் பார்ப்போம்.

## ஷரத்து 11—(2):

இந்தப் பதினோராவது ஷரத்து இரண்டாவது பிரிவின்படி, ஒதுக்கப்பட்ட இலாகாக்களில், கிறிஸ்தவக் கோயில் சம்மந்தமான ஆலோசனைகள் கூறுவதற்காக, மூன்று கவுன்ஸிலர்களை நியமித்துக்கொள்ள கவர்னர்-ஜெனரல் அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறார்.

இதைப் பற்றிக் கூட இந்த நிமிஷம் எனக்குக் கவலையில்லை. அவர்கள் வீட்டில் அவர்கள் சொந்த விஷயத்தில் யாரையும், எத்தனை பேரையும் நியமித்துக் கொள்ளட்டுமென்று நாம் சும்மா இருந்து விடலாம். ஆனால் 33-வது ஷரத்து 3-வது பிரிவு 5-வது உட்பிரிவைப் பார்க்கிறபோது நமக்கு எப்படியோ வருகிறது.

## 42 லட்சமும் அதற்கு மேலும்:

அந்த உட்பிரிவு, வருஷா வருஷம் வரி செலுத்துவோரின் உட்பையிலிருந்து 42 லட்ச ரூபாய்களை யெடுத்துத் தன் தொப்பைக்குள் போட்டுக் கொள்ளுகிறது. அதற்கு மேல், பென்ஷன் வேறிருக்கிறது.

இவ்வாறு மதத்தின் பேரால்-அதுவும் மிக மிகச் சிறுபான்மையான கிறிஸ்தவ மதத்தின் பேரால், இவ்வளவு பணஞ்

செலவழிக்கப்படுவதை இந்தியா எப்படிச் சகிக்கும்? எப்படிக் கணக்குக் கேட்காம லிருக்கும்?

## சர்க்காரும் ஒதுக்கப்பட்டது தானு?

ஒதுக்கப்பட்ட இலாகாவிற் கிறிஸ்தவ மதஞ் சேர்க்கப்பட்டு, அதற்காக வருஷா வருஷம் வரிப்பணத்திலிருந்து 42 லட்ச ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால், இந்தியாவில் பிரிட்டிஷ் சர்க்காரே ஒரு ஒதுக்கப்பட்ட அரசாங்கந்தானு என்று எண்ண இடமிருக்கிறதல்லவா?

மதத்தை அரசாங்கத்தோடு பிணைக்கிறபோது, அதன் புனிதத்துவம் குறைகிறதோ கூடுகிறதோ, அதைப் பற்றியும் எனக்கு அக்கரை யில்லை. ஆனால் அரசாங்கத்தை மதத்தோடு பிணைக்கிறபோது, அரசாங்கத்தின் அடிப்படையான தத்துவம் அத்துவிடுகிறதென்று அபிப்பிராயப்படுகிறேன். ஏனெனில் அரசாங்கம்-இந்தியாவைப்போன்ற பல மதங்களைக் கொண்ட தேசத்திற்குக்கூட—ஒரு பொது ஸ்தாபனம். மெஜாரிட்டி மதத்துக்குங்கூட அப்பொது ஸ்தாபனத்தில் பங்கோ சலுகையோ இருக்கக்கூடாது. அதிகப் பங்கு அல்லது கொஞ்சப்பங்கு, விசேஷச் சலுகை அல்லது சாதாரணச் சலுகை என்னும் பதங்கள்கூட அப்பொது ஸ்தாபனத்தில் அர்த்த மற்றவை.

## மத மத்தியஸ்தம் ஒரு தப்புப் பெயர்:

இந்தியாவில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. இந்து மதம் எல்லாவற்றிலும் பெரிய மதம்—ஜனத்தொகையால். கிறிஸ்தவ மதம் ரொம்பச் சின்னமதம்—இதுவும் ஜனத்தொகையால்தான். புராட்டஸ்டண்ட் மதமோ இன்னுஞ் சின்னது. இங்கிலாந்துக் கோயிலையும், ஸ்காட்லாந்துக்

கோயிலையுங் கும்பிடுகிற மதமோ அதிலுஞ் சின்னது. அதற்கு இந்திய அரசாங்கஞ் சலுகை காட்டுவதும் அள்ளிக் கொடுப்பதும் சுயநலமாயிருந்தாலும், மத மத்தியஸ்தத்தைத் தப்புப் பெயர் (Misnomer) ஆக்கி விட்டிருக்கிறது.

## (3) வெளிநாட்டு சம்மந்தம் :

வெளிநாட்டு சம்பந்த மென்பது இங்கு அந்நிய நாட்டு சம்பந்த மென்பதோடு அர்த்தபேதமில்லாமல் உபயோகிக்கப் படுகிறது. ஆனால் அயல் நாட்டு சம்பந்தமென்றால் இந்தியா விஷயத்தில் இன்னும் பொருத்தமாயிருக்குமென்று நம்பு கிறேன்.

இந்தியாவுக்கு அந்நிய நாடுகள் எவை? இந்தியா வல்லாத உலகத்து நாடுகள் எல்லாம் அந்நிய நாடுகள்தானா? இக்கேள்விகளுக்கு இப்பொழுது பதில் சொல்லுவது எளி தல்ல. ஏனெனில் பிரிட்டனிருக்கிறது; பிரிட்டிஷ் குடி யேற்ற நாடுகளும், காலனிகளு மிருக்கின்றன; இதர தேசங் களு மிருக்கின்றன. இவைகளெல்லாம் பதார்த்தமாய்ப் பார்த்தால் இந்தியாவுக்கு அந்நிய நாடுக ளாகின்றன. இராஜ ரீகமாய்ப் பார்த்தால் பிரிட்டனைத்தவிர, இதர நாடுகளெல் லாம் அந்நிய நாடுகள் ஆகவேண்டும். சட்டப்படி பார்த்தால் பிரிட்டனும், அதன் குடியேற்ற நாடுகளும் காலனிகளுந் தவிர, இதர நாடுகள்தான் அந்நிய நாடுகள் ஆகின்றன. 'பாதுகாப்பு'களின்படி பார்த்தால் பிரிட்டனைக்கூட அந்நிய நாடு என்று சொல்லிவிடலாம் போலிருக்கிறது.

இவைக ளல்லாமல் இந்தியாவுக்குள்ளும் அந்நிய நாடு சம்பந்த மிருக்கிறது. இது எந்த ரகத்தைச் சேர்ந்தது? எந்த நிர்வாகத்தைச் சேர்ந்தது? உதாரணத்துக்காக பிரெஞ்சு இந்தியாவை யெடுத்துக்கொள்வோம். இந்தியாவி லிருக்கும்

பிரெஞ்சுப் பிரதேசங்கள் இந்தியாவைச் சேர்ந்தவைக ளல்லவென்று யாராலும் சொல்லமுடியாது. அரசியலாற் பிரிக்கப்பட் டிருந்தாலும், நிலத்தாலும் ஜன சமூகத்தாலும் அவைகளை இதர இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாது. அங் கிருக்கிற இந்தியர்கள் அந்த அரசாங்கத்தால் இப்பொழுது ஹிம்ஸிக்கப்பட்டு வருகிறார்கள். 10,000 பேர்களுக்கு மேல் பிரெஞ் சிந்தியாவை விட்டு, பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்து விட்டதாய்ச் சமாச்சாரம் எட்டுகிறது. சென்னை மாகாண சர்க்கார், அல்லது மத்திய இந்திய சர்க்கார், இதைப் பற்றி ஏதாவது நடவடிக்கை யெடுக்க முடியுமா? அல்லது பிரிட்டனிலிருக்கும் பிரிட்டிஷ் சர்க்கார்தான் எடுக்கவேண் டுமா? எதுவாயினுஞ்சரி வெளிநாட்டு சம்பந்தம் சட்ட சபைகளுக்கு ஜவாப்தாரிகளான மந்திரிகள் வசம் விடப் படாமல், ஒதுக்கப்பட்ட இலாகாக்களில் ஒன்றாயிருப்பது கூடாது.

## ஒரு மட்டைக்கு இரண்டு கீற்று:

ஒதுக்கப்பட்ட இலாகாவில், வெளி நாட்டு சம்பந்தம் ஒரு வேடிக்கையான பாகம். குடியேற்ற நாட்டுகளும், சிலோன் போன்ற காலனிகளுங் கூட இந்த வெளி நாடு சம்பந்தத்திற் சேர்க்கப் படவில்லை. அவைகள் பற்றிய விஷயங்களை, சமஷ்டி மந்திரிகளின் ஆலோசனைப்படி கவர்னர்-ஜெனரலே நிர்வகிக்க லாம். ஆனால் பிரிட்டன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஒதுக் கப்பட்ட இலாகாவிலேயே சேர்க்கப்படவில்லை. இது சொல் லப் போனால் ஒரு மட்டைக்கு இரண்டு கீற்று என்பதைப் போலிருக்கிறது.

## பிரிட்டன் சம்பந்தம்:

சமஷ்டி சர்க்காரில் பிரிட்டன் சம்பந்தம் இன்னது தான் என்று திட்டமாய்ச் சொல்ல முடியவில்லை. லண்டன் வெள்ளை

மண்டபத்தில், இந்தியாவின் முடிவான அதிகாரியாய் இந்தியா மந்திரி இருக்கிறார். அவர் 'வாய் திறந்தால் எந்தநாயுங் குலைக்க்கூடாது. தில்லி வைஸ்ராய் மாளிகையில், இந்தியாவின் 'காவல் நாயைப்போல்' கவர்னர்-ஜெனரல் இருக்கிறார். அவருக்கு ஹிட்லர் முஸோலினிக்குள்ள அதிகாரமிருக்கிறது. அப்புறம் ஒரு ஹை கமிஷனர். அவர் இந்தியாவில் பிரிட்டிஷ் நலன்கள் பாதிக்கப்படாமல் கண்ணில் திரிப்போட்டுக் கொண்டு பார்த்து வருவார். இவைகளோடு இராவணன் கோட்டையைப்போல் ஏராளமான பாதுகாப்புகள் வேறிருக்கின்றன. அதனாலேதான் பிரிட்டன் சம்பந்தம், ஒதுக்கப்பட்ட இலாகாவிலாவது, அந்நிய நாடு சம்பந்தத்திலாவது சேர்க்கப் படவில்லை. என்றாலும் பொறுப்பு வாய்ந்த மந்திரிகளிடமாவது விடப்பட்டிருக்கிறதா? ஏதோ பெயரளவிலும் ஏட்டளவிலும் சமஷ்டி மந்திரிகள், பிரிட்டன் சம்பந்தத்திலும், பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள் காலனிகள் சம்பந்தத்திலுந் தலையிடலாம் என்றிருக்கிறது. 'அப்பா' என்று சொல்லுவதால் உச்சி குளிர்ந்து விடுமா? அல்லது 'சர்க்கரை' என்று ஏட்டில் எழுதி நக்கினால் ருசிக்குமா? கவர்னர்-ஜெனரல் கையில், சொந்தத் தீர்ப்பும் விசேஷாதிகாரமும் இருக்கும் வரை, எதுவும் உருப்படாது.

## அசல் அந்நிய நாடு சம்பந்தம்:

பிரிட்டிஷ் சம்பந்தந்தான் இப்படி 'ஆட்டிலுஞ் சேராமல் குட்டியிலுஞ் சேராமல்' அநாமத்தா யிருக்கிறதானால், அசல் அந்நிய நாடுகள் சம்பந்தமாவது இந்தியாவுக்குச் சாதகமாய் இந்தியாவின் கையில் இருக்கப்படாதா? அறவே அது மந்திரிகள் பொறுப்பில் விடப்படவில்லை—ஒதுக்கப்பட்ட இலாகாவில், கவர்னர்-ஜெனரலின் எதேச்சாதிகாரத்தில் விடப்பட்டிருக்கிறது. ஆலோசனை சொல்ல அவர் தமக்குத் தாமா

கவே சில கவுன்ஸிலர்களை நியமித்துக் கொள்ளலாம். அந்தக் கவுன்ஸிலர்கள், ஜனப்பிரிதிநிதி சபைக்காவது, அதற்கு ஜவாப்தாரிகளான மந்திரிகளுக்காவது கட்டுப்பட்டவர்களோ, கீழ்ப்பட்டவர்களோ இல்லை. அவர்கள் சம்பளங்களும் அலுவல்களுங்கூட கவுன்ஸிலோடு கூடிய மன்னரின் உத்தரவுப்படி நிர்ணயிக்கப்படும் [ஷரத் 11.] கவர்னர்-ஜெனரலும் அந்நியநாட்டுக் கவுன்ஸிலர்கள்மீது அதிகாரஞ்செலுத்த முடியாது. சமஷ்டி நிதியிலிருந்து கொடுக்கப் பட்டாலும் அவர்கள் சம்பளச் செலவு சட்ட சபையின் ஓட்டுக்கு விடப் படவில்லை. ஷரத் 33-(3) (இ)

அவர்களும், கவர்னர்-ஜெனரலின் நிதி நிர்வாக ஆலோசனை கர்த்தாவும் இந்தியர்களல்லாதவர்களாகவே யிருக்க வேண்டும். [ஷரத் 15]

ஆகையால் அந்நிய நாடு சம்பந்தத்தில் இந்திய மந்திரிகளுக்குச் சிந்திச்சிதறிய சிறிது அதிகாரத் தூள்கூடக் கொடுக்கப்படவில்லை. 'அந்நிய நாடுகளோடு உடன்படிக்கைகள் செய்வது, ஒப்பந்தங்கள் முடிப்பது முதல், இந்தியாவுக்கு வெளியே மன்னரின் குடியேற்ற நாடுகளில் குற்றவாளிகளும் கைதிகளும் சரணடைகிறவரை' எதிலும் இந்திய மந்திரிகள் கைவைக்க முடியாது [ஷெட்யூல் 7, லிஸ்ட் 1, பிரிவு 3]

## வேஷங் கலைக்கப்படுகிறது :

இவ்வாறு அந்நிய நாடு சம்பந்தம் அறவே மந்திரிகளிடமிருந்து ஒதுக்கப்பட்டிருப்பதானது, மந்திரிகளை வெறும் பொம்மைக ளாக்குவதுடன், கவர்னர்-ஜெனரலால் இஷ்டப்படி எடுத்தாடப்படுஞ் சதுரங்கக் காய்களாகவும் ஆக்குகிறது. மேலும் புதிய அரசியலின் உண்மை உத்தேஸ்யத்தையும் உணர்த்துகிறது. இந்தியாவை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மூக்கணாங்கயிறு போட்டுக் குரங்காட்டம் ஆட்டு

கிறதென்பதையும் புலப்படுத்துகிறது. பிரிட்டிஷ் ஆதிக்கம் இவ்வளவு பிடிவாதமாய் இங்குப் பிடித்து நிறுத்தப்படுவது, இந்தியாவின்மூலம், உலகத்தில் தனக்கொரு நிரந்தரமான சந்தையை நிலைநாட்ட பி|ரி|ட்டன் விரும்புவதன்றி வேறில்லை. இந்த இடத்திலேதான் பிரிட்டானியாவின் வேஷம் வெகு தெளிவாய்க் கலைக்கப்படுகிறது.

## (4) ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் :

இந்தியா முழுதிலும் ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் என்று ஒன்று இருப்பது அநேகருக்குத் தெரியாது. ஏனெனில் அவைகள் இந்தியாவின் எந்தக் கோடியிலும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் அரசியலில் மாத்திரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்துக்குச் சென்னை மாகாணத்திலுள்ள லட்சத் தீவுகள், மினிகாய்த் தீவுகள், கஞ்சம், விசாகபட்டணம் கோதாவரி ஜில்லாக்களிலுள்ள ஏஜென்ஸி பிரதேசங்கள், பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தில் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களாய்க் கருதப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு இந்தியாவெங்கும் 2,79,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சுமார் 130 லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்களுடைய தலை விதியை யெல்லாங் கவர்னர்-ஜெனரல் தனது கையில் வைத்துக்கொண்டிருக்கிறார். அகில இந்தியாவின் தலை விதியே அவர் நுனி விரலிலிருக்கும்போது, இந்த ஒதுக்கப்பட்ட பிரதேசங்களின் தலை விதிதானா பெரிதாகிவிட்டது? ஒதுக்கப்பட்ட பிரதேசங்களாய் இந்தியாவின் பிரிக்கப்படாத ஒரு பகுதியை, அரசியல் வசதிக்காகவேனும் அந்நியர் பிரித்தாலும் நம்மால் பிரிக்க முடியாது. ஆகையால் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களின் தலை விதி யென்பது, இந்தியாவின் தலை விதியைத் தவிர வேறில்லை.

# எதேச்சாதிகாரங்கள்

கவர்னர்-ஜெனரலுக்குச் சட்டப்படி ஐந்து விதமான அதிகாரங்க ளிருக்கின்றனவென்றும், அவற்றில் ஒதுக்கப் பட்ட இலாகாக்களில் இருப்பது விசேஷப் பொறுப்புகளோடு கூடிய ஒரு விதமான அதிகாரமென்றும் ஏற்கனவே கொஞ் சம் முன்னுற் கூறியிருக்கிறேன். இனி அவரின் எதேச் சாதிகாரங்களைப்பற்றி சற்றுப் பார்ப்போம்:

எதேச்சாதிகாரம் என்பது யுக்தானுசாரமாய் அல்லது இஷ்டப்படி ஒருவர் செய்யும் அதிகாரம். இதை யெவ்வளவு தூரம் எங்கெந்த விஷயங்களில் கவர்னர்-ஜெனரல் பிரயோ கிக்கலாம் என்பதைப் பார்த்துவிட்டால், சமஷ்டி சர்க்காரில் ஜனநாயகம் மறைக்காவது ஒதுங்குவதற்கு இடமிருக்கிறதா என்பது தானே தோன்றிவிடும்.

## எதேச்சாதிகார ஜாபிதா.

1. மந்திரி சபைக் கூட்டங்களில் தலைமை வகிப்பது—ஷரத். 9 (1)

2. ஒரு குறிப்பிட்ட விஷயம், கவர்னர்-ஜெனரலின் எதேச்சாதிகாரம் அல்லது சொந்தத் தீர்ப்பின்படி செய்யப் பட வேண்டியதா அல்லது மந்திரிகளின் இஷ்டப்படி செய் யப்படவேண்டியதா என்பதை நிர்ணயிப்பது—ஷரத். 9 (2)

3. மந்திரிகளை நியமிப்பது, அழைப்பது, நீக்குவது—ஷரத். 10 (3)

4. சட்டசபை சட்டமியற்றி அதன் மூலம் மந்திரி களின் சம்பளம் நிச்சயிக்கப்படுகிறவரை கவர்னர்-ஜெனரல் தாமாகவே ஒரு சம்பளத்தை நிர்ணயிப்பது—ஷரத். 10 (3)

5. இராணுவம், கிறிஸ்தவக்கோயில், அந்நியநாடு சம்பந்தம், ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள் இவைகள்மீது கவர்னர்-ஜெனரல் தனியாட்சி செலுத்துவது—ஷரத். 11 (1)

6. நிதி சம்பந்தமாய் ஆலோசனை சொல்லுவதற்கு ஒருவரை நியமிப்பது, நீக்குவது, சம்பள-படித்தரங்கள் நிர்ணயிப்பது முதலியவைகளோடு, அவர்தம் காரியாலயக் காரியஸ்தர்கள் தொகையை வரையறுப்பதும் வேலைகளை நிர்ணயிப்பதும் (இதில் முதல் நியமனம் முடிந்தபின், இதர நியமனங்களில் கவர்னர்-ஜெனரல் தமது மந்திரிகளைக் கலந்தாலோசிக்கவேண்டும்)—ஷரத். 15 (4)

7. சர்க்கார் உத்தரவுகளையும் பத்திரங்களையும் பிரமாணமூலம் உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய விதிகள் செய்வது—ஷரத். 17 (2)

8. சர்க்கார் வேலைகள் சுலபமாய் நடப்பதற்காகவும், மந்திரிகளிடம் வேலைகளைப் பகிர்ந்து கொடுப்பதற்காகவும், கவர்னர்-ஜெனரலுக்கு அவைகளை யெப்பொழுதுந் தெரிந்திருக்கும்படி செய்வதற்காகவும் வேண்டிய விதிகள் செய்வது—ஷரத். 17 (3. 4)

9. சமஷ்டி சட்டசபைகளைக் கூட்டுவதும் முடிப்பதும், 'கீழ்சபை'யைக் கலைப்பதும்—ஷரத். 19 (2)

10. சட்டசபையிற் போய்ப் பேசுவது—ஷரத் 20 (1)

11. முடிவுபெறாத மசோதாக்களைப் பற்றிச் சட்டசபைக்குச் சமாச்சாரம் அனுப்புவது—ஷரத். 20 (2)

12. பிரஸிடெண்டும், டெபுடி பிரஸிடெண்டும் ஆஜரில்லாதபோது 'மேல்சபை'க்கு ஒரு ஆக்டிங் சேர்மனை நியமிப்பது—ஷரத். 22 (3)

**13.** தீவாந்தர சிக்ஷை, சிறைவாசம் முதலிய காரணங்களைக் கொண்டு ஒருவர் சட்டசபைக்கு அபேக்ஷகராய் நிற்க முடியாமையை நீக்குவதற்குக் கால நிர்ணயஞ் செய்வதும், தேர்தற் செலவு ஜாபிதா சமர்ப்பிக்கத் தவறிய காரணத்துக்காக ஒருவர், சட்டசபை அங்கத்தினராக முடியாமையை நீக்குவதும்—ஷரத். 26 (1-உ, ஊ)

**14.** மேல்சபை, கீழ்சபை இரண்டையுஞ் சேர்த்து ஒரே இடத்தில் ஒரே சமயத்திற்கூடச் செய்வது—ஷரத். 31 (1,2)

**15.** சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களுக்கு அங்கீகாரம் அளிப்பது, மறுப்பது, மன்னரின் சம்மதத்துக்காக நிறுத்திவைப்பது, மறுபடியும் மசோதாவை விவாதித்துப் புனராலோசனை புரியும்படியோ திருத்தும்படியோ சிபாரிஷ் செய்வது—ஷரத். 32 (1)

**16.** எந்தச் செலவினமுஞ் சமஷ்டி வருமானத்திலிருந்து செலவிடக் கூடியதா அல்லவா என்று தீர்மானிப்பது—ஷரத். 33 (4)

**17.** சமஷ்டி சட்டசபைகளான மேல்சபை, கீழ்சபை இரண்டிலுங் கீழ்க்கண்ட காரியங்கள் நடைபெறுவதற்கான விதிகள் செய்வது—ஷரத். 38 (1):—

(i) கவர்னர்-ஜெனரலின் எதேச்சாதிகாரம், சொந்தத் தீர்ப்பு சம்பந்தமான விஷயங்கள்.

(ii) காலாகாலத்தில் நிதி சம்பந்தமான வரவு-செலவு பூர்த்தி செய்யப்படுவது.

(iii) இந்தியச் சமஸ்தானங்கள் சம்பந்தமான விவாதங்களையுங் கேள்விகளையும் தடை செய்வது.

(iv) அந்நிய நாடு அல்லது அதன் அரசர் சம்பந்தமான விவாதம் அல்லது கேள்விகளைத் தடுப்பது.

(v) ஒதுக்கப்பட்ட பிரதேசங்களைப் பற்றிய விவாதம் அல்லது கேள்விகளைத் தடுப்பது.

(vi) மாகாண சம்பந்தமாய் கவர்னர்-ஜெனரலுக்குள்ள எதேச்சாதிகாரங்களைப் பற்றியும், எந்தவொரு சுதேச மன்னரின் தனிப்பட்ட அல்லது குடும்ப சம்பந்தமான விஷயங்களைப்பற்றியும் விவாதம் அல்லது கேள்விகள் வராமல் தடுப்பது.

அல்லது மேலேகூறியுள்ள எல்லா விஷயங்களிலும் தமது அதிகாரம் அல்லது உரிமையை விட்டுக் கொடுப்பது.

**18.** சட்டசபைகளின் கலப்புக் கூட்ட நடவடிக்கைகளுக்கு விதிகள் சமைப்பது—ஷரத் 38 (2, 3)

**19.** அங்கீகரிக்கப்பட்ட ஒரு மசோதா அல்லது திருத்தத்தைப் பற்றிய விவாதம், தமது விசேஷப் பொறுப்புகளைப் பாதிக்குமென்று கவர்னர்-ஜெனரல் கருதினுல், அவற்றை மேல்நடக்கவிடாமல் தடுப்பது—ஷரத். 40 (2)

**20.** நெருக்கடியான சந்தர்ப்பங்களில் கவர்னர்-ஜெனரல் தமது எதேச்சாதிகாரத்தின்படியோ சொந்தத் தீர்ப்பின்படியோ அரசியலை நடத்துவதற்காக அவசரச் சட்டங்கள் பிறப்பிப்பது—ஷரத். 43

**21.** நெருக்கடியான சந்தர்ப்பங்களில் மேலேகூறியுள்ள இரண்டு அதிகாரங்களின்படி அமல் செய்வது அரிது என்று தோன்றினுல், "கவர்னர்-ஜெனரல்-சட்டங்கள்" என்று சொல்லப்படும் சட்டங்கள் இயற்றுவது—ஷரத். 44

**22.** நெருக்கடி இன்னும் அதிகமாய் மிஞ்சிவிட்டால், எல்லாக் காரியங்களையுந் தன் சோந்தப் போறுப்பில் தன்

இஷ்டப்படியே செய்வதாய் கவர்னர்—ஜெனரல் அறிவித்து விட்டு, அதற்கு முரணுகச் சட்டத்திலிருக்கிற எல்லா ஷரத்து களையும் அமுலி லில்லாதபடி ரத்துச் செய்து விடுவது— ஷரத். 45

**23.** மாகாண கவர்னர்கள் எதேச்சாதிகாரமாகவோ சொந்தத் தீர்ப்புப்படியோ அமல் நடத்தும்பொழுது அவர்களைக் கண்காணிப்பதும், இன்னவிதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று அடிக்கடி அவர்களுக்கு வழி காண்பிப்பதும்—ஷரத். 54 (1)

**24.** கவர்னர்—ஜெனரல் சம்மதத்துக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மாகாண மசோதாக்களுக்கு அங்கீகார மளிப்பது, மறுப்பது, மன்னர் சம்மதத்துக்காக நிறுத்தி வைப்பது அல்லது மசோதாவைப் புனராலோசனை செய்யும் படியோ திருத்தும்படியோ மாகாண சபைக்குத் திருப்பி யனுப்புவது—ஷரத். 76 (1)

**25.** மாகாண கவர்னர்களுக்கு அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கும்படி உத்தரவு பிறப்பிப்பது—ஷரத். 88 (1-ஆ)

**26.** கவர்னர்களின் எதேச்சாதிகாரம் சொந்தத் தீர்ப்பு சம்பந்தமான சில விஷயங்களில், அவசரச் சட்டங்கள் பிறப் பிக்கச் சம்மதிப்பதும் அவர்கள் சம்மதமில்லாமலே அவற்றை வாபீஸ் வாங்குவதும்—ஷரத். 89 (5)

**27.** "கவர்னர்—சட்டங்கள்" பிறப்பிக்கச் சம்மதிப்பது—ஷரத் 90 (5)

**28.** ஒதுக்கப்பட்ட பிரதேசங்களைப்பற்றி ஒழுங்கு முறைகள் உண்டுபண்ணுவதற்கு கவர்னர்களோடு இணங்குவது—ஷரத் 92 (2)

29. சட்டத்திலுள்ள ஷரத்துகளை ரத்துச் செய்து மாகாணங்களில் அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கச் சம்மதிப்பது—ஷரத் 93 (5)

30. சீப்-கமிஷனர்களை நியமிப்பது—ஷரத். 94 (3)

31. பிரிட்டிஷ் பலுச்சிஸ்தான நிர்வாகத்தைக் கண்காணிப்பதும், நடத்துவதும், சமஷ்டி சட்ட சபைச் சட்டங்கள் பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானத்திலும் பிரயோகமாகும்படி பார்த்துக்கொள்வதும், அதற்கு வேண்டிய விலக்கு விதிகள், திருத்தங்கள் செய்வதும், பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானத்தில் நல்லரசாட்சியை நிலை நாட்டிச் சமாதானமும் அமைதியு மேற்படுவதற்கான ஒழுங்கு முறைகளைச் செய்வதும்—ஷரத். 95 (1, 2, 3)

32. அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் நல்லரசாட்சியையும் சமாதானத்தையும் உண்டுபண்ண ஒழுங்கு முறைகள் செய்வது—ஷரத். 96.

33. சர்க்காரைக் கவிழ்த்துவதற்காகக் கையாளப்படும் பலாத்காரக் குற்றங்களைத் தடுப்பதற்காகப் போலீஸ் சட்டங்களில் சில விதிகள் ஏற்படுத்துவது—ஷரத் 98.

34. எந்த மாகாணத்திலாவது நெருக்கடி, ஏற்பட்டால் அதற்காக சமஷ்டி சட்டசபை அவசரமாய்ச் சட்டங்கள் இயற்ற வேண்டுமென்று அறிவிப்பதும், அத்தகைய மசோதாக்களுக்கு முன் அனுமதி அளிப்பதும்--ஷரத் 102.

35. சமஷ்டி சட்டசபைக்கோ, மாகாண சட்டசபைக்கோ அதன் ஜாபிதாவில் இல்லாத விஷயங்களிற் சட்டமியற்ற அதிகாரமளிப்பதும், அந்தச் சட்டங்களில் சமஷ்டி அல்லது மாகாண நிர்வாகிகள் தலையிடக் கூடாதென்று உத்தரவு பிறப்பிப்பதும்—ஷரத். 104 (1)

**36.** கவர்னர்-ஜெனரல் அங்கீகாரமும் மன்னர் சம்மதமும் பெற்று, மாகாணத்திலிருக்கிற எந்தச் சட்டத்துக்கும், விரோதமா யிருக்கிற விதிகளுக்கு மசோதாக்கள் அல்லது திருத்தங்கள் கொண்டுவர முன் அனுமதி கொடுப்பது—ஷரத். 107 (2)

**37.** சமஷ்டி சட்டசபையில் 7 விதமான மசோதாக்களுக்கும் மாகாண சட்டசபையில் 4 விதமான மசோதாக்களுக்கும் முன் அனுமதியளிப்பது ஷரத் 108 (1, 2)

**38.** இந்தியாவின் அமைதிக்குஞ் சமாதானத்துக்கும் ஆபத்து வராமல் தடுப்பதற்காகவோ அல்லது பலாத்காரக் குற்றங்களை யெதிர்ப்பதற்காகவோ 111-வது ஷரத்து 1-வது பிரிவு ரத்து செய்யப்பட வேண்டியது அவசியமென்று அங்கீகரிப்பது—ஷரத். 111 (3)

**39.** எந்த உத்தியோகஸ்தரின் லாயக்கு அல்லது லாயக்கின்மையைப்பற்றிய மசோதாக்களுக்கு முன் அனுமதியளிப்பது—ஷரத் 119 (1, 2)

**40.** சில காரியங்களைத் தனது ஏஜெண்டாயிருந்து பார்க்கும்படி கவர்னர்களுக்குக் கட்டளையிடுவது—ஷரத். 123

**41.** சமஸ்தானங்களிற் பிரயோகிக்கக் கூடிய எந்தச் சமஷ்டிச் சட்டத்தையும் சமஷ்டிப்பட்ட சமஸ்தானங்களில் அமலுக்குக் கொண்டுவருவதற்காக அவற்றின் அரசர்களோடு ஒப்பந்தங்கள் செய்வது—ஷரத். 125 (2)

**42.** அத்தகைய சட்டங்கள் அங்குச் சரிவர நடக்கின்றனவா என்று பரிசோதிப்பதும் அது சம்பந்தமாய் அரசர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிப்பதும்—ஷரத். 125 (1)

**43.** நிர்வாக அதிகாரம் இன்ன விதமாய் நடத்தப்பட வேண்டுமென்று கவர்னர்களுக்கு உத்தரவுகள் பிறப்பிப்பதும் வழிகாட்டுவதும்—ஷரத். 126 (4)

**44.** கவர்னர்-ஜெனரலுக்கு அறிவிக்கப்பட்ட சில விஷயங்களை அவர் ஆலோசனை செய்து, சமஷ்டிப்பட்ட சமஸ்தானங்கள் ஒப்பந்தத்தை நிறைவேற்றுகிற விஷயமாய் இன்னின்ன விதமாய் நடந்துகொள்ளவேண்டு மென்று உத்தரவு பிறப்பிப்பது—ஷரத் 128 (2).

**45.** எந்த வொரு மாகாண கவர்னர் அல்லது சமஸ்தான அரசர்மீது, சட்டபூர்வமாய்ச் சுமத்தப் பட்டுள்ள எந்த வொரு நிபந்தனையையும் பகிரங்கப் படுத்துவது சம்பந்தமான தகராறு ஏற்பட்டாலும் அதை நிறை வேற்றுவது, அகாரணமானது என்று மறுத்தாலும் அவற்றிற்குத் தீர்ப்புக் கூறுவது—ஷரத். 129 (5)

**46.** மாகாணத்துக்கு மாகாணம் அல்லது மாகாணத்துக்கும் சமஸ்தானத்துக்கும் நீர்ப்பாசனம் அல்லது தண்ணீர்ப் பாய்ச்சல் சம்பந்தமான தகராறு ஏற்பட்டால் அதைத் தீர்த்து வைப்பது—ஷரத். 131.

**47.** சீப்-கமிஷனர் மாகாணங்கள் சம்பந்தமாய் நீர்ப்பாசனத் தகராறு ஏற்பட்டால் தீர்த்து வைப்பது—ஷரத் 132.

**48.** குறிப்பிடப்பட்ட இரண்டாவது கால வரையறையில் மகாணங்களுக்கு வருமான வரி வாபஸ் செய்யப் படுவதை நிதானப் படுத்துவது—ஷரத் 138. (2-ஆ).

**49.** (i) மாகாண சம்பந்தமான வரி அல்லது தீர்வைகள் விதிப்பது, கூட்டுவது, குறைப்பது. (ii) இந்திய வருமான வரிக்காக "விவசாய வருமானம்" என்பதன் அர்த்தத்தை மாற்றுவது திருத்துவது. (iii) மாகாணங்கள் அல்லது சமஷ்

டிப்பட்ட சமஸ்தானங்களின் பணப்பரிவர்த்தனைக் கொள்கை சம்பந்தமான விஷயங்கள். (iv) சமஷ்டிக்காக உபரிவரி விதிப்பது. இவைகளைப் பற்றிய மசோதா அல்லது திருத்தங்களுக்கு முன் அனுமதி யளிப்பது—ஷரத். 141.

**50.** ரிஸர் பாங்க் கவர்னர், டெபுடி கவர்னர்களை நியமிப்பது, நீக்குவது, சம்பள படித்தர-அனுமதி தருவது, உத்தியோக கால நிர்ணயஞ் செய்வது—ஷரத். 152. (1)

(i) ஆக்டிங் கவர்னர் அல்லது ஆக்டிங் டெபுடி கவர்னர்களை நியமிப்பது.—ஷரத் 152. (2)

(ii) மத்திய போர்டைக் கலைப்பது.—ஷரத் 152. (3)

(iii) பாங்கையே மூடுவது.—ஷரத். 152. (4)

**51.** ரிஸர் பாங்கின் வேலை, நிர்வாகம், உலோக நாணயம், காகித நாணயம் முதலியவை சம்பந்தமான மசோதா வகைராக்களுக்கு முன் அனுமதி கொடுப்பது—ஷரத். 153.

**52.** மாகாணங்கள் கடன் வாங்குவது அல்லது அது சம்பந்தமாய் ஏதேனும் நிபந்தனை விதிப்பதற்கு, சமஷ்டி சம்மதிக்க மறுத்து, அதனால் தகராறு ஏற்பட்டால், அதைத் தீர்த்து வைப்பது.—ஷரத். 173. (4)

**53.** சமஷ்டிக் கணக்கு, மாகாணக் கணக்கு சம்பந்தமாய்ப் பிரதம கணக்குப் பரிசோதக (ஆடிட்டர்-ஜெனரல்) ருக்குள்ள அதிகாரங்கள் அலுவல்கள் பற்றிய மசோதாக்களுக்கு முன் அனுமதி யளிப்பது—ஷரத். 166. (3)

**54.** லண்டனிலுள்ள இந்தியக் கணக்குகளைப் பரிசோதிக்கிறவர் (ஆடிட்டர்-ஆப்-இந்தியன் ஹோம்-அக்கவுண்ட்ஸ்) அதிகாரங்கள் அலுவல்கள் சம்பந்தமான மசோதாக்களுக்கு முன் அனுமதி யளிப்பது.— ஷரத். 170.

**55.** சர்க்கார் காரியங்களுக்காக உபயோகப்படுத்தப் பட்ட கட்டிடம் அல்லது நிலத்தை விற்கச் சம்மதிப்பது—ஷரத். 175. (1)

**56.** ரயில்வே அதிகாரிகளில் ஏழில் மூன்று பங்கு அங்கத்தினர்களேயும், பிரஸிடெண்டையும் நியமிப்பது. ஷரத்—182. (1)

**57.** ரயில்வே நிர்வாக அதிகாரிகளின் நியமனம், யோக்கியாம்ஸம், அனுபவ நிபந்தனைகள் சம்பந்தமான மசோதாக்களுக்கு முன் அனுமதி யளிப்பது—ஷரத் 182. (2)

**58.** ரயில்வே பாலிஸி (கொள்கை) சம்பந்தமான பிரச்னைகளில் தகராறு ஏற்பட்டால் தீர்த்துவைப்பது—ஷரத். 183. (2)

**59.** ரயில்வே நிர்வாக சம்பந்தமான பொது அதிகாரம் ஷரத்.—183. (4)

**60.** இந்திய (வரி) வருமானத்திலிருந்து, இந்திய ரயில்வேக்களுக்கு, மான்யமாய்க் கொடுக்கப்படுந் தொகையை நிர்ணயிப்பது ஷரத்—187. (1)

**61.** ரயில்வே-போலீஸ் செலவு சம்பந்தமாய் ஏதேனுமொரு மாகாணம் அல்லது சமஸ்தானத்துக்கும் ரயில்வே நிர்வாகிகளுக்குந் தகராறு ஏற்பட்டால் தீர்த்துவைப்பது.—ஷரத். 187. (3)

**62.** ரயில்வே நிதியில் விழுகிற துண்டுகளுக்கு—அது சம்பந்தமான ஒப்பந்தம் எதுவுமில்லாதிருந்தால்—வட்டி விகிதத்தை நிர்ணயிப்பது—ஷரத். 189. (1)

**63.** புதிய ரயில்வே லயன்கள் அமைப்பது அல்லது பழைய லயன்களைப் புதிப்பிப்பதுபோன்ற ஏதேனுமொரு தீர்மானத்தைப்பற்றி ரயில்வே அதிகாரிகளுக்குஞ் சமஷ்டிப்

பட்ட சமஸ்தானத்துக்கும் அறிவிக்கவேண்டிய அவசியமேற்பட்டால் அதற்கான விதிகள் அமைப்பது—ஷரத். 195. (1)

**64.** அதில் கட்சிப் பிரதிகட்சி யேற்பட்டால் இந்த 195-வது ஷரத்தையே ரத்துச் செய்வது—ஷரத். 195 (2)

**65.** ரயில்வே-நியாய சபை (Tribunal) அமைப்பது. சமஷ்டி நியாய சபையிலுள்ள ஜட்ஜ்களில் யாரையாவது ரயில்வே நியாயசபைப் பிரசிடெண்டாய் நியமிப்பது—ஷரத். 196 (1. 2)

**66.** ரயில்வே-நியாய சபை சம்பந்தமான அனுஷ்டானம், நடைமுறை, ஸ்டாம்ப் நிர்ணயம் முதலியவைகளைப் பற்றி, ரயில்வே-நியாயசபைப் பிரசிடெண்ட் செய்யும் விதிகளை அங்கீகரிப்பது—ஷரத். 196. (6)

**67.** ரயில்வே-நியாய சபை அங்கத்தினர்களுக்குச் சம்பளம் அல்லது சன்மானம் நிர்ணயித்தல் —ஷரத்— 196 (8)

**68.** இந்திய ரயில்வேக் கம்பெனி டைரெக்டர்களையும், டெபுடி டைரெக்டர்களையும் நியமிப்பது—ஷரத். 199.

**69.** பெடரல் கோர்ட்டு மேல் விசாரணை அதிகார (அப்பீல்) விஸ்தரிப்பு சம்பந்தமான மசோதா அல்லது திருத்தங்களுக்கு முன் அனுமதியளிப்பது—ஷரத். 206. (3)

**70.** சட்ட சம்பந்தமான (லா பாயிண்ட்) பிரச்னை அல்லது தகராறு ஏற்பட்டால் அதை சமஷ்டிக் கோர்ட்டின் அபிப்பிராயத்துக்கு விடுவது—ஷரத். 213 (1)

**71.** ஹைக்கோர்ட்டுகளுக்கு உபரி ஜட்ஜ்களையும், தற்காலிக ஜட்ஜ்களையும், ஆக்டிங் பிரதம நீதிபதியையும் நியமிப்பதும் நீக்குவதும்—ஷரத். 222 (1-3)

**72.** ரெவின்யூ சம்பந்தத்திற் சமஷ்டி சட்டசபைக்கு அதிகாரமளிப்பது சம்பந்தமான மசோதா அல்லது திருத்தங்களுக்கு முன் அனுமதி யளிப்பது—ஷரத். 226 (2)

**73.** சமஷ்டி உத்தியோக நியமனக் கமிஷனைக் கலந்து எந்தக் கோர்ட்டிலுஞ் சம்பந்தப்படாத ஆட்களை, எந்தக் கோர்ட்டு உத்தியோகங்களிலும் நியமிப்பது—ஷரத் 242 (4-அ)

**74.** 244-வது ஷரத்தின் நடைமுறையை இந்தியா மந்திரிக்கு அறிவித்து, அதன் அமலைக் கொஞ்சங் குறைத்துத் திருத்தும்படி சிபாரிஷ் செய்வது—ஷரத். 244 (4)

**75.** லண்டனிலிருக்கிற இந்தியா சம்பந்தமான கணக்குப் பரிசோதகரின் காரியாலய சிப்பந்திகளின் தொகை, சம்பளம், யோக்கியாம்ஸம் முதலியவைகளை அங்கீகரிப்பது—ஷரத். 251 (அ-ஆ)

**76.** சமஷ்டி உத்தியோக நியமனக் கமிஷன் சேர்மனையும் மெம்பர்களையும் நியமிப்பது—ஷரத். 265 (1)

**77.** சமஷ்டி உத்தியோக நியமனக் கமிஷன் மெம்பர்களின் தொகையையும், உத்தியோக காலத்தையும், அலுவல்களையும் நிர்ணயிப்பது; அவர்களின் சிப்பந்திகள், சிப்பந்திகளின் அலுவல்கள் சம்பந்தமான விதிகள் சமைப்பது—ஷரத். 265 (2)

**78.** சமஷ்டி உத்தியோக நியமனக் கமிஷன் மெம்பர்களை, இதர சர்க்கார் உத்தியோகங்களில் நியமிப்பதற்கு முன் அங்கிகார மளிப்பது—ஷரத். 265 (3. இ)

**79.** சமஷ்டி சம்பந்தமான உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் உத்தியோக நியமனக் கமிஷனைக் கலந்தாலோ

சிப்பது சம்பந்தமான ஒழுங்கு முறைகள் செய்வது—ஷரத். 266 (3)

**80.** உத்தியோக நியமனக் கமிஷன் அதிகாரத்தை அதிகப்படுத்தும்படியான மசோதா அல்லது திருத்தத்துக்கு முன் அனுமதி யளிப்பது—ஷரத். 267 (அ)

**81.** சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், உத்தியோக தோரணையிற் செய்த காரியங்களுக்காக ஸிவில் அல்லது கிரிமினல் வழக்கு நடத்தச் சம்மதிப்பது—270 (1)

**82.** கிரிமினல் பிரொஸீஜர் கோடு 197-வது ஷரத்துப்படி அல்லது ஸிவில் பிரொஸீஜர் கோடு 80, 82-வது ஷரத்துகளின்படி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்புகளைப் பாதிக்கும்படியான மசோதா அல்லது திருத்தங்களுக்கு முன் அனுமதி யளிப்பது—ஷரத். 271 (1)

**83.** சமஸ்தான சம்பந்தமாய் மன்னர் சைனியங்களை உபயோகிப்பது—ஷரத். 286 (1)

**84.** நிலவுரிமைகள் சம்பந்தமாய்த் தற்காலச் சொந்தக்காரர்களின் உரிமைகளை ரத்துச் செய்து, சர்க்காருக்குச் சொந்தமாக்குவது பற்றிய மசோதா அல்லது திருத்தத்துக்கு முன் அனுமதி யளிப்பது—ஷரத். 299 (3)

**85.** கவர்னர் - ஜெனரல் அல்லது கவர்னர்களின் காரியாலய சிப்பந்திகள் நியமனம், சம்பளம், அலவன்ஸ், இடவசதி முதலியன செய்வது—ஷரத். 305

**86.** 1935-ம் வருஷச் சட்டத்திற் சில ஷரத்துக்களைத் திருத்தவேண்டுமென்று சட்ட சபைகள் சிபாரிஷ் செய்தால், அதனால் மைனாரிட்டிகளின் உரிமைகள் எவ்வாறு பாதிக்கப்படுமென்பதை இந்தியா மந்திரிக்கு அறிவிப்பது—ஷரத். 308

மேலே கூறியுள்ள 86 இனங்களிலும் சட்டப்படி கவர்னர்-ஜெனரல் தமது எதேச்சாதிகாரத்தை உபயோகிக்கலாம். அதற்காதாரமான ஷரத்துகளும், பிரிவுகளும் இந்த ஜாபிதாவில் அந்தந்த இனத்துக்கு நேரே வாக்கியங்களின் கடைசியிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்த இனங்களைத் தனித் தனியே ஆராய்வது எளிதல்ல; இடமும் போதாது. ஒரு மொத்தமாய்ச் சில அபிப்பிராயங்களைச் சொல்லிவிட்டு மேலே செல்லுகிறேன்.

இவைகளெல்லாம் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அல்லது பிரிட்டிஷ் நலன்களின் பாதுகாப்புக் கோட்டைகளாயிருக்கலாம். ஆனால் இந்தியர்களின் எண்ணத்துக்கும் ஏதுவுக்கும் இவைகள் எவ்வளவோ முரண்பட்டவைகளாகவும், இந்தியாவின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் எவ்வளவோ பாதகமானவைகளாகவு மிருக்கின்றன. அரசியலின் பழைய ஞாபகங்களை மறந்துவிட்டுப் புதிய சிந்தனையோடும் திறந்த மனசோடும் சட்டத்திற் புகுந்தாலுங்கூட, இவைகள் சகிக்கக்கூடியவைகளாயில்லை. இதர எந்தக் குடியேற்ற நாட்டிலும், கவர்னர்-ஜெனரல்களுக்கு இவ்வளவு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டது கிடையாது; அல்லது மந்திரிகளிடமிருந்து இவ்வளவு பொறுப்புகள் பறிக்கப்பட்டது மில்லை. சட்டப்படி மேலே சொல்லப்பட்ட இனங்களில், கவர்னர் ஜெனரல் தமது எதேச்சாதிகாரங்களைச் சாதாரணமாகவோ அசாதாரணமாகவோ உபயோகிப்பாரேயானால், நிச்சயமாய் அவற்றை மந்திரிகளிடமிருந்து பறித்துத்தான் உபயோகிக்க வேண்டும்.

மேலும் இந்தியா கவர்னர்-ஜெனரல், இந்திய சர்க்காரை, இந்தியாவிலிருந்து நிர்வகிக்கும் பிரதம அதிகாரியாயிருந்தாலும், அவர் ஒரு வரத்துப் பக்ஷியே யொழிய, நாட்டின் நிலைமைக்கும் நிலவரத்துக்குந் தகுதியான நிலைப்பக்ஷி

யல்ல. ஆகையால் அவர் அதிகாரங்களும், அதிகாரங்களைப் பிரயோகிக்கும் பான்மையும் 'வந்த மாடு வளர்ந்த புல்லை மேய்ந்தது போலவே' யிருக்கும். என்றாலும் 'இனம் இனத்தோடு, செம்மரியாடு தன்னோடு' என்பது பொய்க்காது

இந்த எதேச்சாதிகார பந்தியில் சட்டசபைகளைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களெல்லாம் நிஷ்பக்ஷபாதமாய்ச் சொல்லப்போனால், அநேகமாய்ச் சட்டப்படி அரசியல் தலைவரிடந் தான் விடப்படுகிறதென்பது வாஸ்தவம். ஆனால் அனுஷ்டானத்தில் அவைகளை நிர்வகிப்பவர்கள் மந்திரிகள் என்பதையும் மறுக்கமுடியாது. என்றாலும் இந்தியா விஷயத்தில் இந்தச் சட்டமும் அனுஷ்டானமும் எப்படியிருக்குமென்று இப்பொழுதொன்றும் சொல்லுவதற்கில்லை. காலம் அதன் வேலையைச் செய்யும்போது 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை' யென்பது தானே தெரியும்.

சட்டசபைகளில் ஜனப்பிரதிநிதிகள் சில விஷயங்களை விவாதிக்கக் கூடாதென்றும், சில விஷயங்களிற் கேள்வி கேட்கக் கூடாதென்றுந் தடுக்கப்படுவது, ஜனநாயக தத்துவத்துக்கே முரண்பட்டது; எந்த ஜனநாயக தேசத்திலும் இம்முறை யனுஷ்டிக்கப்படுவதில்லை.

சில மசோதாக்கள் கவர்னர்-ஜெனரலின் முன் அனுமதியில்லாமற் சட்டசபைகளில் ஆஜர் செய்யப்படலாகாதென்பதும் ஜனநாயக முரண்பாடானதுதான். கவர்னர்-ஜெனரலின் எதேச்சாதிகாரம், விசேஷப்பொறுப்பு, சொந்தத் தீர்ப்பு முதலிய பாதுகாப்புகளைப் பாதிக்கக்கூடிய அல்லது ஜனநாயக வளர்ச்சியை நிவேதிக்கக்கூடிய உணர்ச்சியை அடக்கியொடுக்குவதற்காகவே இச்சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

சர்க்கார் வரவு-செலவு விஷயத்திலும், மந்திரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையில் கவர்னர்-ஜெனரல் தலையிட இடமிருக்கிறது.

இவைகள் எல்லாவற்றைக் காட்டிலும் இந்த ஜாபிதாவின் 20, 21, 22-ம் நம்பர்கள் தான் சர்ச்சில் சொன்னபடி 'கவர்னர்-ஜெனராலுக்கு ஹிட்லர் முசோலினிக்குள்ள அதிகாரமளிக்கின்றன.

இம்மூன்றிலும் 22-ம் நம்பர்தான் எதேச்சாதிகாரங்களுக்கெல்லாம் ராஜாவாயிருக்கிறது. 'புரட்சிக்கு முன்னிருந்த ஜார் சக்கரவர்த்தி'யைப்போல் கவர்னர்-ஜெனரல் இந்தியா முழுதையுந் தனது நுனி விரலில் வைத்தாட்டலாம். 45-வது ஷரத்து அமலுக்கு வந்தால், ஜனப்பிரதிநிதி சபையான சட்டசபையுங் கிடையாது, மந்திரிகளுங் கிடையாது. மேன்மை தங்கிய கவர்னர்-ஜெனரல் ஒருவர்தான் இந்தியா முழுதிலுந் தமது தர்பாரை நடத்துவார். சட்டமோ ஜவாப்தாரித்துவமோ இராது.

இதுவன்றி இந்த எதேச்சாதிகார பந்தியில் இன்னொரு வேடிக்கையு மிருக்கிறது. அதாவது, கவர்னர்-ஜெனரல் ஏதாவதொரு குறிப்பிட்ட விஷயத்தில் தமதிஷ்டம்போல் நடக்க வேண்டுமா அல்லது மந்திரிகளைக் கலந்து செய்ய வேண்டுமா என்பதை நிர்ணயிக்கும் அதிகாரமும் அவருக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி கவர்னர்-ஜெனரலே பிரதிவாதியும் நீதிபதியு மாகிறார். அதாவது ஓர் குற்றவாளி தனது வழக்கைத் தானே விசாரித்துத் தீர்ப்புக் கூறும் மாஜிஸ்டிரேட் டாக்கப்பட்டால் எப்படியோ அப்படி.

இவ்வாறு எல்லா நிர்வாகங்களிலும் கவர்னர் - ஜெனரல் தலையிட்டுத் தனதிஷ்டம்போல் அரசியலை நடத்தலாம். இதைப்பற்றி இன்னும் தெளிவாய்த் தெரிந்து கொள்வதற்கு முன்னால், கவர்னர்-ஜெனரலின் சொந்தத் தீர்ப்புகளைப் பற்றிச் சிறிது சொல்லுகிறேன்.

# சொந்தத் தீர்ப்புகள்

ஒதுக்கப்பட்ட இலாகாக்களிலுஞ் சரி மாற்றப்பட்ட இலாகாக்களிலுஞ் சரி கவர்னர்-ஜெனரல், மந்திரிகளையோ மற்றவர்களையோ கலந்துங் கலவாமலுந் தமதிஷ்டம்போல், இன்னின்ன காரியங்களில் சட்டப்படி தலையிடலாமென்று சொல்லுகிற நீண்ட ஜாபிதாவைப் பார்த்து விட்டோம். மாற்றப்பட்ட இலாகாக்களில் மந்திரிகளைக் கலந்து அவர்கள் யோசனைக்கு மாறாகவும் விரோதமாகவும் கவர்னர்-ஜெனரல் தமது 'சொந்தத் தீர்ப்'பின்படி செய்யக்கூடிய அதிகாரங்களையும் அலுவல்களையும் இனிப் பார்ப்போம்.

## சொந்தத் தீர்ப்பு ஜாபிதா

தனக்கு ஆலோசனை சொல்லுகிற மந்திரிகளைக் கலவாமலே கவர்னர்-ஜெனரல், பொதுவாய் எல்லா அரசியற் காரியங்களையுந் தாமே செய்யலாம்—ஷரத். 9 (1)

கவர்னர் - ஜெனரல் கீழ்க்கண்ட காரியங்களைத் தமது விசேஷப் பொறுப்'பிற் செய்ய வேண்டும்.

1. இந்தியாவிலும், இந்தியாவின் எந்தப் பாகத்திலும் அமைதிக்குஞ் சமாதானத்துக்கும் ஆபத்தேற்படாமல் தடுப்பது—ஷரத். 12 (1)

2. சமஷ்டி சர்க்காரின் வரவு-செலவுகளான நாணய கவுரவத்தை நிரந்தரமாய்க் காப்பது—ஷரத். 12 (1)

3. மைனாரிட்டிகளின் நியாயமான உரிமைகளைக் காப்பதும், க்ஷேம லாபங்களிற் சிரத்தை யெடுப்பதும்—ஷரத். 12 (1)

**4.** சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் அவர்களைச் சார்ந்திருப்போர்களுக்குஞ் சட்டப்படி சேரவேண்டிய உரிமைகள் கிடைக்கும்படி செய்வதும், க்ஷேம லாபங்களிற் சிரத்தையெடுப்பதும்—ஷரத். 12 (1)

**5.** நிர்வாக முறையில் 111 முதல் 121 வரையுள்ள ஷரத்துகளிலுள்ள விஷயங்களை (பிரிட்டிஷ் வர்த்தகம்) பாதுகாப்பதும், அதற்குப் பாதக மெதுவும் ஏற்படாமல் தடுப்பதும்—ஷரத். 12 (1)

**6.** பிரிட்டிஷ் இறக்குமதிக்கும் பர்மிய இறக்குமதிக்கும் பாதகம் வராமற் பார்ப்பது—ஷரத். 12 (1)

**7.** சமஸ்தானங்களின் க்ஷேம லாபத்தையும், சமஸ்தானுபதிகளின் கௌரவத்தையுங் காப்பது—ஷரத். 12 (1)

**8.** கவர்னர்-ஜெனரல் தனது விசேஷப் பொறுப்புகளை நிறைவேற்றுவதிலோ, ஒதுக்கப்பட்ட இலாகாவை நிர்வகிப்பதிலோ, எதேச்சாதிகாரமாய் எல்லாக் காரியங்களையுஞ் செய்வதிலோ எவ்வித இடையூறும் வராமல் காப்பது—ஷரத். 12 (1)

**9.** மேலே கூறியுள்ள விசேஷப் பொருப்புகளை நிர்வகிப்பது—ஷரத். 12 (1)

**10.** அட்வொகேட்-ஜெனரலை நியமிப்பது, நீக்குவது, சம்பளம் நிர்ணயிப்பது—ஷரத். 16 (1-3)

**11.** சமஷ்டி சட்டசபைகள் இரண்டுக்கும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஏதேனுமொரு சபையில் அவருடைய ஸ்தானங் காலியாகிவிட்டதாய் விளம்பரப்படுத்துவது—ஷரத். 25. (1)

**12.** சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏதாவதொரு விசாரணைக் கமிட்டியின்முன் ஆஜராக வேண்டியதிருந்தால் அவர்

கள் ஆஜராவது சம்பந்தமாய் விதிகள் செய்வதும், அவர்கள் தரும் அந்தரங்கத் தகவல்களைப் பாதுகாப்பதும்—ஷரத். 28 (4)

**13.** நெருக்கடியான காலங்களில் அவசரச் சட்டங்கள் பிறப்பிப்பது—ஷரத். 42 (1. அ)

**14.** சில உத்தியோகங்கள் சம்பந்தமாகவும், தொழில்கள் சம்பந்தமாகவும் நிபந்தனையேற்படுத்தும் விதிகளின்மீது தகராறு ஏற்பட்டால் தீர்த்துவைப்பது அல்லது சமரஸஞ் செய்வது—ஷரத். 119 (3)

**15.** மேலே சொன்ன அதிகாரம் ஒரு சட்டத்துக்கும் பொருந்தும். அதாவது சமஷ்டிச் சட்டத்தைப்பற்றி அல்லது ஏதாவதொரு இந்தியச் சட்டத்தைப்பற்றி அல்லது அதன் அலுவல்களைப்பற்றி தகராறு ஏற்பட்டால் தீர்த்து வைப்பது—ஷரத். 119 (4)

**16.** சர்க்கார் பணத்தை எங்குப் போட்டு வைப்பது, எப்படிப் பட்டுவாடாச் செய்வது, என்ன நடை முறையை அனுஷ்டிப்பது என்று நிர்ணயிப்பதும், விதிகள் செய்வதும் —ஷரத். 151

**17.** ரிஸர்வ் பாங்க் டைரக்டர்களை நியமிப்பதும் நீக்குவதும்—ஷரத். 152 (2)

**18.** சமஷ்டி சர்க்காருக்கும் ரயில்வே நிர்வாகத்துக்கும் ஏற்படுகிற நிர்வாக சம்பந்தஞ் சுலபமாய் நடக்கும்படி நிர்ணயஞ் செய்வது—ஷரத் 184 (1)

**19.** ரயில்வே நியாய சபைச் செலவில் இவ்வளவைச் சர்க்கார் ஏற்றுக்கொள்வதென்று நிர்ணயித்து, சமஷ்டி சட்ட சபை ஒப்புக்கொள்ளும்படி செய்வது—ஷரத். 196 (8)

**20.** சமஷ்டிக் கோர்ட்டு நிர்வாகச் செலவை, பட்ஜெட்டில் சேர்த்து, சமஷ்டி சபை அங்கீகாரத்துக்கு அனுப்புவது ஷரத். 246 (2)

**21.** சமஷ்டி சம்பந்தமான ஒதுக்கப்பட்ட ஸ்தானங்களுக்கு—(ஸிவில் உத்தியோகங்கள்) ஆட்களை நியமிப்பதும் அந்தந்த ஸ்தானங்களில் அமைப்பதும்—ஷரத். 246 (2)

**22.** ஸிவில் உத்தியோகஸ்தர்களின் சம்பள உயர்வு, ரஜா, உத்தியோக நிறுத்தம் முதலிய விஷயங்களைப் பற்றி உத்தரவுகள் பிறப்பிப்பது—ஷரத். 247 (2)

**23.** மேலே சொன்னபடி உத்தியோக நிறுத்தஞ் செய்யப் பெற்றவர்களின் சம்பளத்தை முழுதுமோ குறைத்தோ பட்டுவாடாச் செய்ய உத்தரவிடுவது—ஷரத். 247 (3)

**24.** ஸிவில் உத்தியோகஸ்தர்மீது ஏதேனுங் குற்றச்சாட் டேற்பட்டால் அதைப்பற்றி விசாரிப்பதும் நிவிர்த்தி கண்டு பிடிப்பதும்—ஷரத். 248 (1)

**25.** அந்த உத்தியோகஸ்தரைக் கண்டித்தோ தண்டித்தோ அல்லது சம்பளம் பென்ஷன் முதலியவற்றைப் பாதித்தோ உத்தரவுகள் போடப்பட்டால், அவை அமலுக்கு வரச் சம்மதிப்பது, மறுப்பது—ஷரத். 248 (2)

**26.** மத்திய அல்லது ரயில்வே செர்விஸ்களில் உள்ள ஸிவில் உத்தியோகத்தையே ரத்துச் செய்வது—ஷரத். 258 (1—அ.)

**27.** ஸிவில் உத்தியோகஸ்தர்களின் சம்பளம் படித்தரம் பென்ஷன் முதலியவற்றைப் பாதிக்கும் விஷயங்களிலும் அவை சம்பந்தமாய் உத்தியோகஸ்தர் போடும் மனுக்கள்மீதும் உத்தரவு பிறப்பிப்பது—ஷரத். 258 (2)

**28.** ஒரு சமஸ்தானாதிபதியோ சமஸ்தானப்பிரஜையோ (அந்த சமஸ்தானம் சமஷ்டியில் சேராதிருந்தால்) சர்க்காரில், காயமான அல்லது தற்காலிகமான உத்தியோகம் வகிக்க லாயக்கானவரென்று அறிவிப்பது—ஷரத். 262

**29.** சமஷ்டி சம்பந்தமான உத்தியோகஸ்தர்களில் யாராவது குற்றஞ் செய்தால் அவரைக் கைது செய்ய 197-வது ஷரத்துப்படி உத்தரவிடுவது—ஷரத். 271 (2)

**30.** சர்க்கார் உத்தியோகஸ்தர்மீது நடந்த ஸிவில் வியாச்சியச் செலவை (பந்தகச் செலவாய்) சர்க்கார் கஜானுவிலிருந்து பட்டுவாடாச் செய்வது—ஷரத். 271 (3)

**31.** 1870-வது வருஷத்துக்குமுன் ஜாரி செய்யப்பட்ட நில சம்பந்தமாகவோ வரி சம்பந்தமாகவோ ஏற்பட்டிருக்கும் உரிமைகளைப் பாதுகாப்பது—ஷரத். 300 (1-2)

**32.** இந்தியா ஹைகமிஷனரை நியமிப்பது, சம்பளம் நிர்ணயிப்பது, அலுவல் வரையறுப்பது—ஷரத். 302 (1)

மேலேகூறியுள்ள 32 இனங்களிலும், முன்சொன்ன 86 இனங்களைப்போல் கவர்னர்-ஜெனரல் 'சொந்தத் தீர்ப்பு' என்னும் பெயரால் தமது எதேச்சாதிகார அரசியலை நடத்தலாம். ஆனாற் பொறுப்பாட்சி யென்பது பொய்யில்லாவிட்டால் அவைகள் ஒவ்வொன்றும் மந்திரிகள் வசமே விடப்படவேண்டும். 'சொந்தத் தீர்ப்பு' என்பதற்கு அரசியல் அகராதியில் என்ன அர்த்தமிருந்தாலும் இங்கு அரசியற் பட்சபாதம் என்பதுதான் பொருத்தமான அருத்தமாயிருக்கும்.

எதேச்சாதிகார பந்தியி லிருக்கிற இனங்களையும், சொந்தத் தீர்ப்பு ஜாபிதாவி லிருக்கிற இனங்களையும் ஒன்று சேர்த்தால், அவைக ளநேகமாய் ஒரு நூறைத் தொடுகின்றன.

இவைகளெல்லாம் அரசியலின் முக்கியமான—அதிமுக்கிய மான அதிகாரங்களைச் சட்டசபைக்கு ஜவாப்தாரிகளான மந்திரிகளிடமிருந்து பிடுங்கி கவர்னர்-ஜெனரலுக்குக் கொடுக்கின்றன. பொறுப்பாட்சி பொய்யாக்கப்படுகிறது; எதேச்சாதிகார ஆட்சி யின்னுஞ் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப் படுகிறது.

அசல் அரசியலையே எடுத்துக் கொண்டாலுஞ்சரி, நிர் வாகத்தை எடுத்துக்கொண்டாலுஞ்சரி, நிர்வாகத்தை நடத்தும் உத்தியோகஸ்தர்களை எடுத்துக் கொண்டாலுஞ்சரி, நிதியின் வரவு-செலவு இனங்களை எடுத்துக் கொண்டாலுஞ் சரி, சட்டசபை நடவடிக்கைகளையும் மந்திரிப் பொறுப்பு களையும் எடுத்துக்கொண்டு மசோதாக்கள் திருத்தங்கள் விவாதங்கள் கேள்விகள் முதலியவைகளை யெடுத்துக் கொண் டாலுஞ்சரி, அவசரச் சட்டங்கள், கவர்னர்-ஜெனரல் சட் டங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டாலுஞ்சரி, எல்லா வற்றிலும் ஜனநாயக ஆட்சிக்குச் சரியான கதவடைப்பு இருக்கக் காணலாம். இவைகளெல்லாம் பொறுப்பாட்சியின் பேரால், பொது ஜனங்களுக்குச் செய்யப்படுகிற தீமைகள் அல்லது ஜனநாயக உணர்வின் சுயமதிப்புக்குச் செய்யப்படும் சவச்சடங் கில்லையென்று எவராற் சொல்லமுடியும்?

## விசேஷப் பொறுப்பு:

இதைப் பாதுகாப்புகளென்று ஒரு பதத்திற் சொல்லி விடலாம். ஆனால் அந்த வார்த்தைக்குள் ஆபத்தின் வித்து அடங்கியிருப்பதாய்க் கருதப்படுகிறது. அது வாஸ்தவம். ஆபத்து என்று ஒன்று இருந்தால்தான் பாதுகாப்புத் தேவை யாயிருக்கும். ஆகையால் பிரிட்டிஷ் அரசாங்கம் அல்லது நலன்களுக்கு இந்தியாவில் ஆபத்து ஏற்பட்டிருப்பதாய், அவ் வளவு பச்சையாய்ப் பாதுகாப்புகள் என்னும் பதத்தின்

மூலம் பகிரங்கப்படுத்திக்கொள்ள பிரிட்டிஷார் விரும்பவில்லை. அதற்குப் பதிலாய் வேறு வார்த்தைக்குக் கூட்டுக் கமிட்டியார் கூடித் தேடி அலைந்தார்கள்; அகப்படவில்லை.

12-வது ஷரத்து 1-வது பிரிவில் இந்த விசேஷப் பொறுப்பைப்பற்றி ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளை நிறைவேற்றுதற்கு கவர்னர்-ஜெனரல் தமது சொந்தத் தீர்ப்பை உபயோகிப்பார்.

## கஜனுவில் கை வைக்கிறுர் :

நிதி நிர்வாகத்தில் ஆலோசனை சொல்வதற்குப் பிரத்தியேகமாய் ஒருவரை நியமித்துக்கொள்ள கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரமளிக்கப்பட் டிருக்கிறது—ஷரத். 15. இது ஒரு உபரியான நியமனம். மந்திரிகளெல்லாஞ் சட்டப்படி எல்லா விஷயங்களிலும் கவர்னர்-ஜெனரலுக்கு ஆலோசனை சொல்லுகிறவர்கள்தான் ; அதிகாரிகளல்ல. பின்னரேன் பிரத்தியேகமாய் நிதி விஷயத்தில் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்? கணக்கில் இந்தியர் அல்லது இந்திய மந்திரிகள் கெட்டிக்காரார்க ளல்லவென்னுங் கருத்தா? அல்லது பிரிட்டிஷ்காரர்களுக்கு இந்தியாவில் இன்னும் அதிக உத்தியோகந் தேடிக்கொடுக்குங் கருத்தா? அன்றி அறவே மந்திரிகளின் யோசனைப்படி நிதி நிர்வாகத்தை நடத்தப்படாதென்னுங் கருத்தா?

வரவு-செலவு தயாரிப்பதும், வரவு-செலவில் அநேக இனங்களை நிர்வகிப்பதும் மந்திரிகளா யிருந்தாலும், கவர்னர்-ஜெனரல் தனது விசேஷப் பொறுப்பை உபயோகிக்கிறபொழுது, பெட்டி மந்திரிகளிடமும், சாவி கவர்னர் - ஜெனரலிடமுங் கொடுக்கப்படுவதாய்த் தோன்றுகிறது. இதைப் பற்றி விரிவாய்ப் பின்னர் பார்ப்போம்.

## பிரிட்டிஷ் வர்த்தகப் பாதுகாப்பு :

எல்லாக் காப்புகளிலும் இந்தக் காப்புதான் பெரியது. பிரிட்டனுக்கு இது ஒரு நல்ல தங்கக் காப்பாயிருந்தாலும், இந்தியாவுக்குப் பெரிய இரும்புக் காப்பாயிருக்கிறது. பிரிட்டிஷ் வர்த்தகத்தை நிரந்தரமாய் இங்கு நடத்துவதற்காகவே பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் நடைபெறுகிறது. மந்திரிகள் கூறும் யோசனை சட்ட விரோதமாய் இல்லாவிட்டாலும், பிரிட்டிஷ் வர்த்தகத்துக்கு அல்லது பிரிட்டிஷ் சரக்குகள் இந்தியாவில் இறக்குமதி யாவதற்கோ விற்பனை யாவதற்கோ பாதகமேற்படுமென்று கவர்னர்-ஜெனரல் கருதினால், அப்போதெல்லாம் அவர் தலையிட்டு மந்திரிகளின் யோசனையை நிராகரித்து விட்டுத் தனது விசேஷப் பொறுப்பாற் காரியத்தை நடாத்துவார் (ஷரத். 12 ஊ)

## நியமனப் பத்திரம் :

"நியமனப் பத்திரம்" என்பது கவர்னர்-ஜெனரல்களை (கவர்னர்களையுங்கூட) பிரிட்டிஷ் சர்க்கார், மன்னர் பேரால் நியமிக்கும்போது அவருக்குக் கொடுக்கும் 'ஆக்ஞா பத்திரம்' கவர்னர்-ஜெனரல் தனது உத்தியோக காலத்தில் இன்னின்ன காரியங்களை, இன்னின்ன நோக்கத்துடன், இன்னின்ன அதிகாரங்களைக் கொண்டுதான் செய்ய வேண்டும் என்று இதிற் குறிப்பிடப்பட்டிருக்கும். பார்க்கப்போனால் இதுவொரு 'வேலை விவர ஜாபிதா'வைப் போலிருக்கிறது. இதை யெந்த கவர்னர்-ஜெனரலும் அப்புறம் இப்புறங் கடக்கக்கூடாது. ஆகையால் இதை 'நியமனப் பத்திரம்' என்று சொல்லுவதைவிட, 'ஆக்ஞா பத்திரம்' என்பதுதான் அதிகப் பொருத்தமாயிருக்கும். என்றாலும் ஒரு பெரிய அரசாங்கத் தலைவருக் களிக்கப்படும் ஒரு பத்திரம், அதன் உள்ளமிசங்கள் எப்படி இருந்தாலும், 'ஆக்ஞை' என்னும்

பேரால் அளிக்கப்படுவது எவ்வளவு அவமானம்! அதனாற்றான் அதை 'நியமனப் பத்திரம்' என்று அழைக்கவேண்டியதா யிருக்கிறது.

சட்டப்படி* இந்நியமனப் பத்திரம் (முந்திய பத்திரங்களையே யனுசரித்து) இந்தியா மந்திரியால் தயாரிக்கப்பட்டு, பார்லிமெண்டின் அங்கிகாரமும், மன்னரின் முத்திரையும், கையொப்பமும் பெற்றிருக்கும். இதர குடியேற்ற நாட்டு கவர்னர்-ஜெனரல்களுக்குக் கொடுக்கப்படும் நியமனப் பத்திரங்களுக்குப் பார்லிமெண்டின் சம்மதமே தேவை யில்லை. சம்பிரதாயப்படி மன்னரின் கையொப்பமும் சொந்த முத்திரையு மிருந்தாற் போதும்.

நியமனப் பத்திரம் ஒரு சட்டமல்ல; ஆனாற் சட்டத்தின் பலமும் அனுசரணையு மதற்குண்டு. ஒரு கவர்னர்-ஜெனரல் தனக் களிக்கப்பட்டிருக்கிற கட்டளைப்படி நடக்காவிட்டால், சட்டப்படி அவர்மீது எவரும், எந்தக் கோர்ட்டிலுங் கேஸ் தொடுக்க முடியாது. பிரிட்டிஷ் மன்னருக்கும், பார்லிமெண்டுக்குந்தான் அவர்மீது நடபடி எடுத்துக்கொள்ள அதிகார மிருக்கிறது. அதுவும் இரண்டு வழிகளிலேதான் செய்யலாம்.

1. அப்படிப்பட்ட கவர்னர்-ஜெனரலை மன்னர், உத்தியோகத்திலிருந்து திரும்ப அழைத்துக் கோள்வது.

2. அவரைப் பார்லிமேண்டில் வைத்துக் குற்றஞ் சாட்டுவது.

இவ்விரண்டு நம்பர்களும் பிரிட்டிஷ் இந்தியச் சரித்திரத்திலேயே ஒரேயொருமுறை † தான் வழங்கப்பட்டிருக்கின்

* 13-வது ஷரத்து.

† முதலாவது கவர்னர்-ஜெனரலான வாரன்ஸ் ஹேஸ்டிங்க்ஸ் விஷயத்தில்.

10

றன. அதுவும் அநேகமாய் மறக்கப்பட்ட செய்தியாகிவிட்டது. 150 வருஷங்களுக்குப் பின்னால் இந்த ஆயுதத்தை யுபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பமே பிரிட்டிஷ் சர்க்காருக் கேற்படவில்லை.

கவர்னர்-ஜெனராலுக் களிக்கப்படும் நியமனப் பத்திரம் சட்டமல்லாவிட்டாலும், இந்திய அரசியல் நிர்வாகத்துக்கும் கவர்னர்-ஜெனராலுக்கு முள்ள சம்பந்த முழுதும் அதிலே தான் அறுதியிட்டுக் கூறப்பட்டிருக்கிறது. அதில் முக்கிய மானவை இரண்டு:—

(i) மந்திரி சபையில் கூட்டுப் பொறுப்பை யுண்டு பண்ணுவது.

(ii) சட்டப்படி கவர்னர்-ஜெனரலுக் களிக்கப்பட்டிருக்கும் விசேஷப் பொறுப்புகளின் வியாக்கியானம்.

## (i) கூட்டுப் பொறுப்பு :

இது ஒரு கெடியாரத்தைப் போன்றது. கெடியாரத்துக்குள் பல உருளைகள் ஒன்றுக்கொன்று பிடிப்பு வைத்துக் கொண்டிருக்கின்றன. அதனாலேதான் அதுஒழுங்காய் ஓடுகிறது. ஆனால் எங்காவது ஓரிடத்திற் பழுது ஏற்பட்டுவிட்டால் ஒரு உருளையும் ஓடாது; கெடியாரமே நின்றுவிடும். அப்புறம் ரிப்பேர் செய்துதானாக வேண்டும். அதேமாதிரிதான் இக் கூட்டுப் பொறுப்பு மிருக்கிறது. மந்திரி சபையில் எல்லா மந்திரிகளும் அவரவர்க் களிக்கப்பட்டிருக்கும் பொறுப்பை யேற்றுத் தனித்தனியாகவும் மொத்தமாகவும் அரசியலை நடத்துவார்கள். ஒரு மந்திரி செய்யுங் காரியத்துக்கு எல்லா மந்திரிகளும் ஜவாப் சொல்லி யாகவேண்டும். உதாரணத்துக்கு ஒரு மந்திரி ஏதாவது தவறு செய்கிறாரென்று வைத்துக்கொள்ளுவோம். அத்தவறு அசாதாரணமானதா யிருந்து,

அதன்படி யவர் ராஜிநாமாச் செய்யும்படி யேற்பட்டால், அதை யவர் தமக்குத்தாமாகவே செய்துவிட முடியாது. அதாவது தமது ராஜிநாமாக் கடிதத்தைத் தாமே கவர்னர்-ஜெனரலிடம் நேரிற் கொடுக்காமல் பிரதம மந்திரியின் மூலமாகவே சமர்ப்பிக்க வேண்டும். பிரதம மந்திரியும் ராஜிநாமாச் செய்வார்; மற்ற மந்திரிகளும் ராஜிநாமாச் செய்வார்கள். அந்த மந்திரி சபை போய்விடும். மீண்டும் பிரதம மந்திரி வேறொரு மந்திரி சபையை யமைப்பார். அதில் (தவறு செய்தவர் தவிர) மற்ற மந்திரிகளிருக்கலாம்; அல்லது முழுதும் மாறியுமிருக்கலாம். அது பிரதம மந்திரிக்கு அவர் கட்சியிலுள்ள செல்வாக்கைப் பொறுத்த சேதி.

இவ்வாறு பிரதம மந்திரியே யெப்பொழுதும் மந்திரி சபை யமைச்சராயிருப்பதால், அநேகமாய் எல்லா மந்திரிகளும் பிரதம மந்திரியின் கட்டுப்பாட்டுக் குட்பட்டே யிருப்பார்கள். பிரதம மந்திரியே மற்ற மந்திரிகளை நியமிப்பவராகவும் நீக்குபவராகவுமிருப்பதால், கூட்டுப் பொறுப்பின் பேரில் கவர்னர்-ஜெனரல் எல்லா விஷயங்களையும் பிரதம மந்திரியின் மூலமாகவே கலந்தாலோசிப்பார்.

ஆனல் இக்கூட்டுப் பொறுப்பு, சட்டசபை வேலைகளையும் நிர்வாக வேலைகளையுஞ் சுலபமாக்குவதற்குமட்டுமே பயன்படுமன்றி, கவர்னர்-ஜெனரலின் விசேஷப் பொறுப்பைத் தகைவதற்குப் பயன்படாது.

## (ii) விசேஷப் பொறுப்பு:

இது சம்பந்தமான சகல விஷயங்களும் சட்டத்தின் 12-வது ஷரத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் கவர்னர்-ஜெனரலின் விசேஷப் பொறுப்பு ஜாபிதாவிற் சேர்ந்தவைகள். அவற்றை நிறைவேற்றுவதற்கு

அவர் தமது 'சொந்தத் தீர்ப்பை' உபயோகிப்பார். ஆனால் அதற்கும் நியமனப்பத்திரத்துக்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று கேட்கலாம். அந்தப் பொறுப்புகளை நிறைவேற்றும்போது கவர்னர்-ஜெனரல் என்ன நோக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென்பது நியமனப் பத்திரத்தில் தான் இருக்கிறது.

பதினோராவது பாரா: மைனாரிட்டிகளின் பாதுகாப்பு:

"சட்டசபையிற் பிரத்தியேகப் பிரதிநிதித்துவங் கொடுக்கப்பட்டிருக்குஞ் ஜாதியாரும், தமது தொகை குறைவாயிருக்குங் காரணத்தைக் கொண்டோ, அல்லது கல்வி முதலிய வசதியின்மையைக் கொண்டோ, அல்லது இவை போன்ற வேறெக்காரணத்தைக் கொண்டோ, சட்ட சபையிற் கட்டுப்பாடான முயற்சியின்மூலந் தங்களைத் தாங்களே தற்காத்துக்கொள்ள முடியாத சில சமூகத்தாரும், பாதிக்கப் படாமற் பாதுகாக்கப்பட வேண்டும்.

"மைனாரிட்டி வகுப்புகளுக்குச் சர்க்கார் உத்தியோகங்களிற் சரியான பங்கு கிடைக்க வேண்டும். இது பற்றிப் பழைய கொள்கைகள் ஏதாவதிருந்தால் அவைகளை மைனாரிட்டிகளின் நன்மைக்காகவோ, பொது ஜனங்களின் நன்மைக்காகவோ மாற்றுவது அவஸ்ய மென்று தோன்றினால் அப்படியே செய்யவேண்டும்."

சிறுபான்மை ஜாதியார் பெரும்பான்மை வகுப்பாராற் கொடுமை செய்யப்படாமற் காப்பாற்றப்பட வேண்டியது நியாயந்தான். அதற்காகத் தகுதியையுந் திறமையையுந் தள்ளிவிட்டுச் சலுகை காரணமாய் உத்தியோகங் கொடுக்கப் படுவது நியாயமென்று எப்படிச் சொல்ல முடியும்? கேவலம் ஒரு சிறு உத்தியோகங் காலியாகும் போதெல்லாம் மெஜாரிட்

டிக்கும் மைனாரிட்டிக்கும் போட்டி யேற்பட்டு, எதாவதொரு கட்சி திருப்தி யடைவதும் அதற்கெதிர்க்கட்சி அதிருப்தி யடைவதும் வழக்கம். ஆகையால் இந்த மைனாரிட்டிப் பாதுகாப்பென்பது வகுப்புவாதத்தை வளர்ப்பதும், வகுப் புப் பித்தர்களைச் சிருஷ்டிப்பதும், ஒரு வகுப்புக்கொரு வகுப்பு 'சிண்டு முடிந்து' போடுவதுந் தவிர வேறில்லை.

பன்னிரண்டாவது பாரா : உத்தியோகஸ்தர் பாதுகாப்பு:

"இச்சட்டத்தின் மூலமாகவும், அமலிலிருக்கிற இதர எந்தச் சட்டத்தின் மூலமாகவும் நமது உத்தியோக வர்க்கத் தினருக் கேற்பட்டுள்ள உரிமைகளை மாத்திரம் கவர்னர்-ஜெனரல் பாதுகாத்தாற் போதாது ; அநீதம் என்று தமக்குத் தோன்றுகிற சகல காரியங்களும் அவர்களைப் பாதிக்காமற் பார்க்கவேண்டும்."

இது ஜனங்களையும் சர்க்கார் உத்தியோகஸ்தர்களையுந் துண்டு துண்டாய்ப் பிரிப்பதாகும். உத்தியோகஸ்தர்களே யாயினும் அவர்கள் தங்களைத் தாங்களே பிரிட்டிஷ் மன்ன ரின் பிரதிநிதிகளென்றும், பிரஜைகளெல்லாந் தங்களுக்குக் கீழ்ப்படியவேண்டியவர்க ளென்றும் எண்ணிக்கொண்டு அகம்பாவர்கள் ஆகிவிடுகிறார்கள். ஆகையால் அவர்கள் எந்த மாறுதலையுந் தங்கள் உரிமையைப் பாதிக்கக் கூடிய தென்று கூற முன்வரலாம்.

உதாரணத்துக்குப் போலீஸ் உத்தியோகஸ்தர்களையே யெடுத்துக்கொள்வோம். தேசத்தின் 'அமைதிக்கும் சாந் திக்கும்' அவர்களே ஜவாப்தாரிகள் என்றும், அவர்களில்லா விட்டால் அவைகள் எங்கேயோ போய்விடும் என்றும் எண்ணுகிறார்கள். அது சரி அல்லது சரியில்லை யென்பதல்ல இப்பொழுதையப் பேச்சு. ஆனால் அநாவஸ்யமான போலீஸ்

அமல் அநேக சமயங்களில் அமைதியையும் சாந்தியையும் அழித்துவிடுகிறது. இதற்குக் காரணம் விசேஷப் பொறுப் பின் பேரால், உத்தியோகஸ்தர் பாதுகாப்பு என்னுங் கருவியைக் கொண்டு, கவர்னர்-ஜெனரல் செய்யுங் குழப்பந் தான். இது பற்றிப் பார்லிமெண்டில் ஸ்ரீ காக்ஸ் கூறிய கண்டனமும் நிவிர்த்தியுங் கவனிக்கத்தக்கது :

"உத்தியோகஸ்தர் சம்பந்தமாய் கவர்னர், சட்டபூர்வ மான உரிமைகளைமட்டும் பாதுகாத்தாற் போதாதென்று ஆக்ஞா பத்திரத்திற் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இம்மாதிரி சட்டத்திலில்லாத ஒரு பொறுப்பைத் தனி மனிதன் வசம் விடுவது சரியல்ல; உத்தியோக நியமனக் கமிஷன் தீர்ப்புக்கு விடுவதுதான் உசிதம்".

பதிமூன்ருவது பாரா : பிரிட்டிஷ் வர்த்தக பாதுகாப்பு :

"இச்சட்டத்தின் ஷரத்துகளுக்கு முரண்படாமல் மந் திரிகள் யோசனை சொன்னுலுங்கூட, அந்த யோசனையானது பிரிட்டிஷ் வர்த்தகத்தைப் பாதிக்குமானுல், கவர்னர்-ஜெனரல் தமது விசேஷப் பொறுப்பின் பேரில் மந்திரிகளின் யோசனையை நிராகரிக்க வேண்டும்."

112 முதல் 117 வரையுள்ள ஷரத்துகள் பிரிட்டிஷ் வர்த்தகம் இந்தியாவில் தங்கு தடையின்றி நடப்பதற்காக வேண்டிய பாதுகாப்புக ளளிக்கின்றன. இந்திய வர்த்தக ஸ்தாபனங்களைக் காப்பாற்றுவதற்காகவும், வர்த்தகத்தை விர்த்தி செய்வதற்காகவும் பிரிட்டிஷ் கம்பெனிகள் அல்லது பண்டங்கள் மீது வித்தியாசம் பாராட்டக் கூடிய சட்டங்கள் செய்யக் கூடாதென்று, இந்த ஷரத்துகள் தடைவிதிக்கின் றன. மேலும் பிரிட்டிஷார் இங்குத் தாராளமாய்க் குடியேற வும், ஏராளமாய்த் தொழில் நடத்தவும், பாராளும் உரிமை

யனுபவிக்கவும் உத்தரவாத மளிக்கின்றன, இந்திய வர்த்தகக் கைத்தொழில்களுக்குப் பாதகமாய் ஏற்கனவே யிருந்துவரும் பிரிட்டிஷ் வர்த்தகச் சாதகங்களுக்கு இந்த ஷரத்துகள் இன்னும் அதிகமான அரண்கட்டுவதோடு, புதிதாய்ப் பல உரிமைகளேற்படுவதற்கும் வசதியளிக்கின்றன.

இவ்வள விருந்தும்—கவர்னர்-ஜெனரலின் விசேஷப் பொறுப்பு வேறிருந்தும், நியமனப்பத்திர மூலமாகவும் பிரிட்டிஷ் வர்த்தகம் வேலியிடப்படுகிறது; நிர்வாகத் துறையிலும் அன்றுடங் கண்காணிக்கப்படுகிறது.

இவைகளின் நோக்கமும் லட்சியமும் எதுவாயிருந்தாலும், வேண்டுமென்றுதான் செய்யப்பட்டிருக்கின்றன. இதற்கு ருஜு சமீபத்தில் * ஸ்ரீ தாமஸ் வில்லியம்ஸ், காமன்ஸ் சபையில் "112 முதல் 117 வரையுள்ள ஷரத்துகளைத் திருத்த, ஒரு திருத்த மசோதா கொண்டுவருவது பற்றிச் சர்க்கார் கவனிப்பார்களா?" என்று கேட்ட கேள்விக்கு உதவி இந்தியா மந்திரி லெப்டினேண்ட்-கர்னல் மியூர் ஹெட் அளித்த பதிலில் இருக்கிறது. அதாவது:

"கேள்வியிற் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் வேண்டுமென்றுதான் பார்லிமெண்டால் முடிவு செய்யப்பட்டவை. அவற்றைப்பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டுமென்று பார்லிமெண்டைக் கேட்கும் நோக்கம், சர்க்காருக்கு இல்லை."

பதினைந்தாவது பாரா: சமஸ்தானப் பாதுகாப்பு:

"சமஸ்தானங்களின் கண்ணியத்துக்கும், கௌரவத்துக்கும், பொருளாதாரத்துக்கும், மான்யத்துக்கும், உடன்படிக்கைக்கும், வழக்கத்துக்கும் அல்லது இவைபோன்ற இதர

* 18 ஜூலை 1938.

உரிமைகளுக்கும் பாதகம் ஏற்படாமல் கவர்னர்-ஜெனரல் தமது விசேஷப் பொறுப்பாற் பார்த்துக் கொள்ளவேண்டும்.''

இதைப்பற்றி ஏற்கனவே எவ்வளவோ சொல்லியாகி விட்டது. சமஸ்தாநுதிபதிகள் செய்து கொடுக்கும் பிரவேசப் பத்திரத்தில், அவர்கள் தங்களுக்குத் தாங்களாகவே வைத்துக் கொள்ளும் பிடிதரங்களும், குறிப்பிடும் நிபந்தனைகளு மிருக்கும்போது, இப்பாதுகாப்புக்கு அர்த்தமேயில்லை. என்றாலுஞ் சமஸ்தான விஷயங்களிலுங் கவர்னர்-ஜெனரல், விசேஷப் பொறுப்பு வைத்திருக்கிறார்; ராஜப் பிரதிநிதி தோரணையிலுள்ள பொறுப்பும் அவருக்குண்டு.

மேலே கூறியுள்ள நாலு பாரா (11, 12, 13, 15) க்களையும் ஒன்று சேர்த்து ஒரே பாராவில் அடக்கலாம். அதற்கு கவர்னர்-ஜேனரல் பாரா (காவல்) என்று பேர் வைக்கலாம். நியமனப் பத்திரத்திலுள்ள 31 பாராக்களும் இந்தவொரு பாராவுக்குள் ளடங்கிவிடும்.

## கவர்னர்-ஜேனரலும் மந்திரிகளும் :

கவர்னர்-ஜெனரலுக் களிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மேலே சொன்னபடி வரம்பற்றவை. மந்திரிகளுக் களிக்கப் பட்டிருக்கும் அதிகாரங்களோ வரையறுக்கப்பட்டவை; அவை யிரண்டுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. சமஷ்டி சர்க்காரின் சகல அதிகாரங்களி லிருந்து, கவர்னர்-ஜெனரல் அதிகாரங்களைக் கழித்து மிஞ்சியதுதான் மந்திரிகளுக் களிக்கப்பட்டிருக்கும் அதிகாரத் தூள்கள். அவற்றிலும் அநேகத்தைக், கவர்னர்-ஜெனரல் காரியஸ்தர்கள் கவனிப்பார்கள்; எல்லாவற்றிலுஞ் சாக்ஷாத் கவர்னர்-ஜெனரலே தலையிடலாம். இவ்வா றெவ்வொன்றாய்க் கழித்துக் கடைசியிற் பார்த்தால் 'கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவும்,'

'உலக்கை மெலிந்து உளிப்பிடியானது போலவும்' பொறுப் பாட்சியின் பேரால் மந்திரிகளுக் களிக்கப்படும் அதிகாரங் கள் ஆகக்கூடும். என்ன மிஞ்சப் போகிறது? தென்னை மரத்திற் புறப்பிடுங்க ஏறிய திருடன் 'ஏறியதற்கொன்று, இறங்கியதற்கொன்று, பறித்ததற்கொன்று, பங்குக்கு ஒன்று, நீங்களாய்க் கொடுப்பதொன்று, நானு யெடுத்துக் கொள்வதொன்று' என்று கணக்குப் பார்த்துக் கடைசியில் மரத்துக்காரனுக்கு ஒன்றுமே யில்லாமல், எல்லா இளநீர்களை யும் எடுத்துக் கொண்டோடியதுபோல் இருக்கிறது சமஷ்டி யில் மந்திரிகளுக்குப் பொறுப்பாட்சி வழங்கும் புதுமை.

ஒதுக்கப்பட்ட இலாகாக்களிற் சட்டப்படி கவர்னர்-ஜென ரல் மந்திரிகளைக்கலந் தாலோசிக்கவேண்டியதே யில்லை; எதேச்சாதிகார காரியங்களில் அவர்களைக் கலவாமலே கவர் னர்-ஜெனரல் தமதிஷ்டம்போல் எல்லாவற்றையும் நடத்த லாம்; சொந்தத் தீர்ப்பில் அவர்களைக் கலந்தோ கலவாமலோ கவர்னர்-ஜெனரல் காரியம் புரியலாம். ஆகையால் இம் மூன்று அதிகாரங்களையும் கவர்னர்-ஜெனரல் கையாளும் போது, மந்திரிகள் வெறும் பொம்மைக ளாக்கப்படுவார்கள். 'நவராத்திரிக் கொலு வைப்பது' போற் சட்ட சபைகளிற் குழுமுவதும், கூச்சலிடுவதுமான காரியங்களைத்தான் மந்திரி கள் செய்யலாம். அதற்குங் கவர்னர்-ஜெனரல் அனுக்ரஹம் வேண்டும். இல்லையானல் 45-வது ஷரத்தாகிற கோர நாட கம் நடைபெறும். அப்போது ஒரே கருந்திரையைத் தவிர வேறு காட்சி யெதுவுமே யிராது.

## சட்டசபையில் கவர்னர்-ஜெனரல்:

சட்டசபையின் ஒவ்வொரு கூட்டமும் கவர்னர்-ஜெனர லின் அனுக்ரஹமும் ஆசீர்வாதமு மில்லாமல் நடக்காது. சட்டசபையை 'ஹரி ஓம்' என்று ஆரம்பிப்பது முதல் 'அக்

கடா' என்று கலைப்பதுவரை, கவர்னர்-ஜெனரலுக்குஞ் சட்ட சபைக்கும் நெருங்கிய சம்பந்த மிருந்துவருகிறது. அந்த வரிசையை அடியிற் பாருங்கள் :—

(1) பிரதிஷ்டை செய்து வைப்பதும் பேசுவதும்.
(2) 'நடப்பு விதிகள்' செய்வது.
(3) மசோதாக்களுக்கு முன் அனுமதி யளிப்பது.
(4) மசோதாக்களைச் சிபாரிஷ் செய்வது.
(5) சட்டசபைகளுக்குச் செய்தி யனுப்புவது.
(6) சட்டசபைகளை ஒரே யிடத்திற் கூட்டுவது.
(7) மசோதாக்களை அங்கீகரிப்பது அல்லது மறுப்பது.
(8) அவசரச் சட்டங்கள் பிறப்பிப்பது.
(9) 'கவர்னர்-ஜெனரல்-சட்டங்கள்' செய்வது.
(10) சட்டசபைகளைக் கலைத்து, அரசியலையே நிறுத்தி வைப்பது.

இவைகளைப்பற்றித் தனித்தனியாய் விஸ்தரிக்க வேண்டியதில்லை; மூன்றாய்ப் பிரித்து மொத்தமாய்ப் பேசலாம். அதுவே விஷயக் கோர்வைக்கும் விஷயத் தெளிவுக்கும் ஏற்றதாயிருக்குமென் றெண்ணுகிறேன்.

i. நடைமுறை யாதிக்கம்.
ii. மசோதாக்கள்மீ தாதிக்கம்.
iii. எதேச்சாதிகார ஆதிக்கம்.

**I. நடைமுறை யாதிக்கம்:** இது சட்டசபையில் கவர்னர்-ஜெனரலுக்குள்ள பத்துவிதமான ஆதிக்கங்களில் முதலிரு இனங்களைப் பற்றியது. சட்ட சபைகளைப் பிரதிஷ்டை செய்துவைப்பதும், சட்டசபைகளிற் பேசுவதுமாகிற காரியங்களில், வழக்கமாய் கவர்னர்-ஜெனரலுக்குள்ள அதிகாரங்களே இச்சட்டத்திலும் வழங்கப்பட்டிருந்தாலும், ஜனநாயக

தத்துவத்தின்மீது சமைக்கப்படுவதாய்ச் சொல்லப்படுஞ் சமஷ்டியில், அவை சம்பந்தப்பட்ட ஷரத்துகள், அவ்வளவு அழுத்தமாய் அமல் செலுத்தவேண்டிய அவஸ்யமில்லை. பிரிட்டிஷ் பார்லிமெண்டில், மன்னர் நடந்துகொள்வது போற் செய்யலாம். ஆனால் அங்கு நடக்கும் அரசியல் வேறு; இங்கு நடப்பது வேறு. அங்கு ஜனங்களுக்காக ஜனங்களால் அரசாங்கம் நடத்தப்படுகிறது; இங்கு பிரிட்டிஷ்காரர்களுக்காக பிரிட்டிஷ்காரர்களால் நடத்தப்படுகிறது. ஆகையால் அதற்கு மிதற்குஞ் சிலேடை செய்வது செல்லாது.

சட்டசபையைக் கூட்டுவதிற் கவர்னர்-ஜெனரல், சட்டத்தாலொன்றுங் கட்டுப்படுத்தப்படவில்லை. 19, 20-வது ஷரத்துகளின்படி ஒரு வருஷத்தில் ஒரு முறையாவது-குறைந்த பக்ஷம்-சட்டசபைகளைக் கூட்ட வேண்டுமென்று விதியிருந்தாலும், 45-வது ஷரத்தை யமலுக்குக் கொண்டு வந்து அந்த விதியையும், அரசியல் முழுதையும் ரத்துச் செய்ய முடியும். ஆகையால் ஒரு வருஷத்துக் கொருமுறை கூடச் சட்டசபைகள் கூட்டப்படவேண்டு மென்கிற கட்டாயம் இல்லை. என்றைக்கோ எப்பொழுதோ கவர்னர்-ஜெனரல் தயவு வைத்தால்தான் சட்டசபை நடக்கலாம்.

தேசத்தில் நெருக்கடி யேற்படாமல் அரசாங்கத்தார் அடிக்கடி சொல்லும் 'அமைதியும் சமாதானமும்' அப்படியே நிலவுங் காலங்களிற் சாதாரணமாய் வருஷத்திலிரண்டு தரஞ் சட்ட சபைகள் கட்டாயங் கூட்டப்படுகின்றன. அதுவுஞ் ஜன சௌகர்யத்துக்காகவோ அல்லது ஜனப் பிரதிநிதிகளின் சௌகர்யத்துக்காகவோ கூட்டப்படுவதில்லை. சர்க்கார் வரவு செலவைச் சட்ட சபைகளில் நிறைவேற்றுவதற்காகவே கூட்டப்படுகிறது.

அப்படிக் கூட்டப்படுஞ் சட்ட சபைகள், எப்படி நடக்க வேண்டு மென்பதற்குச் சில விதிகள் வேண்டுமல்லவா? அவைகளுக்குச் 'சட்ட சபை நடைமுறை விதிகள்' என்று பெயர் (Rules of Procedure for Legislature). அவற்றைச் செய்வதும் அநேகமாய் கவர்னர் - ஜெனரல்தான்; அவற்றை மாற்றுவதும் திருத்துவதும் அவரே. அவர் சம்பந்தமில்லாமல் அல்லது அவருக்குத் தெரியாமல் எதுவும், எந்தச் சபையிலும் நடக்காது. இதற்காதாரம் 38-வது ஷரத்து.

சமஷ்டி சபை ஒவ்வொன்றுந் தனக்குத்தானகவே 'நடைமுறை விதிகள்' செய்துகொள்ளலா மென்று அந்த ஷரத்தின் 1-வது பிரிவிற் சொல்லப்பட்டிருந்தாலும், கவர்னர்-ஜெனரல் எதேச்சாதிகாரம், சொந்தத் தீர்ப்பு, விசேஷப் பொறுப்பு சம்பந்தப்பட்ட மட்டில், கவர்னர்-ஜெனரல் இஷ்டப்படிதான் மந்திரிகள் நடக்கவேண்டுமென்று அதன் உட்பிரிவுகளிற் கூறப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கட்டுக் காவலோடு சட்ட சபைகளைத் தனி மனிதரான கவர்னர்-ஜெனரல் நடத்துவது, பார்லிமெண்டரி முறைக்கும் ஜனநாயக தத்துவத்துக்கும் எவ்வளவோ முரணானது. என்றாலும் வேண்டுமென்றே இம்முரண்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சட்ட சபைகள் அத்து மீறியும், கட்டுக் காவலைக் கடந்தும் ஜனநாயக சத்தியார்த்தத்துக்குட் போய்விடக்கூடா தென்பதற்காக, அதற்குத் தகுந்த விதத்தில் 'நடைமுறை விதிகள்' நல்ல பாதுகாப்புகளோடு செய்யப்படுகின்றன.

**II. மசோதாக்கள்மீ தாதிக்கம்:** இது சட்டசபையில் கவர்ணர்-ஜெனரலுக்குள்ள பத்துவிதமான ஆதிக்கங்களில் 3, 4, 5, 6, 7 இனங்களைப் பற்றியது. அதாவது சட்டசபை

களிற் சட்டமாக்கப்படுவதற்காகக் கொண்டுவரப்படும் மசோதாக்கள்மீது, கவர்னர் - ஜெனரலுக்குள்ள அதிகாரமென்ன, எவ்வளவு என்பதை நிதர்ஸிப்பது.

இதில் கவர்னர்-ஜெனரலுக்கு 5 விதமான அதிகாரங்களிருக்கின்றன:—

(1) பூர்வாங்க அனுமதி அளிப்பது அல்லது மறுப்பது.

(2) விவாதத்தை யனுமதிப்பது அல்லது தடுப்பது.

(3) மசோதாவைச் சிபாரிஷ் செய்வது.

(4) சட்டசபைகளுக்குச் செய்தி யனுப்புவது.

(5) மசோதாவை அங்கீகரிப்பது அல்லது மறுப்பது.

(1) **பூர்வாங்க அனுமதி :** சட்டமாக்கப் படுவதற்காகச் சட்டசபைக்குக் கொண்டுவரப்படுஞ் சில மசோதாக்களுக்கு கவர்னர்-ஜெனரலின் பூர்வாங்க அனுமதி (முன் அனுமதி-Previous Sanction) வேண்டும். அஃதில்லாமல் அத்தகைய மசோதாக்கள் சட்டசபைக்குக் கொண்டுவரப்படவே கூடாது. அவை யின்னின்னவையென்று சொல்லக்கூடிய ஷரத்துகள் கவர்னர்-ஜெனரல் 'எதேச்சாதிகார ஜாபிதா * வில் ஏராளமாயிருக்கின்றன. அவற்றைத் தவிர **108**-வது ஷரத்தென் றொன்று தனியாயிருக்கிறது. அதன்படி பின்வரும் மசோதாக்கள் பூர்வாங்க அனுமதியின்றிப் பிரரேபிக்கப்படக் கூடாது :

(i) பிரிட்டிஷ் இந்தியா சம்பந்தப்பட்ட எந்தப் பார்லிமேண்டுச் சட்டத்தையும் ஷரத்தையும் ரத்துச் செய்ய அல்லது திருத்தக்கூடிய மசோதா.

(ii) 'கவர்னர்-ஜெனரல் அல்லது கவர்னர் சட்டங்க'ளையும், அவசரச் சட்டங்களையும் ரத்துச் செய்ய அல்லது திருத்தக்கூடிய மசோதா.

---

* பக்கங்கள் 121 முதல் 133 வரை.

(iii) கவர்னர்-ஜெனரல் எதேச்சாதிகாரம் எதையும் பாதிக்கக்கூடிய மசோதா.

(iv) போலீஸ் படையைப்பற்றிய சட்டங்கள் அல்லது விதிகளுக்கு முரணான மசோதா.

(v) ஐரோப்பிய, பிரிட்டிஷ் பிரஜைகள் சம்பந்தப்பட்ட கிரிமினல் கேஸ் நடைமுறைகளுக்கு விரோதமான மசோதா.

(vi) பிரிட்டிஷ் இந்தியாவில் வசிக்காத யாருக்கும், பிரிட்டிஷ் இந்தியாவில் வசிக்கிறவர்களைவிட அதிகமான வரி விதிக்கும், அல்லது பிரிட்டிஷ் இந்தியாவில் நிர்வகிக்கப்படாத கம்பெனிகளுக்கு, பிரிட்டிஷ் இந்தியாவில் நிர்வகிக்கப்படுகிற கம்பெனிகளைவிட அதிகமான வரி விதிக்கும் மசோதா.

(vii) பிரிட்டனில் விதிக்கப்படும் அல்லது விதிக்கப் படக்கூடிய எந்த வருமானமும், சமஷ்டி வரியிலிருந்து தள்ளிக் கொடுக்கப்பட்டிருந்தால் அதற்கு முரணான மசோதா.

*இவைகளில் 1, 2, 3, 5 இனங்களில் மாகாணச் சட்ட சபைகளின் மீதும், கவர்னர்-ஜெனரல் அதிகாரஞ் செலுத்தலாம். அதாவது அவை சம்பந்தப்பட்ட மசோதாக்களை கவர்னர்-ஜெனரலின் பூர்வாங்க அனுமதியில்லாமல் மாகாண சட்டசபைகளிற் பிரரேபிக்கக் கூடாது.*

*பார்க்கப்போனால் பூர்வாங்க அனுமதியென்பது 'ஓட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பது போல், பாதுகாப்புக்கு மேற்பாதுகாப்பா யிருக்கிறது. சில மசோதாக்கள் தேசீய முறையில் விவாதிக்கப்படும்போது, பிரிட்டிஷ் சர்க்காரின் வேஷத்தைக் கலைத்து வெகு ஆபாசமான அலங்கோலத்தில் அதை நிறுத்திவிடக்கூடும் என்பதற்காக 'முளையிலேயே அத்தகைய எண்ணத்தைக் கிள்ளி*

யெறியும் நோக்கத்தோடு 'பூர்வாங்க அனுமதி' யென்னும் பேரால் 'பெருமையாய்'ச் சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது.

கவர்னர்-ஜெனரலின் பூர்வாங்க அனுமதி பெருத மசோதா, தேசத்துக்குஞ் தேச மக்களுக்கும் ஜீவாதாரமான தாயிருந்தாலும், அதற்குச் சட்டசபையில் அதிகப்படியான அல்லது ஏகோபித்த ஆதரிப்பிருந்தாலும் பிறக்காமலே செத்துப் போய்விடும்.

ஆகையால் பூர்வாங்க அனுமதியென்பது பிரிட்டிஷ் பாதுகாப்பு வர்க்கத்தில் பிரதானமான ஒரு பிரிவைத் தவிரப் பிறிதொன்றுமில்லை.

ஒரு மசோதா பூர்வாங்க அனுமதி பெற்று விட்டதால் மாத்திரஞ் சட்டமாகிவிடாது. விவாதத் தடை விதிப்பு, அங்கீகார மறுப்பு, மன்னர் சம்மத நிறுத்தி வைப்பு, புனராலோசனை அல்லது திருத்தத் திருப்பியனுப்புகளாகிற அத்தனை தத்துகளுக்குந் தப்ப வேண்டும். பிரிட்டிஷ் நலன்களைப் பாதிக்கக் கூடிய மசோதாக்களுக்கு இவ்வளவு 'லாக்கப்' (கதவடைப்பு) இருக்கும்போது, தேசத்திலிருக்கும் அடிமைத்தனம் எங்குத் தப்பி விடும்? அல்லது சில பிரத்தியேகப் பாதுகாப்புகளுக்குச் சதா பாராக் கொடுத்துக்கொண்டிருக்குங் கவர்னர்-ஜெனரலை யாரால் 'நில்' லென்று சொல்ல முடியும்?

ஏதாவதொரு தீவிரக் கட்சி (காங்கிரஸ் கட்சியைப் போல்) சட்ட சபைகளின் மெஜாரிட்டி பலத்தைக் கொண்டு, மந்திரிசபை யமைத்து, ஜனுதிபத்தியச் சத்தியார்த்தப்படி ஜன சாதகமான ஏதாவதொரு மசோதாவைக் கொண்டு வந்து, சட்டமாக்க விரும்பினுல், அதை யனுமதிக்க கவர்னர்-ஜெனரல் மறுக்கலாம். அப்போது மந்திரிகளும் அவர்களைத் தொடர்ந்து அங்கத்தினர்களும் சட்ட சபையில் தங்கள்

ஸ்தானத்தை ராஜிநாமாச் செய்வதன் மூலம், அம் மசோதா வுக்கு எவ்வித பலமும் ஏற்பட்டு விடாது. அரசியலில் வேண்டுமானுற் கடுமையான நெருக்கடியை யுண்டு பண்ண லாம். கவர்னர் - ஜெனரலுக்குள்ள அதிகாரங்களே ஜன சம்மதமற்றவைக ளாதலால், மேலுஞ் ஜன சம்மதத்தை மிதித்துத் துவைத்துக்கொண்டு 'பிரிட்டிஷ் பாதுகாப்பு வீரர்' என்னும் பட்டத்துக்கும் பரிசுக்கும் பாத்திரராய் அவர் நடந்துகொள்வார்.

(2) **விவாத அனுமதி அல்லது தடை:** இது சட்ட சபையில் மசோதாக்களின்மீது கவர்னர் - ஜெனரலுக்குள்ள பத்து ஆதிக்கங்களில் ஒன்றுயில்லாவிட்டாலும், மசோதாக் கள்மீதோ அல்லது சாதாரணமாகவோ, சட்ட சபைகளில் நடக்கும் விவாதத்தை அல்லது கேள்வியை அனுமதிக்கும் அல்லது தடுக்கும் அதிகாரத்தைச் சேர்ந்ததா யிருக்கிறது. இது சட்டத்தின் 38-வது ஷரத்திலும் ஏதேச்சாதிகார ஜாபிதாவின் 17-வது எண்ணிலுஞ்* சேர்க்கப் பட்டிருக்கிறது. அதன்படி இந்தியச் சமஸ்தானங்கள், அந்நிய நாடுகள், அதன் அரசர்கள், ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள், மாகாணங்களில் கவர்னர்-ஜெனரலுக்குள்ள ஏதேச்சாதிகாரங்கள், சுதேச மன்னரின் தனிப்பட்ட அல்லது குடும்ப சம்பந்தமான விவாதங்கள் அல்லது கேள்விகள் சட்ட சபையில் வராமல் கவர்னர்-ஜெனரல் தடுக்கலாம். இதுவும் பொதுவாய்ப் பாது காப்பு வர்க்கத்தைச் சேர்ந்ததுதான்.

இதே மாதிரி கவர்னர் - ஜெனரல், மசோதாக்கள் மீதேற்படும் விவாதத்தையுந் தடுக்கலாம்—ஷரத். 40 (2)

சட்ட சபையில் ஆஜர் செய்யப்படுவதாயிருக்கும் ஒரு மசோதாமீதோ, ஆஜர் செய்யப்பட்டிருக்கும் ஒரு மசோதா

* பக்கம் 123

மீதோ விவாதத்திலிருக்கும் ஒரு மசோதா அல்லது அதன் ஷரத்து மீதோ நடக்கும் அல்லது நடக்குமென்று அனுமானிக் கப்படும் விவாதமானது, இந்தியாவின் அல்லது அதன் பாகத் தின் அமைதிக்குஞ் சமாதானத்துக்கும் ஆபத்து வராமற் காப்பாற்றுவதாகிய தமது விசேஷபொறுப்பைப் பாதிக்கக் கூடுமென்று கவர்னர்-ஜெனரல் கருதினால், அவர் தமது எதேச் சாதிகாரப்படி உத்தரவு போட்டு மசோதாவை விவாதிக்கக் கூடாதென்று தடுக்கலாம்.

*இது 40-வது ஷரத்து 2-வது பிரிவிலுள்ள வாசகம். இஃதல்லாமல் நியமனப் பத்திரத்திலும் இதை யனுசரித்து இன்னொரு வாசகம் இருக்கிறது (பாரா 29.): அதாவது* "அப்பேர்ப்பட்ட விவாதத்தினாலேயே அமைதிக்குஞ் சமாதா னத்துக்கும் ஆபத்தேற்படுமென்று தோன்றினால்தான், அத் தகைய விவாதத்தைத் தடுக்கலாம்" *என்று கூறிக்கொண்டு வருகிறது. இவ்விரண்டு வாசகங்களுக்கும் அர்த்தம் ஒன்றா யிருந்தாலும், முந்திய ஷரத்துக்குப் பிந்திய பாரா ஒரு நிபந் தனைபோட்டு வழிகாட்டுகிறது. அதாவது, ஒரு மசோதாவோ அதன் ஷரத்தோ சட்ட சபைகளில் நிறைவேறிச், சட்ட மாகி அமலுக்கும் வந்தால் ஆபத்து என்பதற்காக விவாதத் தைத் தடுக்கக்கூடாதென்று வழி விடுகிறது. ஆகையால் விவாதத் தடையென்பது, பிற்காலத்துக்காகத் தற்காலத்திற் செய்யப்படும் முன்னேற்பா டல்லவென்றுலும், தற்காலத்துக் காகத் தற்காலத்திற் செய்யப்படுந் தற்காப்பல்லவென்று யாராற் சொல்ல முடியும்?*

*சில மசோதாக்களுக்குப் பூர்வாங்க அனுமதி கொடுக்கத் தான் வேண்டுமென்று ஏதேனும் நெருக்கடி யேற்பட்டால் அதைத் திருத்துவதற்கும் இந்த விவாதத்தடை, ஒரு கரு வியா யுபயோகிக்கப்படலாம். அப்போது பிடிவாதமுள்ள*

மந்திரிகள், கவர்னர்-ஜெனரலின் மூஞ்சியிற் கரிபூசவேண்டு மென்று விரும்பினுல் அப்படிப்பட்ட மசோதாவை விவாதிக் காமலே நிறைவேற்றலாம். ஆனுல் சட்டமாக்க முடியாது. அங்கீகார மறுப்பு மூலமாகவும், மன்னர் சம்மத நிறுத்தி வைப்பு மூலமாகவும், (நிறைவேற்றப்பட்ட மசோதாவை) கவர் னர்-ஜெனரல் நிர்மூலப்படுத்திவிடலாம்.

(3) **மசோதாச் சிபாரிஷ்:** இது சட்டசபையில் மசோ தாக்கள்மீது கவர்னர்-ஜெனரலுக்குள்ள பத்து ஆதிக்கங்களில் நாலாவ தினத்தைச் சேர்ந்தது. இது அநேகமாய் நிதி சம் பந்தப்பட்டதாய்த்தா னிருக்கும்.

அப்படிப்பட்ட மசோதாக்கள், கவர்னர்-ஜெனரல் சிபாரி ஷோடுதான் சட்டசபைக்கு வரும்—ஷரத்து 37.

37—(1) ஒரு மசோதாவோ, திருத்தப் பிரேரணையோ,

(அ) புதிதா யொரு வரி விதிப்பது அல்லது ஏற்கனவே இருந்ததொரு வரியை யுயர்த்துவதா யிருந்தாலும்; அல்லது,

(ஆ) கடன் வாங்குவதுபற்றி ஒழுங்குமுறை செய்வதாகவோ, கடன்களுக்கு ஜாமீன் ஏற்றுக் கொள்வதாகவோ, சமஷ்டி சர்க் கார் பணப்பொறுப்பு சம்பந்தமான சட்டங்களைத் திருத்துவ தாகவோ இருந்தாலும்; அல்லது,

(இ) ஒரு செலவினத்தை 'பந்தகச் செலவு'* என்று சொல்லுவதாகவோ அல்லது ஒரு பந்தகச் செலவை அதிகரிப்ப தாகவோ இருந்தாலும்; அத்தகைய மசோதா அல்லது திருத்தப் பிரேரணை, கவர்னர்-ஜெனரல் சிபாரிஷ் இல்லாமற் சட்டசபைக் குக் கொண்டுவரப்படலாகாது.

---

* 'பந்தகச் செலவு' என்பது சர்க்கார் வரிமீது பொறுப்பு வைக் கப்பட்டுள்ள செலவுகளைக் குறிக்கும். அதாவது சர்க்கார் வருமானத் தையே அடகு அல்லது ஈடுவைத்ததுபோல்.

அதேமாதிரிதான் 'மான்யச் செலவு'ம். கவர்னர்-ஜெனரல் சிபாரிஷ் இல்லாமல் எந்த மான்யச் செலவும் மசோதாவாகவோ திருத்தமாகவோ சட்டசபையிற் சமர்ப்பிக்கப்படக் கூடாது—ஷரத். 34 (4)

இவையல்லாமற் சட்டசபைகளைச் சவாரி செய்யக்கூடிய அதிகாரங்களுங் கவர்னர்-ஜெனரலுக் களிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு 'ஒப்புக்கொள்ளப்பட்ட முடிவான செலவுத் திட்டம்' என்று பெயர்—[ஷரத். 35, 36.] அந்தத் திட்டத்தை கவர்னர்-ஜெனரல் தயாரித்துச் சட்டசபைக்கு அனுப்புவார். அதன்மீது விவாதமோ, வோட்டுரிமையோ கிடையாது. அந்தத் திட்டத்தை 33-வது ஷரத்துப்படி கவர்னர்-ஜெனரல், சட்டசபையில் ஆஜர் செய்வார். அதிலுள்ள இன விவரப்படியும் பணப்பற்று விவரப்படியுந்தான் அந்த வருஷச் செலவு செய்யப்படவேண்டும்.

35—(1) கவர்னர்-ஜெனரல், தமது கையொப்பத்துடன் ஒரு ஷெட்யூலைத் தயாரிப்பார். அதில்,

(அ) 34-வது ஷரத்துப்படி சட்டசபை யனுமதித்த மான்யச் செலவுகள்;

(ஆ) சமஷ்டி வரியின் மீது ஏற்பட்ட பந்தகச் செலவுக்காக வேண்டிய அநேக தொகைகள்-முன்னே சட்டசபையிற் சமர்பிக்கப்பட்டுள்ள 'ஸ்டேட்மெண்டு'க்கு மேற்படாமல், குறிப்பிடப்பட்டிருக்கும்.

இதில் ஏதாவதொரு மான்யச் செலவைச் சட்டசபை முழுதும் நிராகரிக்கவோ குறைக்கவோ செய்தால், அந்த மான்யங்களிலுள்ள தொகை முழுதையுஞ் செலவிடுவது, தனது விசேஷப் பொறுப்பைச் சேர்ந்ததென்று கவர்னர்-ஜெனரல் கருதினால், முன்னே சட்டசபையில் ஆஜர் செய்யப்பட்ட மான்யத்திற் கண்ட தொகையை இந்த ஷெட்யூலிற்

சேர்க்கலாம். அதாவது வோட்டின் மூலம் சட்டசபையில் எற்பட்ட மெஜாரிட்டியையே தூக்கி யெறிந்துவிடலாம்.

'முடிவான செலவுத் திட்டம்' என்னும் ஷெட்யூலைச் சட்டசபையில் விவாதிக்கவோ, வோட்டுக்குவிடவோகூடாது-ஷரத் 35 (2)

அந்த ஷெட்யூலிற் சேர்க்கப்பட்டுள்ள எந்த பந்தகச் செலவும் சட்டப்படி செல்லாது—ஷரத் 35 (3)

ஆகையால், சட்டசபை அனுமதிக்கும் அல்லது நிராகரிக்கும் என்னும் அச்சமோ சந்தேகமோ இல்லாமல் கவர்னர்-ஜெனரல் எந்தச் செலவுக்காகவும் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் ஷெட்யூலிற் சேர்த்துச் செலவிடலாம். இதனால் சர்க்கார் வரவு-செலவு, தனி மனிதரான கவர்னர்-ஜெனரலிடந் தாராளந் தண்ணீர் பட்டபாடாய் விடப்படுகிறது.

ஷெட்யூலிற் சேர்க்கப்பட்ட தொகை அந்த வருஷச் செலவுக்குப் போதாமல், மேலுமொருதொகை தேவையாயிருந்தால், அந்த அதிகச்செலவுக்காக இன்னொரு ஷெட்யூல் அல்லது பட்ஜெட்டை (சாதாரண பட்ஜெட்டாகவே) கவர்னர்-ஜெனரல் தயாரிக்கலாம். அது 'ஸப்ளிமெண்டரி பட்ஜெட்' --உபரிச் செலவுத்திட்டம் என்று அழைக்கப்படும்—ஷரத் 36.

மேலே கூறியுள்ள மசோதாக்களும், எதேச்சாதிகார-சொந்தத்தீர்ப்பு ஜாபிதாக்களிற் சேர்க்கப் பட்டுள்ள இவை போன்ற இதர மசோதாக்களும், கவர்னர்-ஜெனரல் சிபாரிஷ் இல்லாமல் சட்டசபைகளிற் சமர்ப்பிக்கப்படலாகாது. ஆகையால் சர்க்கார் வரவு-செலவாகிற கஜானுவும் அதன் சாவியும், கவர்னர்-ஜெனரல் கையிலேதா னிருக்கிறதென்றும், சட்டசபைக்கும் அதன் மூலம் பொது ஜனங்களுக்கும், ஜவாப்தாரிக

ளான மந்திரிகள், பொக்கிஷத்திற் கை வைக்கக் கூடா தென்றும்* இந்தியா எண்ணினு லென்ன தவறிருக்கிறது?

(4) **சட்டசபைச் செய்தி**: இதுவுஞ் சட்டசபையில் மசோதாக்கள் மீது கவர்னர்-ஜெனரலுக்குள்ள பத்து ஆதிக் கங்களில் ஒன்று—ஐந்தாவது.

சட்டசபைகளுக்குச் செய்தியனுப்பி, இரு சபைகளையும் ஒரேயிடத்திற் கூடும்படியும், இருசபை யங்கத்தினர்களையும் அந்தக் கூட்டத்தில் ஆஜராயிருக்கும்படியும் உத்தரவுசெய்து, அதில் கவர்னர்-ஜெனரல் பேசுவதென்பதுதான் ‘சட்டசபைச் செய்தி’ யென்னும் இத்தலைப்பின் அர்த்தம்.

இவ்வளவு காரியங்களையும் கவர்னர்-ஜெனரல் தனது எதேச்சாதிகாரத்திற் செய்வார்:

20—(1) கவர்னர்-ஜெனரல் தமது எதேச்சாதிகாரத்தில் சமஷ்டி சட்டசபைகள் ஏதாவதொன்றில் அல்லது இரண்டுஞ் சேர்ந்த கூட்டுச் சபையில் பேசலாம்; அங்கத்தினர்கள் அதற்கு ஆஜராக வேண்டுமென்று சொல்லலாம்.

(2) சட்டசபையில் விவாதிக்கப்பட்டுவரும் ஒரு மசோதாவைப்பற்றியோ அல்லது வேறெதைப்பற்றியோ சமஷ்டி சட்டசபைகளி லேதாவ தொன்றுக்கு கவர்னர்-ஜெனரல் தமது எதேச்சாதிகாரத்திற் செய்தி யனுப்பலாம்; அப்படி யனுப்பப் பட்ட செய்தியைப்பெற்ற சபை, அதிற் கூறப்பட்டிருக்கிற காரி யங்களைக் கோரப்பட்டிருக்கிறபடி செய்து முடிக்க வேண்டும்.

இரண்டு சபைகளையும் ஓரிடத்திற் கூட்டுவதும், பேசு வதும் பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையைச் சேர்ந்ததென்று

---

* “ராணுவத்தையும் பொக்கிஷத்தையும் நாம் தொடக்கூடாது; பாதுகாப்புகள் சகிக்கக் கூடியவைகளல்ல” என்று ஸ்ரீ கே. ஆர். சாஸ்திரி சொன்ன அபிப்பிராயத்தை இத்துடன் சேர்த்துப்படிக்கவும்—பக்கம் 25.

சொல்லப்படுகிறது. வாஸ்தவம்; உருவத்தால் ஒத்திருப்பதைக்கொண்டு, குதிரையைக் கழுதையென்றும், கழுதையைக் குதிரையென்றுங் கூறமுடியுமா? பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இக்கலப்புக் கூட்டம், ஏன் எப்பொழுது கூட்டப்படுகின்றதென்றும், இந்தியச் சட்ட சபைகளில் இக் கலப்புக் கூட்டம், ஏன் எப்பொழுது கூட்டப்படுமென்றுஞ் சட்டத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடி பார்த்தால், இந்த வித்தியாசம் எளிதிற் புலப்படும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் இரு சபைகளையும் ஒரே இடத்திற் கூட்டுவது, அங்கு என்ன எண்ணத்தோடு செய்யப்பட்டாலும், 'சூழ்ச்சி யில்லை' யென்பதென்னவோ நிச்சயம். ஆனால் இங்குச் சட்ட சபைகளின் கலப்புக் கூட்டம் நல்லெண்ணத்தோடு கூட்டப்படுகிறதென்றும், இனியும் நல்லெண்ணத்தோடு கூட்டப்படுமென்றும் நம்பத்திடமில்லை; ஏகாதிபத்தியச் சூழ்ச்சிக்கும் இதற்கும், புடமுடியாத பிடிப்பு இருக்கிறது; அந்தப் பிடிப்புக்கு ருஜு 31-வது ஷரத்து.

இந்த ருஜுவை மெய்ப்பிக்கக் கொஞ்சம் அவகாசமெடுத்துக்கொண்டு, கலப்புக் கூட்டக் கொள்கையில் பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறைக்கும், இந்தியச் சட்டசபை முறைக்குமுள்ள வித்தியாசத்தை முன்னே சில வரிகளில் முடித்து விடுகிறேன்.

பிரிட்டனில் ஒரு ராஜா முடியிழந்தோ உயிரிழந்தோ மறு ராஜா பட்டத்துக்கு வரும்போதும், அல்லது ஒரு ராஜாவுக்கு விவாகம் நடக்கும்போதும், அல்லது இவைபோன்ற ஏதோவொரு ராஜ சம்பவம் நிகழும்போதுந்தான், பிரபுக்கள் சபையும் காமன்ஸ் சபையும் ஒரேயிடத்திற் கூட்டப்படுகின்றன.

ஆனால் இந்தியாவில் இக்கலப்புக் கூட்டம் ஏன், எப்பொழுது, எதற்காகக் கூட்டப்படுகிறதென்பதை இப்பொழுது பார்ப்போம். கலப்புக் கூட்டத்தைக் கூட்ட, இந்தியாச் சட்டத்தின் 20-வது ஷரத்து, கவர்னர்-ஜெனரலுக்கு அதிகாரமளிக்கிறது. ஆனால் திட்டமாய் இதற்காகத் தான் கூட்டப்படவேண்டுமென்று அதிலொன்றுங் கூறப்படவில்லை. "மசோதாவைப்பற்றியோ வேறெதைப் பற்றியோ" என்று அதில் வரும் வாசகம், அதன் நோக்கத்தையும் எண்ணத்தையும் நமக் கொழிக்கவில்லை. பிரிட்டனில் பார்லிமெண்டின் இரு சபைக் கூட்டம் நடத்தப்படும் நோக்கம் வேறு; இந்தியாவிற் சட்டசபையின் இருசபைக் கூட்டம் நடத்தப்படுவதின் நோக்கம் வேறு; இரண்டுக்கும் ஏணிவைத்தாலும் எட்டாத வித்தியாச முண்டு.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில்-எந்தக் கட்சி வந்தாலும், பிரிட்டிஷ் ஜனங்களின் குற்றங் குறைகளை நிவிர்த்திக்கிறோமென்று சொல்லிக்கொண்டுதான் வருகின்றன. பிரிட்டிஷ் பார்லிமெண்டோ, காபினெட்டோ (மந்திரி சபை) எப்பொழுதுஞ் சட்டத்தையும் ஷரத்தையும்விடப் பொதுஜன நன்மையையுஞ் சௌகர்யத்தையுமே பிரதானமாகக் கருதுகின்றன. சர்க்காரின் தேவைக்காக வோட்டளிப்பதைவிட, ஜனங்களின் தேவைக்காக வோட்டளிப்பதையே ஒவ்வொரு பார்லிமெண்டங்கத்தினனும் முக்கியமென்று நினைக்கிறான். தெருவில் ரோந்து சுற்றும் போலீஸ்காரன் முதல், பிரிட்டிஷ் அரசியலை நிர்வகிக்கும் பிரதம மந்திரிவரை எல்லா உத்தியோகஸ்தர்களும்,இந்த நோக்கத்தோடுதான் ஒவ்வொருநாளும் வேலை செய்கிறார்கள். ஆனால் இந்தியாவிலோ, இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்திலோ, எச்சிலைத் தொட்டுக் கொண்டு எந்தப்பக்கம் புரட்டினாலும், இந்த நோக்கத்தைக் காணோம். சட்டசபை யங்கத்தினர்கள், ஜன சௌகர்ய

மென்னும் வார்த்தையை யுச்சரிப்பதாலும், உள்ளத்தில் நினைப்பதாலும் என்ன பிரயோஜனம்? வழி மறித்துக் கொண்டு சட்டங்க ளிருக்கின்றன; கவர்னர்-ஜெனரலு மிருக்கிறார்.

## 40-வது ஷரத்து 2-வது பிரிவுப்படி :—

"கவர்னர்-ஜெனரல் தனது எதேச்சாதிகாரத்தில், சமஷ்டி சபையில் ஆஜர் செய்யப்பட்டிருக்கும் அல்லது ஆஜர் செய்யப் படுவதா யுத்தேசிக்கப்பட்டிருக்கும் ஒரு மசோதா அல்லது திருத்த மசோதா மீதோ அல்லது அதன் ஷரத்தின் மீதோ செய்யப்படும் விவாதமானது, இந்தியாவின் அல்லது அதன் எந்த பாகத்தின் அமைதிக்குஞ் சமாதானத்துக்கும் ஆபத்தையுண்டாக்கும் என்று எண்ணினால், அவர் தமது எதேச்சாதிகாரத்தை யுபயோகித்து, அப்படிப்பட்ட விவாதத்தை மேற்கொண்டு நடக்க விடாமல் தடுக்கலாம்".

இந்த வாசகத்தோடு 35, 36-வது ஷரத்துகளின்படி யேற்படும் 'முடிவான செலவுத் திட்டத்தையும், 'உபரிச் செலவுத் திட்ட'த்தையுஞ் சேர்த்துப்படித்தால், சட்ட சபைகள், கவர்னர்-ஜெனரலின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய வேண்டிய வேலைக்காரர் 'கும்பல்' என்று தோன்றும்.

மேலும் 40-வது ஷரத்திற் பிரஸ்தாபிக்கப்படும் ரகத்தைச் சேர்ந்த மசோதா அல்லது திருத்தம் அல்லது ஷரத்தின் மீது செய்யப்படும் விவாதம், தேசத்தின் 'அமைதிக்குஞ் சமாதானத்துக்கும் ஆபத்தை யுண்டாக்கும்' என்று தீர்மானிப்பவரும் தீர்ப்பளிப்பவருங் கவர்னர்-ஜெனரலாகவே யிருக்கிறார். தேசத்தின் அமைதியுஞ் சமாதானமும் யாவை, எப்படி வரும் என்பனவற்றைத், தேச மஹா ஜனங்களாகவும் தேச மஹா ஜனங்களின் பிரதிநிதிகளாகவுமிருக்கிற மந்திரிகளைவிட அதிகமாய் கவர்னர்-ஜெனரல், அறிந்திருப்பார் அல்

லது அறிந்திருக்க முடியுமென்று யாரால் நம்பமுடியும்? மந்திரிகளைப்போல் கவர்னர்-ஜெனரல் பொது ஜனங்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருக்கவில்லை. 'பாம்பின் கால் பாம்புக்கே தெரியும்' என்பது போலவும், 'ஊமையின் பேச்சை ஊமையின் தாயறிவள்' என்பது போலவும், தேச மக்களின் தேவையுந் திருப்தியும், இந்த தேசத்தில், தேச மக்களில், பிறந்து வளர்ந்து வாழ்கிறவர்களான மந்திரிகள்தான் அறிவார்கள். அந்நிய தேசத்திலிருந்து வந்து, ஐந்து வருஷங்கள் சிம்லாச் சிகரத்திலும் புதிய தில்லியிலும் இருந்து சுகமனுபவித்துவிட்டுப் போகிற கவர்னர்-ஜெனரல், ஒரே மண்ணில் பிறந்து, ஒரே தண்ணீரைக்குடித்து, ஒரே காற்றை உச்சுவாசித்து, ஒரே வானத்தின் கீழ் வாழ்கிற மந்திரிகளைப்போல், ஜனங்களின் குற்றங் குறைகளை நிவிர்த்திக்குந் தன்மையுள்ளவராகவும் சிரமமுஞ் சிரத்தையு முள்ளவராகவு மிருக்கமாட்டார்.

**இரு சபைகளின் கலப்புக் கூட்டம்,** 34-வது ஷரத்திற் சொல்லப்படுகிற பல காரணங்களைக்கொண்டு கூட்டப்பட்டாலும் அதன் முடிவு ஒன்றுதான். அதாவது ஜனப்பிரதிநிதி சபையான 'கீழ்சபை' யின் கோரிக்கையைக் கலப்புக்கூட்டத்தில் வோட்டுக்குவிட்டு, உருப்படாமற் போம்படி செய்வதும், மந்திரிகளுக்குத் தேசத்தின் ஆதரவு கிடையாதென்று சும்மா நிரூபிப்பதுமாகிற 'ஏகாதிபத்தியச் சூழ்ச்சி'. எப்படி யென்று பாருங்கள்! அதற்காக 34-வது ஷரத்தின் முழுவாசகத்தையும் தர்ஜுமாச்செய்து தரவேண்டுமென்று அவஸ்யமில்லை; வெறும் நடை முறையைச் சொல்லிவிடுகிறேன்.

சமஷ்டி சர்க்காரில் இரண்டுசபைகள் இருக்குமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேனல்லவா? அவை யிரண்டிலும்

மசோதாக்கள் முறையே நிறைவேற்றப்பட்டுத்தான், கவர்னர்-ஜெனரல் அங்கீகாரத்துக்கு அனுப்பப்படும்.

அப்படியொரு மசோதா ஒரு சபையில் (கீழ் சபையில்) நிறைவேற்றப்பட்டு, 'அடுத்த சபை'க்கு (மேல் சபைக்கு) அனுப்பப்பட்டிருக்கிறதென்று வைத்துக்கொள்வோம். அந்தச் சபை அந்த மசோதாவை முழுதும் நிராகரிக்கலாம்; அல்லது அதிற் சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கருதலாம். அதுபற்றி அவ்விரு சபைகளுஞ் சமரஸமான முடிவுக்கு வர முடியாமலுமிருக்கலாம். அற்காக மேல் சபை, அம்மசோதாவைக் காலாவதி தோஷத்துக்குள்ளாக்குவதற்காக, அநாவஃஸ்யமாய்க் காலங்கடத்தலாம். அப்படியொரு ஆறுமாதம் ஆகிவிட்டால், கவர்னர்-ஜெனரல், இரண்டு சட்டசபைகளின் கலப்புக்கூட்டத்தைக் கூட்டும்படியும், எல்லா மெம்பர்களும் ஆஜராகி யிருக்கும்படியும் உத்தரவிடலாம். அதில் மேற்படி மசோதா விவாதிக்கப்பட்டு வோட்டுக்கு விடப்படும். சாதகமாய் அதிக வோட்டுகள் கிடைத்ததானுல், மசோதா நிறைவேறியதாய்க் கருதப்பட்டு, கவர்னர்-ஜெனரல் அங்கீகாரத்துக்கு அனுப்பப்படும். இல்லேயானுல் அக்கலப்புக் கூட்டத்திலேயே அது செத்துவிடும்.

இந்த இடத்திற் சமஷ்டி சட்ட சபைகளேப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். சட்ட சபை யங்கத்தினர் அமைப்பைப்பற்றி, 'அசெம்பிளி' என்றழைக்கப்படுங் கீழ் சபைக்கு, மறை முகமான தேர்தலும், யுக்தபாகமான வாக்குரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அதுவொரு விதமாய்ப் பார்க்கப் போனுல், மாகாண சட்ட சபைகளின் மறு பதிப்பு அல்லது பிரதி பலிப்பு என்று சொல்லலாம் போலிருக்கிறது. இதில் மொத்தம் 375 ஸ்தானங்கள் - மாகாணங்களுக்கு 250; சமஸ்தானங்களுக்கு 125.

'கவுன்ஸில் - ஆப்-ஸ்டேட்' என்றழைக்கப்படும் மேல் சபையில் மொத்தம் 260 ஸ்தானங்கள் - மாகாணங்களுக்கு 150; சமஸ்தானங்களுக்கு 104; நியமனம் 6.

இரண்டு சபைகளுஞ் சேர்ந்த கலப்புக் கூட்டத்தில் கவர்னர்-ஜெனரல் உத்திரவுப்படி, எல்லா மெம்பர்களும் எவ்வித அட்டியுமின்றி ஆஜராகி யிருந்தால், 635 பேர்களிருப்பார்கள்-சமஸ்தானப் பிரதிநிதிகள் 229; நியமண அங்கத்தினர்கள் 6; மற்றவர்கள் மாகாணப் பிரதிநிதிகள்.

சமஸ்தானப் பிரதிநிதிகளும், நியமான அங்கத்தினர்களும் எப்பொழுதுமே கவர்னர்-ஜெனரல் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பதிவு செய்துகொள்ளப்படலாம். ஒருவர் குறையாமல் எல்லாருமே ஏகாதிபத்தியக் கொள்கையை யாதரிப்பார்கள். ஆகையால் மேலே கூறியுள்ளது போன்ற நெருக்கடியைச் சமாளிக்க, கவர்னர்-ஜெனரல் கலப்புக் கூட்ட முறையைக் கையாளுவதில் ஆச்சர்யமில்லை.

பிரஸ்தாப மசோதா, கலப்புக் கூட்டத்தில் வோட்டுக்கு விடப்பட்டால், கண்டிப்பாய் கவர்னர்-ஜெனராலுக்குச் சாதகமான முறையிலேயே முடிவுறும். அதாவது அந்தக் கூட்டத்தில் எல்லா மெம்பர்களும் ஆஜராகியிருந்தால் அவருக்கு வேண்டியது 318 வோட்டுகள். அதில் 235 வோட்டுகள் அவருக்குக் கிடைப்பது நிச்சயம் என்று ஏற்கனவே சொல்லி யிருக்கிறேன். பாக்கி 83 வோட்டுகள் கிடைப்பதும் அரிதல்ல; சொடக்கிடு நேரத்தில், கடைக்கண் சிமிட்டினுற் சம்பாதித்து விடுவார். அதனுலேதான் 34-வது ஷரத்து 3-வது பிரிவு, கலப்புக்கூட்டங் கூட்டும்படி கவர்னர்-ஜெனரலை வற்புறுத்துகிறது.

(5) **அங்கீகாரம் அல்லது மறுப்பு:** இது சட்டசபையில் மசோதாக்கள்மீது கவர்னர்-ஜெனராலுக்குள்ள பத்து

ஆதிக்கங்களில் 7-வது இனத்தைச் சேர்ந்தது. சொல்லப் போனால் இது, சட்டசபைகளிற் சட்ட மியற்றும் நடைமுறை யைத்தான் குறிக்கும். நிதிசம்பந்தமான மசோதாக்களைத் தவிர, மற்ற மசோதாக்க ளெல்லாம் இப்படித்தான் நிறை வேற்றப்படவோ நிராகரிக்கப்படவோ வேண்டும். இதுவும் கவர்னர்-ஜெனரலின் எதேச்சாதிகாரத்தைச் சேர்ந்த சரக் குத்தான். எந்த மசோதாவுங் கவர்னர்-ஜெனரலுடைய உண்மையான அங்கீகார மில்லாமற் சட்டமாகாது. இதற்கு ஆதாரம் 32-வது ஷரத்து:—

**32**—(1) ஒரு மசோதா இருசபைகளாலும் நிறைவேற்றப் பட்டதும், கவர்னர்-ஜெனரல் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட வேண்டும். கவனர்-ஜெனரல் தமது எதேச்சாதிகாரத்தில் அம் மசோதாவை மன்னர்பேரால் அங்கீகரிப்பதாய் அல்லது நிராகரிப்ப தாய் அறிவிக்கலாம்; அல்லது மன்னர் சம்மதத்துக்காக நிறுத்தி வைப்பதாய்த் தெரிவிக்கலாம்.

அல்லது, அம் மசோதாவைச் சட்டசபைகளுக்கே திருப்பி, மசோதா முழுதையுமோ அல்லது சில ஷரத்துகளையோ புனராலோசனை செய்து திருத்தும்படி செய்தியனுப்பலாம். சட்ட சபைகள் கவர்னர்-ஜெனரலின் சிபாரிசை யனுசரித்து அப்படியே செய்யலாம்.

(2) மன்னர் சம்மதத்துக்காக நிறுத்திவைக்கப்பட்டமசோதா, கவர்னர்-ஜெனரலுக் கனுப்பப்பட்ட நாளிலிருந்து 12 மாதங் களுக்குள் மன்னர் சம்மதம்பெற்று கவர்னர்-ஜெனரலால் அறிவிக்கப் படாதவரை சமஷ்டி சபையின் சட்டமாக மாட்டாது.

(3) கவர்னர்-ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட எந்தச் சட்ட மும், வர்னர்-ஜெனரல் அங்கீகாரம் பெற்ற அந்த நாளிலிருந்து, 12 மாதங்களுக்குள் மன்னரால் நிராகரிக்கப்படலாம். அதை உடனே கவர்னர்-ஜெனரல் ஓர் அறிக்கையின் மூலம் தெரியப் படுத்துவார். அந்தத் தேதிமுதல் அந்தச் சட்டம் அமலி-லில்லா மற் செத்துவிடும்.

இதுதான் 32-வது ஷரத்தின் முழுவாசகம். இதிலிருந்து சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா படிப் படியா யடையும் பல நிலைகள் புலனுகின்றன.

(i) சட்டசபையால் நிறைவேற்றப்பெற்ற ஒரு மசோதா கவர்னர்-ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்டு அதுமுதற் சட்ட மாகலாம்; அல்லது,

(ii) நிராகரிக்கப்பட்டுச் சட்ட மாகாமற் சேத்துவிட லாம்; அல்லது,

(iii) மன்னர் சம்மதத்துக்காக * நிறுத்திவைக்கப்பட்டு 12 மாதங்களுக்குள் சம்மதங் கிடைத்துச் சட்டமாகலாம்; அல்லது சம்மதங் கிடைக்காமற் சாகலாம்; அல்லது,

(iv) புனராலோசனை செய்து திருத்துவதற்காகச் சட்ட சபைகளுக்கே கவர்னர்-ஜெனரலால் திருப்பியனுப்பப்பட்டு ஆலோசனையி லிருந்துவரலாம்; அல்லது

---

* மன்னர் சம்மதத்துக்காக கவர்னர்-ஜெனரல் இன்னின்ன மசோதாக்களை நிறுத்தி வைக்கவேண்டு மென்பது நியமனப் பத்திரத்தின் 27-வது பாராவி லிருக்கிறது.

(1) பார்லிமெண்டின் எந்தச் சட்டத்தையும் பாதிக்கக்கூடிய மசோதா.

(2) எந்த மாகாணத்தின் ஹைக்கோர்ட் டதிகாரங்கள் அல்லது அமல்களைப் பாதிக்கக்கூடிய மசோதா.

(3) மாகாண சட்ட சபையால் நிறைவேற்றப்பட்டு கவர்னரால், கவர்னர்-ஜெனரல் சம்மதத்துக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் நில வரிச் சாச்வத செட்டில்மெண்டை (ஜமீன்தாரித்துவ முறையை) பாதிக் கக்கூடிய மசோதா.

(4) பிரஸ்தாப சட்டத்தின் 5-வது பாகம் 3-வது அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கிற (பிரிட்டிஷ் வர்த்தக சம்பந்தமான) பக்ஷ பாதத் துக்கு இடமளிக்குமா அளிக்காதா என்று சந்தேகிக்கச் செய்யக்கூடிய மசோதா.

(v) கவர்னர்-ஜெனரல் அங்கீகாரம் பெற்று ஒரு மசோதா சட்டமானாலும் 12-மாதங்களுக்குள் மன்னரால் அச் சட்டம் ரத்துச் செய்யப்படலாம்.

இந்தப் பஞ்ச பாக்யம், கவர்னர்-ஜெனரலுக் கிருக்கும் போது, சட்ட சபைகளால் இந்தியாவுக்கு சௌபாக்யங் கொண்டு வர முடியுமென்று எப்படி நம்பலாம்? மசோதாக் கள்மீது கவர்னர்-ஜெனரலுக்குள்ள அங்கீகரிப்பு அல்லது நிராகரிப்பாகிற இந்தியாவின் கண் கரிப்புகள் தீரவேண்டும்; நிறுத்தி வைப்பும், திருப்பி யனுப்பு மாகிற வெடியுப்புகள் போகவேண்டும். இவைகளெல்லாங் குடியேற்ற நாட்டு அரசியலிலில்லை; இருந்தாலும் புஸ்தகங்களிற்று ணிருக்கலாம்; வழக்கத்திலில்லை. இந்தியாவில் மட்டும் ஏன் இருக்க வேண்டும்?

**III. எதேச்சாதிகார ஆதிக்கம்:** இது சட்ட சபையில் கவர்னர்-ஜெனரலுக்குள்ள பத்து விதமான ஆதிக்கங்களிற் கடை மூன்று ரகங்களைச் சேர்ந்த கடைப்பட்ட பாகம். சட்ட மல்லாச் சட்டங்களாகிற அவசரச் சட்டம், கவர்னர்-ஜெனரல்-சட்டங்களைப்பற்றியதும், ஆட்சியில்லா ஆட்சியான இராவண ஆட்சியைப் பற்றியதும். இவைகளெல்லாவற்றையும் உள்ளடக்கித்தான் இங்கு எதேச்சாதிகார ஆதிக்கம் அல்லது ஆட்சி யென்னும் வார்த்தை யுபயோகிக்கப்பட்டிருக்கிறது.

**(1) அவசரச் சட்டங்கள்:** அவசரச் சட்டங்களில் இரண்டு ரகங்களுண்டு. ஒன்று மந்திரிகளுக்காக இயற்றும் அவசரச் சட்டம்; மற்றொன்று கவர்னர்-ஜெனரலின் யுக்த பாகமான அவசரச் சட்டம். ஆனால் இவை யிரண்டும், கவர்னர்-ஜெனரல் தமது கையில் சட்டமியற்றும் அதிகாரத் தைத் தாமாகவே யெடுத்துக்கொண்டு செய்யுஞ், சொந்த

அவசரச் சட்டங்கள்தான். அவற்றை யியற்றுவதற்கு அதிகாரமளிக்கும் ஷரத்துகள் 42, 43.

42—(1) சமஷ்டி சட்டசபைக் கூட்டம் நடக்காத காலத்தில், அவசரமாய் ஏதாவது சில காரியங்கள் செய்வது அவஸ்யமென்று கவர்னர்-ஜெனரலுக்குத் தோன்றினால், அத்தகைய சந்தர்ப்பத்தில் அவர்; சந்தர்ப்பானுசாரமான அவசரச் சட்டங்கள் செய்யலாம்.

(2) இந்த ஷரத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு அவசரச் சட்டம், சமஷ்டி சட்டசபையால் நிறைவேற்றப்பட்டு, கவர்னர்-ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தைப் போன்ற அதிகாரமும் அமலு முடையதாயிருக்கும். ஆனால் அத்தகைய ஒவ்வொரு அவசரச் சட்டமும்,

(அ) சமஷ்டி சட்டசபையின் மறு கூட்டத்தில் ஆஜர்ச் செய்யப்பட்டு ஆறு வாரங்கள் கழிந்ததும் ரத்தாகிவிடும்; அல்லது அதற்கு முன்னதாக அந்த அவசரச் சட்டத்தை ஆக்ஷேபித்து இரு சபைகளுந் தீர்மானம் நிறைவேற்றினால் ரத்தாகிவிடும். ஆனால்,

(ஆ) கவர்னர்-ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்டுச் சட்டமான ஒரு மசோதாவை ரத்துச் செய்யும் மன்னர் அதிகாரத்துக்கு உட்பட்டதாகவே யிருக்கும். (அதாவது மன்னர் சட்டசபைத் தீர்மானங்களுக்குச் சம்மதமளிக்காமல் ரத்துச் செய்யலாம்; அவசரச் சட்டம் அப்படியே யிருக்கும்)

(இ) கவர்னர்-ஜெனரல் எந்தநேரமும் அந்த அவசரச் சட்டத்தை வாபீஸ் வாங்கிக்கொள்ளலாம்.

(3) இந்த ஷரத்தின்படி செய்யப்படும் ஒரு அவசரச் சட்டத்தின் பிரிவு எதுவும், சமஷ்டி சட்டசபையின் சட்டமியற்றுஞ் சக்திக்கு மிஞ்சியதாயிருந்தால், அது அப்பொழுதே ரத்தாகிவிடும்.

ஆகையால், இந்த ரகத்தைச் சேர்ந்த அவசரச் சட்டங்கள் மந்திரிகளின் சௌகர்யத்துக்காகவும், அவசரத்தின்

அவஸ்யத்துக்காகவுமே செய்யப்படுகின்றனவென்று நாம்எடுத்துக்கொண்டாலும்* ஜனங்களுக் கவற்றால் நன்மை யேற்படுமா தின்மை யேற்படுமாவென்பது மந்திரிகளின் கொள்கையைக் கொண்டு தீர்மானிக்கப்படவேண்டியதா யிருக்கிறது. உண்மையான ஜனப் பிரதிநிதிகள் மந்திரிகளாயிருந்தால் நன்மையுண்டு; இல்லையானால் தீமைதான்.

அடுத்தது கவர்னர் - ஜெனரலின் யுக்தபாக அவசரச் சட்டம்—43-வது ஷரத்து.

43—(1) எதாவதொரு காலத்தில் அவசரமாய் எதாவது சில காரியங்கள் செய்வது அவஸ்யமென்று கவர்னர்-ஜெனராலுக்குத் தோன்றினால், அவர் தமது எதேச்சாதிகாரத்திலுஞ் சொந்தத் தீர்ப்பிலுஞ் சந்தர்ப்பானுசாரமாய்த் தமக்கு யுக்தமென்று படுகிற அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கலாம்.

(2) இந்த ஷரத்தின்படி பிறப்பிக்கப்படும் ஒரு அவசரச் சட்டம் ஆறுமாதங்களுக்கு மேற்போகாத காலம்வரை அமலிலிருக்கும். ஆனால் அப்புறமொரு அவசரச் சட்டத்தால் முந்திய அவசரச் சட்டம், அப்புறமொரு ஆறுமாதம் நீடிக்கும்படி செய்யப்படலாம்.

(3) இந்த ஷரத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு அவசரச் சட்டம், சமஷ்டி சட்டசபையால் நிறைவேற்றப்பட்டு, கவர்னர்-ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தைப்போன்ற அதிகாரமும் அமலுமுடையதாயிருக்கும். ஆனால், அத்தகைய ஒவ்வொரு அவசரச் சட்டமும்,

(அ) கவர்னர்-ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டிச் சட்டத்தை ரத்துச்செய்யும் மன்னரதிகாரத்துக் குட்பட்டதாகவே யிருக்கும்.

* 42-வது ஷரத்தில் 'எதேச்சாதிகாரம்', 'சொந்தத் தீர்ப்பு' என்னும் வார்த்தைகள் இல்லையென்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

(ஆ) எந்த நேரமும் கவர்னர்-ஜெனரலால் வாபீஸ் வாங்கிக் கொள்ளக்கூடியதாயிருக்கும்.

(இ) இந்திய அவசரத்தை நீடிப்பதற்காகச் செய்யப்பட்ட ஒரு அவசரச் சட்டமாயிருந்தால் அது உடனே இந்தியா மந்திரிக் கறிவிக்கப்பட்டு அவர்மூலம் பார்லிமெண்டின் இரு சபைகளிலும் ஆஜர் செய்யப்படவேண்டும்.

(4) இந்த ஷரத்தின்படி செய்யப்படும் ஒரு அவசரச் சட்டத்தில் ஏதாவதொரு பிரிவு சமஷ்டி சட்டசபையின் சட்டமியற்றும் சக்திக்கு மிஞ்சியதாயிருந்தால் அது ரத்தாகிவிடும்.

(5) இந்த ஷரத்திற் சொல்லப்பட்டிருக்குஞ் சகல காரியங்களையும் கவர்னர்-ஜெனரல் தமது ஏதேச்சாதிகாரத்திற் செய்ய வேண்டும்.

**2. "கவர்னர் - ஜெனரல்-சட்டங்கள்":** அவசரச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட வேண்டிய அவஸ்யத்தை யுண்டு பண்ணக் கூடிய நிலைமை ஆறு மாதம் அல்லது ஒரு வருஷம் நீடித்தால், அவசரச் சட்டங்கள் போன்ற அல்பாயுஸ் சட்டங்களை வைத்துக்கொண்டு அமைதியையும் சமாதானத்தையுங் கொண்டுவருவது அரிதென்று கவர்னர் - ஜெனரலுக்குத் தோன்றினால், அவசரச் சட்டங்களின் அதிகாரத்தையும் அமலையும் அப்படியே காப்பியெடுத்துக்கொண்டு ஒரு நிரந்தரச் சட்டத்தை கவர்னர் - ஜெனரல் இயற்றலாம். அதற்கு கவர்னர்-ஜெனரல் - சட்டமென்று பெயர்—ஷரத் 44.

44.—(1) எப்பொழுதாவது கவர்னர்-ஜெனரலுக்குத் தமது ஏதேச்சாதிகாரத்தின்படியோ, சொந்தத் தீர்ப்புப்படியோ தமது கடமையைத் திருப்திகரமாய்ச் செய்வதற்கு ஒரு நிரந்தரமான சட்டம் அவசியமென்று தோன்றினால், அவர் சமஷ்டி சபையிரண்டுக்கும் சட்டமியற்றப் படவேண்டிய சந்தர்ப்பத்தை விளக்கி (அ) தானாக ஒரு சட்டம் இயற்றிவிட்டதாகவோ; அல்லது

(ஆ) அப்படியொரு சட்டம் இயற்றுவது அவஸ்யமென்று அதன் நகலை வைத்தோ, சட்ட சபைக்குச் செய்தி யனுப்பலாம்.

(2) அகரப் பிரிவிற் கூறியிருக்கிறபடி செய்திருப்பதாய் கவர்னர்-ஜெனரல் செய்தியனுப்பினுல்; அப்போதே 'கவர்னர்-ஜெனரல்-சட்டம் (ரிஷி பிண்டம் ரத்தங்காது என்பது போல்) அமலுக்கு வந்துவிடும். ஆகாரப் பிரிவின்படி செய்தியனுப்பினுலோ அதிலிருந்து ஒரு மாத காலத்துக்குள், தான் முன் அனுப்பிய நகல் மசோதாவை அப்படியே, அல்லது அவர் விரும்புந் திருத்தங்களுடனே சட்டமாக்கலாம். இதன் மத்தியில் இந்தச் சட்டத்தைப் பற்றிச் சட்டசபைகள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்து கவர்னர்-ஜெனரலுக்கு ஓர் விஞ்ஞாபன மனுப்பலாம். அதையவர் கவனித்தாலுங் கவனிக்கலாம்; இல்லாவிட்டாலும் இல்லை.

(3) ஒரு 'கவர்னர்-ஜெனரல்-சட்டம்,' சமஷ்டி சபையால் நிறைவேற்றப்பட்டு கவர்னர்-ஜெனரலால் அங்கீகரிக்கப்பட்ட சட்டங்களைப்போன்ற அதிகாரமும் அமலு மூடையதாயிருக்கும். மன்னராதிகாரத்திற் குட்பட்டதாகவும், சமஷ்டி சட்டசபை சட்டமியற்றுஞ் சக்திக்கு மிஞ்சியதாயிருந்தால் ரத்தாகக் கூடியதாகவுமிருக்கும்.

(4) கவர்னர்-ஜெனரல்-சட்டம் ஒவ்வொன்றும் உடனுக்குடன் இந்தியா மந்திரிக் கறிவிக்கப்பட்டு அவர்மூலம் பார்லிமெண்டின் இருசபைகளிலுஞ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(5) இந்த ஷரத்திற் சொல்லப்பட்டிருக்கிற சகல காரியங்களையும் கவர்னர்-ஜெனரல் தமது எதேச்சாதிகாரத்திற் செய்வார்.

இந்த ஷரத்தின்படி செய்யப்படும் 'கவர்னர்-ஜெனரல்-சட்டம்', இந்தியாச் சட்டத்தின்படி இயற்றப்படும் எல்லாச் சட்டங்களுக்கும் ராஜாவாயிருக்கிறது; ஆனுலொருநாளும் நல்ல ராஜாவாயிராது. ஜனப்பிரதிநிதி சபையான சட்டசபையால் 'கவர்னர்-ஜெனரல்-சட்டத்தை' ரத்துச் செய்ய முடியாது; அச்சட்டத்தைப் பாதிக்கக்கூடிய மசோதா எதுவுங் கொண்டுவரக்கூட முடியாது.

**3. அரசியல் ரத்து : கவர்னர்-ஜெனரலின் ஏகச்சக்ராதிபத்யம் :** கவர்னர்-ஜெனரலுக்குள்ள முடிவான அதிகாரம் இது தான். இந்த அதிகாரத்தை யவர் உபயோகிக்கும்போது, இந்தியா முழுதுக்குங் கவர்னர்-ஜெனரல், சர்ச்சில் சொன்னது போல் ஹிட்லர், முஸோலினியைப் போலிருப்பார். "தனது பேனுவீச்சு ஒன்றினுல் அரசியல் அமைப்பு முழுதையும் அவரால் ரத்துச் செய்ய முடியும்." இந்த அதிகாரத்தை யவருக்களிப்பது **45**-வது ஷரத்து.

45—(1) இந்தச் சட்டத்தை வைத்துக்கொண்டு இனிமேற் சமஷ்டி சர்க்காரைத் திருப்திகரமாய் நடத்துவது சாத்தியமற்ற தென்று கவர்னர்-ஜெனரலுக்குத் தோன்றினுல், அவர்,

(அ) ஒரு பிரகடனம் வெளியிட்டு, அதன்மூலம் நிர்வாக காரியங்கள் அனைத்தையுமோ அல்லது பகுதியையோ ரத்துச் செய்து, தமது யுக்தம்போல் நடத்துவதா யறிவிக்கலாம்.

(ஆ) எந்த அதிகாரியிடம் அல்லது ஸ்தாபனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அதிகாரம் முழுதையுமோ, பகுதியையோ கவர்னர்-ஜெனரல் கைப்பற்றித் தாமே தமது நிர்வாகத்தில் வைத்துக்கொள்ளலாம்.

அந்தப் பிரகடனத்தின்மூலம் கவர்னர்-ஜெனரலுக்கு எந்தச் சட்டத்தையும் ரத்துச் செய்யவும், சிருஷ்டிக்கவும் உரிமையுண்டு. அந்த உரிமையில் அவர் சமஷ்டி சட்டசபை, மந்திரி சபை யிரண்டையும் அல்லது ஒன்றைமட்டும் ரத்துச் செய்யலாம்.

சமஷ்டிக் கோர்ட்டின் அதிகாரம், உரிமை சம்பந்தமான ஷரத்து எதையுங் கவர்னர்-ஜெனரல் ரத்துச் செய்யக்கூடாது.

(2) இந்த ஷரத்துப்படி நிர்வாகத்தை கவர்னர்-ஜெனரல் கைப்பற்றுவதா யறிவிக்கும் பிரகடனம், மற்ரொரு பிரகடனத்தால் வாபீஸ் வாங்கப்படலாம் ; அல்லது மாற்றப்படலாம்.

(3) இந்த ஷரத்துப்படி வெளியிடப்படும் (முதல்) பிரகடனம்,

(அ) உடனே இந்தியா மந்திரிக் கனுப்பப்பட்டு அவர் மூலம் பார்லிமெண்டின் இருசபைகளிலும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(ஆ) முதற் பிரகடனத்தை ரத்துச் செய்யும் பிரகடனமாயில்லாவிட்டால் இது 6 மாதங்கள்தான் அமலிலிருக்கும்.

ஆனல் இன்னும் 12 மாதங்களுக்கு இப்பிரகடனம் அமலிலிருக்கட்டுமென்று பார்லிமெண்டின் இரு சபைகளிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், (சுயமாயுள்ள ஆறுமாதங்களுக்கு அப்பால், மேற்கொண்டு 12 மாதங்களுக்கு அப் பிரகடனம் நீடிக்கும். அத்தகைய நீடிப்பு பார்லிமெண்டின் மறு தீர்மானத்தால் மறு பனிரெண்டு மாதங்களுக்கும் நீடிக்கலாம். இப்படி மூன்று வருஷங்கள்வரை நீளலாம்.

(4) இவ்வாறு எப்பொழுதாவது சமஷ்டி சர்க்கார் மூன்று வருஷங்கள் நடத்தப்பட்டால், அப்புறம் அது தானகவே காலாவதி யடைந்துவிடும். அப்புறம் (பழைய குருடி கதவைத் திறடி யென்று) இச் சட்டத்தின் இதர ஷரத்துகளை யனுசரித்து-பார்லிமெண்டு அவஸ்யமென்று கருதுகிற, ஆனல் சமஸ்தானங்களின் சமஷ்டிப் பிரவேசத்தைப் பாதிக்காத-திருத்தங்களோடு அரசாங்கம் நடத்தப்படலாம்.

இதுதான் கவர்னர்-ஜெனரலின் முடிவான அதிகாரம். இந்த அதிகாரத்தின்படி இந்தியாவில் கவர்னர்-ஜெனரல் என்ன வேண்டுமானலுஞ் செய்யலாம். இதற்கு நிகரான ஆட்சி இவ்வுலகத்தில் எங்கு தேடினலும் அகப்படாது; புராணங்களைத்தான் புரட்டவேண்டும். ஜெர்மனியில் ஹிட்லரும், இத்தாலியில் முஸோலினியுஞ் செய்யுஞ் சர்வாதிகார ஆட்சிகள்கூட இந்தியாவில் கவர்னர்-ஜெனரல் இந்த 45-வது ஷரத்துப்படி செய்யக்கூடிய ஆட்சிக்கு ஈடாகாது. ஏனெனில் ஹிட்லரும், முஸோலினியும் எவ்வளவுதான் இருப்பாட்சி செலுத்தினலும் அவர்கள் அவரவர் சொந்த நாட்டை, சொந்த நாட்டின் நன்மைக்காக ஆளுகிறுர்கள். இந்தியாவையொரு பிரிட்டிஷ்காரர் அப்படி யாளுவாரா? எதிர்காலந்தான் இதற்குப் பதிற் சொல்லவேண்டும்.

# 8. சட்ட சபை

உலகத்தில் நடக்கிற எல்லா அரசாங்கங்களிலுஞ் சட்ட சபையொரு முக்கியமான அம்சமா யிருந்து வருகிறது. முடியாட்சியிலும் அது முக்கியமான அம்சந்தான்; குடியாட்சி யிலு மப்படியே. சொல்லப்போனல் ஜனநாயக ஆட்சியென்பதும், பொறுப்பாட்சியென்பதும் சட்ட சபையாட்சி தான்.

இந்திய அரசியலில் இதுவரைச் சட்ட சபையின் யோக்கியதை யெப்படியிருந்திருந்தாலும் 1935-ம் வருஷச் சீர்திருத்தத்தில் இது கொஞ்சம் மாறியிருக்கிறதென்பதை எல்லாரும் ஒப்புக்கொண்டுதா னுகவேண்டும். புதிய சீர்திருத்தத்தால் மாகாணங்களிற் சுயாட்சி யேற்பட்டிருப்பதாகவும், சமஷ்டி சட்டசபையில் பொறுப்பாட்சி யேற்பட் டிருப்பதாக வுஞ் சொல்லப்படுவது வாஸ்தவம். ஆனல் அந்தச் சுயாட்சியும் பொறுப்பாட்சியும் ஜனநாயக ஜவாப்தாரித்துவ ஆட்சியா? அதனல் நாட்டுக்கேதாவது நன்மையுண்டா? இக்கேள்விகளைக் கேட்டுக்கொண்டே இவ்வத்தியாயத்துக்குட் செல்லுங்கள்! கேள்விநல்லது; விடையும் விரவியிருக்கிறது.

சமஷ்டி சட்ட சபையைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளுவதற்கு முன்னல், இந்தியாவிற் சட்ட சபை பிறந்து வளர்ந்த வரலாற்றைக் கொஞ்சம் அறிந்திருக்கவேண்டும். ஏனெனில் இச்சட்டத்தின் முகவுரையிலும் 1919-ம் வருஷச் சட்டத்தின் முகவுரையிலும் "இந்தியாவுக்குப் படிப்படியாய்-காலக்கிரமத்திற் பொறுப்பாட்சி கொடுப்பதே பிரிட்டிஷ் சர்க்காரின் நோக்கம்" என்று வரும் வாசகத்துக்குப் பிரத்தியட்ச உதாரணமாயிருப்பது இந்தியா சட்ட சபை தான்.

## சட்ட சபைப் பிறப்பு வளர்ப்பு :

இந்தியாவில் முதன் முதலாய்ச் சட்டசபை யேற்பட்டது 1853--ம் ஆண்டில். அப்பொழுது அது ரொம்பச் சின்னதாகவும், சட்டசபையென்று சொல்லக்கூட லாயக்கில்லாததாகவு மிருந்தது. வங்காளம், சென்னை, பம்பாய், ஐக்ய மாகாணம் ஆகிய நான்கு மாகாணங்களிலிருந்து, அந்தந்த மாகாண அரசாங்கங்களால் நியமனஞ் செய்யப்பட்ட நான்கு அங்கத்தினர்களும், வங்காளப் பிரதம நீதிபதியும், பிரதம சேனாதிபதியுமாக ஆறு அங்கத்தினர்கள் தான் ஆரம்பச் சட்ட சபையில் இருந்தார்கள்.

அப்புறம் 1861-ல் அது கொஞ்சம் விஸ்தரிக்கப்பட்டது. கவர்னர்-ஜெனரலால் நியமனஞ் செய்யப்பட்ட 12 பேர்கள் சட்டசபை அங்கத்தினர்களாய் வந்தார்கள். அவர்களில் உத்தியோகப் பற்றற்றவர் சிலரும், இந்தியர் சிலரும் இருந்தனர். முதன் முதலாகச் சட்டசபையில் இந்தியருக்கு இடங் கிடைத்ததும் மாகாண சட்டசபைகள் ஸ்தாபிக்கப்பட்டதும் இப்பொழுதுதான்.

1892-ல் மற்றொரு சட்டசபைச் சீர்திருத்தம் வந்தது. அதன்படி முன்னே சொன்ன மாகாணங்களிலிருந்து, சட்டசபைகளாற் சிபாரிஷ் செய்யப்பட்ட 4 அங்கத்தினர்களும், கவர்னர்-ஜெனரலால் நியமனஞ் செய்யப்பட்ட 17 அங்கத்தினர்களும், ஐரோப்பிய வர்த்தக சபை அங்கத்தினர் ஒருவரும் ஆக 22 பேர் அங்கத்தினரானார்கள். இவர்களுக்கு இந்திய அரசியல் சம்பந்தமாய்ச் சட்டசபையிற் கேள்வி கேட்கவும், வரவு செலவைப்பற்றி அபிப்பிராயம் வெளியிடவும், தேசமக்களின் தேவைகளைச் சில வரம்புக் குட்பட்டுச் சொல்லவும் அனுமதி கிடைத்தது.

பின்னர் 1909-ல் மிண்டோ - மார்லி சீர்திருத்தம் வந்தது. அதன்படி இந்தியா சட்ட சபையில் 60 பேர் அங்கத்தினர்களானுர்கள்—27 பேர் மாகாண சட்ட சபைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ; மற்றவர்கள் கவர்னர்-ஜெனரல் நியமனம். அத்தோடு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவமும் வந்தது. அங்கத்தினர்கள் சிபாரிஷ் ரூபமாய்த் தீர்மானங்கள் கொண்டு வரவும், வரவு-செலவைப்பற்றி அபிப்பிராயம் வெளியிடுவதோடு வோட்டளிக்கவும் உரிமை யடைந்தனர்.

அப்புறம் 1919 மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தம். அதன்படி 145 அங்கத்தினர்கள் - மூன்றிலிரண்டு பங்கு தேர்ந்தெடுப்பு ; ஒரு பங்கு நியமனம். நியமனத்தில் மூன்றிலொரு பங்கு அங்கத்தினர் உத்தியோகப்பற் றற்றவர்கள்.

மாண்ட் போர்டு சீர்திருத்தத்தால் மாகாணங்களிற் சில இலாகாக்கள் மந்திரிகளுக்கு மாற்றப்பட்டன. மத்திய சர்க்காரில் மந்திரிகளுமில்லை ; மாற்றப்பட்ட இலாகாக்களுமில்லை. அங்கத்தினர்கள் சட்ட மியற்றலாம் ; தீர்மானங் கொண்டு வரலாம் ; கேள்விகள் கேட்கலாம் ; வரவு-செலவை வாதிக்கலாம்; அவ்வளவே.

1935-ம் வருஷப் புதிய சீர்திருத்தம் சமஷ்டி சட்ட சபைக்கு என்னென்ன அதிகாரங்களையும் உரிமைகளையும் அளிக்கப் போகிற தென்பதை இனி மேலேதான் பார்க்கப் போகிறோம்.

## சட்ட சபை யமைப்பு

### இரட்டைச் சட்ட சபை:

சமஷ்டி சர்க்காரில் இரண்டு சட்ட சபைகள் இருக்கும்:

(1) கவுன்ஸில் - ஆப் ஸ்டேட் (மேல் சபை)

(2) ஹவுஸ் - ஆப் - அஸெம்பிளி (கீழ் சபை)—ஷரத்· 18 (1)

இது இந்தியப் புதிய அரசியலில் ஒரு புதிய பெரிய மாறுதல். இதுவரை இந்திய சர்க்காரில் ஒரே யொரு சட்ட சபைதான் இருந்தது; மாகாண சர்க்கார்களிலும் அப்படித் தான். 1935-ம் வருஷச் சட்டம் இன்னொரு சட்ட சபைக் குட்டியைக் கூடப் போட்டிருக்கிறது. இதற்கு இந்தியாவில் அவஸ்யமேயில்லை. பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டி இந்த இரண்டாவது சபையைச் சிபாரிஷ் செய்தபோதே 'இது வேண்டாம்' என்று இந்தியாவில் எல்லாரும் ஆக்ஷேபித்தார் கள். "இரண்டு சபைகளுக் கிடையில் அபிப்பிராய பேத மும், மந்திரிகளுக்கும் கவர்னர்-ஜெனரலுக்கும் மனஸ்தாப மும் ஏற்படும்" என்று மிதவாதிகள் கூடச் சொன்னார்கள்.

"இரண்டாவது சபை யேற்படுவது அதிகச் செலவைத் தான் உண்டுபண்ணும்" என்று ஜனப் பஸ்லுல் ஹக் கூறி னார்.

"இரண்டாவது சபை யேற்படுத்துவது கண்டிக்கத் தக் கது" என்றார் ஷேக் அப்துல் மஜீத்.

"இரண்டாவது சபை யேற்படுத்துவதை நான் அடி யோடு ஆக்ஷேபிக்கிறேன். ஐரோப்பாவில் இம்முறை, கொஞ் சங் கொஞ்சமாய் மறைந்து கொண்டிருக்கும்போது இந்தியா வில் இதைப் புதிதாய் அமலுக்குக்கொண்டு வருவது ஆச் சரியமாயிருக்கிறது" என்று ஸ்ரீ. பி. ஆர். தாஸ் சொன்னார்.

இப்படிப் பலருஞ் சொன்னார்கள். மேல் நாடுகளில் 'மேல் சபை' இருப்பதற்குக் காரணங்கள் என்னென்ன இருந்தாலும், இந்தியாவில் இது ஏற்படுவதற்கு ஒரே யொரு காரணந்தான் இருக்கமுடியும்; அதாவது, அந்நிய ஆட்சி நீட்சிக்கு அதிகப் பலந் தேடுவது.

## சட்டத்தின் ஷரத்து.

சமஷ்டி சட்டசபை, சட்டத்தின் 18-வது ஷரத்துப்படி சமைக்கப்படும். அதன் வாசகம் வருமாறு :—

18—(1) கவர்னர்-ஜெனரலாற் பிரதிநிதித்துவம் வகிக்கப் படும் மன்னர் பிரானும், கவுன்ஸில்- ஆப்-ஸ்டேட், ஹவுஸ். ஆப்-அஸெம்பிளி (பெடரல் அஸெம்பிளி) என்று சொல்லப்படும் இரண்டு சபைகளுஞ் சமஷ்டி சர்க்கார் ஸ்தாபனத்திலிருக்கும்.

(2) மேல் சபை (கவுன்ஸில்-ஆப்-ஸ்டேட்)யில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் 156 பேர்களும், இந்தியச் சமஸ்தானப் பிரதிநிதிகள் 104 பேர்களுக்கு மேற்படாமலு மிருப்பார்கள்; கீழ்சபை (ஹவுஸ்-ஆப்- அஸெம்பிளி)யில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் 250 பேர்களும், இந்தியச் சமஸ்தானப் பிரதிநிதிகள் 125 பேர்களுக்கு மேற்படாமலு மிருப்பார்கள்.

(3) இப் பிரதிநிதிகள் இச் சட்டத்தின் 1-வது ஷெட்யூலிற் சொல்லப்பட்டிருக்கிறபடி தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(4) மேல் சபை, காலவரையறைக்குபட்டு-கலைக்கப்படாத ஒரு நிரந்தர ஸ்தாபனமாயிருக்கும். ஆனால் ஒவ்வொரு மூன்று வருஷ முடிவிலும், மொத்த அங்கத்தினர்களில் மூன்றி லொரு பங்கினர், பிரஸ்தாப 1-வது ஷெட்யூல்படி ராஜிநாமாச் செய்வார்கள்.

(5) ஒவ்வொரு கீழ்சபையும்- ஆயுள் முடிவுக்குட் கலைக்கப் படாவிட்டால்*-அதன் ஆரம்பக் கூட்டத்திலிருந்து ஐந்து வருஷம் நீடித்திருக்கும் ; அதற்குமேலிராது; அப்புறங் கலைக்கப்பட்டுவிடும்.

இந்த ஷரத்திலுள்ள வாசகம் விளக்கமாகவும் சுருக்க மாகவு மிருக்கிறது ; வியாக்கியானந் தேவையில்லை. ஆனால் இதன் 1-வது பிரிவில் வருகிற 'மன்னர் சம்பந்தம்' ஒரு புதிய சமாச்சாரம் ; 1919-ம் வருஷச் சட்டத்திலும் அதற்கு

* 19-வது ஷரத்தில் கவர்னர்-ஜெனரல் தனது எதேச்சாதி காரத்தில் எப்பொழுதுஞ் சட்டசபையைக் கலைக்கலாமென் றிருக்கிறது.

முந்திய எந்தச் சட்டத்திலும் இல்லை. 1935-ஞ் சட்டத்தில் இது ஒரு புதிய கூட்டுச் சரக்கு.

அப்படியானால் எப்பொழுதுமில்லாத இப்புதுப் பழக்கம் இப்பொழுது ஏன் வந்தது? சமஸ்தானங்கள் சமஷ்டியிற் சேர்க்கப்படுவதாலா? அல்லது மாகூஷிமைதங்கிய மன்னருக்கு இந்தியா விஷயத்தில் இவ்வளவு காலமில்லாத ஈவிரக்கம் இப்பொழுது வந்திருக்கிறதா? சமஸ்தானங்களின் சமஷ்டிப் பிரவேசத்தாலென்றால் 60-வது ஷரத்துப்படி, மாகாண சட்ட சபையிலும் மன்னர் சம்பந்தம் இருக்கிறது. ஆகையால் அது காரணமல்ல. பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறை, இங்கு இந்தியாவிலும் வெறுமே 'காப்பியடிக்க'ப் பட்டிருக்கிறது. இதனால் இந்தியாவுக்கு இலாபமோ கௌரவமோ இல்லை.

## மேனோக்கு :

சமஷ்டி சட்ட சபையின் உள்ளமைப்பைப்பற்றியும், உரிமைகளைப்பற்றியும் உள்ளபடி நான் உங்களுக்குச் சொல்லுவதற்கு முன்னால், அது இப்படித்தா னிருக்கு மென்று மேனோக்கான ஒரு எண்ணத்தை உண்டுபண்ண வேண்டும்; விஷயத் தெளிவுக்கு இது வெகு உதவியா யிருக்கும்.

சமஷ்டி சட்ட சபை யென்றால் லென்னவோ வென் றெண்ணிவிட வேண்டாம். சில சில்லரை மாற்றங்களோடு இப்பொழுதிருக்கும் இந்தியா சட்ட சபையையும், அதனோடு இன்னொரு சபையையும், அவை யிரண்டுக்கும் பொறுப்பான மந்திரி சபையையும் சேர்த்துப் பார்த்தால் அதுதான் சமஷ்டி சட்ட சபை. அதை அமைக்கும் நோக்கமும், அதனாலேற் படும் ஆக்கமும் வேறல்ல; முன்னைப் போலவே பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்தியாவில் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் படி செய்வதுதான். ஜனப் பிரதிநிதிகளின் தேசிய நோக்க

மங்குச் செல்லாது. இதுவரைச் செல்லாதிருப்பதற்குச் சர்க்கார் தரப்பில் அவர்களால் நியமனஞ் செய்யப்பட்ட அங்கத்தினர்கள் துணை செய்தார்கள். இனியும் அவர்கள் துணையே அரசாங்கத்துக் கிருக்கும். ஆனால் 'நியமன அங்கத்தினர்கள்' என்னும் பேர் மாத்திரம் இராது. 'சமஸ்தானப் பிரதிநிதிக' ளென்னும் வேஷத்தைப் போட்டுக்கொண்டு அவர்கள் வருவார்கள்.

## தேர்தல் :

சட்டசபை யென்பது யதார்த்தமாய்ப் பார்த்தால் 'சட்ட மியற்றும் ஸ்தாபனம்' என்று தோன்றும். ஆனால் சட்ட மியற்றுவது மாத்திரஞ் சட்ட சபையின் வேலையில்லை; இயற்றிய சட்டப்படி சர்க்காரை நடத்துவதும் அதன் வேலை யாகும். ஆகையால் சட்டத்தினால் ஜனங்கள் ஆளப்படுகிறார் கள் என்று இந்நூல் ஆரம்பத்தில் எழுதப்பட்டது உண்மை யென்ப திங்குப் புலனாகிறதல்லவா? சட்டசபைக்கும் ஜனங் களுக்குமுள்ள தொந்தம், தேர்தலில் ஆரம்பிக்கிறது. அது தான் சட்டசபையின் 'பிள்ளையார் குட்டு.' பார்லிமெண்டரி முறைப்படி ஸ்தாபிக்கப்படும் ஒவ்வொரு சட்டசபையும், ஒவ் வொரு வோட்டரின் வாக்கிலிருந்து தான் வளரவேண்டும். ஜனங்க ளில்லாமல் வாக்குக ளில்லை; வாக்குக ளில்லாமல் தேர்த லில்லை; தேர்த லில்லாமல் சட்ட சபைக ளில்லை. ஆகை யால் ஜனநாயக சட்ட சபையில் தேர்தல்தான் முக்கியமான கட்டம். என்றாலும் அத்தேர்தல், ஸ்தானத்தைப் பொறுத்தே செய்யப்படுகிறபடியால், சமஷ்டி சட்ட சபை ஸ்தானங்கள்மீ தேற்பட்டிருக்கிற பிரதிநிதித்துவ முறையை முன்னே பார்ப்போம்.

**மேல் சபை :** சட்டசபை யென்பதற்குப் 'பிரதிநிதித் துவ சபை' யென்னும் அர்த்தமு மிருந்தால், சமஷ்டி மேல்

சபை, சத்தியமா யொரு ஜனப்பிரதிநிதி சபையே யல்ல வென்பதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம்:

(1) மேல் சபைப் பிரதிநிதிகளின் மொத்தத் தொகை யில், சமஸ்தானங்களுக் களிக்கப்பட்டிருக்குந் தொகை, அகில இந்திய ஜனத்தொகை விகிதாச்சாரத்தில் இல்லை.

(2) சமஸ்தானப் பிரதிநிதிகள், சமஸ்தானப் பிரஜைக ளால் தேர்ந்தெடுக்கப் படாமல், சமஸ்தானாதிபதிகளால் நிய மனஞ்செய்யப்படுகிறார்கள்.

இவ்விரண்டு காரணங்களைக்கொண்டு மாத்திரம் மேல் சபையை ஜனப்பிரதிநிதி சபை யில்லையென்று சொல்லுவது தவறு. பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளின் தேர்ந்தெடுப் புஞ் சரியா யில்லை. ஏனெனில் வாக்காளர்கள் (வோட்டர் கள்) அநேகமாய் அதிக வருமான வரி செலுத்தும் பணக் காரர்களாகவும், அதிக நிலபுலமும், பெரிய பட்டம் பதவியு முடையவர்களாகவு மிருக்கிறார்கள். பிரிட்டிஷ் இந்தியா முழு திலும் அப்பேர்ப்பட்ட வாக்காளர்கள் 1½ லட்சம் பேர்க ளுக்கு மேலில்லை. 25½ கோடி ஜனங்களில் வெறும் 1½ லட்சம் பேர்களுக்குத்தான் மேல்சபைப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை யிருக்கிறது. அதே சமயம் பிரிட் டிஷ் இந்திய மாகாண வாக்காளர்—மாகாண சட்டசபைகளுக் குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவர்கள், சுமார் 3½ கோடி பேர்களிருக்கிறார்கள். இதுவே பிரிட்டிஷ் இந்தியா முழுதிலுமுள்ள, வாக்களிக்கும் வயதுவந்த 14 கோடி பேர்களின் தொகையோ டொப்பிடும்போது, எவ் வளவோ குறைவானது. இருந்தாலும் இந்த ஈவுப்படி, பார்த் தாலும், வாக்களிக்கும் வயதுவந்தவர்களில் 100-க்கு ஒருவர் தான் வாக்காளராகவும், வாக்காளர்களில் 1,000-க்கும், வாக் களிக்கும் வயதுவந்தவர்களில் 1,00,000-க்கும், ஒருவர்தான்

பிரதிநிதியாகவு மிருக்கிறார்கள். ஆகையால் பிரிட்டிஷ் இந்தியாவைப் பொறுத்த மட்டிலுங்கூட மேல் சபை, ஜனப் பிரதிநிதி சபையே யல்ல.

மேலும், மேல் சபையிற் சமஸ்தானங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பிரதிநிதித்துவ ஈவுக்கும், கீழ் சபையிற் கொடுக்கப்பட்டிருக்கிற ஈவுக்கும் எவ்வளவோ வித்தியாச மிருக்கிறது—மேல் சபையில் 40 சதவிகிதம்; கீழ்சபையில் $33\frac{1}{3}$ சதவிகிதம்.

இதைக் கடந்து கொஞ்சம் அப்பாற்சென்று சமஸ்தானங்களுக்கும் மாகாணங்களுக்குமுள்ள பிரதிநிதித்துவ விகிதத்தைப் பார்த்தால், ஈவு இன்னும் மோசமாயிருக்கிறது. ஜனத்தொகை *யாலுஞ் சரி, செல்வாதாரத்தாலுஞ் சரி, வரி வருமானத்தாலுஞ் சரி, மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் †சமஸ்தானங்களுக்கு இத்தனை ஸ்தானமளிக்க நியாயமேயில்லை. கல்வியாலும் நாகரிகத்தாலுங்கூட அப்படித்தான். அரசியல் வளர்ச்சியிலுங் கிளர்ச்சியிலும் உணர்ச்சியிலும் சமஸ்தானங்கள், மாகாணங்களின் கிட்டக்கூட நிற்கமுடியாது.

இவை சம்பந்தமான புள்ளி விவரங்கள் அடுத்துவருஞ் சில பக்கங்களில் தரப்படுகின்றன. (சமஸ்தானப் பிரதிநிதித்துவம் மேல்சபை கீழ்சபை இரண்டுக்குஞ் சேர்ந்து ஒரே ஜாபிதாவி லிருக்கிறது; ஜனத்தொகையும் அதிலேயே யிருக்கிறது. மாகாணப் பிரதிநிதித்துவம் கீழ்சபைக்குத் தனியாகவும், மேல் சபைக்குத் தனியாகவும் இரு ஜாபிதாக்களில் இருக்கிறது.)

---

| | | | | |
|---|---|---|---|---|
| * பிரிட்டிஷ் இந்தியா | ஜனத்தொகை | சுமார் | $25\frac{1}{2}$ | கோடி. |
| சமஸ்தான இந்தியா | ,, | ,, | 8 | ,, |

† 40, 41-ம் பக்கங்களிலுள்ள மாகாணப்புள்ளி விபர ஜாபிதாவைப் பார்த்தால் செல்வமும் வரியுந் தெரியும்.

கட்டம்—2.

## மேல் சபையிலும் கீழ் சபையிலும் சமஸ்தானப் பிரதிநிதிகள் ஜாபிதா.

| | மேல் சபை | | கீழ் சபை | | |
|---|---|---|---|---|---|
| எண் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | ஜனத்தொகை |
| 1 | ஹைதராபாத் | 5 | ஹைதராபாத் | 16 | 14,436,148 |
| 2 | மைசூர் | 3 | மைசூர் | 7 | 65,57,302 |
| 3 | காஷ்மீர் | 3 | காஷ்மீர் | 4 | 36,46,243 |
| 4 | குவாலியர் | 3 | குவாலியர் | 4 | 35,23,070 |
| 5 | பரோடா | 3 | பரோடா | 3 | 24,43,007 |
| 6 | காலட் | 2 | காலட் | 1 | 3,42,101 |
| 7 | சிக்கிம் | 1 | சிக்கிம் | – | 1,09,808 |
| 8 | ராம்பூர் | 1 | ராம்பூர் | 1 | 4,65,225 |
| 9 | காசி | 1 | காசி | 1 | 3,91,272 |
| 10 | திருவாங்கூர் | 2 | திருவாங்கூர் | 5 | 50,95,973 |
| 11 | கொச்சின் | 2 | கொச்சின் | 1 | 12,05,016 |
| 12 | புதுக்கோட்டை | | புதுக்கோட்டை | | 4,00,694 |
| 13 | பங்கனபல்லி | 1 | பங்கனபல்லி | 1 | 39,218 |
| 14 | சாண்டூர் | | சாண்டூர் | | 13,583 |
| 15 | உதயபுரி | 2 | உதயபுரி | 2 | 15,66,910 |
| 16 | ஜெயபுரி | 2 | ஜெயபுரி | 3 | 26,31,775 |
| 17 | ஜோதிபுரி | 2 | ஜோதிபுரி | 2 | 21,25,982 |
| 18 | பிகானிர் | 2 | பிகானிர் | 1 | 9,36,218 |
| 19 | ஆழ்வார் | 1 | ஆழ்வார் | 1 | 7,49,751 |
| 20 | கோட்டா | 1 | கோட்டா | 1 | 6,85,804 |
| 21 | பாரத்பூர் | 1 | பாரத்பூர் | 1 | 4,86,954 |
| 22 | டோங்க் | 1 | டோங்க் | 1 | 3,17,360 |

| எண் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | ஜனத்தொகை |
|---|---|---|---|---|---|
| 23 | தோல்பூர் | 1 | தோல்பூர் | 1 | 2,54,986 |
| 24 | காராளி | 1 | காராளி | | 1,40,525 |
| 25 | பூண்டி | 1 | பூண்டி | 1 | 2,16,722 |
| 26 | ஸிரோஹி | 1 | ஸிரோஹி | | 2,16,528 |
| 27 | துங்கார்பூர் | 1 | துங்கார்பூர் | 1 | 2,27,544 |
| 28 | பன்ஸ்வாரா | 1 | பன்ஸ்வாரா | | 2,60,670 |
| 29 | பர்தாப்கார் | 1 | பர்தாப்கார் | 1 | 76,539 |
| 30 | ஜாலாவார் | | ஜாலாவார் | | 1,07,290 |
| 31 | ஜெயஸால்மர் | 1 | ஜெயஸால்மர் | 1 | 76,255 |
| 32 | கிஷன்கார் | | கிஷன்கார் | | 85,744 |
| 33 | இந்தூர் | 2 | இந்தூர் | 2 | 13,25,089 |
| 34 | போபால் | 2 | போபால் | 1 | 7,29,955 |
| 35 | ரீவா | 2 | ரீவா | 2 | 15,87,445 |
| 36 | டாட்டியா | 1 | டாட்டியா | 1 | 1,58,834 |
| 37 | அர்ச்சகா | 1 | அர்ச்சகா | | 3,14,661 |
| 38 | தார் | 1 | தார் | 1 | 2,43,430 |
| 39 | தேவாஸ் (சின்ன) | 1 | தேவாஸ் (சின்ன) | | 70,513 |
| 40 | தேவாஸ் (பெரிய) | | தேவாஸ் (பெரிய) | | 83,321 |
| 41 | ஜாவோரா | 1 | ஜாவோரா | 1 | 1,00,166 |
| 42 | ரத்லம் | | ரத்லம் | | 1,07,321 |
| 43 | பன்னா | 1 | பன்னா | 1 | 2,12,130 |
| 44 | ஸம்தார் | | ஸம்தார் | | 33,307 |
| 45 | அஜெயகார் | | அஜெயகார் | | 85,895 |
| 46 | பிஜாவார் | 1 | பிஜாவார் | 1 | 1,15,852 |
| 47 | சர்க்காரி | | சர்க்காரி | | 1,20,351 |
| 48 | சத்தார்பூர் | | சத்தார்பூர் | | 1,61,267 |
| 49 | பவோனி | 1 | பவோனி | 1 | 19,132 |
| 50 | நகோத் | | நகோத் | | 74,579 |
| 51 | மெய்கார் | | மெய்கார் | | 68,991 |
| 52 | பரௌண்டா | | பரௌண்டா | | 16,071 |

| எண் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | ஜனத்தொகை |
|---|---|---|---|---|---|
| 53 | பர்வானி | | பர்வானி | | 1,41,110 |
| 54 | அலி ராஜ்பூர் | 1 | அலி ராஜ்பூர் | 1 | 1,01,963 |
| 55 | ஷாப்பூரா | | ஷாப்பூரா | | 54,233 |
| 56 | ஜாபுவா | | ஜாபுவா | | 1,45.522 |
| 57 | ஸீலாணு | 1 | ஸீலாணு | 1 | 35,223 |
| 58 | ஸீதாமா | | ஸீதாமா | | 28,422 |
| 59 | ராஜ்கார் | | ராஜ்கார் | | 1,34,891 |
| 60 | நார்ஸிங்கார் | 1 | நார்ஸிங்கார் | 1 | 1,13,873 |
| 61 | கில்சிபூர் | | கில்சிபூர் | | 45,583 |
| 62 | கட்ச் | 1 | கட்ச் | 1 | 5,14,307 |
| 63 | இடார் | 1 | இடார் | 1 | 2,62,660 |
| 64 | நவநகர் | 1 | நவநகர் | 1 | 4,09,192 |
| 65 | பவநகர் | 1 | பவநகர் | 1 | 5,00,274 |
| 66 | ஜூனகாட் | 1 | ஜூனகாட் | 1 | 5,45,152 |
| 67 | ராஜபிபாலா | 1 | ராஜபிபாலா | 1 | 2,06,114 |
| 68 | பாலன்பூர் | 1 | பாலன்பூர் | | 2,64,179 |
| 69 | தாரங்கதரா | 1 | தாரங்கதரா | 1 | 88,961 |
| 70 | கொண்டால் | | கொண்டால் | | 2,05,846 |
| 71 | போர்பந்தர் | 1 | போர்பந்தர் | 1 | 1,15,673 |
| 72 | மோர்வி | | மோர்வி | | 1,13,023 |
| 73 | ராதன்பூர் | 1 | ராதன்பூர் | 1 | 70,530 |
| 74 | வங்கனீர் | | வங்கனீர் | | 44,259 |
| 75 | பலிதாணு | | பலிதாணு | | 62,150 |
| 76 | காம்பே | | காம்பே | | 87,761 |
| 77 | தர்மபூர் | 1 | தர்மபூர் | 1 | 1,12,031 |
| 78 | பலஹிணூர் | | பலஹிணூர் | | 52,525 |
| 79 | பாரியா | | பாரியா | | 1,59,429 |
| 80 | சின்ன உதயபுரி | 1 | சின்ன உதயபுரி | 1 | 1,44,640 |
| 81 | ஸாந்த் | | ஸாந்த் | | 83,531 |
| 82 | லுணுவாடா | | லுணுவாடா | | 95,162 |

| எண் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | ஜனத்தொகை |
|---|---|---|---|---|---|
| 83 | பன்ஸடா | | பன்ஸடா | | 48,839 |
| 84 | சச்சின் | 1 | சச்சின் | | 22,107 |
| 85 | ஜவார் | | ஜவார் | | 57,261 |
| 86 | தந்தா | | தந்தா | 1 | 26,196 |
| 87 | தரோல் | | தரோல் | | 27,639 |
| 88 | லிம்ப்டி | 1 | லிம்ப்டி | | 40,088 |
| 89 | வதுவான் | | வதுவான் | | 42,602 |
| 90 | ராஜ் கோட் | | ராஜ்கோட் | | 75,540 |
| 91 | கோலாபூர் | 2 | கோலாபூர் | 1 | 9,57,137 |
| 92 | ஸங்கிலி | | ஸங்கிலி | 1 | 2,58,442 |
| 93 | ஸவந்தவாடி | 1 | ஸவந்தவாடி | | 2,30,589 |
| 94 | ஜஞ்சீரா | | ஜஞ்சீரா | | 1,10,379 |
| 95 | முதோல் | 1 | முதோல் | 1 | 63,832 |
| 96 | போர் | | போர் | | 1,41,546 |
| 97 | ஜம்கந்தி | | ஜம்கந்தி | | 1,14,270 |
| 98 | (சின்ன) மிராஜ் | | (சின்ன) மிராஜ் | | 40,684 |
| 99 | (பெரிய) மிராஜ் | 1 | (பெரிய) மிராஜ் | 1 | 93,938 |
| 100 | குருந்தவாட் (சின் | | குருந்தவாட் (சின் | | 39,583 |
| 101 | குருந்தவாட் [ன) (பெரிய) | | குருந்தவாட் [ன) (பெரிய) | | 44,204 |
| 102 | அகல் கோட் | | அகல் கோட் | | 92,605 |
| 103 | பலத்தான் | | பலத்தான் | | 58,761 |
| 104 | ஜாத் | 1 | ஜாத் | 1 | 91,099 |
| 105 | அவுந்த் | | அவுந்த் | | 76,507 |
| 106 | ராமதுர்க் | | ராமதுர்க் | | 35,454 |
| 107 | பாட்டியாலா | 2 | பாட்டியாலா | 2 | 16,25,520 |
| 108 | பகவல்பூர் | 2 | பகவல்பூர் | 1 | 9,84,612 |
| 109 | கெயிர்பூர் | 1 | கெயிர்பூர் | 1 | 2,27,183 |
| 110 | கபூர்தாலா | 1 | கபூர்தாலா | 1 | 3,16,757 |
| 111 | ஜிந்த் | 1 | ஜிந்த் | 1 | 3,24,676 |
| 112 | நாபா | 1 | நாபா | 1 | 2,87,574 |

| எண் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | ஜனத்தொகை |
|---|---|---|---|---|---|
| 113 | — — — | — | தெஹ்ரி-கார்வால் | 1 | 3,49,573 |
| 114 | மண்டி | | மண்டி | | 2,07,465 |
| 115 | பிலாஸ்பூர் | 1 | பிலாஸ்பூர் | 1 | 1,00,994 |
| 116 | ஸுகெட் | | ஸுகெட் | | 58,408 |
| | தெஹ்ரிகார்வால் | | — | — | — |
| 117 | ஸிர்மூர் | 1 | ஸிர்மூர் | | 1,48,568 |
| 118 | சம்பா | | சம்பா | 1 | 1,46,870 |
| 119 | பரித்கோட் | | பரித் கோட் | | 1,64,364 |
| 120 | மாலர் கோட்லா | 1 | மாலர் கோட்லா | 1 | 83,072 |
| 121 | லோஹாரு | | லோஹாரு | | 23,338 |
| 122 | கொச் பிஹார் | 1 | கொச் பிஹார் | 1 | 5,90,886 |
| 123 | திரிபுரா | | திரிபுரா | 1 | 3,82,450 |
| 124 | மணிப்பூர் | 1 | மணிப்பூர் | 1 | 4,45,606 |
| 125 | மயூர்பஞ்ச் | | மயூர்பஞ்ச் | 1 | 8,89,603 |
| 126 | ஸோனெபூர் | 1 | ஸோனெபூர் | 1 | 2,37,920 |
| 127 | பாட்னா | | பாட்னா | 1 | 5,66,924 |
| 128 | காலஹண்டி | 1 | காலஹண்டி | 1 | 5,13,716 |
| 129 | கியோஞ்சஹார் | | கியோஞ்சஹார் | 1 | 4,60,609 |
| 130 | தென் கனல் | | கங்கபூர் | 1 | 3,56,674 |
| 131 | நயாகர் | 1 | பாஸ்டர் | 1 | 5,24,721 |
| 132 | தல் சேர் | | ஸர்கூஜா | 1 | 5,01,939 |
| 133 | நில்கிரி | | | | |
| 134 | பாம்ரா | | நயாகர் | | 1,42,406 |
| 135 | கங்கபூர் | | தென்கனல் | | 2,84,326 |
| 136 | ஸெரைகேலா | 1 | ஸெரைகேலா | | 1,43,525 |
| 137 | பாட் | | பாட் | 3 | 1,35,248 |
| 138 | போனெய் | | தல்சேர் | | 69,702 |
| 139 | பாஸ்டர் | | போனெய் | | 80,186 |
| 140 | ஸர்கூஜா | 1 | நில்கிரி | | 68,594 |
| 141 | ரெய்கார் | | பாம்ரா | | 1,51,047 |
| 142 | நந்தகோவன் | | | | |

| எண் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | சமஸ்தானங்கள் | ஸ்தானங்கள் | ஜனத் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | ரெய்கார் | | 2,77,569 |
| 143 | கெய்ராகர் | | கெய்ராகர் | | 1,57,400 |
| 144 | ஜாஷ்பூர் | 1 | ஜாஷ்பூர் | | 1,93,698 |
| 145 | காங்கெர் | | காங்கெர் | 3 | 1,36,101 |
| 146 | கொரியா | | ஸாரங்கர் | | 1,28,967 |
| 147 | ஸாரங்கர் | | கொரியா | | 90,886 |
| | | | நந்தகோவன் | | 1,86,380 |
| | இந்த ஜாபிதாவிற் சேர்க்கப்படாததும் 1-வது ஷெட்யூல் 2-வது பாகம் 12-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறதுமான சமஸ்தானங்கள். | 2 | இந்த ஜாபிதாவிற் சேர்க்கப் படாததும், 1-வது ஷெட்யூல், 2-வது பாகம் 12-வது பாராவில் சொல்லப்பட்டிருக்கிறதுமான சமஸ்தானங்கள். | 5 | 30,32,197 |
| | மேல் சபை ஸ்தானங்களின் மொத்தம். | 104 | கீழ் சபை ஸ்தானங்களின் மொத்தத் தொகை. | 125 | |
| | இந்த ஜாபிதாவிலுள்ள சமஸ்தானங்களின் மொத்த ஜனத்தொகை | | | | 7,89,81,912 |

கட்டம்—3

## மேல் சபையில்
## பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் ஜாபிதா

| மாகாணம் அல்லது சமூகம் | மொத்த ஸ்தானம் | பொதுத் தொகுதி | ஹரிஜன ஸ்தானம் | சீக்கியர் ஸ்தானம் | முகமதியர் ஸ்தானம் | மாதர் ஸ்தானம் |
|---|---|---|---|---|---|---|
| சென்னை | 20 | 14 | 1 | — | 4 | 1 |
| பம்பாய் | 16 | 10 | 1 | — | 4 | 1 |
| வங்காளம் | 20 | 8 | 1 | — | 10 | 1 |
| ஐக்கியமாகாணம் | 20 | 11 | 1 | — | 7 | 1 |
| பஞ்சாப் | 16 | 3 | — | 4 | 8 | 1 |
| பீஹார் | 16 | 10 | 1 | — | 4 | 1 |
| மத்ய மாகாணமும் பீராரும் | 8 | 6 | 1 | — | 1 | — |
| அஸாம் | 5 | 3 | — | — | 2 | — |
| வடமேற்கெல்லை மாகாணம் | 5 | 1 | — | — | 4 | — |
| ஒரிஸா | 5 | 4 | — | — | 1 | — |
| சிந்து | 5 | 2 | — | — | 3 | — |
| பிரிட்டிஷ் பலுச்சிஸ்தானம் | 1 | — | — | — | 1 | — |
| தில்லி | 1 | 1 | — | — | — | — |
| அஜ்மீர்-மெர்வாரா | 1 | 1 | — | — | — | — |
| குடகு | 1 | 1 | — | — | — | — |
| ஆங்கிலோ-இந்தியர் | 1 | — | — | — | — | — |
| ஐரோப்பியர் | 7 | — | — | — | — | — |
| இந்தியக் கிறிஸ்தவர் | 2 | — | — | — | — | — |
| மொத்தம் | 150 | 75 | 6 | 4 | 49 | 6 |

கட்டம்—4

## கீழ் சபையில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள் ஜாபிதா.

| மாகாணங்கள் | மொத்த ஸ்தானங்கள் | மொத்தப் பொது ஸ்தானங்கள் | ஹரிஜன ஸ்தானங்கள் | சீக்கியர் ஸ்தானங்கள் | முகமதியர் ஸ்தானங்கள் | ஆங்கிலோ-இந்தியர் ஸ்தானங்கள் | ஐரோப்பியர் ஸ்தானங்கள் | இந்தியக் கிறிஸ்தவர் ஸ்தானங்கள் | வர்த்தகக் கைத்தொழில் ஸ்தானங்கள் | நிலச்சுவான்தார் ஸ்தானங்கள் | தொழிலாளர் ஸ்தானங்கள் | மாதர் ஸ்தானங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சென்னை | 37 | 19 | 4 | — | 8 | 1 | 1 | 2 | 2 | 1 | 1 | 2 |
| பம்பாய் | 30 | 13 | 2 | — | 6 | 1 | 1 | 1 | 3 | 1 | 2 | 2 |
| வங்காளம் | 37 | 10 | 3 | — | 17 | 1 | 1 | 1 | 3 | 1 | 2 | 1 |
| ஐக்ய மாகாணம் | 37 | 19 | 3 | — | 12 | 1 | 1 | 1 | — | 1 | 1 | 1 |
| பஞ்சாப் | 30 | 6 | 1 | 6 | 14 | — | 1 | 1 | — | 1 | — | 1 |
| பீஹார் | 30 | 16 | 2 | — | 9 | — | 1 | 1 | — | 1 | 1 | 1 |
| மத்ய மாகாணம் & பீரார் | 15 | 9 | 2 | — | 3 | — | — | — | — | 1 | 1 | 1 |
| அஸாம் | 10 | 4 | 1 | — | 3 | — | 1 | 1 | — | — | 1 | — |
| வ.மே.எ.மாகாணம் | 5 | 1 | — | — | 4 | — | — | — | — | — | — | — |
| ஒரிஸா | 5 | 4 | 1 | — | 1 | — | — | — | — | — | — | — |
| சிந்து | 5 | 1 | — | — | 3 | — | 1 | — | — | — | — | — |
| பிரி. பலுசிஸ்தானம் | 1 | — | — | — | 1 | — | — | — | — | — | — | — |
| தில்லி | 2 | 1 | — | — | 1 | — | — | — | — | — | — | — |
| அஜ்மீர்-மெர்வரா | 1 | 1 | — | — | — | — | — | — | — | — | — | — |
| குடகு | 1 | 1 | — | — | — | — | — | — | — | — | — | — |
| மாகாண மல்லாதவை | 4 | — | — | — | — | — | — | — | 3 | — | 1 | — |
| மொத்தம் | 250 | 105 | 19 | 6 | 82 | 4 | 8 | 8 | 11 | 7 | 10 | 9 |

மேலே கொடுத்துள்ள புள்ளி விவர ஜாபிதாக்கள் சமஷ்டி சட்டசபைகளின் பிரதிநிதித்துவப் பங்கீட்டை விளக்குவதற்குப் போதுமானவைகளா யிருக்கலாம். என்றாலும் அப் பங்கீடு, ஜனத் தொகை விகிதாச்சாரத்தில் செய்யப்படவில்லை யென்பது இன்னுந் தெளிவாய் விளக்கப்பட வேண்டும். ஜனநாயக தத்துவத்தின் மீது ஸ்தாபிக்கப்படும் சமஷ்டிக்கு ஜனத்தொகை விகிதாச்சாரப் பிரதிநிதித்துவந்தான் அஸ்திவாரம். அந்த அஸ்திவாரம் இந்தச் சமஷ்டி சபையில் இருக்கிறதா என்று பாருங்கள்! இல்லையானால் இச்சமஷ்டியே பிரயோஜனமில்லை; ஜனத்தொகை விகிதாச்சாரத் திற் பிரதிநிதித்துவம் பெறாத எச் சமஷ்டியும் பிரயோஜனமில்லை.

கட்டம்—5

## சட்டப்படி-ஜனத்தொகைப்படி ஜாபிதா

| | விவரம் | அகில இந்தியா | பிரிட்டிஷ் இந்தியா | சமஸ்தான இந்தியா |
|---|---|---|---|---|
| | ஜனத் தொகை | 33 கோடி | 25 கோடி | 8 கோடி |
| மேல் சபை | சட்டப்படி தரப்பட்டிருக்கும் ஸ்தானங்கள் | 260 | 156 | 104 |
| மேல் சபை | ஜனத் தொகைப்படி செல்லவேண்டிய ஸ்தானங்கள் | 260 | 197 | 63 |
| கீழ் சபை | சட்டப்படி தரப்பட்டிருக்கும் ஸ்தானங்கள் | 375 | 250 | 125 |
| கீழ் சபை | ஜனத்தொகைப்படி செல்லவேண்டிய ஸ்தானங்கள் | 375 | 284 | 91 |

இந்த ஜாபிதாப்படி, ஜனத்தொகை விகிதாச்சாரத்தில், சமஸ்தானங்களுக்கும் மாகாணங்களுக்கும் சரியான பிரதி நிதித்துவப் பங்கீடு கொடுக்கப்படவில்லை யென்பது புலனுகிறது. நியாயமாய் மேல் சபையில், பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கிடைக்கவேண்டிய 197 ஸ்தானங்களில், 41 ஸ்தானங்களைத் திருடித்தான் சமஸ்தானங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் கொடுத்திருக்கிறது. இல்லையானுல் சமஸ்தானங்களுக்கு நியாயமாய் 63 ஸ்தானங்கள்தான் கிடைத்திருக்க வேண்டும். கீழ் சபையிலும் இதே திருட்டு நடந்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவுக்குக் கிடைக்கவேண்டிய 284 ஸ்தானங்களில் 34 ஸ்தானங்களை யெடுத்துச் சமஸ்தானங்களுக்குக் கொடுத்திருக்கிறது. இல்லையானுல் நியாயமாய்ச் சமஸ்தானங்களுக்கு 91 ஸ்தானங்கள்தான் கிடைக்கவேண்டும்.

இவ்வாறு இரண்டு சபைகளிலும் மாகாணங்களை வஞ்சித்துச், சமஸ்தானங்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் சலுகை காட்டியிருப்பது தரித்திர புத்தியா லேற்பட்டதல்ல; வேண்டுமென்றே-எப்பொழுதுந் தங்களுக்குச் சமஷ்டி சட்ட சபைகளில் மெஜாரிட்டி யிருக்க வேண்டுமென்றே இச்சூழ்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. இந்தியாச் சட்டத்தைத் திருத்த வேண்டு மென்று யாராவது கருதினுல் அல்லது திருத்துவதற்குச் சர்க்கார் சம்மதித்தால், இந்த இடத்தைத்தான் முக்கியமாகவும் முதன்மையாகவுங் கவனிக்க வேண்டும்.

## தேர்தல் முறை:

இதுவும் விரும்பத்தக்க விதமாயில்லை. கீழ் சபையினர், பெரும்பாலாய், மாகாண சபைகளின் மறைமுகமான தேர்தலால் வருகிருர்கள்; மேல் சபையினர், நேரடியான தேர்தலால்

வருகின்றனர். இதர சமஷ்டிகளில் இந்த வழக்கமில்லை. சமஷ்டியிற் சேருகிற பிரதேசங்கள் சம உரிமையும், சம அந்தஸ்து முடையவைகளா யிருப்பதற்காக, மறைமுகமான தேர்தல் மூலம், மேல் சபைக்கு அவைகள் தங்கள் பிரதிநிதிகளை யனுப்புகின்றன. கீழ் சபையோ நிஸ்ஸந்தேகமாய் - நிர்விகல்பமாய் - நேரடியாய் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் நிறைந்ததாகவே யிருக்கிறது. மறைமுகமான தேர்தலோ நியமனமோ அதில் இராது. ஆனல் இந்திய சமஷ்டியில் அப்படி யில்லை. மாகாண சம்பந்தப்பட்ட மட்டிலாவது, ஜனப்பிரதிநிதி சபை யென்று சொல்லக்கூடிய லாயக்குடையதாக மேல் சபைதா னிருக்கிறது. இந்தியாச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று யாராவது கருதினல் - திருத்துவது அத்தியாவஸ்யம் - அல்லது திருத்துவதற்குச் சர்க்கார் சம்மதித்தால் - சர்க்கார் சம்மதிக்காமல் விதியில்லை-இந்த இடத்தைத்தான் முக்கியமாகவும் முதன்மையாகவுங் கவனிக்க வேண்டும். கீழ் சபையில் நியமனம் என்னும் பேச்சே யிருக்கக்கூடாது. நிஷ்களங்கமான - நேரடியான முறையிற் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

### தீர்க்காயுள் :

சட்ட சபைகளின் ஆயுள் விஷயத்திலும் ஒரு அற்புதமான முறை கையாளப்படுகிறது. சட்டத்தின் 18-வது ஷரத்து 5-வது பிரிவுப்படி, கீழ் சபைக்கு 5 வருஷ ஆயுஷ் கணிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, அதன் ஆரம்பக் கூட்டத்திலிருந்து 5 வருஷம் முடிவதற்குள்ளாக அது கலைக்கப்பட்டுப் புதுத் தேர்தலும் நடத்தப்படும்.

ஆனல் மேல் சபை, கீழ் சபையைப்போல் அற்பாயுள் ஸ்தாபனமல்ல. 1935-ம் வருஷச் சட்ட கர்த்தாக்கள், அதைத்

'தீர்க்காயுஷ்புமான்' என்று ஆசீர்வதித்திருக்கிறார்கள். அங்கத்தினர்கள் அற்பாயுசுடையவர்களா யிருந்தாலும் சபை யென்னவோ தீர்க்காயுசுடையதுதான். கோயிலுக்குப் பொட்டுக் கட்டிக்கொண்டு - கணவனில்லா திருந்தாலும் - தீர்க்கசுமங்கலிகளா யிருக்குந் 'தேவடியாள்'களைப் போல். மேல் சபை எந்தக் காலத்திலுங் கலைக்கப்படமாட்டாது. ஆனால் அங்கத்தினர்கள் மாத்திரம் மூன்றிலொரு பங்கினர், மூன்று வருஷத்துக் கொருமுறை ராஜிநாமாச் செய்வார்கள். அந்த ஸ்தானங்களுக்கு மாத்திரம் மூன்று வருஷத்துக் கொருதரந் தேர்தல் நடக்கும். இதனால் ஒருதரந் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களிற் சிலர், மூன்று வருஷங்களுக்கும், சிலர் ஆறு வருஷங்களுக்கும், அங்கத்தினர்களா யிருப்பார்கள். சபையும், புதியவர்களும் பழையவர்களுங் கலந்ததாயிருக்கும்.

இந்த ராஜிநாமாக்களைப் பற்றியும் தேர்தல்களைப் பற்றியும், இதன் கீழ் ஒரு ஜாபிதா கொடுக்கப்படுகிறது. அதில் மாகாணவாரியாக மூன்று வருஷத்துக் கொருதரம் நிரப்பப்பட வேண்டிய ஸ்தானங்களின் புள்ளி விவரங்களிருக்கின்றன. இந்த ஜாபிதாவைச் சுலபமாய் அறிந்து கொள்ளுவதற்காக, அதன் ஆரம்பத்தில், வருகிற சென்னை மாகாணத்தை மாத்திரம் உதாரணமாய் எடுத்துக்கொண்டு விவரிக்கிறேன். ராஜிநாமா விஷயத்தில் சென்னைக்கு 'முதல் பிரைஸ்' விழுந்திருக்கிறது. சென்னைப் பிரதிநிதிகளில் எவரும் முதல் மூன்று வருஷத்தில் ராஜிநாமாச் செய்ய வேண்டியதில்லை. மறு மூன்று வருஷ முடிவில், பொதுத் தொகுதியில் 7 பேரும், முகமதியர் தொகுதியில் 2 பேரும், மாதர் தொகுதியில் ஒருவரும் ராஜிநாமாச் செய்வார்கள். அந்தப் பத்து ஸ்தானங்களுக்கு மாத்திரம் ஒரு தேர்தல் நடக்கும். அதில் பத்துப்

பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சபைக்கு அனுப்பப்படுவார்கள். அவர்களெல்லாம் புதியவர்களாகவே யிருப்பார்களென்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. பழைய அங்கத்தினர்களே மறுபடியும் நின்று ஜெயிக்கலாம். அப்புறம் ஒன்பதாவது வருஷத்தில் மறுபடியும் பொதுத் தொகுதியில் 7 பேரும், ஹரிஜனத் தொகுதியில் ஒருவரும், முகமதியத் தொகுதியில் இருவரும் ராஜிநாமாச் செய்வார்கள்; தேர்தல் நடக்கும். இப்படியே மூன்று வருஷத்துக் கொருதரம் ராஜிநாமாவும் தேர்தலும் மாறி மாறி வரும் - நாலு மூலைத்தாட்சியைப் போல்,

# மேல்சபை ராஜிநாமா விவர ஜாபிதா

| | மூன்றுவருஷத்திற்குமாத்திரம் புதிதாய் நிரப்பப்பட வேண்டிய ஸ்தானங்கள் | | | | | ஆறுவருஷத்திற்கு மாத்திரம் புதிதாய் நிரப்பப்பட வேண்டிய ஸ்தானங்கள் | | | | | ஒன்பது வருஷத்திற்கு மாத்திரம் புதிதாய் நிரப்பப்பட வேண்டிய ஸ்தானங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| மாகாணம் | பொதுத் தொகுதி | ஹரிஜனத் தொகுதி | சீக்கியத் தொகுதி | முகமதியத் தொகுதி | மாதர் தொகுதி | பொதுத் தொகுதி | ஹரிஜனத் தொகுதி | சீக்கியர் தொகுதி | முகமதியர் தொகுதி | மாதர் தொகுதி | பொதுத் தொகுதி | ஹரிஜனத் தொகுதி | சீக்கியத் தொகுதி | முகமதியத் தொகுதி | மாதர் தொகுதி |
| சென்னை | — | — | — | — | — | 7 | — | — | 2 | 1 | 7 | 1 | — | 2 | — |
| பம்பாய் | 5 | — | — | 2 | 1 | — | — | — | — | — | 5 | 1 | — | 2 | — |
| வங்காளம் | 4 | 1 | — | 5 | — | — | — | — | — | — | 4 | — | — | 5 | 1 |
| ஐக்கிய மாகாணம் | 5 | 1 | — | 3 | 1 | 6 | — | — | 4 | — | — | — | — | — | — |
| பஞ்சாப் | 2 | — | 2 | 4 | — | 1 | — | 2 | 4 | 1 | — | — | — | — | — |
| பீகார் | — | — | — | — | — | 5 | 1 | — | 2 | — | 5 | — | — | 2 | 1 |
| மத்திய மாகாணமும் | — | — | — | — | — | 6 | 1 | — | 1 | — | — | — | — | — | — |
| அஸாம் [பீராரும் | — | — | — | — | — | 3 | — | — | 2 | — | — | — | — | — | — |
| வடமேற்கு எல்லை | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | 4 | — |
| ஒரிஸா [மாகாணம் | 4 | — | — | 1 | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| சிந்து | 2 | — | — | 3 | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| பிரிட்டிஷ் பலுச்சி | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | — |
| தில்லி [ஸ்தானம் | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — | — |
| அஜ்மீர்-மெர்வாரா | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — | — |
| குடகு | — | — | — | — | — | — | — | — | — | — | 1 | — | — | — | — |
| மொத்தம் | 22 | 2 | 2 | 18 | 2 | 28 | 2 | 2 | 15 | 2 | 25 | 2 | — | 16 | 2 |

## வாக்காளர் யோக்கியதை :

சமஷ்டி சட்டசபை வாக்காளர்கள் யோக்கியதையைப் பற்றி யிங்கொன்றும் அதிகமா யெழுதத் தேவையில்லை; எழுதவும் முடியாது. ஆனால் மேல் சபையில் வோட்டர் களாயிருக்கத் தகுதியுள்ளவர்கள் யார் என்பதைப்பற்றி மாத்திரம் சிறிது சொல்லவேண்டும். அவர்கள்,

(1) 21 வயது நிறைந்தவர்களாகவும்,

(2) பிரிட்டிஷ் பிரஜைகளாகவும்,

(3) எந்தத் தொகுதிகளில் தங்களைப் பதிவுசெய்து கொள்ளுகிறார்களோ அந்தத் தொகுதிகளில் தொடர்ச்சி யாய் 120 தினங்கள் வாசஞ் செய்தவர்களாகவும்

(4) (அ) தேர்தல் நடைபெறும் வருஷத்துக்கு முந்திய வருஷத்தில் 300 ரூபாய்க்குக் குறையாத கிஸ்தியோ வரியோ செலுத்தினவர், அல்லது

(ஆ) 1,500 ரூபாய்க்குக் குறையாத வருஷ வரு மானத்தைத் தரக்கூடிய பூஸ்திதியுடையவர், அல்லது

(இ) 7,500 ரூபாய் வருஷ வருமானத்தின்மீது வரி செலுத்தியவர், அல்லது

(ஈ) பிரிட்டிஷ் இந்தியாவில் எந்த வொரு சட்ட சபையிலேனும் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினரா யிருந் தவர், அல்லது

(உ) அரசாங்க நிர்வாகசபை அங்கத்தினராகவோ, மந்திரியாகவோ இருந்தவர், அல்லது

(ஊ) ஏதேனுமொரு சர்வகலாசாலையில் அங்கத்தி னரா யிருந்தவர், அல்லது

(எ) ஹைக்கோர்ட் நீதிபதியாகவோ, நகரசபை மேயராகவோ, முனிசிபல் ஷெரீபாகவோ இருந்தவர், அல்லது

(ஏ) ஏதேனுமொரு நகரசபை, ஜில்லாபோர்டு, கோர்வாப்பரேடிவ் பாங்க் முதலியவற்றின் தலைவரா யிருந்தவர், அல்லது

(ஐ) ராவ் பஹதூருக்குக் குறையாத பட்டத்தை யுடையவர், அல்லது

(ஒ) மாதம் 250 ரூபாய்க்குக் குறையாத பென்ஷன் வாங்குகிறவர்.

மேலே கூறியுள்ள பத்துவிதத் தகுதிகளில் ஏதாவதொன்றையுடையவராகவும் இருக்கவேண்டும்.

## அபேக்ஷகர் அருகதை :

சமஷ்டி சட்டசபையில் எதற்காவது அபேக்ஷகராய் நிற்கிற ஒருவருக்கு இருக்கவேண்டிய முக்கியமான அருகதைகள் மாத்திரந்தான் இங்குக் கொடுக்கப்படுகின்றன. அவை யாவன :—

(1) மேல் சபையானல் 30 வயது நிறைந்தவராகவும், கீழ் சபையானல் 25 வயது நிறைந்தவராகவும்,

(2) பிரிட்டிஷ் பிரஜையாக அல்லது சமஷ்டிப்பட்ட சமஸ்தானப் பிரஜை அல்லது அதிபதியாகவும்,

(3) ஏதாவதொரு சட்டசபைக்கு வோட்டளிக்கும் யோக்கியதை யுள்ளவராகவும்,

இருக்கவேண்டும். இம் மூன்று மில்லாதவர் எந்தச் சட்டசபைக்கும் அபேக்ஷகராய் நிற்க முடியாது.

சமஷ்டியிற் சேர்ந்த அல்லது சேர்க்கப்படாத ஒரு சமஸ்தானப் பிரஜையையோ அதிபதியையோ மேலே கூறி

யுள்ள 2-வது விதி கட்டுப் படுத்தாது. அவர்களும் மாகாண சட்டசபை ஸ்தானத்துக் கருகதையுடையவர்களா யிருந்தால், சமஷ்டி சட்டசபைக்கும் நிற்கலாம்.

மேல் சபையில் அங்கத்தினரா யிருந்து மூன்று வருஷத்துக் கொருதரம் ராஜிநாமாச் செய்யும் முறைப்படி யெப்பொழுதாவது ராஜிநாமாச் செய்தவர்களும் அபேக்ஷகர்களாய் நிற்கலாம்.

இப்படிப்பட்ட அருகதையுடைய அபேக்ஷகர்கள் தான் சமஷ்டி சட்டசபைத் தேர்தலுக்கு நிற்கலாம். அவர்களைத் தான் தேர்தல் முறைப்படி வாக்காளர்கள் தங்கள் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுத் தனுப்புவார்கள்.

## நடைமுறை

இவ்வாறு வாக்குரிமையுள்ள ஜனங்களாலும் மாகாண சட்டசபைகளாலுந் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும், கவர்னர்-ஜெனரலாலும் சமஸ்தானாதிபதிகளாலும் நியமனஞ் செய்யப்பட்ட நியமன அங்கத்தினர்களையுமுடைய சமஷ்டி சட்டசபை, சட்டப்படி செய்யவேண்டிய வேலைகளையும், நடைமுறையையும் இங்கெழுதுகிறேன்.

**கூட்டம் :**

**19**-வது ஷரத்து **3**-வது பிரிவுப்படி சமஷ்டி ஸ்தாபித சம்பந்தமாய், மன்னரால் வெளியிடப்படும் பிரகடனத்திற் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் சமஷ்டி சட்டசபைகளின் முதற் கூட்டம் கவர்னர்-ஜெனரலின் அழைப்பினாற் கூட்டப் படும்.

சட்டசபை அங்கத்தினர் ஒவ்வொருவருக்குந் தனித் தனியாய் கவர்னர்-ஜெனரல் அழைப்பு அனுப்ப வேண்டு

மென்று அவசியமில்லை; அரசியலில் அது அத்தனை முக்கியமுமல்ல. பத்திரிகைகளில் அறிக்கை வெளியிட்டாற் போதுமானது.

**பிரமாணம் :**

சட்ட சபை நடைமுறையின் ‘பிள்ளையார் சுழி’ அதன் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் இராஜ விஸ்வாசப் பிரமாணஞ் செய்து கொடுத்தல்.

இந்தப் ‘பிள்ளையார் குட்டும்’ ஒரே மாதிரியாயில்லை. அதாவது, எல்லா அங்கத்தினர்களுக்கும் ஒரே விதமான பிரமாண ஷரத்துக் கிடையாது: பிரிட்டிஷ் இந்தியப் பிரதி நிதிகள் ஒரு விதமாகவும், நியமன அங்கத்தினர்கள் மற்றொரு விதமாகவும், சமஸ்தானாதிபதிகள் - சட்ட சபை அங்கத்தினர்களாக வந்தால் - வேறொரு விதமாகவும் பிரமாணஞ் செய்து கொடுப்பார்கள். அப் பிரமாணங்களின் நகல் இங்கு அவசியமில்லை. ஆனாற் பரிபூரணமான ராஜ விஸ்வாசத்தையே யுள்ளடக்கிக் கொண்டுவரும் பிரமாணத்திலும் வித்தியாசம் பாராட்டவேண்டுமா? அல்லது வித்தியாசமான விஸ்வாசப் பிரமாணத்தால் சட்ட சபையில் அல்லது சட்ட சபை மெம்பர்களில் ஏதாவது வித்தியாச மேற்படுமா? “என் கடமையை நான் உண்மையோடு செய்து முடிப்பேன்” என்று பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதியும், “இச் சபை மெம்பராக நான் உண்மையோடும், விஸ்வாசத்தோடும் நடந்து கொள்ளுவேன்” என்று சட்ட சபை மெம்பராகுஞ் சமஸ்தானாதிபதியும், சத்தியப் பிரமாணஞ் செய்து கொடுப்பார்கள். இதனால் சட்ட சபையில் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிக்குள்ள கடமை, சட்டசபை மெம்பராகிற சமஸ்தானாதிபதிக்கும் இல்லையென் றர்த்தமா? அதே மாதிரி சமஸ்தானாதிபதி

யல்லாத சாதாரணச் சமஸ்தானப் பிரதிநிதி, தன்னை நியமித்தனுப்பிய மன்னருக்கும் அவர் வாரீஸ் வகைராக்களுக்கும், சக்கிரவர்த்திக்கும் அவர் சந்ததி வகைராக்களுக்கும் விஸ்வாசியாயிருப்பதாய்ச் சத்தியஞ் செய்து கொடுப்பார். அவர்களுக்கும் விஸ்வசிக்கக் கூடிய வேறெதுவுமில்லையா?

இந்தச் சத்தியப் பிரமாணச் சடங்கு, கவர்னர்-ஜெனரல் முன்னிலையிலோ அல்லது அவரால் நியமிக்கப்படும் ஒருவர் முன்னிலையிலோ அல்லது வழக்கப் பிரகாரஞ் சட்ட சபையில் அன்று அக்கிராசனம் வகிக்கும் உத்தியோகஸ்தர் முன்னிலையிலோ நடைபெறும்—ஷரத் 24.

## இரு சபையில் ஒரு மெம்பர் :

(i) எவரேனும் ஒருவர் ஏககாலத்தில் இருசட்ட சபைகளிலும் மெம்பரா யிருக்கக் கூடாது. அப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஏற்பட்டால், அவர் ஏதேனுமொரு சபையில் தன் ஸ்தானத்தைக் காலி செய்துவிட வேண்டும். எந்த ஸ்தானத்தை எப்படிக் காலி செய்வதென்பது கவர்னர்-ஜெனரலின் இஷ்டத்தை யனுசரித்துச் செய்யப்பட வேண்டும்—ஷரத். 25.

(ii) எவரேனும் ஒருவர் ஏக காலத்தில் ஏதாவதொரு சமஷ்டி சபையிலும், ஏதாவதொரு மாகாண சபையிலும் மெம்பரா யிருக்கக் கூடாது. இருந்தால் மாகாண மெம்பர் பதவியை மாகாண கவர்னரின் இஷ்டத்தை யனுசரித்துக் காலி செய்ய வேண்டும்—ஷரத் 68 (2).

## சில தடைகள் :

26-வது ஷரத்து 1-வது பிரிவுப்படி, கீழ்க்காணும் ஆறு விதமான நிலைமையி லிருப்பவர்கள், சமஷ்டி சட்ட சபையில் மெம்பரா யிருக்கத் தகுதியில்லாதவர்களென்று கருதப்படு

வார்கள். அவர்கள் தங்கள் ஸ்தானங்களை எழுத்து மூலம், சொந்தக் கையொப்பத்தோடு ராஜிநாமாச் செய்யவேண்டும். அல்லது தொடர்ச்சியாய் அறுபது தினங்கள் சட்ட சபைக் கூட்டங்களுக்கு ஆஜராகாமற் காலி செய்ய வேண்டும். (இதில் கால வரையறை யில்லாமற் சட்ட சபை தள்ளி வைக்கப்படுங் காலமும், தொடர்ச்சியாய் 4 தினங்கள் ஒத்திவைக்கப்படுங் காலமும் கணக்கிடப்படக் கூடாது.)

(1) இந்தியாவில் ஏதேனுமொரு லாபகரமான சர்க்கார் உத்தியோகம் வகிப்பவர். (இத்தடை, சமஷ்டி சட்ட சபைச் சட்டத்தின் மூலம் ரத்தாகலாம்.)

(2) சரியான நியாய ஸ்தலத்தின் மூலம், சித்த ஸ்வாதீனமில்லாதவரென்று ருஜூச் செய்யப்பட்டவர்.

(3) ரத்துச் செய்யப்படாத பாப்பர் அல்லது இன்ஸால்வெண்ட்.

(4) எலெக்ஷன் சட்டத்துக்கு விரோதமாய் நடந்து கொண்டதாய்த் தண்டிக்கப்பட்டவர் அல்லது குற்றஞ் சாட்டப்பட்டவர்.

(5) எந்தக் குற்றத்துக்காகவுந் தண்டிக்கப்பட்டு, தீவாந்தர சிக்ஷை அல்லது 2 வருஷத்துக் குறையாத சிறைத் தண்டனை யடைந்தவர். (இதில் எந்தத் தண்டனையும் முடிந்து 5 வருஷம் அல்லது கவர்னர்-ஜெனரல் தமது ஏதேச்சாதிகாரத்திற் குறிப்பிடுங் காலங் கடந்து விட்டால், இத்தடை பாதிக்காது.)

(6) சட்டப்படி அல்லது கவுன்ஸில் உத்தரவுப்படி, எலெக்ஷன் செலவு கணக்குச் சமர்ப்பிக்கத் தவறியவர். (கணக்குக் கொடுப்பதற்காகக் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து 5-வருஷக் காலாவதியாகி விட்டால் அல்லது கவர்

னர்-ஜெனரல் அத்தடையை நீக்கிவிட்டால் இத்தகுதியின்மை, தானே ரத்தாகி விடும்.)

இந்த ஆறு விதமான தடைகளில் 5-வது முறைப்படி தண்டிக்கப்படுகிறவருடைய ஸ்தானம், உடனே காலி செய்யப்படுவதில்லை; மூன்று மாத அவகாசம் அளிக்கப்படும். அதற்குள்ளாக அவர் அப்பீல் செய்து அனுகூலமடையலாம். ஆனால் அந்தக் காலத்திற் சட்ட சபைக் கூட்டத்தில் ஆஜராகியிருக்கவோ, வோட்டளிக்கவோ அந்த மெம்பருக்கு உரிமையில்லை.

இந்நிபந்தனைகளை மீறி யாரேனுமொரு மெம்பர், சட்ட சபைக் கூட்டங்களுக்கு ஆஜரானாலுஞ் சரி, மசோதா அல்லது தீர்மானங்கள்மீது வோட்டளித்தாலுஞ்சரி, அந்தக் குற்றங்களுக்காக நாள் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் வீதம், சமஷ்டிக் கடன் பாவத்தில் அவரிடமிருந்து வசூலிக்கப்படும்—ஷரத். 27.

## உத்தியோகஸ்தர்கள் :

சமஷ்டி சட்ட சபை ஒவ்வொன்றுந் தனக்குத்தானாகவே ஒரு தலைவரையும் உப-தலைவரையுந் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். (ஷரத். 22) மேல் சபைத் தலைவருக்குப் 'பிரஸிடெண்ட்' என்றும், உப-தலைவருக்கு 'டெபுடி பிரஸிடெண்ட்' என்றுங், கீழ் சபைத் தலைவருக்கு 'ஸ்பீக்கர்' என்றும், உப-தலைவருக்கு 'டெபுடி ஸ்பீக்கர்' என்றும் பெயர்.

இந்த உத்தியோகங்கள் எப்பொழுது காலி விழுந்தாலுந் தேர்தல் மூலமாகவே நிரப்பப்படும்.

எந்தச் சட்ட சபைத் தலைவரும் உப-தலைவரும், தங்கள் உத்தியோகத்தை இழப்பதற்கு மூன்று காரணங்கள்தான் உண்டு.

(1) சட்ட சபை மெம்பராயில்லா திருப்பது.

(2) ராஜிநாமா.

(3) நம்பிக்கையில்லாத் தீர்மானம். (14 நாள் நோட்டீஸ் இல்லாத எந்த நம்பிக்கையில்லாத் தீர்மானமும் அனுமதிக்கப்பட மாட்டாது)—ஷரத். 22 (2)

தலைவர்களில்லாத சமயம், உப தலைவர்கள் சட்ட சபைக் கூட்டங்களுக்கு அக்கிராசனம் வகிப்பார்கள். உப-தலைவர்களும் ஆஜரில்லாவிட்டால், கவர்னர்-ஜெனரலால் நியமிக்கப்படும் ஒருவர் அந்த ஸ்தானத்தை வகிப்பார்—ஷரத். 22 (3)

தலைவர்களுக்கும் உப-தலைவர்களுக்குஞ் சம்பளம் உண்டு. அது அந்தந்தச் சட்ட சபைகளால் ஒரு சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்படும். ஆனால் சட்டம் உண்டாக்கப்படும் வரை, கவர்னர்-ஜெனரல் தமது எதேச்சாதிகாரத்தில் அச் சம்பளங்களைத் தற்காலிகமாய் நிச்சயஞ் செய்வார்—ஷரத் 22 (4)

கீழ் சபை கலைக்கப் பட்டாலும் அதன் தலைவர் தமது ஸ்தானத்தை மறு சபை முதற் கூட்டம் வரை, காலி செய்ய வேண்டியதில்லை. அடுத்த தேர்தலில் அவருக்குச் சட்ட சபையில் ஸ்தானங் கிடைக்காவிட்டால் அல்லது ஏதேனுந் தடையேற்பட்டால்தான் அவரது தலைமை ஸ்தானம் தானே காலியாகும்—ஷரத். 22 (5)

சட்ட சபைத் தலைவருக்குச் சட்ட சபையை ஒழுங்கு முறையோடு நடத்தி வைப்பதுதான் முக்கியமான வேலை. அதற்கு அதிகச் சாமர்த்தியம் வேண்டும். அரசியல் முறையில் அதிகத் தேர்ச்சியுள்ளவராலேதான் இதைக் குற்றங் குறையில்லாமல் நிர்வகிக்க முடியும். ஒவ்வொரு மெம்பரும் அவரவர் இஷ்டம்போற் பேசவும், இஷ்டம்போற் கேள்வி

கேட்கவும், இஷ்டம்போல் நடக்கவுந் தொடங்கினால் சபையிற் கூச்சலுங் குழப்பமும் மிகுந்து விடும்; காரியம் நேரே நடவாது. அவ்வப்போது ஒழுங்கு முறை உத்தரவு (Points of Order) பிறப்பித்து, அந்தந்த இடத்திலேயே அவற்றிற்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டும்; அதே சமயம் அங்கத்தினர் சுதந்திரத்தில், அநாயவஸ்யமாய்த் தலையிடவுங் கூடாது. கத்தியின் கூர்ப்புறத்தில் நடப்பதுபோல், சட்ட சபை ஒழுங்குமுறையாகிற வரம்புகடவாம லிருக்கவேண்டும். அதைக் கடந்து அப்புறம் இப்புறம் அடி யெடுத்து வைத்தால், அசந்தர்ப்பமாகிவிடும்.

சட்ட சபைத் தலைவர் எக் கட்சியிலிருந்து வந்தவராயிருந்தாலும், எல்லாக் கட்சிகளுக்கும் அவர் பொது மனிதராகவே யிருக்க வேண்டும். தன் கட்சியைச் சேர்ந்தவரென்றும் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவரென்றும் வித்தியாசம் பாராட்டக் கூடாது. எல்லாரிடமும் சௌஜன்யமாகவும், பாரபக்ஷமில்லாமலும் நடந்து கொள்ள வேண்டும். இது பற்றி மகாத்மாவின் மணி வாசகத்தைப் பாருங்கள் :—

“அவர் (சட்ட சபைத் தலைவர்) தமது ஸ்தானத்திலிருக்கும் போது ஒரு நீதிபதியின் ஸ்தானத்தை நிர்வகிப்பவரா யிருக்கிறார். பக்ஷபாதமில்லாத - நியாயமான தீர்ப்புகளை அவர் (திடீர் திடீரென்று) சொல்ல வேண்டியதிருக்கிறது. மெம்பர்கள் ஒருவருக்கொருவர் எப்படி மரியாதையாய் நடந்து கொள்ள வேண்டுமென்று வழி காட்ட வேண்டியதிருக்கிறது. எதிரிகளைத் திருப்புவதற்கு இதர மெம்பர்களுக்கில்லாத சந்தர்ப்பம் தலைவருக்குத் தான் உண்டு.

“சட்ட சபைக்கு வெளியில் எப்படி யிருந்திருந்தாலும், சட்ட சபைத் தலைமைப் பதவி தாங்கிய பின், எந்தக் கட்சிக்கும் அவர் பக்ஷபாதமில்லாதவராகவே யிருக்க வேண்டும். அதுதான் அவருக்கு அதிக மரியாதையைத் தரும். அந்த இடத்திலேதான் அவர் பிரதம மந்திரியைவிடப் பெரியவராகிறார்.

“சாதாரணமாய் ஒரு மனிதன் என்னும் முறையிலுங்கூட, அவர் ஒழுக்கமுஞ் சீலமுங், குற்றஞ் சொல்லுவதற்கிட மில்லாததா யிருக்க வேண்டும். தேர்மையுந் தைர்யமும், நேர்மையும் நெறியும் வேண்டும். எண்ணத்தாலும் பேச்சாலும் செய்கையாலும் அவர், சத்தியத்தையும் அஹிம்ஸையையும் பின்பற்ற வேண்டும். அப் போது அவர் எந்த மேடையில் இருந்தாலென்ன?”

## அங்கத்தினர்கள் :

அங்கத்தினர்களைப்பற்றி அதிகஞ் சொல்ல வேண்டிய தில்லை. அவர்கள் வேலை விவரம், சட்ட சபை வேலை விவரத் தோடு சேர்த்துச் சொல்லப்படும். ஆனால் ஒன்று மாத்திர மிங்குக் குறிப்பிடப்பட வேண்டும். அதாவது, அவர் களுக்குச் சட்ட சபைக்குட் சம்பூரணமான பேச்சுச் சதந்திர முண்டு—ஷரத். 28.

பேச்சுச் சுதந்திரத்தை பிரிட்டிஷ் இந்தியாவில் பூரணமா யனுபவிப்பதற்குச் சட்ட சபையின் நாலு சுவர்களைத் தவிர (குறுகலான) இடம் வேறெதுவுமே யில்லை. சட்ட சபை நடை முறைகளுக் குட்பட்டும், தலைவரின் ஒழுங்கு முறை உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்தும் ஒரு மெம்பர் அவசியம் ஏற்படும்போது ‘பச்சை பச்சையாய்’ ராஜ துவேஷப் பிரசங் கங்கள் செய்யலாம். அதற்காக எந்தச் சட்டமும் எந்தக் கோர்ட்டும் அவர்மீது நடவடி யெடுக்க முடியாது—ஷரத் 28 (1). சட்ட சபைகூட அவர்மீது கேஸ் தொடுக்க முடி யாது-கோர்ட்டை அவமதித்ததாய்ச் செய்யப்படும் வழக் கைப் போல்.

## தலைவரிலும் பெரியவர் !

தலைவரிலும் பெரியவர் சாதாரண அங்கத்தினர் என்று இங்கு நான் எழுதும்பொழுது, சிலர் ஆச்சர்யமும் ஆதுரமும்

அடையலாம். ஜனநாயக தத்துவப்படி பார்த்தால், இதில் ஒன்றும் ஆச்சர்யப்படுவதற்கோ ஆதுரப்படுவதற்கோ இல்லை. நடைமுறைப்படி பார்த்தாலும் இதை நீங்கள் நம்பத்தான் வேண்டும். உதாரணத்துக்கு மேலே சொன்ன பேச்சுச் சுதந்திரத்தையே யெடுத்துக்கொள்ளுவோம். சட்ட சபையை நடத்தி வைக்கும்போது, மெம்பர்களுக்கு அடிக்கடி ஒழுங்கு முறை உத்தரவு பிறப்பிப்பதையும், வோட்டுக்கு விடும்போது அதன் முடிவைச் சொல்லுவதும், கவர்னர்-ஜெனரல் சட்ட சபைக் கேதாவது செய்தியனுப்பினுல் அதை அறிவிப்பதுந் தவிர தலைவருக்கு அதிகமாய்ப் பேசும்படியான சந்தர்ப்பமும் சாவதானமுங் கிடையாது - மெம்பருக்குண்டு.

இந்த வொரு உதாரணம் போதாது; இன்னொன்று சொல்லுகிறேன். சட்ட சபைத் தலைவர்களுக்கு* சட்ட சபைக்குள் வோட்டுரிமை யில்லை; சமமான வோட்டுகளுண் டாகும்போது, கடைசியில் தமது வோட்டைப் போட்டு, ஏற்பட்ட பிரச்னையை முடிவு செய்யலாம். இதற்கு இங்கிலீஷில் 'காஸ்ட்டிங் வோட்' (Casting Vote) என்று பெயர். ஆனுல் அங்கத்தினருக்கோ அவர் பாக்கெட்டில் எப்பொழுதும் ஒரு 'வோட்டு' இருந்துகொண்டே யிருக்கிறது. இந்த உரிமை மந்திரிகளுக்கும், கவுன்ஸிலர்களுக்கும், அட்வகேட்-ஜெனரலுக்கும் இல்லை—ஷரத். 21. ஆகையால் சாதாரண அங்கத்தினர்கள் மந்திரிகளையும் கவுன்ஸிலர்களையும் அட்வகேட்-ஜெனரலையும் விடப் பெரியவர்கள் என்றுஞ் சொல்லலாம்.

ஆனுல் இப்பெருந்தகைமை, பெரும்பாலாய் இந்தத் தேசத்திற் பாராட்டப்படுவதில்லை. ஏனெனில் ஜனநாயக

---

* சட்ட சபைத் தலைவர்களென்று இங்கு, பிரஸிடெண்ட், டெபுடி பிரஸிடெண்ட், ஸ்பீக்கர், டெபுடி ஸ்பீக்கர், இவர்களையும், இவர்களுக்கு ஆக்டிங்கா யிருப்பவர்களையும் உள்ளடக்கிச் சொல்லப்படுகிறது.

உணர்வு, சட்ட பூர்வமாய் இங்கு வளர்க்கப்படவில்லை. சட்ட சபைக்குள்ளே தாக்கப்படாமற் காக்கப்படும் பேச்சுச் சுதந்திரம், சட்ட சபைக்கு வெளியிலே காலடியிற் போட்டு மிதிக்கப்படுவதால், குற்றுயிருங் குறையுயிருமாய்க் கிடக்குஞ் சுதந்திரம் சற்று மூச்சு வாங்கிக்கொள்ளும் புகலிடமாகவே சட்ட சபைகளிருக்கின்றன. சட்ட சபைக்குள்ளிருக்கும் நபர் சுதந்திரம், நாட்டுக்கு மென்றைக்கு வருகிறதோ, அன்றைக்குத்தான் ஜனநாயகந் தலை தூக்கி நிற்கும்.

## மெம்பர் சம்பளம் :

சட்ட சபை மெம்பர்கள் சட்ட சபையால் அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்படுஞ் சம்பளத்துக்கு உரிமை யுடையவர்களா யிருப்பார்கள் என்று, இந்த இந்தியாச் சட்டத்தில் இரண்டு ஷரத்துக ளிருக்கின்றன. ஒன்று மாகாண சம்பந்தப்பட்ட 72-வது ஷரத்து; மற்றொன்று சமஷ்டி சம்பந்தப்பட்ட 29-வது ஷரத்து. இவ்விரண்டு ஷரத்துகளின் கருத்தும் ஒன்றுதான். அதாவது, சட்ட சபை மெம்பர்களுக்குச் சம்பளங் கொடுக்க வேண்டுமென்பது.

இது சட்டத்தால் திட்டமாய் வற்புறுத்தப்படாவிட்டாலும், சட்ட சபைகளின் அபிப்பிராயத்துக்கே விடப்பட்டிருந்தாலும், விவாதத்துக்கு வழிவிட்டிருக்கிறது; வழக்கத்துக்கு முரண்பட்டு மிருக்கிறது.

இந்தியாவிற், சட்டசபைகள் ஏற்பட்டதிலிருந்து இதுவரை சட்டசபை மெம்பர்கள் சம்பளமில்லாத-ஆனால் பிரயாணபடிச் செலவுகள் மாத்திரங் கொடுக்கப்பட்ட-கௌரவ அங்கத்தினர்களாயிருந்து வந்தனர். பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் 1911-ம் ஆண்டுவரை இவ்வழக்கந்தா னிருந்து வந்தது. இதனால் தனவந்தர்கள் மாத்திரந்தான் சட்டசபை மெம்பர்

களாய் வரமுடிந்தது. ஆனால் சம்பளமேற்படுவதால் மாத்திரம் சாதாரண ஜனங்களும் சட்டசபை மெம்பர்களாக முடியுமா?

சட்டசபை மெம்பர்களுக்குச் சம்பள மேற்படுவதை நான் ஆக்ஷேபிக்கவில்லை. அதனால் அவர்கள் கௌரவம் கூடுகிறதோ குறைகிறதோ, அதற்காகவும் நான் கவலைப்படவில்லை. ஆனால் தினம் இரண்டணா வருமானங்கூட இல்லாத இந்தியன், இத்தனை பெரிய செலவை எப்படித் தாங்குவான் என்று எண்ணும்போது மனம் இற்றுவிடும்போலிருக்கிறது. மாகாண மெம்பர்கள் 1848 பேர்; சமஷ்டி மெம்பர்கள் 635 பேர்; ஆகமொத்தம் 2483 பேர்களுக்கும் (அலவன்ஸ் உள்பட) மாதச் சம்பளம் 500 ரூபாய் (காங்கிரஸ் கொள்கைப்படி) கொடுத்தால், வருஷத்துக்குச் சுமார் $1\frac{1}{4}$ கோடி ரூபாய்களாகிறது. அல்லது அதமபக்ஷம் மாதச் சம்பளம் 100 ரூபாயாகப் பார்த்தாலும் வருஷத்துக்குச் சுமார் 25 லட்சம் ரூபாய்களாகிறது. இதை இந்தியா இப்பொழுதிருக்கும் நிலைமையில் எப்படிச் சகிக்கும்? ஒட்டகத்தின் முதுகில், அதனால் சுமக்கமுடியும் பாரத்துக்குமேல் ஒரு துரும்பு அதிகமாய் ஏற்றினாலுங் குருக்கொடிந்துவிடும் என்று சொல்லப்படுகிறது. அதேமாதிரிதான் வரி செலுத்துவோருக்கு இப்பாரம் இருக்கும். இருந்தாலுஞ் சட்டசபைப் பொறுப்பை இனியும், பணக்காரர் ஆதிக்கத்திலேயே விட்டுவிடுவது விரும்பத்தக்கதல்ல. அது அரசியல் தற்கொலைக்குச் சமமானது.

## வழியென்ன?

சிக்கனக் கோடரியைச் சர்க்கார் எடுக்கலாம். உயர்தர உத்தியோகஸ்தர்களின் உயர்ந்த சம்பளத்தை எவ்வளவோ வெட்டலாம். ஆனால் இந்தியாவிலிருக்கும் ஏகாதிபத்திய அரசாங்கம் இதற்குச் சம்மதிக்காது. அப்படியானால் வழி

யென்ன? பழைய படித்தர முறையைத்தான் பின்பற்ற வேண்டுமா?

எதிலும் உழைப்புக்குரிய கூலி கொடுக்கப்படுவதை உலகம் ஒப்புக்கொள்ளுகிறது. இது பொது ஊழியத்துக்கும் பொருந்தும்; சட்டசபை மெம்பர்களுக்குஞ் சரிப்படும். ஆனால் இதை அளப்பதற்கு அந்நியர் இந்நாட்டில் அனுஷ்டித்துவரும் அநியாய-ஆடம்பரச் சம்பள நிர்ணயத்தை யெடுத்துக்கொள்ளக் கூடாது. நாட்டின் சராசரி வருமானத்துக்கும், சராசரிச் செலவுக்குந் தக்கபடி, சட்டசபை மெம்பர் சம்பளம், சட்டசபைகளால் தீர்மானிக்கப்படவேண்டும். மாகாண மெம்பருக்கு மாதச் சம்பளம் ரூபாய் 75 ஆகவும் சமஷ்டி மெம்பருக்கு மாதச் சம்பளம் ரூபாய் 100 ஆகவுமிருக்கலாம். இதைக்கொண்டு ஒரு மெம்பர், நகர வாழ்க்கையைக்கூட நன்றாய்க் குடும்பத்தோடு நடத்தலாம்.சிக்கனச் சித்தம் மாத்திரம் தேவை.

## வேலை விவரம்

சட்ட சபை வேலை விவரத்தைப் பறவை நோக்காய்ப் பார்க்கிறபோது அது அநேக தளைகளுக் குட்பட்டும் வரையறைக்குட்பட்டு மிருப்பதாய்த் தோன்றுகிறது. கவர்னர்-ஜெனரல் அத்தியாயத்திற் சட்ட சபை அதிகாரங்களி லநேகம் ஆராயப் பட்டிருக்கின்றன. அப்போது நாம் சட்ட சபையை வெறும் 'நவராத்திரிக்கோலு' என்று எண்ணியது தவறல்ல; சட்ட சபையை யொரு சதுரங்கக் கட்டமென்றும், மெம்பர்களைச் சதுரங்கக் காய்களென்றும், விசேஷப் பொறுப்பு-எதேச்சாதிகாரம், சொந்தத் தீர்ப்புகளாகிற முக் கூட் டதிகாரங்களையுடைய கவர்னர்-ஜெனரல், அந்தக் காய்களைத் தனதிஷ்டம்போல் எடுத்துவைத் தாடலாமென்றும் நினைத்தது

சரி; சட்ட சபையை யொரு சீட்டுக் கூட்டமாகவும், மந்திரி களைத் துருப்புகளாகவும் கவர்னர்-ஜெனரல் தன துள்ளங்கை யில் வைத்துக்கொண்டு, பாதுகாப்புகளும் பிடிதரங்களுமாகிற சூதாட்ட மாடுகிறுரென்று தீர்மானித்ததும் பிழையல்ல. இவையெல்லாம் நிஜம், நிஜம், முக்காலும் நிஜம்.

## பஞ்ச கிருத்தியங்கள்:

பொதுவாய்ச் சட்ட சபை வேலைகளை ஐந்து ரகங் களி லடக்கலாம்; பஞ்ச கிருத்தியங்களென்றுஞ் சொல்லலாம்.

(1) கேள்விகள் கேட்பது.

(2) அவசரப் பிரேரணை, வெட்டுப் பிரேரணை போன்ற பிரேரணைகள் கொண்டு வருவது.

(3) பொது விஷயங்களைப்பற்றிய தீர்மானங்கள் கொண்டு வருவது.

(4) சட்ட மியற்றுவது.

(5) வரவு-செலவுக் கணக்குப் பார்ப்பது.

## கேள்விகள்:

இவைகளெல்லாம் சட்ட சபை செய்ய வேண்டிய வேலை கள். ஆனல் அவற்றைச் சட்ட சபை தனதிஷ்டம்போல் செய்ய முடியாது; சட்ட சபை நடை முறை விதிகளையும் நிரந்தர உத்தரவுகளையும் அனுசரித்துத்தான் செய்ய வேண் டும். எல்லா மெம்பர்களும் எல்லா வேலைகளையும் எல்லாக் காலங்களிலுஞ் செய்ய முடியாது. இப்பொழுதிருக்கும் இந்தியா சட்ட சபை விதிப்படி, கேள்விகள், அவை பதி லளிக்கப் படவேண்டிய தினத்துக்குப் பத்து நாள் முன்ன தாகவே அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரே நாளில் ஒரே மெம்பர் ஐந்து கேள்விகளுக்குமேற் கேட்கக்

கூடாது. கீழ் சபைத் தலைவரால் குறிப்பிடப்படும் நாட்களி லேதான் குறிப்பிடப்பட்ட இலாகா சம்பந்தப்பட்ட கேள்வி கள் பதிலளிக்கப்படும். குறுகிய கால நோட்டீஸூக்குட் பட்ட கேள்விகளென்றும், நீண்ட கால நோட்டீஸூக்குட் பட்ட கேள்விகளென்றும் கேள்விகள் இரண்டு ரகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக்கும். இவை யல்லாமல் உப-கேள்விகளும் உண்டு. சட்ட சபை நடக்கும் ஒவ்வொரு நாளிலுங் கேள்வி கேட்பதற்காகவும் பதிலளிப்பதற்காகவும், ஒவ்வொரு மணி நேரம் ஒதுக்கப்பட் டிருக்கிறது. இந்த நேரந்தான் சட்ட சபை நடை முறை காலத்திலேயே, ரொம்ப ரொம்பப் பிர யோஜனகரமானது. பொது விஷயங்களில், அல்லது பொது ஜனங்களைப் பாதிக்கக் கூடிய காரியங்களில் அரசாங்கம் எவ்வளவு சிரத்தை யெடுத்துக்கொண் டிருக்கிறதென்பதை யாவது அல்லது பிரதிநிதிகள் எவ்வளவு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்க ளென்பதையாவது ருஜூப்படுத்த, இச் சிறிது நேர சந்தர்ப்பம் பயன் படலா மல்லவா? மேலும் எதிர்க் கட்சிக்கு, இந்த வொரு சந்தர்ப்ப முமில்லையானால், ஆபாசமான மௌனமும் கும்பகர்ண முஞ் செய்வதைத் தவிர, வேறு வேலையில்லாமற் போய் விடும்.

## பிரேரணைகள் :

பிரேரணைகளைத் தீர்மானங்களோடும் மசோதாக்களோ டுஞ் சேர்த்து, அசந்தர்ப்பமான அர்த்த பேதத்தை உண்டாக் கிக் கொள்ளலாகாது; பிரேரணைகள் வேறு, தீர்மானங்களும் மசோதாக்களும் வேறு. பிரேரணைகளிலும், அவசரப் பிரேரணை வெட்டுப் பிரேரணை என்று அநேக விதங்க ளிருக்கின்றன. மசோதாக்கள்மீ தேற்படுந் திருத்தங்கள்கூட பிரேரணை வர்க்கத்திற் சேர்க்கப்படலாம்.

பிரேரணை கொண்டு வருவது சட்டசபை யலுவல்களி லொன்று யிருந்தாலும், பிரதானமானதென்று சொல்ல முடியாது. பிரதானமான பொதுப் பிரச்னைகளி லேற்படும் அவசரத்தையும் அவஸ்யத்தையும் முன்னிட்டுப் பார்லிமெண்டரி முறைப்படி அவசரப் பிரேரணைகள் கொண்டு வரப்பட்டாலும், அதனால் தேசத்துக்காவது தேசமக்களுக் காவது பிரமாதமான பலன் எதுவும் ஏற்படுவதில்லை. அரசாங்கத்தை வேண்டுமானால் அவசரப் பிரேரணை மூலம் அதிரச் செய்யலாம். தேசத்தில் ஏற்படும் சில சம்பவம் அல்லது நெருக்கடிக்குச், சர்க்காரை ஜவாப்தாரி யாக்குவதற்கு இது வொரு நல்ல சந்தர்ப்பமாய் உபயோகிக்கப்படலாம். அதிர் வெடிகளைப்போல் அவசரப் பிரேரணைகள் அவசரமாய் வந்து அவசரமாய் அமர்ந்து விடும். அப்புறம் அவற்றைப் பற்றி நினைப்புமில்லை; நீடிப்புமில்லை.

## தீர்மானங்கள் :

கேள்விகளையும் பிரேரணைகளையுங் கடந்தால், சாதாரண மெம்பர்களுக்குள்ள அடுத்த சந்தர்ப்பம், தீர்மானங்கள் கொண்டு வருவது. ஆனால் இதில் அநேகவற்றை மந்திரிகள் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் இந்தத் தீர்மானங்கள் இரண்டு ரகங்களாய்ப் பிரிக்கப்பட்டிருக் கின்றன.

(1) உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள்.

(2) உத்தியோகப் பற்றுள்ள தீர்மானங்கள்.

உத்தியோகப் பற்றற்ற தீர்மானங்கள் என்பது, சாதாரண மெம்பர்களாற் கொண்டு வரப்படுவது. இதற்குச் சிலநாள் நோட்டீஸ் வேண்டும். அதாவது நடைமுறை விதிகளின்படியோ, நிரந்தர உத்தரவுகளின்படியோ குறிப்

பிடப்பட்டுள்ள தினங்களுக்கு முன், இன்ன தீர்மானம் இன்ன மெம்பரால் கொண்டுவரப் படுமென்று முறைப்படி அறிவிக்கப்படவேண்டும். இப்படிக் கொண்டுவரப்படும் பல தீர்மானங்களைப் பிரரேபிப்பதற்கென்று சில தினங்கள் ஒதுக்கப்படுகின்றன. அந்நாளில் அவைகள், 'பாலட்' என்று சொல்லப்படும் திருவுளச் சீட்டின்மூலம் வரிசைக் கிரமமாய்ப் பிரரேபிக்கப்படும். அதற்குங் காலவரையறை யுண்டு.

தீர்மானங்கள், சொல்லப்போனால் சட்டசபை, கவர்னர்-ஜெனரலுக்குச் செய்யும் சிபாரிஷ்களாகவே யிருக்கின்றன. அவற்றைச் சட்டசபை, பெரும்பான்மையான வோட்டுகளால் நிறைவேற்றினாலும், கவர்னர்-ஜெனரல் காதிற் போட்டுக் கொள்ளாமலே இருந்துவிடலாம். இந்திய ஏகாதிபத்திய அரசாங்கத்தில் இதற்கு ஏராளமான உதாரணங்கள் கொடுக்கலாம். ஆனால் இனியும் அப்படித்தா னிருக்குமென்று இப்பொழுதொன்றுஞ் சொல்ல முடியாது. சமஷ்டி சட்டசபையில் மந்திரி சபை யேற்பட்டு, போலிப் பொறுப்பாட்சி யாவது அவர்கள் பொறுப்பில் விடப்படும்போது, ஒருக்கால் சட்டசபைச் சிபாரிஷ்கள் கவனிக்கப்படலாம். ஆனால் கவர்னர்-ஜெனரலின் விசேஷப் பொறுப்பும், எதேச்சாதிகாரமும், சொந்தத் தீர்ப்பும் சும்மா இருக்குமா? அவைகள் தங்கள் விஸ்வரூபத்தைக் காட்டினால் தீர்மானங்கள் எப்பொழுதும்போற் காற்றிற் பறக்கவேண்டியவைகள் தானே?

## சட்ட மியற்றுவது :

'சட்டசபை' யென்னும் வார்த்தையிலேயே 'சட்ட மியற்றும் ஸ்தாபனம்' என்னும் அர்த்தமும், வித்துக்குள் மரத்தைப்போல் அடங்கியிருக்கிறது. சட்ட மியற்றும்

அதிகாரத்தை, 1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டம், 99-வது ஷரத்தின்* மூலம் சட்டசபைக்குக் கொடுக்கிறது.

இந்த அதிகாரத்தை 100-வது ஷரத்து வரையறுக்கிறது. இன்னின்ன விஷயங்களைப் பற்றித்தான் சமஷ்டி சட்ட சபை சட்டமியற்றலா மென்று 7-வது ஷெட்யூலில் மூன்று நீண்ட ஜாபிதாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 1, 3 ஜாபிதாக்கள் முழுதும் சமஷ்டி சம்பந்தப் பட்டவை. 2-வது ஜாபிதா, மாகாண சம்பந்தப்பட்டதா யிருந்தாலுஞ், சிறிது சமஷ்டிக் கலப்பு முண்டு. (இவைகள் இவ் வத்தியாயத்தின் இறுதியில் அனுபந்தங்களாய்ச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.)

## சட்டமியற்றும் நடைமுறை:

எந்த வொரு சட்டமும் திடீரெனச் சட்டமாக்கப்பட மாட்டாது; முடியவும் முடியாது. படிப்படியாய்ப் பல பருவங்களையும் உருவங்களையும் அடைந்துதான் ஒவ்வொரு சட்டமும் உருவாகிறது. முதலாவது நிலை, மசோதாப் பருவம். அப்பருவத்திலேயே அது அநேக அரிஷ்டங்களை யடையலாம்; அல்லது இறந்தே போகலாம்; அல்லது அநேக தத்துகளைக் கடந்து சட்டமாகலாம்.

சில மசோதாக்கள் சட்ட சபைக்குக் கொண்டு வரப் படுவதற்கு முன்னதாகவே கவர்னர்-ஜெனரலின் பூர்வாங்க அனுமதி பெறவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட மசோதா கவர்னர்-ஜெனரலின் பூர்வாங்க அனுமதி கோரக்கூடியதா யில்லாம லிருந்து, சட்ட

---

* 99—(1):—இச் சட்டத்தின் விதிகளுக்குட்பட்டு சமஷ்டி சட்ட சபை அகில இந்தியாவுக்காகவும், அதன் எந்த பாகத்துக்காகவும், சமஷ்டிப்பட்ட சமஸ்தானங்களுக்காகவும் சட்டங்களியற்றலாம்.

சபைக்குக் கொண்டு வரப்பட்டால், அதைப் பிரரேபிப்பதற்குச் சட்ட சபையின் அநுமதி வேண்டும். அது கிடைத்து விட்டதானல், அம் மசோதாவின் முதல் வாசிப்பு முடிந்ததாய் அர்த்தம். அப்போது அதன் உள்ளம்சங்களைப் பற்றி ஒன்றும் விவாதம் நடவாது.

இரண்டாந்தரமாய் அம் மசோதா வாசிக்கப்படும்போது தான், அதன் உள்ளம்சம் ஒவ்வொன்றும் விவாதிக்கப்படும். மசோதாவின் நோக்கம், கொள்கை, நன்மை தீமைகளெல்லாம் நன்கு ஆராயப்படுகின்றன. இவ் இரண்டாம் வாசிப்பு, பெரும்பான்மையான மெம்பர்களைத் திருப்தி செய்யாவிட்டால், மசோதாச் செத்துவிடும். மசோதாவின் நோக்கம் நல்லதாயிருந்து, ஷரத்துகளும் வாசகமும் சரியா யிராதிருந்தால், ஒரு பொறுக்குக் கமிட்டியிடம் ஒப்படைத்துத் திருத்தச் செய்யலாம்; அல்லது பொதுஜன அபிப்பிராயத்துக்கு சுற்றி அனுப்பலாம்.

பொறுக்குக் கமிட்டிக் கனுப்பப்படும் மசோதா, பூரணமாய்ச் சர்ச்சை செய்யப்பட்டு, முடிவான அறிக்கையோடு மறுபடியுஞ் சட்டசபைக் கனுப்பிவைக்கப்படும். அதன்மீதுஞ் சட்டசபை அவஸ்யமிருந்தால் திருத்தங்கள் போடலாம்.

பொதுஜன அபிப்பிராயத்துக்கு அனுப்பப்பட்ட மசோதா; சர்க்காரால் வற்புறுத்த அல்லது கவனஞ் செலுத்தப்படாதவரை, இருந்த இடமும் வந்த வழியுந் தெரியாமற் போகலாம். அல்லது திரும்பி வரலாம்.

அப்படி வரும் மசோதாக்கள் மூன்றும் முறையாய் விவாதத்துக் கெடுத்துக் கொள்ளப்படும். இதற்கு மூன்ருவது வாசிப்பு என்று பெயர். இதிலுந் தீவிர விவாதமுண்டு; திருத்தங்கள் மாத்திரங் கிடையாது.

அப்புறம் அந்தச் சபையில் அது வோட்டுக்கு விடப் படும். ஜெயித்ததானல் மறுசபைக்கு அனுப்பப்படும்; இல்லையானற் செத்ததோடு சேர்த்தி.

இப்படிப் படிப்படியாய்ப் பல பருவங்களை யடைந்து வரும் ஒரு மசோதா, முதலாவதாக ஒரு சபையில்-அநேக மாய் அது முதற்சபை * யாய்த்தானிருக்கும்—நிறைவேற்றப் பட்டு இரண்டாவது சபை†யின் அங்கிகாரத்துக்கு அனுப்பப் படும். அங்கும் அதற்கு மூன்று வாசிப்புண்டு; அநேக அரிஷ்டங்களும் உண்டு. என்ருலும் பெரும்பாலாய்க் கீழ் சபையில் நிறைவேற்றப்பட்ட மசோதா, மேல் சபையிலும் நிறைவேற்றப் பெறுமென் றெதிர்பார்க்கலாம். இல்லையென் ருருக்கால் அச் சபை, அம் மசோதா முழுதையும் நிராகரித் தால் அல்லது ஏதேனுமொரு பாகத்தை யாக்ஷேபித்தால் அல்லது அநாவஸ்யமாய் ஆறுமாதங்கள்வரை காலங் கடத்தினல், 31-வது ஷரத்து 10-வது பிரிவுப்படி, கவர்னர்-ஜெனரல் இரு சபைகளின் கலப்புக் கூட்டத்தை யழைத்து, மசோதாவை நிறைவேற்ற அல்லது நிராகரிக்கச் செய்யலாம். எப்பொழுதும் இக் கலப்புக் கூட்டம் கீழ்சபைக்குச் சாதகமா யிருக்குமென்று எதிர் பார்க்க முடியாது.

ஆறுமாதக் காலஹரண மென்பது, கீழ்சபையின் மசோதாவைத் தாமதப்படுத்த, மேல் சபையாற் கையாளப் படும் ஒரு கைபாணம். அதற்குள் கீழ் சபையின் ஆயுளே முடிந்தாலும் முடியலாம். அப்போது அம் மசோதா தானகவே செத்துவிடும். ஆகையால் அதைக் கொலைக்கருவி யென்றுகூடச் சொல்லலாம்.

---

* முதல் சபை யென்பது இங்குக் கீழ்சபையைக் குறிக்கும்.

† இரண்டாவது சபை யென்பது மேல் சபையைக் குறிக்கும்.

எந்த மசோதாவும்—வரவு செலவு மசோதா நீங்கலாக-எந்தச் சபையிலும் முதன்முதலாய்ப் பிரரேபிக்கப்படலாம்-ஷரத். 30 (1)

எந்த மசோதாவும் இரண்டு சபைகளின் அங்கீகார மில்லாமல் நிறைவேற்றப் பெற்றதாய்க் கருதப்பட மாட்டாது—ஷரத். 30 (2).

எந்த மசோதாவும் விவாதத்திலிருக்கும்போது சட்ட சபை கலேந்து விட்டால் செத்துவிடும்—ஷரத். 30 (3)

எந்த மசோதாவும், கீழ்சபையில் விவாதிக்கப்படா திருந்து மேல் சபையில் அருகுறையாயிருந்தால், கீழ் சபை கலேக்கப்பட்டாலும் சாகாது—ஷரத் 30 (4)

எந்த மசோதாவும், கீழ்சபை விவாதத்திலிருக்கும் போது அல்லது கீழ்சபை விவாதம் முடிந்து மேல் சபை விவாதத்திலிருக்கும்போது, சட்டசபை கலேக்கப்பட்டால் செத்துவிடும்—ஷரத் 30 (5)

## பூசாரி வரம் :

இவ்வாறு, சட்ட சபையில் இத்தனை இடியுதையோடு நிறை வேற்றப்பட்ட ஒரு மசோதா, உடனே-தனக்குத்தா னுகவே-ஒரு சட்டமாகி விடாது. சாமி வரங் கொடுத்தாலும் பூசாரியும் வரங் கொடுக்க வேண்டும் என்பதுபோல், கவர்னர்-ஜெனரலின் அங்கீகாரமும் அதற்கு வேண்டும்; அப் பொழுதுதான் அது சட்டமாகும்; அதன் அமலும் செல்லு படியாகும். இதைப்பற்றிய எல்லா விவரங்களும் கவர்னர்-ஜெனரல் அத்தியாயத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன. என் ருலுஞ் சந்தர்ப்பத்தை யொட்டிச் சுருக்கமாய்ச் சிறிது சொல்லுகிறேன்.

கவர்னர்-ஜெனரல் அங்கிகாரத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு மசோதாவைப்பற்றி, அவர் நான்கு விதமான முடிவுகள் செய்யலாம்—ஷரத். 32

(1) மன்னர் பேரால் மசோதாவை அங்கீகரிக்கலாம்-அது சட்டமாகி விடும்.

(2) மன்னர் பேரால் அங்கீகாரம் அளிக்க மறுக்கலாம்-அது செத்து விடும்.

(3) மன்னர் சம்மதத்துக்காக நிறுத்தி வைக்கலாம்-12 மாதத்துக்குள் மன்னர் சம்மதம் கிடைக்காவிட்டால் மசோதாச் செத்து விடும்.

(4) மசோதாவைத் திருத்தும்படியோ, புனராலோசனை செய்யும்படியோ ஒரு செய்தியுடன் சட்டசபைக்கே திருப்பியனுப்பலாம்—மறுபடியும் மசோதா சட்டசபையில் விவாதிக்கப்பட்டு மேலே கூறியுள்ள நிலைகளையடைய வேண்டும்.

## வரவு-செலவு

சர்க்கார் வரவு செலவில்-ஏன் எந்த வொரு வரவு செலவிலுங்கூட-வரவினத்தைவிடச் செலவினந்தான் ரொம்ப முக்கியமானது. ஒரு குடும்பத்தின் வரவு கொஞ்சமாயிருந்து, செலவு சிக்கனமாய்ச் செய்யப்பட்டால், அக்குடும்ப வாழ்க்கையில் அதிகக் கஷ்டங்க ளேற்படாது. அதே சமயம் இன்னொரு குடும்பத்தின் வரவு அதிகமாயிருந்தும், செலவு ஊதாரித்தனமாய்ச் செய்யப்பட்டால், அக் குடும்பம் அநேகக் கஷ்டங்களை யனுபவிக்கும். எனவே இவ்விரண்டு உதாரணங்களாலுஞ் சம்பாதனையை விடச் செலவுதான் பிரதானமென்று தெரிகிறது. சர்க்கார் வரவு செலவிலும் இப்படித்தான். ஆகையால், அரசாங்க ஆதாயத்தை யிப்பொழுது எடுக்காமல் செலவை மட்டுமே சர்ச்சை செய்வோம்:

## இரண்டுவிதச் செலவுகள் :

சமஷ்டி சர்க்கார் செலவினம் 33-வது ஷரத்துப்படி இரண்டு விதமாய்ப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) சமஷ்டி வருமானத்தின்மீது பொறுப்பு வைக்கப் பட்டுள்ள செலவு: இதை யொரே வார்த்தையால் 'பந்தகச் சேலவு' என்று சொல்லலாம்.

(2) சமஷ்டி வருமானத்திலிருந்து செய்ய உத்தேசிக் கப்பட்டுள்ள செலவு: இதையும் ஒரே வார்த்தையில் 'மான் யச் சேலவு' என்று சொல்லலாம்.

**(1) பந்தகச் செலவு :** இந்த இனத்திற் செய்யப்படும் செலவுக்குச் சட்டசபையின் சம்மதந் தேவையேயில்லை. சட்டசபை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஆதரித்தா லும் ஆக்ஷேபித்தாலும், ஈட்டுக்கடன் மாதிரி இந்தச் செலவு களை கவர்னர்-ஜெனரல் செய்தே தீர்வார். இவற்றின்மீது வோட்டுரிமைகூடச் சட்டசபைக்குக் கிடையாது. ஆனால் இச் செலவு கொஞ்சமல்ல; **80** சத விகிதம். அதாவது பத்தில் எட்டுப் பங்கு. சர்க்கார் செலவு செய்யும் ஒவ்வொரு பத்து ரூபாயிலும் எட்டு ரூபாயைச் சட்டசபை ஏனென்று கேட்கக்கூடாது. அவை யின்னவென்பது, அதே 33-வது ஷரத்து 3-வது பிரிவிற் சொல்லப்பட்டிருக்கிறது :—

(1) கவர்னர்-ஜெனரல் சம்பளம், படிச்செலவு, காரியாலயச் செலவு முதலியன.

(2) சமஷ்டி சர்க்கார் பொறுப்பேற்றுள்ள கடனைத் தீர்ப்ப தற்காக வாங்கப்பட்ட கடன்மீது வட்டி, அசல், சேதம் முதலிய செலவுகளோடு, கடன் வாங்குவதற்கேற்படுஞ் செலவும், மீட்டுவதற் கேற்படுஞ் செலவும், நிர்வகிப்பதற் கேற்படுஞ் செலவும்.

(3) மந்திரிகள், கவுன்ஸிலர்கள், நிதியாலோசனை கர்த்தர், அட்வகேட்-ஜெனரல், சீப்-கமிஷனர்கள், நிதியாலோசனை கர்த்தரின் சிப்பந்திகள் முதலியவர்களின் சம்பளமும் படிச் செலவும்.

(4) சமஷ்டிக் கோர்ட் ஜட்ஜுகளின் சம்பளம், படிச்செலவு, பென்ஷன் செலவுகள்.

(5) ஒதுக்கப்பட்ட இலாகாச் * செலவு.

(6) சமஸ்தான சம்பந்தமாய் மன்னர்பேரால் ஏற்படுஞ் செலவு.

(7) எந்த மாகாணத்திலு மிருக்கிற எந்தப் பாகமும் தற்காலிகமாய் ஒதுக்கப்பட்ட பிரதேசமாயிருந்து அதற்காக ஏற்படும் மான்யச் செலவு.

(8) சர்க்கார்மீது தொடுக்கப்பட்ட வழக்கில், சர்க்கார் கொடுக்கும்படி யேற்படும் டிக்ரித் தொகைகள்.

(9) இந்தச் சட்டத்தாலோ, சமஷ்டி சட்டசபை செய்யும் எந்தச் சட்டத்தாலோ ஏற்படுத்தப்படும் இதர செலவுகள்.

இவைகளெல்லாம் பந்தகச் செலவுகள். இவைகளைத் தவிர வேறெந்தச் செலவும், சமஷ்டி வருமானத்தின்மீது பந்தகச் செலவாய் மதிக்கப்படுமா அல்லவா என்பதை கவர்னர்-ஜெனரல்தான் அவரது ஏதேச்சாதிகாரத்தில் தீர்மானிப்பார்.

(2) **மான்யச் செலவு:** இது சட்டசபையின் வோட்டுக்குட்பட்ட இதர செலவினம். இதன்மீது தான் சட்டசபைக்கு அதிகாரம்—அதுவும் வரையறுக்கப்பட்டுச்-சிறிது-இருக்கிறது.

மான்யச் செலவு வருஷா வருஷம் சட்டசபையிற் பிரரேபிக்கப்படும். அந்தப் பிரேரணையைச் சட்டசபை,

---

* ஒதுக்கப்பட்ட இலாகா :—ராணுவம், கிறிஸ்தவர் கோயில், வெளிநாடு சம்பந்தம், ஒதுக்கப்பட்ட பிரதேசங்கள்.

அதிலுள்ளபடியே நிறைவேற்றலாம். அல்லது குறைத்து நிறைவேற்றலாம். அல்லது முழுதையுமே நிராகரிக்கலாம். இவைகளெல்லாம் வோட்டுக்கு விடப்பட்டே முடிவு செய்யப் படும். ஆனால் மான்யப் பிரேரணை விவாதத்துக்கு வந்தபின், அதை யதிகப்படுத்தும்படி திருத்தங் கொண்டு வரக்கூடாது.

**முதற்படி:** ஒவ்வொரு வருஷத்திலும் அந்தந்த வருஷத்தில் எதிர் பார்க்கப்படும் (வரி) வருமானத்தையும், உத்தேசிக்கப்பட்டுள்ள செலவினத்தையும் பற்றி கவர்னர்-ஜெனரல் 'வருஷாந்தர வரவு-செலவுத் திட்டம், என்னும் பேரால் ஒரு கணக்கை சமஷ்டிச் சட்ட சபை இரண்டிலுஞ் சமர்ப்பிப்பார்-[ஷரத்—33 (1)] இதுதான் ஆங்கிலத்தில் 'பட்ஜெட்' என்று சொல்லப்படுவது.

அதிற் செலவினங்கள் தனித் தனியாய்க் காட்டப்பட்டிருக்கும்: (அ) சமஷ்டி வரியின்மீது பொறுப்பு வைக்கப் பட்டுள்ள செலவுகள். (ஆ) சமஷ்டி வரியிலிருந்து செல விடக்கூடிய இதர செலவுகள்.

இதில் கவர்னர்-ஜெனரல் விசேஷப் பொறுப்பை நிறைவேற்றுவதையே முக்கியமாய்க் கொண்டு, கவர்னர்-ஜெனரல் சேர்த்துள்ள தொகைகள்-அப்படி யேதாவதிருந்தால்-பிரத்தியேகமாய்க் காட்டப்படும்.

இந்தப்படியில் எவ்விதமான விவாதமுமிராது. ஆனால் கவர்னர்-ஜெனரலுக்காக வரவு-செலவுக் கணக்கைச் சட்ட சபையிற் சமர்ப்பிக்கும் நிதி மந்திரி, (அநேகமாய் இவர் பிரதம மந்திரியாகவே யிருப்பார்) இவ்விதச் செலவினங்களில், இது வோட்டுக்கு விடக்கூடியதென்றும், இது வோட்டுக்கு விடக்கூடாததென்றுஞ் சொல்லி விடுவார்.

**இரண்டாம் படி:** இந்தப்படியிலேதான் வரவு-செலவு மசோதாவைக் கொஞ்சம் வாய் விண்டு விவாதிக்கலாம்.

33-வது ஷரத் 3-வது பிரிவிற் கொடுக்கப்பட்ட பந்தகச் செலவு ஜாபிதாவில் 1, 5 இனங்களைத் தவிர மற்ற இனங்களைப்பற்றி மெம்பர்கள் ஏதோ சிறிது பேசலாம்; ஆனால் எல்லா இனங்களிலும் வோட்டுரிமை கிடையாது. சர்க்கார் நிர்வாகத்தைப் பற்றிப் பொதுவாகவும், அரசாங்கக் கொள்கையைப்பற்றி இலாகா வாரியாகவும் மெம்பர்கள் மிதமாகவோ அமிதமாகவோ சடைக்கலாம். அதை கவர்னர்-ஜெனரல் தடுக்கலாம்* அப்போது சட்ட சபை, விவாதத்தை நிறுத்தி விட்டு வேலையில் இறங்க வேண்டும்.

**மூன்றும் படி:** இந்தப்படியிலேதான் வரவு-செலவு மசோதாவின்மீது வாஸ்தவத்திற் கொஞ்சம் பொறுப்பிருக்கிறது. 34-வது ஷரத்து 2-வது பிரிவிலுள்ள 'மான்யங்கள்' மான்யங்களாக அஸெம்பிளி அல்லது கீழ்சபையில் ஆஜர் செய்யப்படும். அதை அச் சபை அப்படியே ஒப்புக்கொள்ளலாம் அல்லது அப்படியே நிராகரிக்கலாம்; அல்லது 'இவ்வளவைக் குறைத்துக்கொள்ளட்டும்' என்னும் திருத்தத்தோடு நிறைவேற்றலாம்.

அஸெம்பிளியால் நிராகரிக்கப்பட்ட எந்த மான்யமும் கவுன்ஸிலுக்கு அனுப்பப்படமாட்டாது. ஆனால் கவர்னர்-ஜெனரல் குறுக்கிட்டு 'அசல் பட்ஜெட்'டிற் குறிப்பிடப்பட்டுள்ள தொகையின் மீதோ அல்லது அதற்குக் குறைந்த ஒரு தொகையின்மீதோ கவுன்ஸிலில் வோட்டெடுக்கட்டும் என்று சொன்னால், அஸெம்பிளியால் நிராகரிக்கப்பட்ட 'மான்யம்' கவுன்ஸிலுக்கு மனுப்பப்படும். அங்கு அதன் விதி யாதா

---

* இதற்குச் சட்டத்திற் பிரத்தியேகமான ஷரத் ஒன்றுமில்லை. ஆனால் சட்ட சபை நடைமுறை விதிகளில் ஒன்றில் 'வரவு-செலவு மசோதா காலா காலத்தில் நிறைவேறும்படி கவர்னர்-ஜெனரல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்றிருக்கிறது.

யினுஞ் சரி, கவர்னர்-ஜெனரலின் இத்தலையீடே அநாவஸ்யமானதும் அஸெம்பிளியை அவமதிப்பதுந் தவிர வேறில்லை. ஏனெனில் வரவு-செலவைச் சரிக்கட்டும் முடிவான அதிகாரம் அவர் கையிலிருக்கிறது. அதைக் கொஞ்சம் பொறுமையோடு காத்திருந்து கடைசியிற் செய்யலாம்.

கவர்னர்-ஜெனரல் சிபாரிஷ் இல்லாமல் எந்த மான்யமுஞ் சட்டசபையில் சமர்ப்பிக்கப்படலாகாது என்று 34-வது ஷரத்து 2-வது பிரிவிற் சொல்லப்பட்டிருக்கிறது. சிக்கனத்தை யுத்தேசித்து இப்படிச் செய்யப்படுவதாய் இதற்குச் சமாதானஞ் சொல்லுகிறார்கள். இந்தியாவின் வரவு-செலவு விஷயத்தில் 'சிக்கனம்' என்னும் வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்பதே நமக்குப் புரியவில்லை. பொறுப்பாட்சியின் பேரால் ஸ்தாபிக்கப்படும் சட்டசபையைக், குதிரையாய்க் கொண்டு கடிவாளம் போட்டு ஏகாதிபத்தியம் சவாரி செய்வதைத் தவிர வேறில்லை. பொறுப்பாட்சியில் பொக்கிஷந் தான் பிரதானமானது. அதில் ஒரு தம்பிடிக்கும் சட்டசபை, அதிகாரமற்ற தாக்கப்படும்போது அந்தப் பொறுப்பாட்சியை ஆண்டவன் தான் ரட்சிக்க வேண்டும்!

எண்ணம் எங்கோ போய்விட்டது. மான்யத்துக்கு மறுபடியும் அதை யிழுத்துக்கொண்டு வருகிறேன்: மான்யத்தில் ஏதாவதொரு இனத்தைப்பற்றி ஏதாவதொரு தகராறு ஏற்பட்டால் அப்போது கவர்னர்-ஜெனரல் அதைத் தீர்ப்பதற்காகச் சட்டசபைகளின் கலப்புக் கூட்டத்தைக் கூட்டுவார். கலப்புக் கூட்டம் எப்பொழுதும் சர்க்காருக்கே சாதகமானதாயிருக்குமென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். எப்படியென்று இப்பொழுது பார்ப்போம்:

சமஷ்டி சட்டசபையின் மொத்தத்தொகை 635—(இரண்டு சபைகளுஞ் சேர்ந்து) இதில் எல்லாரும் ஆஜராகி

யிருந்தால் கவர்னர்-ஜெனரலுக்கு வேண்டிய 318 வோட்டு களில் ஒரே மொத்தமாய் 230 வோட்டுகள் சமஸ்தானப் பிரதிநிதிகளிடமிருந்து சந்தேகமில்லாமற் கிடைக்கும். பாக்கி 88 வோட்டுகளுக்குச் சர்க்கார் நியமன அங்கத்தினர் கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், நிலச்சுவான்தார்கள், வர்த்தகர்கள் முதலியவர் களிருக்கிறார்கள். ஆகையாற் கலப்புக் கூட்டத்தில் மெஜா ரிட்டி பெறுவது, கவர்னர்-ஜெனரலுக்குக் கசப்பான மாத்திரை யாயிராது; இலகுவாய் விழுங்கக்கூடிய—சீனிப்பாகு தடவப் பட்ட மாத்திரையாகவே இருக்கும்.

**நாலாம் படி**: முடிவான செலவுத் திட்டம்: இவ் வாறு மான்யங்கள் முழுதும் தனிச்சபைகளிலோ, கலப்புச் சபையிலோ வோட்டுக்கு விடப்பட்ட பிறகு 35-வது ஷரத்துப் படி கவர்னர்-ஜெனரல் ஒரு முடிவான செலவுத் திட்டத்தின் ஷெட்யூலைச் சட்டசபைக்கு அனுப்புவார். அதன்மீது விவாதமோ வோட்டுரிமையோ இல்லை; கூட்டல் குறைத் தலு மில்லை. ஷெட்யூலில் உள்ளபடி சல்லி குறையாமல் அப்படியே, அந்த வருஷத்திற் சர்க்கார் செலவு, நடை பெற வேண்டும்.

முடிவான செலவுத்திட்டத்தில் கவர்னர்-ஜெனரலாற் குறிப்பிடப்படுந் தொகை, முதலிற் சட்டசபை முன் சமர்ப்பிக் கப்பட்ட 'பட்ஜெட்'டில் உள்ளதாயிருக்கலாம்; அல்லது அதற்குக் குறைந்ததாகவுமிருக்கலாம்.

**ஐந்தாம் படி**: ஸப்ளிமெண்டரி பட்ஜெட்: உப மான்யம்: பட்ஜெட்டிற் சேர்க்கப்பட்ட, அல்லது ஷெட்யூலிற் சொல்லப்பட்ட தொகை, மான்யச் செலவுக்குப் போதாமல் மேலுந் தேவையா யிருந்தால், அப்போது கவர்னர்-ஜெனரல், அந்த அதிகச் செல்வுக்காக மாத்திரந் தனி

யாய் ஒரு உபரி வரவு-செலவுத் திட்டம் தயாரித்துச் சாதாரண 'பட்ஜெட்' மாதிரியே நிறைவேற்றலாம். [ஷரத் 36.]

## ஐந்தொகை :

சர்க்கார் வரவு-செலவு சம்பந்தத்தில் சட்டசபைக்குள்ள அதிகாரம் எவ்வளவு தூரம் வரையறுக்கப்பட்டிருக்கிறதென்பதைச் சுருக்கமாகவும் விளக்கமாகவுஞ் சொல்லி விட்டேன் இதிலுள்ள குற்றங் குறைகளை, உங்களுக்கு நீங்களாகவே ஐந்தொகையெடுத்துப் பார்த்தால் கீழ்க்காணுங் கோளாறுகள் தோன்றும் :—

(1) சர்க்காரின் கஜானு, ஏகாதிபத்திய நோக்கத்துக்கு ஈடு வைக்க அல்லது பந்தகப் படுத்தப்பட்டிருப்பது.

(2) 'பட்ஜெட்'டில் பெரும்பாகம் (சுமார் 80 சதவிகிதம்) சட்டசபையின் வோட்டுக்கு விடப்படாதிருப்பது.

(3) வோட்டுக்கு விடப்பட்ட செலவினத்தைச் சட்டசபை நிராகரித்த பிறகு, கவர்னர்-ஜெனரல் தமது விசேஷப் பொறுப்பிற் செலவிடுவது.

(4) இவைகளெல்லாவற்றையும் உள்ளடக்கிச் சட்டசபைக்குப் பண விஷயத்திற் பரிபூரணமான உரிமையும் அதிகாரமும் இருக்கவேண்டுமென்பது.

(5) சர்க்கார் வரவு-செலவிற் சலுகையோ சிபாரிஷோ இருக்கக்கூடாது ; தனி மனிதரிடமும் தன சம்பந்தமிருக்கக் கூடாது. ஜனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரிப்பணத்தை ஜனப்பிரதிநிதிகள்தான் செலவிட அருகதையுடையவர்களென்பது.

அனுபந்தம்—1.

## சமஷ்டி சட்டசபை, சட்டமியற்றக்கூடிய விஷயங்கள்.

7-வது ஷெட்யூல்] [1-வது ஜாபிதா

## சமஷ்டி ஜாபிதா

1. இராணுவம் (காலாட் படை கடற்படை ஆகாயப்படை)
2. இராணுவ வேலைகள்: பாசறைப் பிரதேசங்களில் ஸ்தலஸ்தாபன நிர்வாகம், குடியிருப்பு வசதி முதலியவை.
3. அந்நிய நாட்டு சம்பந்தம்.
4. கிறிஸ்தவக் கோயில், ஐரோப்பியர் மயானம்.
5. நாணயம்.
6. சமஷ்டிக் கடன்.
7. தந்தி, தபால், டெலிபோன், கம்பியில்லாத் தந்தி, ஆகாச வசனி, சேவிங்க்ஸ் பாங்க் முதலியவை.
8. சமஷ்டி உத்தியோகஸ்தர்கள், உத்தியோக நியமன கமிஷன்.
9. சமஷ்டி வருமானத்திலிருந்து செலுத்தவேண்டிய பென்ஷன்கள்.
10. சமஷ்டி சர்க்கார் சம்பந்தப்பட்ட நிலம் கட்டிடங்கள்.
11. சமஷ்டி சர்க்கார் ஆதிக்கத்தில் அல்லது பண உதவியிலுள்ள வாசகசாலை, காட்சிசாலை முதலியன.
12. சமஷ்டி சர்க்கார் சம்பந்தமான ஆராய்ச்சி சாலைகள், டிரெயினிங் ஸ்கூல்கள்.
13. காசி ஹிந்து சர்வகலா சாலை, அலிகார் முஸ்லீம் சர்வகலாசாலை.
14. உலோக, தாவர, மிருக ஆராய்ச்சி சாலைகள்.
15. புராதன சரித்திர சாசனங்கள், சிற்பங்கள்.
16. ஜனசங்கியை.
17. பிரிட்டிஷ் இந்தியப் பிரஜைகளல்லாதவர்கள் போக்குவரத்து; ஸ்தலயாத்திரை.
18. துறைமுகம்.
19. இறக்குமதி ஏற்றுமதி.
20. சமஷ்டி ரயில்வே.
21. கப்பல் சம்பந்தம்.
22. பெரும் துறைமுக சம்பந்தம்.
23. கடல் மீன் பிடித்தல்.
24. ஆகாயக் கப்பல்.
25. லைட் ஹௌஸ்.
26. பிரயாண வண்டிகள், கடல், ஆகாய வழிச் சாமான்கள்.
27. காப்பிரைட், டிரேட் மார்க் முதலியன.
28. உண்டி, பில், புரோ நோட் முதலியவைகள்.
29. துப்பாக்கி, தோட்டா முதலியன.
30. வெடி மருந்துகள்.
31. அபின்.

32. பெட்ரோல் முதலிய நெருப்புப் பற்றிக்கொள்ளுந் திராவகங்கள்.
33. வர்த்தகக் கம்பெனிகள்.
34. கைத்தொழில்.
35. தொழிற் சாலைகள்.
36. சுரங்கம் எண்ணெய்க் கிணறுகள்.
37. இன்ஸூரன்ஸ்.
38. பாங்கித் தொழில்.
39. போலீஸ் சம்பந்தம்.
40. சமஷ்டி சட்டசபைத் தேர்தல்கள்.
41. சமஷ்டி சட்டசபை சம்பந்தப்பட்டவர்களின் சம்பளம், அலவன்ஸ், உரிமை, முதலியன. சட்டசபைக் கமிட்டிகள் முன், சாட்சி சொல்ல மறுப்போர்மீது நடவடிக்கை.
42. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் பற்றிய சட்டங்களுக்கு விரோதமான குற்றங்கள்.
43. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்களைப்பற்றிய விசாரணை, புள்ளி விவரம்.
44. சுங்கத்தீர்வை- ஏற்றுமதித் தீர்வையுள்பட.
45. புகையிலைமீதும் இந்தியாவில் தயாரிக்கப்படும்.
(அ) மது,
(ஆ) கஞ்சா, அபின் முதலிய போதை வஸ்துக்கள்.
(இ) இவை செய்யப்படும் மருந்து டாய்லெட் பொருள்கள் மீதும் வரி விதித்தல்.
46. கார்ப்பொரேஷன் வரி.
47. உப்பு.
48. அரசாங்க அதிர்ஷ்டச் சீட்டுகள்.
49. சுதேசியாக்குவது.
50. ஒரு மாகாணம் அல்லது சீப்-கமிஷனர் மாகாணத்திலிருந்து, இன்னொரு மாகாணம் அல்லது சீப்-கமிஷனர் மாகாணத்துக்குட் போவது வருவது.
51. நிறுத்தல் அளத்தல் கருவி நிர்ணயம்.
52. ராஞ்சி ஐரோப்பிய சித்த பேத ஆஸ்பத்திரி.
53. பெடரல் கோர்ட் தவிர இதர கோர்ட்டுகளின் அதிகார வரம்பு முதலியன.
54. விவசாய வருமானந் தவிர இதர வருமானங்கள் மீது வரி விதித்தல்.
55. ஆஸ்திவரி (நிலம் நீங்கலாக)
56. நிலம் நீங்கலாக இதர சொத்துகளுக் கேற்படும் வாரீஸ்தார் மீது வரிவிதித்தல்.
57. ஸ்டாம்புக் கட்டண நிர்ணயம்.
58. பிரயாண வரி.
59. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் சம்பந்தப்பட்ட (ஸ்டாம்பு) கட்டணங்கள்—கோர்ட் பீஸ் இதில் கட்டுப்பட்டதல்ல.

அனுபந்தம்—2.

## சமஷ்டி சட்டசபையும் மாகாண சட்டசபையும் சட்டமியற்றக்கூடிய விஷயங்கள்

7-வது ஷெட்யூல்] [3-வது ஜாபிதா

## பொது ஜாபிதா

### பாகம்—1.

1. கிரிமினல் சட்டம்-கி. பி. கோ. உள்பட.
2. கிரிமனல் புரொஸீஜர்—கி. பி. கோ. உள்பட.
3. கைதிகளை மாகாணம்விட்டு மாகாணம் மாற்றுவது.
4. சிவில் புரொஸீஜர்.
5. கோர்ட் சாக்ஷியம், பிரமாணம், நடவடிக்கைகள்.
6. விவாகம், விவாக ரத்து, மைனர்கள், ஸ்வீகாரம்.
7. உயில், வாரீஸ் பாத்தியதை (விவசாய நிலம் நீங்கலாக)
8. நிலப் பரிவர்த்தனை, ரிஜிஸ்டரேஷன்.
9. தர்ம பரிபாலனம்.
10. கண்ட்ராக்ட்டுகள்.
11. மத்தியஸ்தம்.
12. இன்ஸால்வென்ஸி.
13. ஸ்டாம்பு வரிகள்.
14. வழக்குத் தொடுக்கக் கூடிய குற்றங்கள்.
15. கோர்ட்டுகளின் அதிகார வரம்பு.
16. வக்கீல், வைத்தியத் தொழில்கள்.
17. பத்திரிகை, புஸ்தகம், அச்சுக் கூடம்.
18. பைத்தியம், பைத்தியக்கார ஆஸ்பத்திரி.
19. ஆபத்தான மருந்துகள்.
20. இயந்திர வண்டிகள்.
21. நீராவித் தாங்கிகள்.
22. ஜீவ ஹிம்ஸை நிவாரணம்.
23. நாடோடி வெள்ளையர்; குற்ற பரம்பரையினர்.
24. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்களைப் பற்றிய புள்ளி விவரங்களும் தகவல்களும்.
25. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்களைப்பற்றிய கட்டணங்கள்.

### பாகம்—2.

26. தொழிற்சாலைகள்.
27. தொழிலாளர் வசதி, பென்ஷன், நஷ்டயீடு முதலியன.
28. வேலையில்லாதார் கஷ்ட நிவாரண இன்ஸூரன்ஸ்.
29. தொழிற் சங்கங்கள்; தொழில் தகராறுகள்.

30. தொத்து நோய்கள் பரவாமல் தடுப்பது.
31. மின்சாரம்.
32. உள் நாட்டுக் கப்பல், படகுப் போக்கு வரத்து.
33. சினிமாப் படங்களுக்கு அனுமதியளிப்பது.
34. சமஷ்டி சர்க்காரால் காவலில் வைக்கப்படுவோர்.
35. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள்பற்றிய புள்ளி விவரங்கள் திரட்டுவது.
36. இந்த ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் சம்பந்தமான கட்டணங்கள்.

இந்த ஜாபிதாவின் முதற் பாகத்திலுள்ள 25 இனங்கள் பற்றி சமஷ்டி சட்டசபையும் மாகாண சட்டசபையும் தனித் தனியாய்ச் சட்டமியற்றலாம்—ஷரத் 100 (2)

இந்த ஜாபிதாவின் இரண்டாம் பாகத்திலுள்ள 26 முதல் 36 வரையுள்ள இனங்கள்பற்றி சமஷ்டி சட்டசபையும் மாகாண சட்டசபையும் தனித் தனியாய்ச் சட்டமியற்றலாம். ஆனால் சமஷ்டி சர்க்கார் இயற்றும் சட்டங்களை அமல் நடத்தும்படி மாகாண சர்க்கார்களுக்கு உத்தரவு போடலாம். —ஷரத் 126 (2).

மாகாணச் சட்டமோ அதன் பகுதியோ, சமஷ்டிச் சட்டத்தை ஒத்துவராவிட்டாலும், பொது ஜாபிதாவிலுள்ள விஷயங்கள் தற்காலச் சட்டங்களுக்கு ஒத்து வராவிட்டாலும் இரண்டாவது ஜாபிதாவிலுள்ள மாகாணச் சட்டமோ பகுதியோ செல்லுபடியாகாது —ஷரத் 107.

சமஷ்டி ஜாபிதா, மாகாண ஜாபிதா, பொது ஜாபிதாவாகிய மூன்று ஜாபிதாக்களிலும் இல்லாத விஷயங்களை, கவர்னர்-ஜெனரல், மாகாண விஷயமென்றோ சமஷ்டி விஷயமென்றோ நிர்ணயிப்பார்—ஷரத் 104

யுத்தம் அல்லது உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டுத் தேச நிலைமை நெருக்கடியாயிருப்பதாய் கவர்னர்-ஜெனராலுக்குத் தோன்றினால், அவர் வெளியிடும் பிரகடனத்துக்குப் பின்னால் சமஷ்டி சட்டசபை, கவர்னர்-ஜெனரலின் பூர்வாங்க அனுமதியின் பேரில் மாகாண ஜாபிதாவிலுள்ள விஷயங்களைப்பற்றி சட்டமியற்றலாம்—ஷரத் 102.

# 9. மந்திரி சபை

மத்திய சபையில், மந்திரிகள் ஒரு புதுச் சிருஷ்டி. 1935-ம் வருஷத்துக்கு முந்திய எந்த இந்தியாச் சட்டத்தாலும் இந்தியா சட்ட சபையில் மந்திரி சபை யேற்படவில்லை. வெறுஞ் சட்ட சபை மாத்திரமே யிருந்தது. அது இயற்று கிற சட்டங்களை கவர்னர்-ஜெனரல், கவுன்ஸிலர்களின் உதவி யைக் கொண்டு நிர்வகித்தார். இனிச் சமஷ்டி சர்க்கார் ஏற் பட்டால், அவற்றை கவர்னர்-ஜெனரலும் மந்திரிகளும் நிர் வகிப்பார்கள்.

1935-ம் வருஷச் சட்டம் 9-வது ஷரத் 1-வது பிரிவுப் படி, வரப்போகிற மந்திரிகள்வசம் சர்க்காரின் சர்வ நிர்வாக மும் விடப்படுமோ, அவர்கள்தான் சகல பொறுப்புகளோடும் இந்தத் தேசத்தை யாளுகிறவர்களா யிருப்பார்களா என்னுங் கேள்விகளுக்குப் புதிய சீர்திருத்தத்தில் இடமே யில்லை. கூடுமானவரை விரிவாய் எழுதப்பட்டிருக்கும் கவர்னர்-ஜெனரல் அத்தியா*யத்தைக் கவனமாய்ப் படித்தவர்கள் இக் கேள்விகளைக் கேட்கமாட்டார்கள். ஏனெனில் கவர்னர்-ஜெனரலால் கை வைக்கப்படாத எந்த அதிகாரமும் இந்தச் சட்டத்திலில்லை; எந்த இலாகாவும் இந்தச் சர்க்காரிலில்லை. மூலை முடுக்குகள், சந்து பொந்துகள் விடாமல் எங்குப் பார்த் தாலும் புதிய அரசியலில் அவர் 'சர்வாந்தர்யாமி'யாய் வியா பித்திருக்கிறார். மந்திரிகளுக்கு இடமெங்கே இருக்கிறது?

விளக்கு வைத்துக்கொண்டு இலாகா வாரியாய்த் தேடிப் பார்த்தாலும் சர்க்காரின் முக்கியமான மூன்று இலாகாக்† களில் இம்மி இடம் அல்லது ஈ யிருக்கு மிடமும் மந்திரிகளுக்

* 7-வது அத்தியாயம்.

† இராணுவம், வெளிநாடு சம்பந்தம், பொக்கிஷம்.

கில்லே. மற்ற இலாகாக்களிலும் அப்படித்தான். ஆனல் பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையை இந்தியாவில் ஒத்திகை பாப்பது போலச் சில காரியங்களே மந்திரிகள் செய்யலாம். அவைகளேத்தான் சுருக்கமா யிங்குச் சொல்லப் போகிறேன்.

## பார்லிமெண்டும் 'காபினெட்'டும் :

இந்திய அரசியல், பிரிட்டிஷ் பார்லிமெண்டரி முறையின் மறு பதிப்பு என்று சொல்லப்படுகிறது. இருக்கலாம்; ஆனல் நிச்சயமாய் அது 'ட்ரூ காப்பி' (True copy) அதாவது அசல் பதிப்பல்ல.

பார்லிமெண்டுத் தேர்தலில் உலகத்திலுண்டான பல கொள்கைகளேக் கொண்டு, தேசத்திலுண்டான பல கட்சிகளில் எதை அதிகப்படியான ஜனங்கள் ஆதரிக்கிருர்களோ அதன் பிரதிநிதிகள்தான் அதிகமாய்த் தேர்ந்தெடுத் தனுப்பப்படுவார்கள். அந்தக் கட்சிதான் அரசியலே நிர்வகிக்கும். அதன் தலேவர்தான் பிரதம மந்திரியாவார். அவர் சகாக்கள் தான் இதர மந்திரி ஸ்தானங்களே யேற்பார்கள். இப்படிப்பட்ட மந்திரி சபைக்குக் 'காபினெட்' என்று பெயர்.

காபினெட் மெம்பர்கள் அதாவது மந்திரிகள் எல்லாரும் எப்பொழுதும் ஒருவருக் கொருவர் கூட்டுப் பொறுப்புள்ளவர்களா யிருப்பார்கள். ஆனல் அக்கூட்டுப் பொறுப்பு இங்கு முக்கியமில்லே; மந்திரி சபை, பார்லிமெண்டுக்கு ஜவாப்தாரித்துவமுள்ள தென்பதும், பார்லிமெண்டு-பொது ஜனங்களேத் தவிர-யாருக்கும் ஜவாப்தாரி யல்லவென்பதுந்தான் முக்கியம்.

இந்த ஜவாப்தாரித்துவம், இந்தியாப் பார்லிமெண்டான சமஷ்டி சட்ட சபையிலும், மந்திரி சபையிலும் இருக்குமென்றெதிர் பார்க்கலாமா? " கவர்னர்-ஜெனரலுக்கு உதவி செய்ய

வும் ஆலோசனை சொல்லவும் 10 பேர்களுக்கு மேற் போகாத ஒரு மந்திரி சபை யிருக்கும்" என்று சொல்லுகிற 9-வது ஷரத்தின் 10-வது பிரிவின் இறுதியிலும், அதைத்தொடர்ந்து வரும் 2-வது, 3-வது பிரிவுகளிலும் கவர்னர்-ஜெனரலின் ஏதேச்சாதிகாரமும், சொந்தத் தீர்ப்பும் சொல்லப்பட்டிருக்கின்றன. இது-பார்க்கப்போனால்-வலது கை கொடுத்ததை இடது கை எடுத்துக்கொண்டதுபோ லிருக்கிறது.

'உதவி செய்யவும் ஆலோசனை சொல்லவும்' ஒரு பத்துப் பேரடங்கிய ஒரு மந்திரி சபை கவர்னர்-ஜெனரலுக்கிருக்கும்போது, 11-வது ஷரத்து 2-வது பிரிவிற் சொல்லப்படுகிற கவுன்ஸிலர்கள் ஏன் நியமிக்கப்படவேண்டும்? அவர்கள் சம்பளமும் உம்பளமும் (அலவன்ஸும்) அதிகாரமும் அலுவலும் கவுன்ஸிலோடு கூடிய மன்னரால் நிர்ணயிக்கப்படுங் காரணமென்ன? இந்திய மந்திரிகளை பிரிட்டிஷ் சர்க்கார் நம்பவில்லையா? அல்லது அரசாங்கத்தி லவ்வளவு பொறுப்பை இந்தியருக்குக் கொடுக்க இஷ்டமில்லையா?

**நியமனம் :**

கவர்னர்-ஜெனரலின் மந்திரிகள், கவர்னர்-ஜெனராலேயே பொறுக்கி யெடுக்கப்பட்டும் அழைக்கப்பட்டும் சத்தியம் வாங்கப்பட்டும் அவர் விருப்பத்திற் குத்தரவாதிகளாய் உத்தியோகம் வகிப்பார்கள். 10-வது ஷரத்து 1-வது பிரிவிற் சொல்லப்பட்டிருக்கிறது. அதே ஷரத்தின் அடுத்த பிரிவில் அவர், சட்டசபைமெம்ப ரல்லாதவரைக் கூடக் கூப்பிட்டு மந்திரி சபை யமைக்கச் சொல்லலாமென்றிருக்கிறது. இதனால் மந்திரிகளை, கவர்னர்-ஜெனரல் தனதிஷ்டம்போல், சட்டசபைக்கு உள்ளிருந்தோ வெளியிருந்தோ நியமிக்கலாமென்றும், நினைத்த நேரத்தில் நீக்கலாமென்றும் தெரிகிறது. அப்படியானால், மந்திரிகள் கவர்னர்-ஜெனரலின்

நியமனச் சிப்பந்திகளா யிருக்கிறார்களே யொழிய ஜனப் பிரதிநிதிகளின் ஜவாப்தாரிகளா யில்லை.

சட்டசபை மெஜாரிட்டிக் கட்சியினர்தான் மந்திரிகளாய் நியமிக்கப்படவேண்டு* மென்றாவது, மந்திரிகளின் யோசனைப் படிதான்கவர்னர்-ஜெனரல் நடக்கவேண்டுமென்றாவது சட்டத் தின் எந்த ஷரத்திலும், எந்த ஷெட்யூலிலுஞ் சொல்லப்பட வில்லை; நியமனப் பத்திரத்திலிருக்கிறது.$ நியமனப்பத்திரம் சட்டமல்ல ; கவர்னர்-ஜெனரலுக் களிக்கப்பட்டிருக்கும் வெறும் 'ஆக்ஞாபத்திரம்' மாத்திரமே யாகும்.

மந்திரிகளை கவர்னர்-ஜெனரல் நியமிக்கும்போதும் நீக்கும்போதும் சட்டசபையைக் கேட்டுத்தான் செய்ய வேண்டுமென்று அவஸ்யமில்லை. சட்டசபை, தன் சம்மத மின்மையைத் தெரிவித்துக்கொள்ளுஞ் சந்தர்ப்பமு மளிக்கப்படவில்லை. ஆனால் அப்பேர்ப்பட்ட மந்திரி அல்லது மந்திரிசபைமீது, சட்டசபை நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றலாம். அதையுங் கவர்னர்-ஜெனரல் அனுசரிக்கவேண்டு மென்ற அவஸ்யமேயில்லை. பிடிவாதமுள்ள ஒரு கவர்னர்-ஜெனரல், சந்தர்ப்ப ரீதியாகவோ அசந்தர்ப்ப ரீதியாகவோ அத் தீர்மானத்தை அவலம்பித்து, சட்டசபை 'நம்பிக்கை யில்லை'

---

* அப்படி நியமிக்கப்படும் ஒருவர் அல்லது ஒரு சபையினர் 90-வது ஷரத்து 2-வது பிரிவுப்படி ஏதாவதொரு சட்டசபையில் மெம்பராக வேண்டும் என்னும் விதியில்லாவிட்டால், சட்டசபைக்கும் மந்திரி சபைக் கும் சம்பந்தமில்லை யென்றே சொல்லி விடலாம்.

$ நியமனப் பத்திரம் 8-வது பாரா : மந்திரிகளை நியமிப்பதில் கூடுமானவரை, கவர்னர்-ஜெனரல், சட்டசபையின் ஸ்திரமான மெஜாரிட்டிக் கட்சியைச் சேர்ந்தவர் அல்லது மெஜாரிட்டியின் ஆதரவைப் பெறக்கூடியவரென்று தான் 'தீர்மானிக்கிறவரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

16

யென்று சொன்ன அதே மந்திரி அல்லது மந்திரி சபையை உத்தியோகத்தி லிருக்கும்படி செய்யலாம். இதனாலும் மந்திரிகள், கவர்னர்-ஜெனரலின் நியமனச் சிப்பந்திகளாய் நினைக்கப்பட வேண்டியவர்களா யிருக்கிறார்கள்.

## உதவி மந்திரிகள் :

இவ்வாறு நியமிக்கப்படும் மந்திரிகளுக்கு அவர்கள் வேலை வரையறுக்கப்பட்டிருந்தாலும்—உதவி செய்ய உதவி மந்திரிகள் அல்லது காரியதரிசிகள் இருப்பார்கள். இவர்கள் நியமனம் பற்றியும், அலுவல்கள் பற்றியும், எண்ணிக்கை பற்றியும் சட்டத்திலொன்றுந் திட்டமாய்ச் சொல்லப்பட வில்லை. அவர்களால் தேசத்துக்குச் சிறிது செலவு ஏற் பட்டாலும், மந்திரி வேலைக்குத் தேசத்தின் இளஞ் சந்ததியார் பலர் பழக்கப்படுவார்கள் என்னும் பாரமார்த்திக மிருக்கிறது. "காரியதரிசிகளின் கடமைகள் மந்திரிகளுக்கு உதவி செய்வதும், மெம்பர்களின் அபிப்பிராயங்களைத் தெரிந்துகொள்வதும், குறிப்புகள் தயாரிப்பதுமாகும்" என்று சமீபத்தில் சென்னைப் பிரதம மந்திரி ஸ்ரீ ராஜ கோபாலாச்சாரியார் சொன்னது போல, உதவி மந்திரிகள் சட்டசபைக்கே பயன்தரக் கூடியவர்களாகவு மிருப்பார்கள். மந்திரிகள், சர்க்கார் நிர்வாகத்தின் முக்கியமான பெரிய காரியங் களைக் கவனித்தால், சட்டசபையி லேற்படுங் கேள்விகளுக்கு பதிலளிப்பதுபோன்ற சிறிய காரியங்களைக் காரியதரிசிகள் பார்க்கலாம்.

மேலும் மந்திரிகளாய் வரக்கூடிய கட்சித் தலைவர்கள் எல்லாரும், எப்பொழுதும் அரசியல் நிபுணர்களாயிருப்பார்க ளென்று எதிர்பார்க்க முடியாது. அப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங் களில், அப்பேர்ப்பட்ட மந்திரிகளுக்கு, அரசியல் திறமையுள்ள காரியதரிசிகள் தேவையாயிருக்கும். மாகாண சம்பந்தத்தில்

காரியதரிசிகளின் தேவை அத்தனை அவஸ்யமாயில்லாவிட்டா லும் சமஷ்டி சம்பந்தத்தில் அவர்கள் அத்தியாவஸ்யமானவர் களாயிருப்பார்கள். ஏனெனில், சமஷ்டி சர்க்காரில் சமஸ்தா னாதிபதிகள்கூட மந்திரிகளாய் வரலாமல்லவா? ராஜாக்கள் மந்திரிகளாவது, சதுரங்கத்தில் காலாள் மந்திரியாவது போலத் தானிருக்கும்.

## கூட்டுப் பொறுப்பு :

ஜனநாயக ஆட்சியில் 'கூட்டுப் பொறுப்பு' என்பது ஒரு முக்கியமான அம்ஸம். ஜனசமுதாயத்தில் ஜாதிமத பேதங்க ளிருக்கலாம்; ஜனப்பிரதிநிதிகளிலும் கட்சிப் பிரதிகட்சிகள் இருக்கலாம். ஆனால் அரசாங்கத்தில் அந்த பேதங்கள் பிரதி பலிக்கக்கூடாது. மந்திரிகள் எந்த மதம் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களானாலும், எந்தக் கொள்கை எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும், சர்க்காரை நிர்வகிக்க வந்துவிட்டால் கட்டுப்பாடான கூட்டுப்பொறுப்பு அவர்களில் அவஸ்யமிருக்க வேண்டும். ஆனால் இந்தியாவில் இதற்குரிய காலம் இன்னும் வரவில்லை. பல கொள்கைகளையுடைய பல அரசியற் கட்சி கள் இந்தியாவில் இப்பொழுது இருக்கின்றனவென்று சொல்லுவதற்கில்லை. ஜாதீயக் கட்சிக ளிருக்கின்றன; சமய (மத)க்கட்சிகளு மிருக்கின்றன. சாம்ராஜ்யவாதிகளிருக்கிறார் கள்; சமய (சந்தர்ப்ப) வாதிகளுமிருக்கிறார்கள். ஆகையால் இந்தியாவில் இப்பொழுது அரசியற் கட்சிகள் இருப்பதாய்ச் சொல்ல முடியுமானால் அத்தகைய கட்சிகள் இரண்டே யாகும்:

(1) பிரிட்டிஷ் சர்க்காரை ஆதரிக்கும் கட்சி.

(2) பிரிட்டிஷ் சர்க்காரை ஆக்ஷேபிக்கும் கட்சி.

இவ் விரண்டு கட்சிகளுக்கும் என்றைக்காவது கூட்டுப்பொறுப் பேற்பட முடியுமா?

சமஷ்டி சட்டசபையில் எத்தனை கட்சிகள் வந்தாலும் போனாலும், சமஸ்தானப் பிரதிநிதிகள்கட்சி என்று ஒன்று எப்பொழுதும் நிரந்தரமாய், நிரந்தரமான எண்ணிக்கை யுடையதாயிருக்கும். அந்தக் கட்சியோடு, கவர்னர்-ஜெனரலின் தயாதாக்ஷண்யத்தால் நியமனஞ் செய்யப்படும் அங்கத்தினர்களும், தனித்தொகுதியின் மூலந் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும், இதர சுயநலவாதிகளுஞ் சேர்ந்துகொள்ளும் போது—நிச்சயமாய் இவர்களெல்லாம் பிரிட்டிஷ் சர்க்காரை ஆதரிக்குங் கட்சியிலேதான் அவஸ்யமிருப்பார்கள்*—அக் கூட்டுக் கட்சிதான் மெஜாரிட்டியாயிருக்கும்.

பிரிட்டிஷ் சர்க்காரை ஆக்ஷேபிக்குங் கட்சியாக இந்தியாவில் இப்பொழுதிருப்பதும் இனி இருக்கப் போவதும் காங்கிரஸ்கட்சி யொன்றுதான். மாகாண சட்டசபைகளில் அடைந்த மெஜாரிட்டியை, சமஷ்டி சட்டசபையிலும் அடையலாமென்று அது கனவுகூடக் காணமுடியாது. சர்க்காருக்குத் தைரியமிருந்து, ஜனநாயக தத்துவத்தைப் பின்பற்றிச் சமஸ்தானங்களிலும், மாகாணங்களிலும் நேரடியான தேர்தல் முறையை யுண்டுபண்ணினால் காங்கிரஸின் கனவு நனவாகும்—எல்லா ஸ்தானங்களிலும் அது, தன் அபேக்ஷகர்களை நிறுத்தித் தேர்தல் கோட்டையை முற்றுகையிட்டு வெற்றிபெறலாம். அத்தோடு தனித்தொகுதி முறையும் எடுக்கப்பட்டுவிட்டால் 'நூற்றுக்கு நூறு ஸ்தானங்களை நாங்களே கைப்பற்றுவோம்' என்று காங்கிரஸ்காரர்கள், எந்தக் கட்சிக்காரனுக்கு மெட்டாத தலையெடுப்பில், விண்ணும் மண்ணு மதிரச் சொல்லக்கூடும். அப்போது, நாட்டில் பிரிட்

* "பெடரேஷன் பூர்த்தியாகிறபோது, ஸ்திரமான சுயநன்மையைக் காப்பதற்காகக் கச்சை கட்டி நிற்கும் கட்சிகளோடு சமஸ்தானப் பிரதிநிதிகள் கட்சியும் அணிவகுத்து நிற்கும்" என்று 1936-ல் நரேந்திர மண்டலத்தின் மாஜி-அத்தியக்ஷகரான தர்மபுரம் மஹாராஜா சொன்னார்.

டிஷ் சர்க்காரை ஆக்ஷேபிக்குங் கட்சி ஒன்றைத்தவிர இன்னொன்றுக்கு இடமேயிராது. கூட்டுப்பொறுப்பும் குதூகலமாய் நடக்கும். இல்லையானால் மந்திரி சபையிற் கூட்டுப் பொறுப்பென்பது சமஷ்டி சம்பந்தப்பட்டமட்டிலாவது, சர்க்காருக்கு விரோதமாய் வருகிற மந்திரி அல்லது மந்திரிகளை உத்தியோகத்திலிருந்து துரத்துவதற்கு உபயோகிக்கப் படும் ஏகாதிபத்தியச் சூழ்ச்சியாகவே யிருக்கும்.

இதுபற்றி ஹரிஜன் பத்திரிகையில், காந்திஜி எழுதியுள்ள கட்டுரைப் பகுதி இங்கு கவனிக்கத் தக்கது :—

"ஜனநாயகத் தன்மைவாய்ந்த பிரிட்டன், இந்தியாவுக்காக ஒரு விசித்திரமான அரசியலைச் சிருஷ்டித்திருக்கிறது. அதன் உண்மைச் சொரூபத்தைக் கவனித்தால், அது நல்ல கட்டுப்பாடுடன் அமைக்கப்பட்ட ஒரு ராணுவ ஆதிக்கமே தவிர வேறில்லை என்பது புலனாகும். உண்மையான ஆதிக்கம் சம்பந்தப்பட்டவரையில் மந்திரிகள் வெறும் பொம்மைகளே. இன்று அவர்களுக்குச் 'சலாம்' போடும் கலெக்டர்களும் போலீஸ்காரர்களும், அவர்களின் உண்மை யெஜமானராகிய கவர்னர் ஒரு வார்த்தை சொன்னால், மந்திரிகளைப் பதவியிலிருந்து நீக்கிக், கைதுசெய்து 'லாக்கப்'பில் வைத்து விடுவார்கள்".

மேலுமிக் கூட்டுப்பொறுப்பு ஜனநாயகத்தின் பேரால் ஏகாதிபத்திய ஆட்சி நிலைப்புக்கும் நீடிப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற தந்திரமென்பதற்கு, கவர்னர்-ஜெனரலின் கவுன்ஸிலர்களும், நிதியாலோசனைதாரருமே சாக்ஷிகளாயிருக்கிறார்கள். சட்டசபைப் பொறுப்பாட்சியும், மந்திரி சபைக் கூட்டுப்பொறுப்பும் நிஜமாகவும், நல்ல நோக்கத்தோடேற்படுத்தப் பட்டவைகளாகவு மிருந்தால், கவர்னர்-ஜெனரலுக்கு 'உதவி செய்யவும் ஆலோசனை சொல்லவும்' மந்திரிகளைத்தவிர வேறு யாருந் தேவையேயில்லை.

கூட்டுப்பொறுப்பைப் பொய்யாக்க இதுவொன்று கூறினுற் போதாது—இன்னுமிருக்கின்றன. மந்திரி சபைக் கூட்டங்களில் மன்னரின் பிரதிநிதியாய் கவர்னர்-ஜெனரல் தலைமை வகிப்பதும், மந்திரிகளின் யோசனையை கவர்னர்-ஜெனரல் கேட்டு நடக்காதபோது அவர்கள் சொன்ன யோசனை நல்லதா கெட்டதா, கவர்னர்-ஜெனரல் அதைக் கேட்காதது நியாயமா அல்லவா என்று எந்தக் கோர்ட்டின் மூலமாகவும் நிர்த்தாரணம் அல்லது நிரூபணஞ் செய்யவிடாமல் தடுப்பதும் *கூட்டுப்பொறுப்பை அழிப்பதற்காகச் செய்யப்பட்ட நாச வேலைகளே தவிர ஆக்குவதற்காகச் செய்யப்பட்ட நல்ல வேலைகளல்ல. கவர்னர்-ஜெனரலை கவர்ன்மெண்டின் தலைமை நிர்வாகியாய் ஒப்புக்கொண்டாலும், மந்திரிகளின் கூட்டுக் குரல், சட்டசபையின் ஏகோபித்த குரலென்றும், ஜனசமுதாயத்தின் ஏகோபித்த குரல்தான் சட்டசபைக்கு ஜவாப்தாரிகளான மந்திரிகளின் கண்டத்திலிருந்து ஒலிக்கும் மணியோசையென்றுங் கருதினுல், இதைக் கொஞ்சம் பொறுமையோடு நாம் ஏற்றுக்கொள்ளலாம்.

## நடை முறை

கவர்னர்-ஜெனரலால் நியமிக்கப்படும் மந்திரிகள், கவர்னர்-ஜெனரலுக்குச் சொல்லும் ஆலோசனையும், செய்யும் உதவியும், கூட்டுப்பொறுப்போடு கூடிச்செய்யும் அலுவல்களும், அந்த அலுவல்களைச் செய்வதற்கு அவர்களிடமிருக்கும் அதிகாரங்களும் இத் தலைப்பின்கீழ் ஆராயப்படுகின்றன. இதற்கு ஆதாரமாயிருப்பது 17-வது ஷரத்து. அதன் சாராம்ஸத்தை யிங்குத் தருகிறேன் :—

(1) சமஷ்டி சர்க்கார் சம்பந்தமான சர்வ நிர்வாகமும் கவர்னர்-ஜெனரல் பெயராலேயே நடைபெறும்.

* 10-வது ஷரத்துப்படி.

(2) கவர்னர்-ஜெனரல் பெயரால் ஜாரி செய்யப்படும் உத்தரவுகளும், கட்டளைகளும் எப்படி நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்கு வேண்டிய விதிகளை கவர்னர்-ஜெனரலே செய்வார். அப்படிப்பட்ட உத்தரவுகளும் கட்டளைகளும் கவர்னர்-ஜெனரலாற் செய்யப்பட்டவைக ளல்லவென்று யாரும் ஆக்ஷேபிக்கக் கூடியவைகளா யிராது.

(3) சர்க்கார் காரியம் சௌகர்யமாகவும் சரியாகவும் நடப்பதற்கு கவர்னர்-ஜெனரல் சில விதிகள் செய்வதுடன், கவர்னர்-ஜெனரலின் ஏதேச்சாதிகார சம்பந்தமில்லாத அலுவல்களை மந்திரிகளுக்குப் பிரித்து, இன்னின்ன காரியங்களை இன்னின்ன மந்திரிகள் செய்யவேண்டுமென்று நிர்ணயிப்பார்.

(4) மந்திரிகளும், அவர்களுடைய காரியதரிசிகளும் மேலே கூறியுள்ள விதிகளிற் குறிப்பிடப்பட்டுள்ளபடி, சர்க்காரில் நடக்கும் ஒவ்வொன்றையும் கவர்னர்-ஜெனரலுக்கு அவ்வப்போது அறிவித்துக்கொண் டிருக்கவேண்டும். அதாவது மந்திரிகள் நேரடியாய் கவர்னர்-ஜெனரலுக்கும், காரியதரிசிகள் அவரவர் மந்திரிகளுக்கும், மந்திரிகள் மூலம் கவர்னர்-ஜெனரலுக்கும் சொல்லுவார்கள்.

(5) இந்த ஷரத்தின் 2, 3, 4-வது பிரிவுகளிலுள்ள காரியங்களை கவர்னர்-ஜெனரல், மந்திரிகளைக் கலந்தாலோசித்துப் பின் தனது யுக்தானுசாரம்போற் செய்வார்.

இதுதான் மந்திரி சபையின் நடைமுறை; அல்லது மந்திரிகள் செய்யவேண்டிய வேலைகள். இதனால் மந்திரிகள், கவரனர்- ஜெனரலின் குமாஸ்தாக்களாகவும், அரசாங்கத்தின் காவற்காரர்களாகவு மாக்கப்படுகிறார்கள். மந்திரிகளின் வேலைகளை கவர்னர்-ஜெனரலே நிச்சயிக்கும்போது பிரதம மந்திரி, பிறமந்திரிகளிடமிருந்து பிரத்தியேகமான மரியாதையையாவது மதிப்பையாவது எதிர்பார்க்கலாமா? அல்லது தகுதிக்குந் திறமைக்குந்தான் கால மிருக்கிறதா?

## சைத்தானுக்கும் சாகரத்துக்கும் மத்தியில் :

இவ்வாறு கையுங்காலுங் கட்டுண்டு, மந்திரிகள் மத்திய சர்க்காரிலிருக்கப் போகுங் காட்சி, விஸ்வாமித்ர சிருஷ்டியாலேற்பட்ட சுவர்க்கத்தில், திரிசங்குச் சக்கிரவர்த்திக்குக் கிடைத்த அவாந்தர நிலைமையைப்போ லிருந்தாலும் பார்ப்பதற்கு விசித்திரமாகவே யிருக்கும். கவர்னர்-ஜெனரலின் விசேஷப் பொறுப்பு, எதேச்சாதிகாரம், சொந்தத் தீர்ப்புகளாகிற மூன்று தலைகளையுடைய சைத்தானுக்கும், ஜன சமூதாயமாகிற சாகரத்துக்கும் மத்தியிலிருப்பதா யவர்கள் உணரும்போது, அவர்கள் நிலைமையை நிஜமாகவே ஏட்டிலும் படத்திலும் எழுதித்தான் பார்க்க வேண்டும். அந்தப் பதவியில் அவர்கள் அடையும் இன்பத்தை

"அடுகரி தொடரவீழ ஐந்தலை நாகங்காணப்
படுகிணற் றருகின்வேரைப் பற்றிநான்றிட அவ்வேரைக்
கடுகவோர் ரெலியும் வந்து கர்த்திட அதில்நின்றேனுக்
கிடையுறு தேனுக் கின்பம்போலு மிப்பதவி யின்பம்."

என்று வர்ணிக்கலாமா என்று தோன்றுகிறது. தவறிருந்தால் திருத்தலாம்; மன்னிக்கலாம்.

சட்டப்படி கவர்னர்-ஜெனரலுக்கு 'உதவி செய்யவும் ஆலோசனை சொல்லவு'மே மந்திரிகள் நியமிக்கப் படுகிறார்கள், நிர்வாகம் நடத்துகிறார்கள். ஆனால் ஐதீகப்படி அவர்கள் பொது ஜனப்பிரதிநிதிகளாகவும், பொது ஜன அபிப்பிராயத்தை அவ்வப்போது அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லுகிறவர்களாகவுமிருக்கிறார்கள். அவர்கள் கையில், தேர்தலின்போது பொதுஜனங் கொடுத்த வக்காலத்தும், பிரீபும் (கேஸ்கட்டும்) இருக்கிறது. ஆகையால் அவர்கள், கொடுத்த வாக்குறுதிக்கும், எடுத்த பிரமாணத்துக்கும், பழுதுவராமற் பார்த்துக் கொள்ளுவதென்பது எப்பொழுதுமே இயலாத காரியமா

யிருக்கும். இரு எஜமானர்களுக்கு ஊழியஞ் செய்வதுபோல்.

ஜன சமுதாயமாகிற எஜமானனுக்கு ஊழியஞ் செய்வதில், இந்தியா சட்ட சபையும் அதன் மந்திரி சபையும் மாத்திரமல்ல, உலகத்திலுண்டான எல்லாச் சட்டசபைகளும், எல்லா மந்திரி சபைகளும் எல்லாச் சங்கடங்களையு மனுபவிக்கலாம்; அதற்காக அவைகள் சஞ்சலப்படா. ஆனால் சர்வாதிகாரிகள் போன்ற தனி மனிதர்களாகிற எஜமானர்களிடம் அவை படும் பாடு அம்மவோ!

இந்தியாச் சட்டத்தின் 321 ஷரத்துக்களில் கவர்னர்-ஜெனரல் கை வைக்காத-கலப்பற்றது ஒன்றுமே யில்லை. இந்திய சர்க்கார் நிர்வாக இலாகா எதிலும், அவர் அதிகாரம் பரவாத இடம் பார்க்கவில்லை. இந்திய வருமானத்தில் 80 சத விகிதத்தை கவர்னர்-ஜெனரல் தனதிஷ்டம்போற் செலவிடலாம்; மந்திரிகள் ஏன் என்றுகூடக் கேட்கக்கூடாது. இதர 20 சத விகிதத்தைச் செலவிடுவதிலும் அவர்தான் முடிவான அதிகாரி.

வருமானத்தில் 60 சத விகிதத்தை வாரி விழுங்கும் ராணுவத்தில் 1 ரூபா அல்லது 1 சிப்பாயியைக் கூட்டவோ குறைக்கவோ கனம் பிரதம மந்திரியால் முடியாது. அவர் பார்வையும் அந்த இலாகாமீ தேறபடக்கூடாது. அதனால் தேச வருமானத்தில் முக்கால்வாசிப் பணம் துப்பாக்கிக்கும், தோட்டாவுக்கும், பீரங்கிக்கும், புகை (விஷப் புகை)க்குமாய்ப் போய்த் தொலைகிறதே யொழிய தேசோத்காரத்துக்கான கைத்தொழிலுக்காவது கல்விக்காவது பயன்படவில்லை.

இவ்வளவு குறுகலான அதிகார வரம்புக் குட்பட்டுப் பதவி யேற்க, இந்திய அரசியற் கட்சிகளில் ஏதாவது ஒன்று துணியுமானால் அது, அதற்குள்ள அசட்டுத் தைரியத்தையும், பதவி மோகத்தையுமே குறிக்கும்.

## காங்கிரஸ் துணிந்தால்?

இதனுலும் பதவி யேற்க முடியாது. முன்னே சொன்ன அசட்டுத் துணிவோடு—அத்தகைய துணிவை இது ஆதரிக் காது—மந்திரி பதவி யேற்ருல் இது எந்த நிமிஷத்திலுங் கவிழ்க்கப்படலாம். எப்படி யென்று ஹேஸ்யக் கணக்கோடு ஜோஸ்யம் பார்ப்போம்.

பெடரல் அஸெம்ப்ளி என்று அழைக்கப்படும் கீழ் சபையில் மொத்தப் பிரதிநிதிகள் 375 பேர். இதிற் சமஸ் தான அங்கத்தினர் 125 பேர் போக, மிச்சம் 250 பேர் பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகள்.

இந்த 250 ஸ்தானங்களும் பகிரங்கமான தேர்தல் மூலம் பூர்த்தி செய்யக் கூடியவைகளல்ல. விகிதாச்சாரப் பிரதி நிதித்துவம் என்னும் சூழ்ச்சியால் 190 ஸ்தானங்களுக்கு மாத்திரந்தான் தேர்தல் உண்டு.

சமஷ்டிக் கீழ் சபைத் தேர்தலுக்குக் காங்கிரஸும் போட்டி போட்டுத் தன் அபேக்ஷகர்களை நிறுத்தினுல், அது பின்வரும் விகிதத்தில் வெற்றி பெறலாம். இவ் வெற்றி மாகாணத் தேர்தல்களில் காங்கிரஸ் அடைந்த அனுபவத் தைக் கொண்டும், இந்தியாவில் இப்பொழுதிருக்கும் தேசிய உணர்ச்சியின் உற்சாகத்தைக் கொண்டும் உத்தேசமாய்க் கணக்கிடப்படுகிறது :—

| தொகுதிகள் | மொத்த ஸ்தானங்கள் | காங்கிரஸுக்குக் கிடைக்கலாமென்று உத்தேசிக்கப் படும் ஸ்தானங்கள் |
|---|---|---|
| பொதுத் தொகுதி | 86 | 80 |
| ஹரிஜனர் | 19 | 12 |
| முஸ்லீம்கள் | 82 | 10 |
| சீக்கியர் | 6 | 2 |
| ஐரோப்பியர் | 8 | — |
| ஆங்கிலோ-இந்தியர் | 4 | — |
| இந்தியக் கிறிஸ்தவர் | 8 | 1 |
| கைத்தொழில், வர்த்தகம் | 11 | 2 |
| நிலச்சுவான்தார் | 7 | 3 |
| தொழிலாளர் | 10 | 10 |
| மாதர் | 9 | 5 |
| ஆக மொத்தம் | 250 | 125 |

375 பேர்களைக் கொண்ட ஒரு சபையில், 125 பேர்—ஏன் இன்னுங் கொஞ்சந் தாராளமாய்த்தான் நினைப்போமே—150 பேர்களைக் கொண்ட ஒரு கட்சி, மெஜாரிட்டியாயிருக்குமா? கட்சிகளில் வேண்டுமானால் மெஜாரிட்டியாயிருக்கலாம்; சபையிலிருக்க முடியாதல்லவா? கட்சி மெஜாரிட்டியை நம்பி காங்கிரஸானாலுஞ் சரி, இதர எந்த ஸ்தாபனம் அல்லது கட்சியானாலுஞ் சரி மந்திரி பதவியேற்கக்கூடாது. கூட்டு மந்திரி சபை யென்பது, கொள்கையைக் கொலை செய்வதாகும். காங்கிரஸைப்போன்ற

ஸ்திரமான கொள்கையும், முடிவான லட்சியமு முடைய எந்தக் கட்சியும், கூட்டு மந்திரிசபை யமைக்கச் சம்மதிக்காது.

அப்படியானால் சமஷ்டி சர்க்காரில் மந்திரி சபையே யிராதா? இருக்கும்; சமஸ்தானாதிபதிகள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மந்திரிசபை. "வெள்ளை ராஜாக்கள் ஒரு பக்கத்திலும், கருப்பு ராஜாக்கள் மற்றொரு பக்கத்திலும் இந்தியாவையாளுங் காட்சி வேடிக்கையாயிருக்கும்"* என்று ஸர் முகமது இக்பால் சொன்ன அபிப்பிராயம் இக்கருத்தைத் தான் தழுவுகிறது. "சமஸ்தானாதிபதிகள் தயவில், பிரிட்டிஷ் இந்தியா இருக்கப்போகிறது"† என்று ஜனாப் ஜின்னா சொன்னதும் இக் கருத்தைக்கொண்டுதான்.

சமஸ்தானாதிபதிகள் மந்திரிகளாக வந்தால், அவர்கள் ஆட்சி யெப்படி யென்பதற்கு உவமானமாகவும், மேற்கோளாகவும் பாரசீக மஹாகவி ஷேக்ஸாதியின் வாக்கியத்தைக் கொண்டு இந்த அத்தியாயத்தை முடிக்கிறேன்: அதாவது, "சதுரங்கத்தில் காலாள் மந்திரியாய் வந்தால் குறுக்கு மறுக்குமா யோடுவா னல்லவா?"$

---

* 24-ம் பக்கம். † 25-ம் பக்கம்.

$ சதுரங்க விளையாட்டில் ஒரு கட்சி, தனது மந்திரியை யிழந்திருந்து அந்தக் கட்சியின் காலாள் எதிர்க்கட்சி மந்திரியின் ஸ்தானத்துக்குச் சென்று விட்டால், அந்தக் காலாள் மந்திரியாகிறான். அப்படியான மந்திரி, சதுரங்கத்தின் சாதாரணச் சட்டதிட்டங்களை மீறித் தன்னிஷ்டம்போல் எவ்வழியாக வேண்டுமானாலும் ஓடலாம்.

# 10. பொக்கிஷம்

பொக்கிஷம் என்பது இங்கு, சமஷ்டி சர்க்காரின் வருமானத்தையும் செலவினத்தையுங் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாய் உபயோகிக்கப்படுகிறது. வரவு-செலவு என்றும் விளக்கமாய்ச் சொல்லலாம்.

அரசியலில்—அது எந்த லட்சியத்தையுங் கொள்கையையுமுடையதாயிருந்தாலும்-நிதி சம்பந்தந்தான் நிம்மதியான—கொந்தளிப்பும் குழப்பமுமற்ற—அமைதியான பகுதியென்று அரசியல்வாதிகள் அடிக்கடி சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் என் அனுபவத்தில் அப்படியிருக்கும் அல்லது இருக்க முடியுமென்று தோன்றவில்லை. சாதாரணமாய் மனிதவாழ்க்கையிலேகூடப் பணத்தைவிடப் பெரியதான பிரச்னை வேறெதுவுமில்லை. இப்போதுதான் உலகத்திற் புதிதாயுதித்த குழந்தை முதல், இன்றோ இப்பொழுதோ இன்னுஞ் சற்று நேரத்திலோ என்றிருக்கும் பழுத்த கிழவன்வரை எல்லாரையும், இப்பிரச்னை-அவர்கள் உறங்கினும் அது உறங்காமல் - ஒவ்வொரு நிமிஷமும், நல்லவிதமாகவோ கெட்டவிதமாகவோ சாடிக்கொண்டிருக்கிறது. ஆகையால் அந்த ஜனங்களையாளும் அரசாங்கத்திலும், இப்பிரச்னை, பிரதமமாகவும் பிரதானமானதாகவுந்தா னிருக்கவேண்டும்.

ஒரு அரசியல் நல்லதா கெட்டதா அல்லது ஜனங்களுக்குச் சாதகமானதா பாதகமானதா என்று பார்ப்பதற்கு இரண்டே வழிகள்தா னிருக்கின்றன. கேள்விரூபமாய்த் தருகிறேன்.

(1) ஜனப் பிரதிநிதிகளுக்கு நிதி சம்பந்தத்தில் எவ்வளவு அதிகார மிருக்கிறது?

(2) தேசத்துக்கும் ஜனங்களுக்கும் பிரயோஜனமான வழியில், எவ்வளவு பணம் செலவிடப்படுகிறது?

இவ்விரண்டில், முதற் கேள்விக்கு முன்னமேயே பதிற் சொல்லிவிட் டிருக்கிறேன். அதாவது சர்க்கார் வரவு-செலவில் 80 சத விகிதத்தின்மீது பிரதிநிதிகளுக்கு வோட்டுரிமையில்லை; சட்டசபை அதைப்பற்றி ஏனென்றுகூடக் கேட்கக்கூடாது. மீதம் 20 சத விகிதத்தின்மீது வோட்டுரிமையுண்டு: விவாதமுண்டு; தீர்ப்புமுண்டு. ஆனல் அந்த உரிமை, விவாதம், தீர்ப்பு அத்தனையையும் அரைநொடியில் கவர்னர்-ஜெனரல் அழித்துவிடலாம். அதாவது, எஞ்சிய 20 சதவிகிதத்தையும் அவர் இஷ்டம்போற் செலவிடலாம். ஆகையால், ஜனப் பிரதிநிதிகளுக்குச் சர்ச்கார் வரவு-செலவில் துளிகூட அதிகாரமில்லை.

இரண்டாவது கேள்வியை யெடுத்துக்கொண்டால், தேசோத்காரத் துறைகளான சுகாதாரம், கல்வி, கைத்தொழில் முதலியவைகள், மாகாணங்களின் தயவு தாக்ஷண்யத்துக்கு விடப்படுகின்றன. பொதுவாய் மனித வாழ்க்கையை மேன்மைப்படுத்துவதுதான் சர்க்காரின் முதற் கடமையென்பதை எந்த அரசாங்கமும் ஒப்புக்கொண்டு விட்டால், வரிப்பணம் தாறுமாருய்ச் செலவிடப்பட நியாயமேயில்லை.

சர்க்கார் வருமானம் அதிகமாயிருக்கின்றதென்ருவது, சர்க்கார் அதிக வரி வசூலிக்கின்றதென்ருவது எப்பொழுதும் பிரஜைகள் பிரமாதப்படுத்த மாட்டார்கள். ஸ்திரீதனம் அதிகமாய்க் கொடுக்கிறேமே என்று எந்தத் தந்தையாவது கவலைப்படுகிருனு? கொடுப்பதற்கு அதிகமாயில்லையேயென்று தான் எல்லாத் தந்தையருஞ் சஞ்சலப்படுகிருர்கள். அதே மாதிரிதான் எல்லாப் பிரஜைகளும்-சர்க்கார் வருமானம் சரியான வழியில்-ஜனங்களுக்குப் பிரயோஜனமான வழியிற்

செலவிடப்பட்டால்-அதிக வரி கொடுக்க அஞ்சமாட்டார்கள். ஆனால் இந்திய சர்க்காரில், இந்த அதிக வரிக்கூச்சல் அநேக காலமா யிருந்து வருகிறது. அதற்குக், காரணம் அதிக வரி யென்பதல்ல ; அதிக வரி, குறைந்த பலன் என்பது தான்.

சர்க்கார் வரவு-செலவைப்பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்குமுள்ள சம்பந்தத்தைத் தெரிந்திருக்க வேண்டும். பிரிட்டிஷ் மன்னர், இந்தத் தேசத்தை யாளும் பொறுப்பை யேற்றுக்கொண்ட காலத்திலிருந்து வெகுகாலம் வரை, பிரிட்டிஷ் இந்தியா முழுதுக்கும் ஒரே வரவு-செலவு தான் இருந்தது. ஆரம்பத்தில் அது கஷ்டமாயிருக்க வில்லை. வருஷங்கள் வளர வளர, மாகாணங்கள் சேரச்சேர, செலவுகள் அதிகரிக்க அதிகரிக்க மாகாணங்களிடம் ஓரளவு வரவு-செலவை ஒப்படைக்க வேண்டுமென்று அரசாங்கம் உணர்ந்தது. 1870-ல் வருமானக் குறைவுள்ள சில இலாகாக்கள் மாகாணங்களிடம் விடப்பட்டன. அவைகள் ஒன்றோடொன்று, வருமானத்தை யதிகப்படுத்துவதிலும், நிரந்தரமான வருமானத்தை யுண்டுபண்ணுவதிலும் போட்டிபோட்டு வேலை செய்தன. அதனால் இந்திய வருமானம், மொத்தத்தில் ஒரு உருப்படியான நிலைமையை யடைந்தது. உடனே இந்திய மத்திய அரசாங்கம் மறுபடியும் வரவு-செலவைத் தன்வசம் எடுத்துக்கொள்ள நினைத்தது. 1919-ம் வருஷச் சட்டப்படி தேச வருமானத்தில் 60 சத விகிதம் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டது.

1935-ம் வருஷச் சட்டம், இந்த ஒப்படைப்பை இன்னுங் கொஞ்சம் விஸ்தரித்து, சமஷ்டிக்கும் அதன் பாகங்களுக்கும் விளக்கமான ஒரு விஸ்தியைச் செய்கிறது. அதன்படி எளிதில் அதிகரிக்கக்கூடிய நிலைமையிலுள்ள வரிகள், சமஷ்டி

சர்க்காரிடமும், ஜனங்கள் அடிக்கடி வற்புறுத்திவரும் செல வினங்கள், (கல்வி, சுகாதாரம், கைத்தொழில் போன்றவை) மாகாண சர்க்கார்களிடமும் விடப்படுகின்றன. 'தேசத்துக் கும் ஜனங்களுக்கும் பிரயோஜனமான வழியில் எவ்வளவு பணஞ் செலவிடப்படுகிறது' என்னுங் கேள்விக்கு மாகாணங்கள்தான் பதிற் சொல்லவேண்டும். அதற்கு ஆதாரமா யிருப்பவை இரண்டு வரி விவர ஜாபிதாக்கள்.

I சமஷ்டி சர்க்கார் விதிக்கக்கூடிய வரிகள்.

II மாகாண சர்க்கார் விதிக்கக்கூடிய வரிகள்.

## I. சமஷ்டி வரி ஜாபிதா :

(1) சுங்கவரி-ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகள்.

(2) கலால்வரி-புகையிலை முதலிய உள்நாட்டுப் பொருள்கள் மீது போடும் வரிகள். (இதில் கள் சாராயம் முதலிய குடிவகை களும், கஞ்சா அபின் முதலிய போதை வஸ்துக்களும், மேலே சொல்லப்பட்ட சாமான்கள் கலந்த மருந்து 'டாய்லெட்' முதலிய பொருள்களும் சேரவில்லை.)

(3) கார்ப்பரேஷன் அல்லது முனிசிபல் வரி.

(4) உப்பு வரி.

(5) அரசாங்க அதிர்ஷ்டச் சீட்டுகள் (ஸ்டேட் லாட்டரிகள்)

(6) வருமான வரி-(விவசாய வருமானம் நீங்கலாக.)

(7) தனி மனிதர் அல்லது கம்பெனிகளிடம் உள்ள சொத் துக்களின் மூலதன மதிப்பு வரியும், கம்பெனிகள்மீது மூலதன வரி யும் (விவசாய நிலம் நீங்கலாக).

(8) வாரீஸ் வரி அல்லது மரணவரி (இதுவும் விவசாயச் சொத்து நீங்கலாக).

(9) நாணய மாற்று, உண்டியல், செக், புரோநோட், ஏற்று மதியில், இன்ஷூரன்ஸ் பாலிஸி முதலியவைமீது ஸ்டாம்பு வரி.

(10) ரயில் அல்லது விமானத்தின் மூலம் பிரயாணஞ் செய்யும் யாத்ரீகர்மீதும், சாமான்கள்மீதும், ரயில் கட்டணத்தின்மீதும் உபரி வரி

(11) இந்த ஜாபிதாவிற் சேர்க்கப்பட்டுள்ள இவைகளின்மீது வசூலிக்கப்படும் இதர கட்டணங்கள்.

## II. மாகாண வரி ஜாபிதா :

(1) நிலவரி

(2) கலால்வரி (கஞ்சா அபின், கள் சாராயம், மருந்து டாய்லெட் முதலிய உள்நாட்டுப் பொருள்கள்மீது)

(3) விவசாய வருமான வரி

(4) மனைநிலம், கட்டிடம், அடுப்பங்கரைப் புகைபோக்கி ஜன்னல் வரிகள்.

(5) விவசாய நிலத்தின்மீது வாரீஸ் அல்லது மரண வரி.

(6) சுரங்க உரிமை வரி. (சுரங்க அபிவிருத்திக்காக சமஷ்டி சட்டசபை செய்திருக்கும் வரையறையை யனுசரித்து)

(7) ஆள் வரி,

(8) உத்தியோக, வியாபார வரிகள்.

(9) மிருகங்கள், படகுகள்மீது வரி.

(10) விற்று முதல் வரி ; விளம்பர வரி.

(11) ஒரு ஊரின் எல்லைக்குள் விற்பனை அல்லது உபயோகத்துக்காகக் கொண்டுவரப்படும் பொருள்கள்மீது 'அங்காடி' வரி.

(12) ஆடம்பர வரி—நாடகம், சினிமா, பந்தயம், சூது முதலிய தமாஷாக்கள்மீது வரி.

(13) தஸ்தாவேஜிகள்மீது ஸ்டாம்பு வரி.

(14) உள்நாட்டு ஆற்றுப்போக்கு வரத்து யாத்ரீகர்கள்மீதும், சாமான்கள்மீதும் வரி.

(15) டோல்கேட் வரி.

(16) இந்த ஜாபிதாவிற் சேர்க்கப்பட்டுள்ள இனங்கள்மீது விதிக்கப்படும் இதர கட்டணங்கள்.

இவ் விரண்டு ஜாபிதாக்களும் இங்குத் தரப்படுவதற்கும் கவனிக்கப்படுவதற்கும் இரண்டு காரணங்களுண்டு :

(i) சமஷ்டி சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் தனித் தனியாய் எந்தெந்த இனங்களின்மீது வரி விதிக்கலாமென்பது.

(ii) இவ் விரண் டினங்களின்மீதுள்ள தாரதன்மைகள்.

## தார தன்மைகள் :

சமஷ்டி சர்க்கார் விதிக்கக்கூடிய வரிகளெல்லாம் இழுத்த இழுவைக்கு வரக்கூடியவைகள்—எவ்வளவு வேண்டுமானாலும் அதிகரிக்கலாம்—களஞ்சியத்திலிருந் தெடுப்பதுபோல் எவ்வளவு வேண்டுமானாலும் எடுக்கலாம். மாகாண வரிகள், வறுமையிலிருந்து எடுப்பதுபோல் கொஞ்சங் கொஞ்சமாய்த் தான் எடுக்க முடியும். அளவுண்டு; அதற்குமேல் வசூலிக்க நினைத்தாலும் ஆபத்து—குடுக்கைக்குள் ளிருந்து பஞ்சையெடுப்பதுபோல்.

மேலும் மாகாண வரிகள் முழுதும்,மாகாண சர்க்காரையே சார்ந்தவைகளல்ல. **4, 8, 14** இனங்கள் ஸ்தலஸ்தாபனங்களைச் சேர்ந்தவை.

**3, 5** இனங்கள் முற்றிலும் புது வரிகள்.

**6, 7, 9, 10, 11, 12, 14, 15, 16**—இவைகள் அதிக லாபமில்லாதவை. அவற்றிற் கிடைக்கும் வருமானத்திற் பெரும்பாகம், அவற்றை வசூலிப்பதிலேயே செலவழிந்து விடும்.

மிச்சமுள்ள 1, 2, 13 இனங்கள்தான் மாகாண சர்க்காருக்குக் கிடைக்கக்கூடிய முக்கியமான வரிகள். அதிலும் இரண்டாவது இனம், தேசத்திற் பல தீமைகளை யுண்டு பண்ணுவதா லேற்படுவது. காங்கிரஸ்போன்ற தேசிய லட்சியக் கட்சிகள், அத் தீமைகளை யொழிப்பதன்மூலம் கலால் வருமானமும் கவர்ன்மெண்டுக்கு இல்லாமற் போய்விடும். நிலவரி அதிகமென்கிற சப்தம் நீண்டகாலமாய் இந்தியாவில் நிலவி வருகிறது. நிலவரியைக் கூடுமானவரை குறைக்க வேண்டுமென்னும் எண்ணம், நடுமனப்பான்மையுடைய நல்லவர்கள் மனத்தில் இருந்துவருகிறது. தான்ய விலை தாராளமாய் ஏறி விற்றபோ தேற்பட்ட வரி, குறைந்து விற்கும் இக்காலத்திற்கு ஏற்ற தல்ல வென்பதைச் சர்க்காரும் மறுக்கவில்லை. பாக்கியுள்ள 13-வது இனத்திற்கும் பணக்காரர் ஆக்ஷேபனை யில்லாம லில்லை. ஆகையால் மாகாண வரிகள் முழுதும் எல்லாக் காலங்களிலும் எல்லாரிடத்திலும் இலகுவில் வசூலிக்கக் கூடியவைகளா யிரா-கல்லில் நாருரித்தது போல்—கசக்கிப் பிழிந்ததுபோல், நயத்தாலும் பயத்தாலும், ஹிதத்தாலும் ஹதத்தாலுந்தான் வசூலிக்கவேண்டும். இதற்குக் காரணம் தரித்திரத்திலிருந்து எடுக்கப்படுவதொன்று; மற்றொன்று, பொது ஜன க்ஷேமாபிவிருத்தித் துறைகளில் அதைச் செலவிட முடியாமை.

## பிடிகோப்பு :

இவ்வாறு மாகாண வருமானங்களெல்லாம் மஹா மோசமான நிலைமையிலிருந்தால் நிர்வாகந்தான் நடக்குமா பொது ஜனப் பிரயோஜன வேலையும் நடக்குமா? 138, 142-வது ஷரத்துகள்தானு-மில்லாவிட்டால், அரசாங்கம் நடத்துவதே மாகாணங்களுக்கு மகா அரிதாகிவிடும்.

[ஷரத். 138] சமஷ்டி சர்க்காரால் வசூலிக்கப்படும் வருமான வரியில் ஒரு பகுதி, மாகாணங்களுக்குப் பிரித்துக்கொடுக்கப்படும்.

இதுபற்றி ஸர் ஆட்டோ-நிமேயர் என்ற நிபுணர் செய்த சிபாரிஷ் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"வருமான வரியில் ஒரு பாதிதான் சமஷ்டிக்குச் சேர வேண்டும்; மறுபாதி மாகாணங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்பட வேண்டும்."* ஆனால் இந்தப்பங்கு இப்பொழுது முதலே ஈவுப்படி கொடுக்கப்படமாட்டாது. முதல் 5 வருஷத்தில் ரயில்வே வருமானமும், வருமான வரியில் சமஷ்டிப் பங்கும் சேர்ந்து 13 கோடி ரூபாயாவது கிடைத்தால்தான் மாகாணங்களுக்கு மொத்த வருமானவரியிற் பாதிப் பங்கு கிடைக்கும். இல்லையானால் ரயில்வே வருமானத்தையும், வருமானவரி வருமானத்தையும் ஒன்றாய்க் கொட்டி, 13 கோடி ரூபாயை யெடுத்துக்கொண்டு, மிச்சத்தைத்தான் சமஷ்டி சர்க்கார், மாகாண சர்க்காருக்குப் பிரித்துக் கொடுக்கும்.

இதுவொரு பிடிகொப்பாய் இருக்கிறது. ஆனால் இதுவுந் தருணத்துக் குதவுமென்று தோன்றவில்லை. ஏனெனில் இதுவரை ரயில்வேக்கள் லாபமென்று ஒன்றுங் கணக்குக் காண்பிக்கவில்லை; இனியும் ஒரு ஐந்து வருஷங்களுக்கிடை

---

* வருமான வரியில் மாகாணங்களுக்குக் கிடைக்கும் பங்கின் சதவிகிதம்:

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 15 | மத்திய மாகாணம் | 5 |
| பம்பாய் | 20 | அஸாம் | 2 |
| வங்காளம் | 20 | வ. மே. எல்லை மாகாணம் | 1 |
| ஐக்ய மாகாணம் | 15 | ஒரிஸா | 2 |
| பஞ்சாப் | 8 | சிந்து | 2 |
| பீஹார் | 10 | | |

யில் ரயில்வேக்களிலிருந்து குறிப்பிடத்தக்க லாபம் வருமென்று எதிர்பார்க்கவும் முடியாது. வருமான வரியும் பாதி பிரித்துக் கொடுக்கக்கூடிய அளவு, பத்து வருஷங்களுக்குள் வந்துவிடுமென்று நினைக்க முடியவில்லை. இப்பொழுது கிடைப்பதே 8 கோடி தான். ஆகையால் இந்நிலைமையில் மாகாணங்கள் இலவு காத்த கிளிபோல் இருக்கவேண்டியதைத் தவிர வேறு கதியில்லை. ஏனெனிற் 'கண்மாய் பெருகினாற் றானே புறகரை பிசியும்?'

140, 142-வது ஷரத்துகளின்படி, சில மாகாணங்களுக்கு இப்பொழுதிருந்தே சில சாதகங்கள் கிடைத்திருக்கின்றன. சணல் ஏற்றுமதித் தீர்வையின்மீது, சணல் பயிரிட்டு ஏற்றுமதி செய்யும் வங்காளம், பீஹார், ஒரிஸா, அஸாம் ஆகிய மாகாணங்களுக்கு அவற்றின் உற்பத்திக்கேற்றவாறு பங்கு நிர்ணயிக்கப்பட்டு 62½ சத விகிதங் கொடுக்கப்படும். ஆனால் இப்போதைய வருமானம் 3 கோடி தான்.

இன்னுஞ் சில மாகாணங்கள்* வருவாய்க் குறைவானவையென்று கருதப்பட்டு, ஆரம்பத்தில் அவைகளுக்குச் சமஷ்டி வருமானத்திலிருந்து பணவுதவி செய்யப்படும். [ஷரத். 142]. ஆனால் அவ்வுதவியைக்கொண்டு சாதாரண வரவு-செலவைச் சரிக்கட்டலாமே யொழியப் பொதுஜனப் பிரயோஜன வேலையொன்றுஞ் செய்ய முடியாது.

நீரில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒருவன் துரும்பையும் நம்புவதுபோல், 140-வது ஷரத்தை † நாமும் நம்பலாமாவென்று தோன்றுகிறது. நம்பலாம்; ஆனால் அதற்கு இரண்டு

* ஐக்கிய மாகாணம், சிந்து, ஒரிஸா, அஸாம்.

† 140-வது ஷரத்தின் கருத்து: சமஷ்டி சட்டசபை சட்டமியற்றினால் உப்புவரி, கலால் வருமானம், ஏற்றுமதித் தீர்வைகள் மாகாணங்களுக்கும் பகிர்ந்துகொடுக்கப்படும்.

இடையூறுகள் இருக்கின்றன. ஒன்று, இந்திய மத்திய அரசாங்கத்தில், இப்பொழுதிருக்கும் பண நெருக்கடியோடு, சமஷ்டிப் பிரதிஷ்டையா லேற்படும் இதர பாரங்களுஞ் சேர்ந்துவிட்டால், தன்னைத் தானே மூடிக்கொள்ள முடியாதிருக்கும் நிலைமையில் அது அடுத்தவர்களைக் கவனிக்காதென்பது. மற்றொன்று பொதுஜனப் பிரயோஜனப் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டசபை யேற்படுமாவென்பது.

ஆகையால், மேலே கூறியுள்ள நம்பிக்கையற்ற கொப்புகளைப் பிடித்து மாகாணங்கள் மேலேறலாமென்பது 'முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதை'த்தவிர வேறில்லை.

## மிதிகோப்பு :

பிடிகொப்புத்தான் கிட்டப்போனால் எட்டவோடுகிறது; மிதிகொப்பிலாவது கொஞ்ச நஞ்சம் நம்பிக்கை வைக்கலாமா என்று பார்க்கிறபோது 137-வது ஷரத்து, நானென்று வருகிறது—'வெறு வாய்க் கொரு வாய் அவலைப்போல்'. அதாவது, சமஷ்டி வரி விவர ஜாபிதாவிலுள்ள$ 8, 9, 10-வது இனங்களின்மீது வசூலிக்கப்படும் வரிகள் அவை சம்பந்தப்பட்ட மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களும் பகிர்ந்து கொடுக்கப்படும். இவ்வரி மூலங்கள் அதிகப்படியான வருமானந் தரக் கூடியவையென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் வரிவிதிக்கும் பொறுப்பும் விகிதாச்சாரமும், பகிர்ந்துகொடுக்கும் பொறுப்பும் விகிதாச்சாரமும் சமஷ்டி சர்க்காரிடம் விடப்பட்டிருக்கிறது. 'தனக்குமிஞ்சித்தானம்' என்று அது நினைத்துவிட்டால் அந்த மிதிகொப்பும் ஒடிந்து விடும். அப்புறம் பொதுஜனப் பிரயோஜன காரிய மென்பது, எப்பொழுதும் போல் ஏகாதிபத்தியத்தின் போஜன மேஜையின் அடியிற்

$ 256-ம் பக்கம்.

கிடந்து, அங்கிருந்து உதிரும் ரொட்டிக் கருக்குக்கும், ரொட்டித் துணுக்குக்கும் ஏமாந்திருக்க வேண்டியதுதான்.

## கடன் பொறுப்பு :

இந்தியாவின்மீது ஒரு பெருந்தொகை கடனாய்ச் சுமத்தப்பட்டிருக்கிறது. அக் கடனுக்கு நியாயமோ நாணயப் பொறுப்போ அஸ்திவாரமா யில்லை. பர்மா, ஆப்கானிஸ்தான், அரேபியா, ஆப்பிரிக்கா முதலிய தேசங்களோடு பிரிட்டன் போட்ட சண்டைகளிலேற்பட்ட செலவுகளெல்லாம், இந்தியாவின்மீது பற்றெழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு வருஷாவருஷம் வரிப்பணத்திலிருந்து வட்டி செலுத்தப்படுகிறது. இந்தக் கடனும், கடனுக்காக எடுத்துக் கொள்ளப்படுந் தொகையும் எவ்வளவு அநீதமான தென்பதை 1931-ல் ஏற்படுத்தப்பட்ட காங்கிரஸ் கடன் விசாரணைக் கமிட்டி, சரித்திர பூர்வமாகவும் சாக்ஷி பூர்வமாகவும் நிரூபித்திருக்கிறது. ஆனால் அரசாங்கம் அதை மறுக்கவில்லை. கடனைக் கழித்துக் காட்டவு மில்லை.

## தண்டச் செலவு :

இந்திய ரிடமிருந்து வசூலிக்கப்படும் வரிகள் எப்படியிருந்தாலும், அவற்றைச் செலவிடும் வழி, இந்தியாவின் செல்வாதார நிலைமைக்கு எவ்விதத்திலும் ஏற்றதாயில்லை. பொதுஜனப் பிரயோஜனத் துறைகளிற் செலவிடப்படுவது சொற்பமாகவும், தண்டத் துறைகளிற் செலவிடப்படுவது அதிகமாகவு மிருக்கிறது. சென்ற சில வருஷங்களில் சில முக்கியமான இனங்களின்மீது சர்க்கார் செய்த செலவைச் சராசரிப்படுத்திப் பார்த்தால், பின்வரும் விவரங்கிடைக்கிறது :—

| | |
|---|---|
| இராணுவம் | ரூ. 50 கோடி |
| சிவில் உத்தியோகஸ்தர் சம்பளம் | ரூ. 23 ,, |
| போலீஸ் | ரூ. 12 ,, |
| கல்வி | ரூ. 13 ,, |
| நீதி நிர்வாகம் | ரூ. 5½ ,, |
| பஞ்ச நிவாரணம் | ரூ. 41 லட்சம். |

மொத்த வருமானத்தில் ஒரு பெரும் பகுதியை இராணுவம் விழுங்குகிறது*. இவ்வளவு செலவு செய்து இவ்வளவு இராணுவம் இந்தியாவில் வைத்திருக்கவேண்டிய அவஸ்யமேயில்லை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக் குட்பட்ட கானடா ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில், மிகவுஞ் சொற்பத் தொகைதான் சைன்யத்துக்காகச் செலவிடப் படுகிறது. இந்தியாச் சைன்யம், இந்தியச் சிப்பாய்கள் அடங்கியதா யிருந்தால், இவ்வளவு செலவு செல்லாது. இந்தியச் சிப்பாய்க்குச் செல்லும் வருஷச்செலவு சுமார் 600 ரூபாய். ஆங்கிலச் சிப்பாய்க்குச் சுமார் 2,500 ரூபாய்.

## உத்தியோகச் செலவு :

சிவில் நிர்வாகத்துக்காகவும், உயர்தர உத்தியோகஸ்தர்களுக்காகவும் இந்தியாவின் வரியிலிருந்து வருஷா வருஷம் கொள்ளைப்பணங் கொடுக்கப்படுகிறது. கவர்னர்-ஜெனரலுக்கு மாதமொன்றுக்கு 20,000 ரூபாயும், கவர்னர்களுக்குத் தலா 10,000 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. பிரிட்டிஷ் முதல் மந்திரிக்கும், ஜப்பான் முதல் மந்திரிக்கும் முறையே 6,000-மும் 1,500-ந் தான் மாதச் சம்பளங்கள். மந்திரிகள் சம்பளங்கூட இந்த தேசத்தில் அதிகந்தான். காங்கிரஸ் மந்திரிகளைத் தவிர இதரகட்சி மந்திரிகள், இதுவரை 5,000

* 104-ம் பக்கம் பார்க்க.

ரூபாய் வாங்கி வந்தார்கள். அமெரிக்காவில் மந்திரி சம்பளம் 3,000-த்துக்குமேல் இல்லை.

சம்பள மிருக்கட்டும்; சம்பளம் ஜனங்களாற் (வரிப் பணத்திலிருந்து) கொடுக்கப்படுவது மிருக்கட்டும். உத்தி யோகஸ்தர்கள்—ஜனங்களின் ஊழியர்கள், அவர்கள் கொடுக் கும் பணத்தைக்கொண்டு பிழைப்பவர்களென்றுவது எண்ணு கிறார்களா? அந்த ஜனங்களை ஆளப் பிறந்தவர்களென்னும் அகம்பாவர்களாய்த் ‘தீட்டிய மரத்திற்றானே கூர்பார்ப்பது போலும்,’ ‘வரங்கொடுத்தவன் தலையிற்றானே கைவைப்பது போலும்.’ ஜனங்களை ஹிம்சிக்கிறார்கள். இந்த ஹிம்சைக்கும், விஸ்வாசமின்மைக்கும், சர்க்கார் வரவு-செலவுக்கும் சம்பந்த மில்லாவிட்டாலும், அவர்களுக்குக் கொடுக்கப்படுங் கொள் ளைச் சம்பளம், பொதுஜனப் பிரயோஜன காரியங்களை எவ்வளவு தூரம் தாக்குகிறது என்பது கவனிக்கத்தக்க காரியம்.

கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம் முதலிய ஆக்க வேலை களில் இந்த அரசாங்கம் இதுவரை பராமுகமாயிருந்து விட்டது. இத் துறைகளில் வெகு சொற்பப்பணந்தான் செல விடப்படுகிறது. நூற்றைம்பது வருஷ ஆங்கில ஆட்சிக்குப் பின், இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ஏழுபேர் கூட இல்லை. இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி முதலிய தேசங்களில் நூற்றுக்கு 75—80 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களா யிருக்கிறார்கள். இந்த வித்தியா சத்துக்குக் காரணம், இந்தியர் ஞான சூன்யர்களென்பதல்ல; சூட்சமக் கிராஹிக எல்லவென்பது மல்ல. அத்துறையில் அதிகப் பணம் அல்லது போதிய பணம் செலவிடப்பட வில்லை யென்பதுதான். கட்டாயக் கல்வி, கட்டாயம் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இதர செல

வினங்கள் எப்படியிருந்தாலும், இந்தச் செலவு மாத்திரம் அவசியமாகவும் அவசரமாகவும் செய்யப்படவேண்டும். ஜனங்கள், காசு கொடுத்துங் கண்ராவிகளா யிருக்கிறார்கள்; கல்வி வரிகொடுத்துங் கல்வி யிலிகளா யிருக்கிறார்கள்.

சுகாதாரத்துக்காகச் செலவிடப்படும் பணமோ இன்னுஞ் சொற்பம். தேசத்தின் சுகம், பிரிட்டிஷ் சர்க்காரின் தயவு தாட்சண்யத்தி லிருக்கிறது. இந்தியன் பிழைப்பதுஞ் சாவதும் அவர்கள் புண்ணியம். எமனைப்போல், இந்திய ஜீவாத்மாக்களை யின்னுங் கொஞ்சகாலத்துக்கு இவ்வுலகத்தில் விட்டுவைப்பதோ அழைத்துக் கொள்வதோ அவர் (கவர்னர்-ஜெனரல்) இஷ்டம். பிரிட்டனிற் செய்யப்படும் மருந்துகள் இந்தியாவில் விலையாவதற்கும், அந்த அளவுக்குந்தான் இந்திய சர்க்கார் இந்தியச் சுகாதாரத்துக்கு ஜவாப்தாரிகளா யிருக்கிறார்கள். ஆங்காங்கு ஆஸ்பத்திரிகள் அமைக்கப்பட்டிருப்பதற்கும் அதுதான் காரணம்.

விவசாய விஷயத்தில், இன்னும் ரொம்பக் குறைவாகவே செலவிடப்படுகிறது. இந்தியா விவசாய தேசம், விவசாயத்திலேதான் இந்தியர் வயிறுவளர்க்க வேண்டும் என்னும் விஷயங்களை இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டுவிட்டால், இந்த விஷயத்தில் இவ்வளவு அசட்டையாகவும் அஜாக்கிரதையாகவும் இருக்கக் காரணமோ நியாயமோ இல்லை. இதர நாடுகள், கைத்தொழிலிலும் வர்த்தகத்திலுமே சார்ந்திருந்தாலுங்கூட, விவசாயத்தையும் விருத்தி செய்கின்றன. இந்தியா முழுதும் விவசாய தேசமாயிருந்தும் விவசாயம் உற்சாகிக்கப்படவில்லை. சில புள்ளி விபரம் சொல்லுகிறேன். ஏக்கர்வாரியாய் இப் புள்ளி விபரம் சராசரிப்படுத்தப் பட்டிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| நெல் | ஜப்பான் | 2070 | ராத்தல் |
| | இந்தியா | 885 | ,, |
| கோதுமை | இங்கிலாந்து | 2000 | ,, |
| | இந்தியா | 690 | ,, |
| பருத்தி | ஜாவா | 350 | ,, |
| | இந்தியா | 75 | ,, |
| கரும்பு | ஜப்பான் | 40 | டன் |
| | இந்தியா | 11 | ,, |

**நாணய மாற்று :**

இது ஒரு மகாமோசமான கொள்ளையடிப்பு. நாணய மாற்றுக்கும் சர்க்கார் வரவு—செலவுக்கும் நேரடியான அல்லது முக்கியமான தொடர்பு இல்லாவிட்டாலும், 1893-லிருந்து 1937-ம் ஆண்டுவரை இந்திய அரசாங்கம் சுமார் 150 கோடி ரூபாய் வரை இந்நாணய மாற்றில் நஷ்டமடைந்திருக்கிறது. இந்திய ஜனங்கள் சுமார் 2,000 கோடிவரை கொட்டிக்கொடுத்திருக்கிறார்கள். இந்த அநியாயத்தைக் "கட்டுப்பாடான கொள்ளை" என்றும், "சட்ட பூர்வமான திருட்டு" என்றும் இதுவரை எவ்வளவோ சொல்லித் தீர்ந்துவிட்டது.

**கடன் வாங்கும் அதிகாரம் :**

சாதாரண ஜனங்களைப்போற சர்க்கார்களும் கடன் வாங்குவ துண்டு. இந்த நாட்டில் மட்டுமல்ல, எல்லா நாடுகளிலும் இதுதான் வழக்கம். ஆனால் எல்லா விஷயங்களிலுமல்ல; சில முக்கியமான காரியங்களில் மாத்திரந்தான் கடன் வாங்குவதுண்டு. அவற்றை யிரண்டு இனங்களில் அடக்கலாம்:

(1) யுத்தக் கடன் (2) உத்தாரணக் கடன்

**உத்தாரணக் கடன் :**

யுத்தக் கடன், ஏன் எப்பொழுது எதற்காக எப்படி வாங்கப்படுகிற தென்பது வேறு விஷயம்; இங்கு முக்கியமல்ல. ஆனால் உத்தாரணக் கடன் சர்க்கார் வரவு—செலவில்

அத்தியாவஸ்யம் கவனிக்கப்படவேண்டிய விஷயம். ஏனெனில் ஒரு தேசத்தின் கைத்தொழில், விவசாயம் முதலிய அபிவிர்த்திகளுக்காக நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகிய திட்டங்களும் அணைக்கட்டுகளும் அமைப்பதற்கு அதிகமான மூலதனம் அவஸ்யமா யிருக்கும். வரிப்பணத்தை முன்பணமாய் வசூலித்துச் செய்யமுடியாது. ஆகையால் கடன் வாங்கித்தானுகவேண்டும் ; கடன் வாங்குவதுதான் வழக்கம். இதைத் தான் உத்தாரணக் கடன் என்று அழைக்கிறேம்.

இந்தக் கடன், வரிப்பணத்தை யீடாய் வைத்துத்தான் வாங்கப்படுகிறது. இந்தியா விஷயத்தில் இந்தியப்புனருத்தாரணம் அதிகமாய்க் கவனிக்கப்படா விட்டாலும், வருமானத்தை யீடுவைத்துக் கடன் வாங்கியது குறை வில்லை. இது வரை இக் கடன்கள் இந்தியாவின் பேரால் இந்தியா மந்திரியால் வாங்கப்பட்டு வந்தது. 1935-ம் வருஷச் சட்டம் இதிலொரு மாறுதலை யுண்டுபண்ணி யிருக்கிறது. அதாவது, சமஷ்டி யேற்பட்டபின் கடன் வாங்கும் அதிகாரத்துக்கும், இந்தியா மந்திரிக்கும் சம்பந்தமே யிராது.

162-வது ஷரத்துப்படி கடன் வாங்குமதிகாரம் இந்தியா மந்திரியிடமிருந்து சமஷ்டிச் சர்க்காருக்கு மாற்றப்பட்டிருக்கிறது. சமஷ்டி சட்டசபை, தனக்குத் தானுகவே ஒரு சட்டத்தை யுண்டுபண்ணிக்கொண்டு, அதன் மூலம் கடனை நிர்ணயிக்கலாம், நிர்வகிக்கவுஞ் செய்யலாம் என்று அதே ஷரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனுல், 12-வது ஷரத் 1—(அ) பிரிவுப்படி இந்திய சர்க்கார் 'நாணய கௌரவத்தை' கவர்னர்-ஜெனரல் கையிலெடுத்துக் கொள்ளும்போது 162-வது ஷரத்தின் கெதி யாதாகுமென்று சொல்ல இப்பொழு தொன்றும் ஆதாரமில்லை. நியமனப் பத்திரத்தின் 10-வது பாராவிற் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்ஞைப்படியும் கவர்னர்-

ஜெனரல், உலக நாணயச் சந்தையில் இந்தியாவின் கௌரவம் குறைந்துவிடாமற் காக்கவேண்டியவரா யிருக்கிறார். ஆகையால் நிதி ஆலோசனைக் கர்த்தாவின் ஆலோசனைப்படிதான் அவர் நடப்பாரேயொழிய ஜனங்களின் ஜவாப்தாரித்துவ சபையான சட்டசபையின் பெரும்பான்மைத் தீர்மானப்படியும், சட்டசபைக்கு ஜவாப்தாரிகளான மந்திரிகளின் யோசனைப்படியும் நடப்பாரென்று நம்ப இடமில்லை. பொதுஜனப் பிரயோசனத்துக்காகப் பொழுதெல்லாம் உழைக்கும் சிலர், மந்திரிப் பொறுப்பேற்றுப் பொதுஜனப் பிரயோஜனமான ஒரு காரியத்தைச் செய்வதற்காகச் சட்டசபையில் தீர்மானம், பிரேரணை அல்லது மசோதா நிறைவேற்றினாலுங்கூட, மேலே கூறியுள்ள ஷரத்தின்படியும் பாராவின்படியும் கவர்னர்-ஜெனரல், மந்திரிகளின் ஆசையை அப்படியே விழுங்கி விடலாம்.

தேசோத்காரமான காரியங்கள் எல்லாம் எப்பொழுதும் மேலே மத்திய சர்க்காரிலிருந்து வருவனவல்ல. மாகாண சர்க்கார்தான், மாகாண வருவாயை அனுசரித்தும் கடன் வாங்கியும் செய்ய வேண்டும். கடன் வாங்குவதற்கும் மாகாண சர்க்காருக்கு அதிகாரமுண்டு. சட்டசபைகள் சட்டமியற்றலாம். மந்திரிகள் சட்டசபைக் குட்பட்டுத்தான் கடன் வாங்கலாம். அதுவுங் கவர்னர்-ஜெனரல் கருணை வைத்தால் தான்.

சமஷ்டி சர்க்காரும், மாகாண சர்க்கார்களும் தனித் தனியே கடன் வாங்கலாமென்று 162, 163-வது ஷரத்துகளிற் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், மாகாண சர்க்கார்கள், மத்திய சர்க்காரின் அனுமதியில்லாமற் கடன் வாங்கமுடியாது. அதாவது மத்திய சர்க்காரிடம், ஏதாவதொரு மாகாண சர்க்கார் கடன்பட்டிருந்தால், அக் கடன் முழுதும் அடைபடாதவரை, அதன் சம்மதமின்றி வேறெங்கும் கடன்வாங்க முடியாது. அல்லது மத்திய சர்க்காரிடமே மறுபடியுங் கடன்

கேட்டால் அது மறுக்கலாம். இதர இடங்களில் அது கடன் வாங்கக் கருதும்போது, போதிய காரணமின்றி, இந்திய அரசாங்கம் தடுக்கக்கூடாது.

இந்த விதி, சமஸ்தான விஷயங்களில் எவ்வளவு தூரம் எப்படி நிறைவேற்றப்படுமென்பது தெரியவில்லை. ஏற்கெனவே சமஸ்தானங்கள் இந்திய சர்க்காருக்கு ஏராளமாய்—50-கோடிக்குமேல் கடன் கொடுக்கவேண்டியதிருக்கிறது. இதுவரை அதை வசூலிக்க அரசாங்கம் அநேக முயற்சிகள் எடுத்துக்கொண்டிருந்தாலும், அவைகள் பிறரிடங் கடன் வாங்குவதைத் தடுக்கவில்லை. இனியும் அப்படியேயிருக்குமா? இயல்பிலேயே இந்தியச் சமஸ்தானுதிபதிகள், எந்த உலகத்திலுமில்லாத ஊதாரிகளா யிருக்கிறார்கள். இனியும் அவர்களை அப்படியே விட்டுவிட்டால் சமஸ்தானப் பிரஜைகளின் கெதி யாதாகுமென்பதற்கு உத்தரவாதமே யில்லாமற் போய்விடும். ஆகையால் மாகாணங்கள்மீது நிர்வகிக்கப்படும் அதே அதிகாரமும் கண்காணிப்பும், சமஸ்தானங்கள்மீதும் சுமத்தப்படவேண்டும். வேறு எந்த விஷயத்திற் பட்சபாதமிருந்தாலும் பண விஷயத்தில்—என் நண்பரைப்போல்-கண்டிப்பாயிருக்கவேண்டும். வைதீகமான அல்லது வைராக்கியமான பட்சபாதியா யிருக்கக்கூடாது.

பொதுஜனப் பிரயோஜன காரியங்களில் மாகாணங்களுக்குக் கடன் வாங்கும் அதிகாரம் அவசியமிருக்கவேண்டும்—தங்குதடையில்லாமல். வரி விதிக்கும் விஷயத்திலும், சிக்கனமாய்ச் சர்க்காரை நடத்துவதிலும், புதுப் புதுத் துறைகளிற் சர்க்காருக்கு இலாபத்தைக் கொண்டுவரும் விஷயத்திலும், மத்திய சர்க்காரின் கண்காணிப்பும் தடையுமிருக்கக் கூடாது.

# 11. தொட்டகுறை விட்டகுறை

இந்தியாச் சட்டத்தைப்பற்றிய இவ் வாராய்ச்சியில், தொட்டதும் விட்டதுமாய்ச் சில அல்லது பல குறைக ளிருக்கலாம். அவைகளுக்கு நானே முழுதும் ஜவாப்தாரி யல்ல. எழுதுவதில் என்னிடம் எப்பொழுதுந் தரித்திர புத்தி யில்லை யென்பதை நான் தைர்யமாய்ச் சொல்லுவேன். பதிப்பாசிரியர்கள், எச்சிலைத் தொட்டுக்கொண்டு பக்கங்களை எண்ணிப்பார்த்தால் நான் என்ன செய்வேன்?

இந்த அத்தியாயத்தில் வருகிற விஷயங்கள், தனித் தனியாய்த் தனித்தனி அத்யாயங்களில் எழுதப்பட வேண்டியவைகள். விரிவு அஞ்சி வெகு சுருக்கமாய், தென் னிந்திய ரயில்வண்டிகளிற் பிரயாணிகள் அடைக்கப்படுவது போல் தொகுக்கப்படுகின்றன.

## நீதி பரிபாலனம்:

எந்த நாட்டின் அரசியல் நிர்வாகத்தின் நன்மை தீமை களுக்கும் பிரத்யட்ச ருஜூவாயிருப்பது நீதிபரிபாலனந்தான். எங்கு அராஜகம் அமல் செலுத்துகிறதோ அங்கு, நீதி நன்கு நிர்வகிக்கப்படவில்லை யென்றுதான் அர்த்தம். எங்கு ராஜகம் நிமிர்ந்து நிற்கிறதோ அங்குப் பிரஜாவுரிமை போற்றப் படுகிறதென்றும், பிரஜைகள், ராஜ விஸ்வாசிகளா யிருக்கிறார்க ளென்றுங் கூறலாம். ஆகையால் ராஜக அராஜகங்களை நிர்ணயிப்பதாகவும், ஜன சம்மதம் அசம்மதத்தைச் சந்தேக மறக் காட்டுவதாகவும் இருப்பது நீதிபரிபாலனம். எங்கு நீதி நன்கு பரிபாலிக்கப்படவில்லையோ, எங்கு நியாயம் அநி யாயம் நன்கு நிறைபோடப்பட வில்லையோ அங்கு, ராஜ்ய

பரிபாலனம் நன்கு நடத்தப்படவில்லை யென்று கூசாமற் கூறலாம்.

சமஷ்டி சர்க்காரில் ஒரு நீதிபரிபாலன சபை யிருக்கும். அதிற் பிரதம நீதிபதியும், மற்றும் ஆறு நீதிபதிகளும் இருப்பார்கள். இவர்களெல்லாம் மன்னரால், அவரது சொந்தக் கையொப்ப (ராயல் சைன் மானுவல்)த்துடனும் சொந்த முத்திரையுடனும் நியமிக்கப்படுவார்கள். இன்னும் நீதிபதிகள் தேவையா யிருந்தால், சமஷ்டிச் சட்டசபை, கவர்னர்-ஜெனரல் மூலமாய் மன்னருக்கு விண்ணப்பஞ் செய்து பெற்றுக்கொள்ளலாம். [ஷரத் 200]*

சமஷ்டி நியாயசபை (பெடரல் கோர்ட்) சம்பந்தமான விஷயங்களெல்லாம், 1935-ம் வருஷச் சட்டத்தின் 9-வது பாகத்தில் 200 முதல் 231-வது வரை (இரண்டுஞ் சேர்ந்து) யுள்ள ஷரத்துகளில் அடங்கியிருக்கின்றன.

சமஷ்டி நீதிபதிகள் 65 வயதுவரை உத்யோகம் வகிக்கலாமென்றும், அதற்குப் பின்னும் பென்ஷன் வழங்கப் படுமென்றும், அவர்களின் சம்பள படித்தரங்கள், கவுன்ஸிலோடுகூடிய மன்னரால் நிர்ணயிக்கப்படுமென்றும், 200-வது ஷரத்து 2-வது பிரிவிலும், 201-வது ஷரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அருகதையும் அலுவல்களும் அந்த ஷரத்துகளில் அநேகமாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சமஷ்டி அரசியல் சம்பந்தமான தகராறுகளைத் தீர்த்து வைப்பதும், பொதுக் காரியங்களில் சட்டப் பிரச்னைகள் ஏற்பட்டுச் சமஷ்டி நீதிபதிகளின் உதவியை கவர்னர்-ஜெனரல் தேடினால், அப்போது அவருக்கு உதவுவதும், சில சிவில்

* இந்த ஷரத்துப்படி சமஷ்டிக் கோர்ட்டுப் பிரதம நீதிபதியும், இரண்டு உதவி நீதிபதிகளும் 1935-ஆம் ஆண்டிலேயே நியமிக்கப்பட்டு விட்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

வியாஜ்யங்களின் அப்பீல்களை விசாரிப்பதும் அவர்களுடைய முக்கியமான வேலைகள். இந்த வியாஜ்யங்கள் ஆரம்ப வியாஜ்யங்களாகவும் மேல் விசாரணைகளாகவும்—அதாவது 'ஒரிஜனல்' 'அப்பாலெட்' என்று சொல்லப்படும் இருதரப்புகளைச் சேர்ந்தவைகளாகவும் இருக்கலாம். ஒரிஜனல் வியாஜ்யங்கள், சமஷ்டிப்பட்ட சமஸ்தானங்கள், மாகாணங்கள் சம்பந்தப்பட்டவைகளா யிருக்கும். அதாவது, இச் சட்டம் அல்லது இதன் அனுஷ்டான சம்பந்தமாய் ஒரு மாகாணத்துக்குஞ் சமஸ்தானத்துக்கும் ஏற்படக்கூடிய தகராறுகள். அப்பீல் தரப்பில் சமஷ்டிக் கோர்ட்டுக்கு ஹைகோர்ட்டுகள் மீது ஆதிக்கமுண்டு. அதாவது பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கிற எந்த ஹைகோர்ட்டின் ஜட்ஜ்மெண்டின்மீதும், டிக்கிரியின்மீதும் மேல்விசாரணை செய்வது.

அப்பீல் தரப்பில் சமஷ்டிக் கோர்ட்டுக்குள்ள அதிகார வரம்பு, சமஷ்டிச் சட்டசபைச் சட்டத்தின்மூலம் இன்னும் விஸ்தரிக்கப்படலாம். டிக்கிரியாயிருந்தால் 50,000 ரூபாய்க்கு மேற்படாமலும் இதர தொகையாயிருந்தால் 15,000 ரூபாய்க்கு மேற்படாமலும் உள்ள ஸிவில் வியர்ஜ்யங்களை சமஷ்டி நியாயசபை விசாரணைக் கெடுத்துக் கொள்ளலாம். இதர ஸிவில் அப்பீல்கள், சமஷ்டிக் கோர்ட்டு இஷ்டப்பட்டால் பிரத்தியேக அனுமதியின்மீது விசாரிக்கலாம்.

சமஷ்டிப்பட்ட சமஸ்தானங்களில் உள்ள ஹைகோர்ட்டுகளிலிருந்துவரும் வியாஜ்யங்களையும் சமஷ்டிக் கோர்ட்டு விசாரிக்கலாம். ஆனால் அந்த வியாஜ்யங்கள் அரசியல் சட்ட சம்பந்தமானதாகவோ, கவுன்ஸில் உத்தரவு சம்பந்தமானதாகவோ, பிரவேசபத்திர சம்பந்தமானதாகவோதா னிருக்க வேண்டும்.

சமஷ்டிக் கோர்ட்டுத் தீர்ப்புக்கு, பிரிவி கவுன்ஸில் அப்பீலுண்டு. சமஷ்டிக் கோர்ட்டு நடைமுறை விதிகள்,

சமஷ்டி நீதிபதிகளாலேயே வகுக்கப்பட்டு, கவர்னர்-ஜெனரலின் அங்கீகாரம் பெற்று அமலிலிருக்கும். எந்த நபரையுங் கோர்ட்டில் ஆஜராகும்படியோ அல்லது எந்த தஸ்தாவேஜியையுங் கோர்ட்டில் தாக்கல் செய்யும்படியோ உத்தரவிட சமஷ்டிக் கோர்ட்டுக் கதிகாரமுண்டு. எந்த நபரும் சமஷ்டிக் கோர்ட்டை அவமதித்தால், அவர்களைத் தண்டிக்கவும் அதற் கதிகாரமுண்டு. சமஷ்டிக்குட்பட்ட எல்லா ஸிவில் உத்யோகஸ்தர்களும், நீதிபரிபாலன நிர்வாகஸ்தர்களும் சமஷ்டிக் கோர்ட்டுக்கு உதவி செய்யவும், அதன் உத்தரவுப்படி நடக்கவுங் கட்டுப்பட்டவர்களா யிருப்பார்கள்.

இவையெல்லாவற்றையும்விட இன்னும் இரண்டு முக்கிய விஷயங்கள் இங்குக் கவனிக்கப்படவேண்டும்.

(1) இந்தியாவிலிருக்கிற எந்த சமஷ்டி நிர்வாகியின், நேரடியான அல்லது மறைமுகமான அதிகாரத்துக்குங் கண்காணிப்புக்கும் சமஷ்டிக் கோர்ட்டு உட்படாம லிருப்பது—இந்தியா மந்திரியின் அதிகாரத்துக்கு அது உட்பட் டிருப்பது.

(2) முடிவான நீதிபரிபாலன நிலையமாயில்லாதிருப்பது—பிரிவி கவுன்ஸில் அப்பீலுக்கு உட்பட்டிருப்பது.

இவ் விரண்டு காரியங்களாலும் இந்திய நீதிபரிபாலனத்தின் இறுதியதிகாரம் இந்தியாவில் நிர்வகிக்கப்படவில்லையென்றும், இங்கிலாந்தில் நிர்வகிக்கப்படுகிறதென்றும் புலனாகிறது.

பொதுவாய் நீதியானது, எத்தகைய கட்டுக்காவலுக்கும் எந்த அதிகாரத்துக்கும் அடங்கியதாய் இருக்கக்கூடாதென்பது வாஸ்தவம். அரசியலின் புனிதமான கோயிலாய் நீதிஸ்தலம் இருக்கிறதென்பதையும் நான் மறுக்கவில்லை. என்றாலும், பொதுஜன சம்மதத்துக் கோரளவாவது உட்பட்டதா யிருக்கவேண்டுமென்பதை யெல்லாரும் ஒப்புக்கொண்டுதானாகவேண்டும். இங்கிலாந்திலும், இதர குடியேற்ற நாடுகளிலும் குடியரசு நாடுகளிலும் இவ் வழக்கந்தான் இப்பொழு

தும் எப்பொழுது மிருந்து வருகிறது. பிரிட்டிஷ் கோர்ட்டு களின் நீதிபதிகளைச் சட்டப்படி பிரிட்டிஷ் மன்னரே நியமித் தாலும் நீக்கினாலும், ஐதீகப்படி, பிரிட்டிஷ் மந்திரிசபைதான் அவர்களை நியமிக்கவும் நீக்கவுஞ் செய்கிறது. அதனால் அவர் கள் ஒரு விதத்திற் பார்க்கப்போனால் பொதுஜனங்களால் நியமிக்கப்பட்டவர்களாகவும் நீக்கப்பட்டவர்களாகவும் ஆகி றார்கள். ஆனால் இந்தியாவுக்குள் திணிக்கப்படும் இச் சமஷ் டியில், இதர விஷயங்களைப்போலவே, நீதிபரிபாலனமும் பொதுஜன ஜவாப்தாரித்துவத்திலிருந்து அறவே புறக்கணிக் கப்பட் டிருக்கிறது.

பிரிவி கவுன்ஸிலின் முடிவான தீர்ப்பு*க்குச், சமஷ்டிக் கோர்ட்டின் அதிகாரம் விடப்பட்டிருப்பதானது, ஏகாதிபத்தி யத்தின் தீர்ப்புக்கு ஜனாதிபத்தியமே கைகட்டி நிற்கும்படி செய்வதுபோ லிருக்கிறது. இது நகம் முதற் சிகைவரை விஸ் வரூபத்தோடு, ஏகாதிபத்தியம் இந்தியா முழுதிலும் இரும் பாட்சி செய்வதையும் உணர்த்துகிறது. இந்தியாவின் முடி வான அதிகாரி இங்கிலாந்தி லிருக்கிறார்; அவர்தான், "யார் வாய் திறந்தால் எந்த நாயுங் குலைக்காது" என்று முன்னே சொன்னோமோ அவர் தான்—அந்த இந்தியா மந்திரி.

## இந்தியா மந்திரி :

இந்தியா தேசத்தையும், இந்தியர்களின் உயிரையும் உடைமையையுங் காத்து, உத்தரவாதஞ் செய்யும் தர்ம கர்த்தாவைப்போல் இந்தியா மந்திரி யிருக்கிறார். இந்தியாவி லிதுவரை பிரிட்டிஷ் ஆட்சி யில்லாதிருந்தால், இதற் குள்ளாக எங்கோ போய்விடுமென்றும், இருந்த இடம் புல் முளைத்துப் போயிருக்குமென்றும் பிரிட்டிஷ் புண்ணியாத்

* அயர்லாந்திற் பிரிவி கவுன்ஸில் அப்பீல், ரத்துச் செய்யப்பட்டு விட்டதென்பது இங்குக் கவனிக்கத்தக்கது.

மாக்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறோம். இவைக ளெல்லாவற்றிற்கும் பிரதிபிம்பமாய்ப்-பிரத்யட்ச சொரூப மாய் இருப்பவர் இந்தியா மந்திரி. அவருடைய அதி காரத்துக்கு வரம்பேயில்லை. அதிகாரத்தின் ஆழ நீளத்துக்கும் அளவே கிடையாது. இந்திய சர்க்காரின் சர்வாதிகாரியான கவர்னர்-ஜெனரல், சொல்லப்போனால் இந்தியா மந்திரியின் கட்டளைகளை நிறைவேற்றும் வேலைக்காரரா யிருக்கிறாரே தவிர, யதாபூர்வமான அதிகாரியாயில்லை. இதற்குமுன் இந்தியாவுக்கு வெளியிலிருக்கும் இன்னொருவரிடம், இந்தியா சம்பந்தமான முடிவான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்த தற்கு என்னென்ன காரணங்க ளிருந்தாலும், அல்லது அது நியாயமென்பதற்கு என்னென்ன ஹேதுகரங்க ளிருந்தி ருந்தாலும், மாகாணங்களிற் சுயாட்சியும், மத்திய சர்க்காரிற் பொறுப்பாட்சியும் வழங்கப்பட்டபின், இந்தியா மந்திரி யென்னும் பேரோடு இங்கிலாந்தி லொருவ ரிருப்பதற்கும், அதிகாரஞ் செலுத்துவதற்கும் அஸ்திவாரமேயில்லை. வெஸ்ட் மினிஸ்டர் அறிக்கை*க்குப்பின், பிரிட்டிஷ் குடியேற்ற நாடு கள் அநேகம், மன்னர் சம்பந்தத்தைக்கூட அரசியலிலிருந்து அறவே வெட்டிக்கொண்டு விட்டிருக்கின்றன. இதர சம்பந்தங்களுங்கூட வெட்டுண்டு விட்டன.

## ஆலோசனை சபை :

இந்தியாவை, இங்கிலாந்தி லிருந்துகொண்டு அரசாளும் இந்தியா மந்திரிக்கு ஆலோசனை சொல்வதற்கு ஒரு சபை யிருக்கும். அதில் மூன்று பேர்களுக்குக் குறையாமலும், ஆறு பேர்களுக்கு மேற்படாமலும் அங்கத்தினர்க ளிருப்பார் கள். அவர்கள், இந்தியா மந்திரி விரும்பும்போ தெல்லாம்

* பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்குப் பூரணமான பொறுப்பாட்சி, இந்த அறிக்கையின் மூலமாகத்தான் வழங்கப்பட்டது.

இந்தியா சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் ஆலோசனை கூறு வார்கள். [ஷரத் 278] ஆனால் எல்லா விஷயங்களிலும் அவர்கள் யோசனையைக் கேட்டுத்தான் இந்தியா மந்திரி நடக்கவேண்டுமென்று கட்டுப்பாடு ஒன்றுமில்லை. கவர்னர்-ஜெனரலுக்கு யோசனை சொல்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள மந்திரிகளுக்கும், கவர்னர்-ஜெனரலுக்கும், எவ்வளவு சம்பந்த முண்டோ அவ்வளவு சம்பந்தந்தான் இந்தியா மந்திரிக்கும், அவர் கவுன்ஸிலர்களுக்கும் இருக்கும். அப்படியானால் அவ்வளவு பணச்செலவில்* அவர்கள் ஏன் நியமிக்கப்பட வேண்டும்?

இவர்களல்லாமல், இங்கிலாந்தில், இந்தியா சம்பந்தமான காரியங்களைக் கவனிப்பதற்காக ஹை கமிஷனர் என்று இன்னொருவரு மிருப்பார். இவர்கள் எல்லாருடைய சம்பள படித்தரங்களெல்லாஞ் சேர்ந்து, வருஷத்தில் 40¾ லட்சங்களாகின்றன. இதை இந்திய சமஷ்டி சர்க்கார், இங்கிலாந்திலிருக்கும் பிரிட்டிஷ் கஜானாவுக்கு வருஷாவருஷம் அனுப்பிக் கொண்டிருக்கும்.

## அதிகாரங்கள் :

இந்தியா மந்திரிக்குள்ள அதிகாரங்களை 8 இனங்களாய்ப் பிரிக்கலாம் :

1. (அ) இந்திய அரசாங்க மேற்பார்வை.

(ஆ) கவர்னர்-ஜெனரலையும், கவர்னர்-ஜெனரல் மூலமாய்க் கவர்னர்களையுங் கண்காணித்தல்.

2. சில உத்தியோகங்களைப் பாதுகாத்தல்.

3. கவுன்ஸில் உத்தரவுகளையும், கவுன்ஸிலோடுகூடிய மன்னர் உத்தரவுகளையும் ஜாரிசெய்தல்.

* கவுன்ஸிலர் ஒவ்வொருவருக்கும் 20,250 ரூபாய் வருஷச் சம்பளம் வழங்கப்படுகிறது.

4. சமஷ்டி சர்க்கார் நிர்வாக விதிகளுக் குட்படாத இந்தியச் சமஸ்தானங்கள் சம்பந்தமாய் மன்னருக்குள்ள அதிகாரங்களை நிர்வகித்தல்.

5. (அ) சமஷ்டி அல்லது மாகாண சர்க்கார்களுக்காக பிரிட்டனில் கடன் வாங்குவது.

(ஆ) இந்திய சர்க்கார் சார்பில், பிரிட்டனின், சில பென்ஷன்கள் வட்டிகள் சாதராச்செய்வது.

6. கண்ட்ராக்ட்டுகளும் உடன்படிக்கைகளுஞ் செய்வது.

7. வரவு-செலவு கணக்கைப் பரிசோதிப்பது (ஆடிட்டர்-ஜெனரல் காரியாலயத்தைக் கண்காணிப்பது.)

8. அவசர அதிகாரங்கள்: நீர்ப்பாசன சம்பந்தமாய் மாகாணங்களுக்குள் தகராறு ஏற்பட்டால் தீர்த்துவைப்பதும்; வர்த்தக ஒப்பந்தங்கள் செய்வதும்.

மேலே கூறியுள்ள அதிகாரங்களோடு, ஏற்கெனவே இந் நூலிற் கூறப்பட்டுள்ள சில அதிகாரங்கள் மோதுவதாய்த் தோன்றலாம். கவர்னர்-ஜெனரலின் விசேஷப் பொறுப்பு, ஏதேச்சாதிகாரம், சொந்தத் தீர்ப்பு முதலியவைகள் பொய் யென்றும், அதேமாதிரி கவர்னர்களின் அதிகாரங்களும் அபத்தமென்றும் புலப்படலாம். வாஸ்தவத்தில் அவற்றை நிர்வகிப்பவர்கள், கவர்னர்-ஜெனரலும் கவர்னர்களுமே யானு லும், அவர்களுக்கெல்லாம் மேஸ்திரியா யிருப்பவர் இந்தியா மந்திரி. ஆகையால் இந்தியா மந்திரியின் அதிகாரங்களைத் தான் கவர்னர்-ஜெனரலும் கவர்னர்களும் நிறைவேற்றுகிருர் களென்று அர்த்தஞ் செய்துகொள்ளவேண்டும்.

இந் நூலில் வருகிற மன்னர் சம்பந்தமுழுவதும், மன்னரால் நிர்வகிக்கப் படுவனவல்ல. பிரிட்டிஷ் அரசியல் அனுஷ்டானப்படி, மன்னர் பேரால் இந்தியா மந்திரியே தம் சொந்தப் பொறுப்பிலும் சொந்தத் தீர்ப்பிலும் அவைக ளனைத்தையும் நிர்வகிப்பார்.

# 12. திருகாணி

1935-ம் வருஷத்து இந்தியாச் சட்டப்படி பிரிட்டனால்தயாரிக்கப்பட்டுள்ள இந்திய சமஷ்டியைப்பற்றி இதுவரை கூறினோம். இவ்வளவில் இந்நூல்—இதைப் படிக்கும் ஒவ்வொருவர் எண்ணத்திலும்—ஏதேனுமொரு அபிப்பிராயத்தை உண்டுபண்ணித்தானிருக்கவேண்டும். உத்தேசிக்கப்பட்டுள்ள சமஷ்டி, இந்தியாவுக்கு உபயோகப்படுமா அல்லது உபயோகப்படாதா என்று நாம் நிச்சயமாய் ஒரு முடிவுக்கு வாராமலிருக்க முடியாது. ஜனசம்மத மென்னும் சட்டத்தை வைத்துக்கொண்டு சட்ட முழுதையுஞ் சர்ச்சை செய்ததில், நமது தீர்ப்பு எவ்விதத்திலும் புதிய அரசியலுக்குச் சாதகமாயிருக்கவில்லை. சர்வஜனப் பிரதிநிதித்துவ சபையான காங்கிரஸின் தீர்மானமும் அதற்குப் பாதகமாகவே யிருக்கிறது. ஆனால் இந்தச் சமஷ்டியை வேண்டாமென்று சொல்லும் நாம், எந்தச் சமஷ்டியையும் வேண்டாமென்று சொல்லவில்லை. இந்தியாவுக்கு அவஸ்யமாகவும் அவசரமாகவும் ஒரு சமஷ்டி தேவையாயிருக்கிறது. அந்தச் சமஷ்டி இந்தச் சமஷ்டியின்மீது வளராது; அந்தச் சமஷ்டியின் கிட்டக்கூட இந்தச் சமஷ்டி நிற்காது-நிற்க லாயக்குள்ளதாகவு மிராது.

இந்தியா, இந்தியாவுக்காக ஏற்படுத்திக்கொள்ளுஞ் சமஷ்டியைத்தான் நான் இங்குக் குறிப்பிடுகிறேன். அது முழுதும் சுதேசியா யிருக்கும்; விதேசியா யிராது; ஆனால் விஸ்வபிரேமையுள்ளதாயிருக்கும். விஸ்வபிரமாண்டத்தை விஸ்வசிக்கக் கூடியதாகவும், மனித சமுதாய முழுமையையும் சகோதர பாவத்தோடு சிநேகிக்கக் கூடியதாகவும், சர்வலோகத்தையுஞ் சம்ரக்ஷிக்கக் கூடியதாகவும், அசாதாரணமான அஹிம்ஸா பரமோ தர்மத்தையும் அதனா லுண்டாகும் அமைதியையும் சாந்தியையும் அகிலத்துக் குதவக்கூடியதாகவும் இருக்கும்.

நாம் தயாரிக்குஞ் சமஷ்டி, பிரிட்டனுற் சிருஷ்டிக்கப் பட்ட சமஷ்டியைப்போற் சுயநலமும் சொந்த நோக்கமும் உடையதா யிராது. அல்லது இந்தியாவுக்காக மாத்திரம் ஏற் படுத்தப்படுவதாகவும், இந்தியாவின் ஹேதுவுக்கும் இனி மைக்குமட்டு மேற்றதாகவும் இராது. அகில உலகத்தையுஞ் சுரண்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட அமெரிக்கச் சமஷ்டியைப் போல், இந்தியச் சமஷ்டி எந்த நாட்டையும் ஹிம்சிப்ப தாகவோ, கொள்ளையடிப்பதாகவோ இருக்காது.

ஆனல் 'இந்தியா இந்தியர்க்கே' என்று இந்தியா இதுவரை இரைந்து வந்தது. இந்த இரைச்சல் சுயராஜ்யம் அடையும்வரை ஓயாது. என்ருலும், இதனுட் பொதிந்திருக் கும் தேச பக்திக்கு நாங்கள் எல்லை ஏற்படுத்திக் கொண் டிருக்கவில்லை. இந்தியாவுக்கு சுயராஜ்யங் கொண்டுவர வேண்டுமென்று இறக்கை கட்டிக்கொண்டு பறக்கும் நாங்கள், சுயராஜ்யம் அடைந்த பிறகு உலக முழுதிலும் பறந்துபோய் எங்கள் அஹிம்ஸா தர்மத்தை உபதேசஞ் செய்ய வேண்டு மென்று எண்ணுகிருேம். இந்தியா எந்த நாட்டையும் ஆள வேண்டுமென்று ஆசைப்படவில்லை. ஆனல் அதன் தர்மம் அகில உலகத்தையும் ஆளவேண்டு மென்று ஆசைப்படுகிருேம்.

குறுகலான தேச பக்தியை நாங்கள் கொண்டிருக்க வில்லை. அது இதுவரை உலகத்தில் என்னென்ன அக்கிர மங்கள் செய்திருக்கிற தென்றும், செய்துகொண் டிருக்கின்ற தென்றும் எங்களுக்குத் தெரியும். ஒரு நாட்டின் மீது இன்னொரு நாட்டைப் படையெடுக்கச் செய்ததும், ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் அடிமைப்படுத்தச் செய்த தும் அதுதான் என்பதையும் நாங்கள் அறிவோம். உல கத்து நாடுகள் ஒவ்வொன்றும் தன்னைத் தானே தனியரசு செய்து கொண்டாலும், அந்தத் தனியரசுக ளெல்லாஞ்

சேர்ந்து, ஒரு பிரிக்கமுடியாத உலக சமஷ்டியை உண்டாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை, எங்களைப்போல் எவருந் திண்ணமாகவுந் திட்டமாகவும் உணரவில்லை. ஆகையால் நாங்கள் சிருஷ்டிக்குஞ் சமஷ்டி, உலக சமஷ்டிக்கு அடிகோலும் அஸ்திவாரமா யிருக்கப்போகிற தென்பதை எல்லாருக்கும் எடுத்துக் காட்டுகிறோம். எங்கள் சமஷ்டியில் எங்கள் விடுதலையும் விமோசனமு மாத்திரமிருக்கவில்லை. விஸ்வ விடுதலையும், விஸ்வ விமோசனமும் இதில் விரவியிருக்கிறது.

இந் நம்பிக்கையையும், இவ் வுத்தரவாதத்தையும் எண்ணத்தில் வைத்துக்கொண்டு, விஸ்வ பிரேம பூர்வமான திருஷ்டியோடு இப் புதிய அரசியலைப் பார்க்கிறபோது, இந்திய விடுதலைக்கே இதில் இடமில்லை யென்றும், இந்தியாவின் அடிமைக் கயிற்றை இன்னும் பலமாய் இது இறுக்கிக் கட்டுகிறதென்றுந் தோன்றுகிறது. அதைத் துண்டு துண்டா யறுத்தெறிய வேண்டும்; புதிய அரசியலைத் தூள் தூளாய்த் தகர்த்தெறிய வேண்டும். அந்த ஸ்தானத்தில் புத்தம் புதிதாயொரு அஸ்திவாரத்தை ஆழ அகலமா யமைக்க வேண்டும். அதன்மீது மேலேகூறியுள்ள ஜனநாயக சமஷ்டியை சமைக்க வேண்டும்.

இச் சமஷ்டி யெப்படிப்பட்டதா யிருக்குமென்று இப்பொழுதொன்றும் ஹேஸ்யமாகவோ, ஜோஸ்யமாகவோ சொல்லிவிட முடியாது. இப்பொழுதைய உலகம் ஒரு வெடிமருந்துச் சாலையைப்போ லிருக்கிறது. எங்குப் பார்த்தாலும் பிணந்தின்னும் பிசாசுகள் 'ஹா ஹா' என்றலைகின்றன. உலகத்துக்குமேல் ஒரு பெரிய கரியமேகம், பீஷணமான இடிமுழக்கோடு ஊசலாடிக் கொண்டிருக்கிறது. எந்த நேரம், எந்த ஜாமத்தில் அது இடிவிழுந்து இவ்வுலகத்தையே யழுக்கப் போகிறதென்பது யாருக்குந் தெரியாத தேவ

ரகசியம். பூமிக்குள்ளிருந்து ஒரு பயங்கரமான உறுமல் கேட்கிறது; செருப்பறை 'கிடு கிடு'வென்று அதிருகிறது; போர்ப் பைசாஸி 'இடி இடி'யென்று சிரிக்கிருள். 'மூத்த பொய்மைகள்' முன்னுக்கு வருகின்றன. பாஸிஸம் தலைவிரித் தாடுகிறது; நாஜிகள் நர்த்தனஞ் செய்கின்றனர். 'அட அநி யாயமே!' என்று எல்லாவற்றையும் இந்தியா 'சிந்தனை முகத் திற்றேக்கி'ச் சித்தக் கிரந்தியோடு பார்த்துக்கொண் டிருக் கிறது. அதுவிடும் நெடுமூச்சு 'ஐரோப்பாவில்' வாளோடு வாள் மோதுகிற ஜின்கார சப்தத்திற் கலந்து ஆகாசத்தில் மறைந்து விடுகிறது. சர்வதேச சங்கத்திற் செய்யப்படுஞ் சமாதான முயற்சிகள், உள்ளொன்றுயிருந்து, புறம்பொன்ருய் வந்து, போனவிடந் தெரியாமற் சைனியஞ் சாரியடிக்கும் புழுதி யோடு புழுதியாய் மங்கிவிடுகிறது.

இந்தியா எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறது. அது தனக்குத் தாளுகவே ஒரு வழியை-நல்ல வழியை வகுத்துக்கொண்டிருக்கிறது. அவ் வழி இதற்குமுன் இதர தேசங்கள் சென்று தேய்ந்த சிறந்த வழியாயிருக்கலாம். அல்லது மனிதக் காலடியே படாத புது வழியாகவுமிருக்க லாம். ஆனல் ஆபத்து மாத்திரம் இல்லையென்று உறுதியாக வும் இறுதியாகவுஞ் சொல்லுகிறேன்.

நாங்கள் நிர்மாணிக்கும் அரசியலுக்குச் சுயராஜ்யம்என்று பெயர். எங்கள் சுயராஜ்யத்தில் ராஜாவுமில்லை; சர்வாதிகாரியு மில்லை. பிரஜைகள்தான் பிரஜைகளுக்கு ராஜாவாகவும், பிரஜா வுரிமைதான் சட்டங்களுக்கு ராஜாவாகவு மிருக்கும்— 'எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்று பாரதியார் சொன் னதுபோல், ஜனுதிபத்தியம் அங்குத் தங்கு தடையின்றி நடைபெறும். எங்களுக்காக எங்களுக்கு வேண்டிய எல்லாத் திட்டங்களையும் எல்லாச் சட்டங்களையும் நாங்களே வகுத்துக் கொள்ளுவோம். எந்த அந்நிய அரசாங்கமும் எங்களுக்கு

இதைச் செய்து தரவேண்டாம்; தந்தாலும் நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம். எங்களுக்கு வேண்டியதெது என்பது எங்களுக்குத்தான் தெரியும்; எங்கள் ருசியை நாங்களறிவோம். பிறர் ருசிபார்த்துக்கொடுக்கும் எச்சில் எங்களுக்கு வேண்டாம். ஆனாற் சர்வதேசப் பிரச்னையில் நாங்கள் வைதீகர்க ளல்ல; எல்லாருடனுந் தாராளமாய்ப் பழகுவோம்; எல்லோருக்கும் எங்கள் ஊளபாகமான அரசியலை உதவுவோம்.

இவ்வித நோக்கத்தோ டேற்படுத்தப்படுஞ் சுயராஜ்ய அரசியலின் அடிப்படையான கொள்கை, அகில இந்தியாவையும் ஐக்கிய பாவமான ராஜ்ய பரிபாலனத்தி லடக்குவதாகவே யிருக்கும். பூகோள அமைப்பினாலும், சமூகத் தொடர்பினாலும், ஜனநாயக தத்துவத்தாலும் அது அரணிடப்பட்டிருக்கும். இந்தியாவின் பண்டைப்பெருமை, புராதனப் புனிதத்துவம், சரித்திரப் பிராபல்யம் இவைகளெல்லாம் என்றைக்கும் மங்காத உச்சத்திலிருந்து உலகத்துக்கு உபதேசிக்கும்படியாக நாங்கள் எங்கள் தேசத்தை யாளுவோம். எல்லாரும் இந்தியர்களாகவே யிருப்போம். எங்களிற் பல ஜாதிகளிருக்கலாம்; பல சமூகங்க ளிருக்கலாம்; பல மதங்க ளிருக்கலாம்; பல பாஷைக ளிருக்கலாம். ஆனால் அவைகளெல்லாம் இந்திய மயமாகவே யிருக்கும். எண்ணத்தாலும் வாக்காலும் செயலாலும் எங்களில் எவ்வித வித்தியாசமுமிராது.

சமஸ்தான இந்தியா, இதர இந்தியா என்னும் வித்தியாசங்கூட இராது. சமஸ்தானாதிபதிகள் ஆரம்பத்தில்-இப்போதுபோல்-தங்களைத் தாங்களே நரேந்திரர்களென்றும், நரர்களை யாளப் பிறந்தவர்களென்றும் எண்ணிக்கொண்டிருக்கலாம். ஆனால் அந்த எண்ணத்தை அவர்கள், அதிக நாளைக்கு வளர்க்கமாட்டார்கள். அது தானாகவே அவர்களை ஜனாதிபத்தியத்தின் இனிய பராமரிப்பில், மதுரமடியிற் கிடத்தி

விடும். அப்புறம் அவர்கள் பழைய பலிசுகளையெல்லாம் மறந்து ஆளும் பொறுப்பனைத்தையும் பிரஜைகளிடமே கொடுத்து விட்டு, வானப்பிரஸ்தாஸ்மிரத்தில், வாழ்க்கையின் பல பாவங் களுக்குப் பிராயச்சித்த மெடுத்துக்கொண்டு இளைப்பாறுகிற வர்களைப்போல் இருப்பார்கள். சமஸ்தான இந்தியாவும் மாகாண இந்தியாவும், ஒரு தாயின் வயிற்றிற் பிறந்த ஒரே இந்தியாவா யிருக்கும். அரசியலிலாவது, பொருளாதாரத் திலாவது, சமூகபாந்தவ்யத்திலாவது அவைகளுக்குள் எவ் வித பேதமோ பகைமையோ இராது.

மாகாணங்கள் இப்பொழுதிருப்பதுபோல் எங்கள் சமஷ் டியில் இருக்காது. இவைகள் ஆட்சிச் சௌகர்யத்துக்காக பிரிட்டனுற் பிரிக்கப்பட்டவைகள். நமக்கு ஆட்சிச் சௌகர் யம் முக்கிய மல்ல; ஜனசௌகர்யந்தான் பிரதானம். ஆனுற் சிலர் விரும்புவதுபோல் பாஷாவாரியாய்ப் பிரிக்கப்பட வேண்டுமென்று அவஸ்ய மில்லை. சம அந்தஸ் தாக்கப்பட வேண்டிய தவஸ்யம். சென்னையும் பம்பாயும், தென்னிந்தியா முழுதையும் நிரைத்துக்கொண் டிருக்கின்றன. வங்காளத்தி லும் ஐக்கிய மாகாணத்திலும் ஜனத்தொகை ஜாஸ்தி. ஒரிஸா, மத்தியமாகாணம், பீரார், வடமேற்கெல்லை மாகாணம், அஸாம், சிந்து ஆகிய மாகாணங்கள் செல்வத்தாற் சின்னவை. இப்படிப் பல குறைகள் இப்பொழுதைய மாகாணங்களுக் கிருக்கின்றன. இவை பொதுஜன அபிப்பிராயத்துக்கு விடப் பட்டு அவர்கள் விருப்பப்படி பிரிக்கப்படும். இது நமது சமஷ் டியின் முக்கியமான அம்சமாயிருந்தாலும், பிரமாதமான வேலை யாயிராது. ஏனெனில் தேசபக்தி செறிந்த இந்தியாவில் ஜாதி மத பாஷைக ளெல்லாம் ஜனுதிபத்தியத்திய சாகரத்திற் சம்மேளித்துவிடும். அப்போது அது செய்யும் எல்லாக் காரியங்களும் ஜனசம்மதம் பெற்றதாகவே யிருக்கும். மாகா

ணங்கள் ரொம்பச் சின்னவைகளாகவும், ரொம்பப் பெரியவைக ளாகவு மில்லாமல் நடுத்தரமானவைகளா யிருக்கும்.

ஏகாதிபத்திய பிரிட்டனால் தயாரிக்கப்பட்டுள்ள சமஷ்டியைப்போல் நமது சமஷ்டியில் பிரஜாவுரிமை பாதிக்கப்பட மாட்டாது. பாதுகாப்பென்று ஏதாவதொன்று இருந்தால், அது முதன்மையாகவும் முக்கியமாகவும் பிரஜாவுரிமையிற் றான் பிரயோகிக்கப்படும். 1931-ல் கராச்சியில் காங்கிரஸால் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி, எல்லா விஷயங்களிலும் பிரஜா வுரிமை பெரிதுங் கௌரவிக்கப்படும். நபர் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் முதலிய எல்லாச் சுதந்திரங் களும் எவ்விதக் கட்டுக்காவலும், தட்டுத்தடங்கலுமின்றி அனுமதிக்கப்படும்.

பிரிட்டனாற் கொடுக்கப்படும் சமஷ்டியின் அரசியற்றலை வராய் கவர்னர்-ஜெனரல் இருப்பதுபோல், நமது சமஷ்டி யிலும் ஒரு தலைவரிருப்பார். ஆனால் கவர்னர்-ஜெனரல் என்னும் பேரும், பெரிய அதிகாரங்களும் இராது. ராஷ்டிர பதி என்று அவர் அழைக்கப்படலாம். அவர்தம் அதிகாரங் களும் அலுவல்களும் சட்டசபையால் நிர்ணயிக்கப்படும். சட்டசபையால் நியமிக்கப்படும் மந்திரிசபை உதவியையும் ஆலோசனையையும் அனுசரித்து அரசியலை அவர் நிர்வகிப்பார்.

நமது சமஷ்டியிலும் இரண்டு சபைகள் இருக்கும். ஆனால் மாகாணங்களில் ஒரேயொரு சபைதானிருக்கும். சமஸ்தானங்களிலுஞ் சட்ட சபைகளிருக்கும்.

எல்லாச் சட்ட சபைகளும் நேரடியான தேர்தல் மூலமாகவே நிர்மாணிக்கப்படும்; நியமனம் என்னும் பேரே யிராது. வயதுவந்த ஒவ்வொரு பிரஜையும் வாக்குரிமை யுள்ளவர்களா யிருப்பார்கள். சட்டசபை நடைமுறை விதிகள், சட்ட சபையினாலேயே நிர்ணயிக்கப்படும். சட்ட

மியற்றுவதுமுதல் வரவு-செலவு நிறைவேற்றுவதுவரை எல்லா விஷயங்களும் வோட்டுக்கு விடப்படும்.

அரசியல் என்னும் ஒரேயொரு இலாகாத்தான் நமது சமஷ்டியிலிருக்கும். ஒதுக்கப்பட்ட இலாகா வென்றும் மாற்றப்பட்ட இலாகாவென்றும் ஒன்றுமே யிராது. சர்க்கார் சம்பந்தப்பட்ட சகல இலாகாக்களும் சட்டசபைக்கு ஜவாப் தாரிகளான மந்திரிகளாலேயே நிர்வகிக்கப்படும்.

மேலே கூறியுள்ள விஷயங்கள் நமது சமஷ்டியைப் பற்றிய சங்கிரஹமான சில குறிப்புகளே யாகும். இதை வைத்துக்கொண்டு ஒவ்வொருவரும் அந்தச் சமஷ்டியை உருவாக்கவேண்டும். வெள்ளை மண்டபத்திலிருந்து வந்த சமஷ்டிக்கும் காங்கிரஸ் மண்டபத்திலிருந்து வரப் போகுஞ் சமஷ்டிக்குமுள்ள வித்தியாசத்தையும் தார தம்மியங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இந்தக் கடைசி அத்தியாயம்-சுருக்கமாயிருந்தாலும்-உபயோகமா யிருக்கு மென்று நம்புகிறேன்.

நாடாளுந் திறமை நமக்குண்டு என்பதை நாம் நன்ருய் உலகத்துக்கு உணர்த்திவிட் டிருக்கிறோம். மாகாண சுயாட்சி யிற் கிடைத்த சொற்பமான சில அதிகாரங்களை வைத்துக் கொண்டு காங்கிரஸ் மந்திரிகள், கவர்னர்கள் பிரமிக்கும்படி கவர்ன்மெண்டை நடத்துகிறார்கள். ஸ்ரீ சத்தியமூர்த்தி சொன்னதுபோல் "இந்தியர்கள் பிரிட்டனைக் கூடச் சிறிது காலம் ஆளலாமா என்று எண்ணுகின்றனர். பிரிட்டன் இந்தி யாவை யாள்வதைவிடச் சிறப்பாகவும் ஒழுங்காகவும், இந்தியா பிரிட்டனை யாளமுடியும் என்று உலகத்துக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறார்கள்."

இந்த ஆசை பேராசையா யிருக்கலாம்; அல்லது வெறுங் கற்பனையாகவும் கனவாகவு மிருக்கலாம்; அல்லது அண்டம்

புரண்டாலும் ஆகாத காரியமாகவு மிருக்கலாம். என்றாலும் இந்தியாவின் எழுச்சியையும் உணர்ச்சியையும் இது உணர்த்து கிறதா இல்லையா? இக்கேள்வியை நான் வேறு யாரையுங் கேட்கவில்லை-பிரிட்டனையே கேட்கிறேன். தைர்யமாய் வந்து 'இந்தியருக்கு இன்னும் நாடாளுந் திறமை வரவில்லை'யென்று சொல்லட்டும் அல்லது 'வந்துவிட்ட'தென்று விலகிக்கொள் ளட்டும்.

ஆளுந்திறமை இந்தியர்க்கு இன்னும் ஏற்படவில்லை யென்று பொய் சொல்ல, பிரிட்டனுக்கு ரொம்பத் தைரியம் வேண்டும். அப்படியானால் அதன் பொய்யையும் நம் மெய் யையும் நிரூபிக்க நமக்கொரு சந்தர்ப்ப மளிக்கட்டும். அதா வது இந்தியாவிற் பொறுப்பு வாய்ந்த சில தலைவர்களை யழைத்து "நீங்கள் உங்களுக்கு இஷ்டமான ஒரு சமஷ்டியை யும் அதற்கு வேண்டிய சட்டம் ஷரத்துகளையும் அமைத்துக் கொண்டு வாருங்கள்! உங்கள் சமஷ்டியையும் எங்கள் சமஷ்டி யையும் ஜன சம்மதத்துக்கு விடுவோம். அவர்கள் எது வேண்டு மென்று சொல்லுகிறார்களோ அதை வைத்துக் கொள்ளு வோம்; மற்றதைத் தள்ளிவிடுவோம்" என்று சொல்லட்டும்.

அல்லது அவர்கள் சமஷ்டியையும், நமது சமஷ்டியையும் சர்வதேசப் பஞ்சாயத்துக்கு விடுவோம். பாரபக்ஷமில்லா மல், பஞ்சாயத்தார் பார்த்துச் சொல்லட்டும். 'இந்தியாவை இனியும் பிரிட்டன்தான் ஆளவேண்டும், இந்தியர் இனியும் பிரிட்டிஷ்காரர்களுக்கு அடிமைகளாய்த்தா னிருக்கவேண்டும்' என்று சொல்லக்கூடியவர்கள், பிரிட்டிஷ்காரர்களைத் தவிர வேறு யாருமே இந்த உலகத்தி லிருக்கமாட்டார்கள்.

"இந்தியாவில் ஒரு நவசக்தி தோன்றியிருக்கிறது. கிருஷிகர்கூட நல்ல பலவான்க ளாகியிருப்பதா யுணருகிறார் கள். இத்தனை வருஷங்களாய் நாங்கள் தவசிருந்து பெற்ற இப்

புத்துணர்ச்சி அந்த சக்தியின் அறிகுறி"-என்று சமீபத்திற் பண்டித ஜவஹர்லால், லண்டனிற் சொல்லியிருக்கிறார்கள்.

பிரிட்டன் ஒரு யுக சந்தியிலிருக்கிறது. அது இரவும் பகலுஞ் சந்திக்கும் உஷற்காலத்தைப்போ லிருக்கலாம்; அல்லது பகலும் இரவுஞ் சந்திக்குஞ் சாந்தியாகாலத்தைப்போலு மிருக்கலாம். எதுவாயினும், இரண்டிலொன்றை அது தனக்குத்தானகவே தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டிய நெருக்கடியான நிலைமையி லிருக்கிறது. எப்படியும் இந்தியாவை அது இனிக் கைகழுவவேண்டியதுதான். என்றாலும் இந்தியாவின் சிநேகத்தை அது என்றைக்கும் இழக்கா திருக்கலாம். அதற்கு ஒரே யொரு வழிதானிருக்கிறது. அதாவது இந்தியா தனக்குத்தானே ஒரு அரசியலை நிர்மாணித்துக்கொள்ளவும் நிர்வகித்துக்கொள்ளவும் விட்டுவிடுவது.

இந்தியாவும் ஒரு இடைக்காலத்திலேதா னிருக்கிறது. அது நிச்சயமாய்ச் சாந்தியாகாலமல்ல; உஷற்காலந்தான். பயங்கரமான இருள் நிறைந்த இரவு, கொஞ்சங் கொஞ்சமாய் விலகுகிறது; விடி வெள்ளி முளைத்து வெகு நேரமாகி விட்டது. பால சூரியன் அதோ பதினாயிரங் கரங்களை உயர்த்திப் பாரதக் கொடியை யாசீர்வதிக்கிறான்.* அது நமது கொடி; நமது வெற்றியின்அறிகுறி. இந்தியாவின் ஹிருதயத்தில் வெற்றிக்கொடி நாட்டப்பட் டிருக்கிறது. சௌபாக்கிய சூரியனின் சௌந்தர்ய கிரணங்கள், அந்தக் கொடியைச் சூழ்ந்திருந்த கரிய பெரிய மேகத்தைக் கலைத்து விட்டன. பாரதர் பௌரிஷமான்களா யிருக்கவேண்டும். பாரத தேவி பல்லாண்டு வாழவேண்டும்.

---

* முகப்புப்படம்.

வந்தே மாதரம்

இந்நூல் என்ன சொல்லுகிறது என்பதைப் பார்க்கி
லும், எவ்விதம் சொல்லுகிறது என்பதைப்
பார்ப்பதே மேல்.